

ராஜாதிராஜ ராஜமார்த்தாண்ட ராஜகுலோத்துங்க என்று ஆரம்பித்து, மன்னர் வருகிற விஷயத்துக்கு இரண்டு மைல் நீள முன்னுரை வழங்கும் கலாசாரமெல்லாம் நம் ஊரில்தான். மன்னரெல்லாம் மலையேறிப் போய் மந்திரிகளும் காலாவதியாகி, அமைச்சர்களே வந்துவிட்ட பிறகும், மேற்படி இரண்டு மைல் சமாசாரம் ஏதோ ஒரு வடிவத்தில் இருக்கத்தான் செய்கிறது.

புரட்சிக்கு முந்தைய ரஷ்யாவில் அதிரடி மன்னர் பரம்பரை ஆட்சிதான் என்றாலும், இந்தக் கித்தாப்புகளெல்லாம் கொஞ்சம் குறைச்சல்தான். பாருங்கள், எத்தனை சாதாரணமாக ஒரே ஒரு மெய்க்காப்பாளனை ஒத்தாசைக்குக் கூப்பிட்டுக்கொண்டு மாமன்னர் இரண்டாம் அலெக்சாண்டர் ஹாயாக வெளியே கிளம்பிப் போகிறார்!

ஜார் வம்சத்து ஜாங்கிரி அவர். பார்ப்பதற்கு சும்மா தளதளவென்று ஜம்மென்று இருப்பார். அந்த மீசை ஒன்று போதும். அசப்பில் சந்தன வீரப்பனுக்கு ஒன்றுவிட்ட சித்தப்பா போலத் தோன்றினாலும், அக்கால ரஷ்யாவில் அது ஓர் அபூர்வ மீசை. மழுங்கச் சிரைத்த மன்னர் வம்சத்தில் அவர் ஒரு மாறுபட்ட குலக்கொழுந்து. அன்பை அந்தப்புரத்திலும் ஆசையை அரியணை மீதும் அதிகாரத்தை மக்களிடத்திலும் வைத்த சர்வாதிகார சிரோன்மணி. அமைச்சர் பெருமக்களும் அதிகாரிகளும் அடிப்பொடிகளும் மன்னர் எப்போது என்ன செய்வார், யார் தலையை எதற்காகச் சீவுவார் என்று தெரியாமல், எப்போதும் உயிரை எடுத்து இடுப்பில் முடிந்துகொண்டபடிதான் சபைக்கு வருவார்கள். எதிர்த்து ஒரு கேள்வி? ஒரு கருத்து மாறுபாடு? அட, ஒரு சின்ன விவாதம்?

ம்ஹூம். சர்வாதிகாரிகள் இதையெல்லாம் விரும்புவதில்லை. சொன்னால் செய்யவேண்டும். சொன்னதைச் செய்யவேண்டும். குடிபடைகள் இருப்பது அதற்குத்தானே?

ஆகவே, மக்களில் மைனாரிடிகள் கோபம் கொண்டார்கள். ஏதாவது செய்யவேண்டும். சகிக்க முடியவில்லை. ஆட்சி மாறவேண்டும். ஆளாவது மாறவேண்டும். மக்களாட்சி வரத் தாமதமானாலும் இந்த மன்னனை ஒழித்துக்கட்டினால் கொஞ்சம் தாற்காலிக நிம்மதியாவது வரும். தவிரவும் இது ஜார் வம்சத்தவர்களுக்கு ஓர் எச்சரிக்கையாகவும் இருக்கும். மக்கள் முட்டாள்களல்லர். குறைந்தபட்சம் எப்போதும் முட்டாள்களாக இருக்கமாட்டார்கள். ஏதாவது செய்யவேண்டும். என்ன செய்யலாம்? எப்படிச் செய்யலாம்?

மன்னரை ஒழிக்கும் யோசனை அன்று பலபேருக்கு இருந்தது உண்மை. ஆனால், யார் யோசிப்பதோடு ரிடையர் ஆகப்போகிறார்கள், யார் செயல்படுத்திப் பார்க்கப் போகிறார்கள், எப்படிச் செய்யப்போகிறார்கள், வெற்றி கிடைக்குமா, வீரமரணம் மட்டும்தானா என்பதெல்லாம் எல்லோருக்குமே சஸ்பென்ஸாகத்தான் இருந்தது.

இப்படி யோசித்துக்கொண்டிருந்த கோஷ்டிகளுள் ஒன்று Narodnaya Volya. இந்தப் பெயரையெல்லாம் தமிழில் எழுதிக் கொலை செய்யவேண்டாம். அப்படியே இருந்துவிட்டுப் போகட்டும். என்ன அர்த்தம் என்றால், மக்கள் சக்தி. ஒரு புரட்சிகர இயக்கத்துக்கு இதைவிடப் பொருத்தமான பெயர் கிடைத்துவிடுமா என்ன?

1879 ஆகஸ்டு மாதம் தோன்றிய இந்த இயக்கத்தின் முக்கிய நோக்கம், உழுபவர்களுக்கு நில உரிமை பெற்றுத்தர வேண்டும் என்பதுதான். என்ன உரிமை, மண்ணாங்கட்டி, புடலங்காய்! ஜார் காலத்து ரஷ்யாவில், நிலமெல்லாம் அரசாங்கத்துக்குச் சொந்தமானதுதான். உழுதால் கூலி. அழுதால் உதை.. அதற்குமேல் எதுவும் கிடையாது. மன்னர்தான் பண்ணையார். கொஞ்சம் ஜம்போ சைஸ் பண்ணையார் என்று சொல்லவேண்டும். மக்களுக்குச் சேவை செய்யவே முடிதரித்தேன் என்றெல்லாம், அவர் அநாவசியத்துக்கு ஸ்டேட்மெண்ட் விட்டுக்கொண்டிருக்கிற ஜாதி இல்லை. மக்கள் தனக்குச் சேவை செய்யவே பிறந்தார்கள் என்று ஆத்மசுத்தியுடன் நினைத்துக்கொண்டிருந்தவர்.

ஆகவே, Narodnaya Volya இயக்கத்தைச் சேர்ந்தவர்கள், இந்த ஜாரை ஒழித்துவிட முடிவு செய்தார்கள். மொத்தம் சுமார் ஐம்பது பேர் கொண்ட குழு அது.

ஆரம்பத்தில் அமைதியான முறையில் நீதி பெறுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவே உத்தேசித்திருந்தார்கள். ஊர்வலம், பொதுக்கூட்டம், உண்ணாவிரதம் போன்றவையெல்லாம் சர்வாதிகார ஆட்சியில் கெட்டகாரியங்கள் என்பதால், என்ன செய்து மன்னரைத் தட்டிக்கேட்கலாம் என்பது புரியவில்லை. வீதிக்கு வந்து ஒரு சின்ன சப்தம் போட்டால் கூட, குதிரை வீரர்கள் வந்து கப்பென்று பிடித்துக்கொண்டு போய்விடுவார்கள். சரி, உனக்குப் புரிந்த பாஷையிலேயே பேசுகிறேன் என்று முடிவு செய்ததன் விளைவுதான் மன்னரைக் கொல்ல எடுத்த முடிவு.

நாட்டுத் துப்பாக்கிகளும் கையெறி குண்டுகளும் புழக்கத்துக்கு வந்துவிட்ட காலம் அது. ஜெலட்டின் குச்சிகளைக் கொண்டு பாறைகளை மட்டும்தான் உடைக்க முடியுமென்பதில்லை; தேவையில்லாத சில ஜீவாத்மாக்களுக்கும் பரலோகப் பிராப்தியளிக்கலாம் என்று சிந்தனைச் சிற்பிகள் யோசித்துக் கண்டுபிடித்து விட்டிருந்தார்கள்.

ஆகவே, மேற்படி Narodnaya Volya வினர் தமது திட்டத்துக்குத் தேவையான குண்டுகள், ஜெலட்டின் குச்சிகள், துப்பாக்கிகளை வாங்கிச் சேகரித்துவிட்டு தக்க தருணத்துக்காகக் காத்திருந்தார்கள்.

அவர்கள் களத்தில் இறங்குவதற்கு முன்னரே, இரண்டு முறை மன்னர் மீதான கொலை முயற்சிகள் நடைபெற்றிருக்கின்றன. பீட்டர்ஸ்பர்க்கில் ஓர் ஓவியக் கண்காட்சியைத் திறந்துவைத்து, சொற்பொழிவாற்றித் திரும்பிய மன்னரைச் சுட்டுக்கொல்ல யாரோ முயற்சி செய்தார்கள். தப்பித்துவிட்டார். அடுத்த முறை ஓர் அணிவகுப்பு மரியாதை நிகழ்ச்சியின்போது அலெக்சாண்டர் ஸோலொவிவ் என்கிற முப்பத்துமூன்று வயது புரட்சிக்காரன் நேருக்கு நேர் சுட்டுக்கொல்ல முடிவு செய்து வரிசையில் நின்றிருக்க, அவன் தன் பேண்ட் பாக்கெட்டிலிருந்து துப்பாக்கியை எடுப்பதைப் பார்த்துவிட்டு ஒரே ஓட்டமாக ஓடிவிட்டார் மன்னர் பெருமான். ஆகவே, அம்முறையும் தப்பித்தார்.

மூன்றாவது சந்தர்ப்பத்தில்தான் Narodnaya Volya குழுவினர் ஆரம்பிக்கிறார்கள். மன்னர் எங்கோ கோடைவாசஸ்தலத்துக்குப் போய்விட்டு, லிவாடியா என்னும் இடத்திலிருந்து மாஸ்கோவுக்கு ரயிலில் திரும்புகிறார் என்று கேள்விப்பட்டு ரயில்பாதையில் குண்டு வைத்துவிட்டுக் காத்திருந்தார்கள்.

ரயில் வந்ததே தவிர, ஜார் வரவில்லை. அவர் ஆயுசு கெட்டி. அதற்கு என்ன செய்வது?

தமது அடுத்த முயற்சியை இன்னும் பலமாகத் திட்டமிட்டார்கள். பிப்ரவரி 5, 1880 அன்று மன்னரின் அரண்மனைக்குள்ளேயே திருட்டுத்தனமாக நுழைந்து, அவரது சாப்பாட்டு அறையில் குண்டு வைத்தார்கள். அன்றைக்குப் பார்த்து மன்னருக்கு வயிறு உப்புசமாகப் போய்விட, 'எனக்கு விருந்து வேண்டாம், ஒரு தம்ளர் பால் மட்டும் போதும்' என்று சிப்பந்தியிடம் சொல்லி அனுப்பிவிட்டு, அந்தப்புரத்திலேயே இருந்துவிட்டார். அந்தக் குண்டு அநாவசியமாக வெடித்து சில மேசை, நாற்காலிகளை மட்டும் சேதப்படுத்தியது.

இத்தனை முயற்சிகள் நடந்திருக்கின்றன; ஒரு பதற்றம் வேண்டாமோ? பயம் வேண்டாமோ? ம்ஹூம். சர்வாதிகாரி என்றாலும் கொஞ்சம் தத்திதான். சந்தேகமில்லை.

இல்லாவிட்டால், தனது குளிர்கால அரண்மனையிலிருந்து எவ்விதக் கூடுதல் பாதுகாப்புமில்லாமல் ஒரே ஒரு மெய்க்காப்பாளருடன் வண்டி ஏறி, தனியே வெளியே புறப்படுவாரா மன்னர்?

அது நடந்தது மார்ச் 1, 1881-ம் ஆண்டு. எப்படியும் இன்றைக்கு மன்னரைக் கொன்றே தீருவது என்று முடிவு செய்து, ஒன்றுக்கு நாலு பேராக ஆயுதம் ஏந்தி, ஆளுக்கொரு வீதியில் காத்திருந்தார்கள். ஒரு வழியில் மன்னர் தப்பித்தால், இன்னொரு வழியில் மாட்டுவார். அங்கே தப்பித்தால் அடுத்ததில். அங்கும் தப்பித்தால் இன்னொன்றில். நாலு பேரிடமிருந்தும் தப்பித்துவிட்டால், வேறு வழியே இல்லை. சர்வாதிகாரம், சரணம், சரணம்.

ஒரு தீர்மானத்துடன்தான் அவர்கள் அங்கே காத்திருந்தார்கள். பீட்டர்ஸ்பர்க் அரண்மனையை விட்டுப் புறப்பட்ட மன்னரின் வாகனம், சில நூறு அடிகள் தாண்டி ஒரு பிரதான சாலையை அடைந்தபோது, புரட்சிக் குழுவின் முதல் வீரன் மன்னரின் வண்டியை நோக்கிச் சுட்டபடி ஓடிவரத் தொடங்கினான்.

ஆபத்து. அதுவும் மிக அருகில்.

மன்னரின் வாகனம் மின்னல் வேகத்தில் வேறொரு பாதையில் திரும்பி ஓடத் தொடங்கியது.

அங்கே அடுத்தவன் தயாராக இருந்தான். வண்டி வருவதைப் பார்த்ததுமே வெடிகுண்டுகளை வீசத் தொடங்கினான். குறி தவறாத தாக்குதல் அது. சூழ்ந்த புகை மண்டலத்துக்கு நடுவே மன்னர் உடல் கருகி விழுந்தார். மருத்துவமனைக்கு எடுத்துச் சென்று சில மணிநேரங்கள் கழிந்த பிறகுதான் அவர் இறந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டது என்றாலும், தலத்திலேயே அவர் பிராணனை விட்டுவிட்டதாகத்தான் நம்பவேண்டியிருக்கிறது. தாக்குதல் அப்படிப்பட்டது.

ரஷ்யாவை மட்டுமல்ல; உலகத்தையே ஓர் உலுக்கு உலுக்கிய மாபெரும் படுகொலைச் சம்பவம் இது. சரித்திரத்தில் முன்னெப்போதும் இப்படியொரு சம்பவம் நடந்ததில்லை. நவீன உலகம் சந்தித்த முதல் தீவிரவாதத் தாக்குதல். தனி மனிதத் தாக்குதல். பின்னால் நடக்கவிருந்த ரஷ்யப் புரட்சிக்கு, இதுதான் முதல் வித்து. ஒத்த கருத்துள்ள சில தனி மனிதர்கள் ஒன்றுசேர்ந்து செயல்பட்டால், அரசுகளுக்கு எதிரான கலகங்களைத் திறம்பட நடத்தி வெற்றி காணமுடியும் என்று உலகுக்கு உரக்க அறிவித்த சம்பவமும் கூட.

இதில் இன்னொரு விசேஷமும் உண்டு. Narodnaya Volya குழுவின் முக்கிய உறுப்பினர்களுள் ஒருவர் அலெக்சாண்டர் உல்யனோவ். இரண்டாம் அலெக்சாண்டரைக் கொல்வதற்கு ஏகப்பட்ட முயற்சிகளை மேற்கொண்டு தோற்றவர் இவர். அந்தத் தோல்வியை, அவருக்கு அடுத்துப் பதவியேற்ற மூன்றாம் அலெக்சாண்டரைக் கொல்ல முயற்சி மேற்கொண்டு தீர்த்துக்கொள்ளப் பார்த்து, அதிலும் படுதோல்வி கண்டு, கைது செய்யப்பட்டு மரண தண்டனைக்கு உள்ளானவர்.

தமது 22-வது வயதிலேயே தூக்கிலிடப்பட்டு இறந்த இவரது தம்பிதான், பின்னாளில் ரஷ்யாவில் மன்னராட்சி ஒழியவும் மக்கள் புரட்சி மாபெரும் வெற்றி காணவும் காரணமாக விளங்கிய விளாடிமிர் லெனின். அண்ணனின் புரட்சி நடவடிக்கைகள் கண்ட தோல்விதான், தம்பிக்கு முதல் பாடமானது. புரட்சிக்குத் தேவை துணிச்சல் மட்டுமல்ல; திறமையும் கூட என்பதை லெனின் கற்றுக்கொண்டது அந்த மரணச் சம்பவத்தின்போதுதான்!

தீவிரவாதம் என்கிற எதிர்வழி தோன்றி சரியாக 125 ஆண்டுகள் முடிவடைந்துவிட்ட நிலையில், இன்றைக்கு இது பெற்றிருக்கும் பரிணாம வளர்ச்சியைப் பார்த்தால் வியப்பும் அச்சமும் ஒருசேர உண்டாகிறது.

நாட்டுத்துப்பாக்கிகள் இருந்த இடத்தை ஏ.கே. நாற்பத்தியேழுகள் ஆக்கிரமித்துக்கொண்டுவிட்டன. கையெறி குண்டுகளின் காலம் கண்ணி வெடிகளால் களவாடப்பட்டுவிட்டன. அல் காயிதாவிடம் அணுகுண்டு இருக்குமா, ஹெஸ்புல்லாவிடம் ராக்கெட்டுகள் இருக்குமா என்று அமெரிக்க உளவுத்துறை ஆராய்ச்சி செய்துகொண்டிருக்கிறது. ஹமாஸ் அரசியலில் இறங்குகிறது. எல்.டி.டி.ஈ. பேச்சுவார்த்தைகளுக்கு நிபந்தனைகள் விதிக்கிறது. ஈராக் தீவிரவாதிகள் தினசரி ஓரிடத்தை வெடிவைத்துத் தகர்த்துவிட்டுத்தான் பல் தேய்க்கவே போகிறார்கள். ஏதாவது ஒரு பயங்கரச் சம்பவம் நிகழாத நாளே இல்லை என்றாகிவிட்டது. கேட்டுப்பாருங்கள்? இவையெல்லாம் அடக்குமுறைக்கு எதிரான செயல்பாடுகள். மேலாதிக்கத்துக்கு எதிரான நடவடிக்கைகள். விடுதலைக்கான போராட்டம். இதைத்தான் சொல்கிறார்கள். இப்படித்தான் நியாயப்படுத்துகிறார்கள்.

விளைவுகளை அவர்கள் ஒருபோதும் பொருட்படுத்துவதில்லை. மரணம். அழிவு. சர்வநாசம். ஆனால், அவசியம் வேண்டும் விடுதலை!

என்ன நடக்கிறது? யார் இவர்கள்? எங்கெல்லாம் பரவியிருக்கிறார்கள்? எப்படிச் செயல்படுகிறார்கள்? இவர்களது நெட் ஒர்க் பலம் எப்படிப்பட்டது? லட்சக்கணக்கில் ஆள் பலம் கொண்ட அமெரிக்காவுக்கு அதிகபட்சம் இரண்டாயிரம் வீரர்களை வைத்துக்கொண்டு ஒசாமா பின்லேடனால் எப்படித் தண்ணி காட்டமுடிகிறது? ஜமா இஸ்லாமியா என்றால், கிழக்காசியத் தலைவர்கள் அத்தனை பேரும் அடிவயிற்றைப் பிடித்துக்கொண்டு அலறி ஓடுவது எதனால்? இந்துக் கடவுளான பரமசிவனின் பெயரைச் சொல்லிக்கொண்டு ஒரு ஜப்பானியத் தீவிரவாத இயக்கம் எப்படிப் பல லட்சக்கணக்கான மக்களின் ஆதரவைப் பெறமுடிந்தது? செச்னியாவிலும் போஸ்னியாவிலும் உஸ்பெகிஸ்தானிலும் ஈராக்கிலும் சூடானிலும், எத்தனையோ பல தென்னமெரிக்க நாடுகளிலும் பாகிஸ்தானிலும் ஆப்கனிஸ்தானிலும் அரசுகளுக்குச் சமமாக இத்தகைய தீவிரவாத இயக்கங்களுக்கு முக்கியத்துவம் கிடைப்பது எதனால்?

இன்றைக்கு உலகை உலுக்கும் மாபெரும் பிரச்னைகளுள் அதிமுக்கியமானது இது. விளையாட்டே இல்லை. விலாவாரியாகப் பார்த்தே ஆகவேண்டும்!



#2 தீவிரவாத இயக்கங்களின் வலைப்பின்னல் குறித்துப் பார்ப்பதற்கு முன்னால், தீவிரவாதம் என்று எதனைச் சொல்வது என்பதை முடிவு செய்துவிடவேண்டும். இந்தச் சொல், முதன் முதலில் பிரெஞ்சுப் புரட்சி சமயத்தில், அதாவது 1793-ம் ஆண்டு காலகட்டத்தில் தோன்றியிருக்கிறது. தோன்றியபோது, இது ஒரு கெட்டவார்த்தையாக இல்லை. 'ஸிமீரீவீனீமீ பீமீ

நீணீமீமீக்ஷீக்ஷீமீஷ்க்ஷீ' என்றால் புரட்சியின் காலம் என்றுதான் அர்த்தமாகிறது.

இதிலிருந்துதான் 'டெரர்' என்கிற ஆங்கிலச் சொல் உதித்தது. மன்னராட்சி ஒழியவேண்டும் என்று நினைப்பதே புரட்சிகரமல்லவா. தவிர, நியாயமும் கூட. ஊரை அடித்து உலையில் போட்டு உட்கார்ந்து சாப்பிட்டுக் கொழுத்த மன்னர்களை ஒழித்துவிட்டு, மக்களாட்சியைக் கொண்டுவர நினைத்ததைத் தப்பென்று சொல்லிவிடமுடியாது அல்லவா?

ஆனால் எல்லா புரட்சிகளும் ஆரம்பத்தில் நசுக்கப்படுவதுதான் வழக்கம் என்பதற்கேற்ப, இந்த முதல்தலைமுறை பிரெஞ்சுப் புரட்சியாளர்களும் தோல்வியடையவே செய்தார்கள். (நிற்கவைத்துத் தலையைச் சீவும் கில்லட்டின் இயந்திரம், இம்மாதிரி நாற்பதாயிரம் புரட்சியாளர்களின் தலையைச் சீவித்தள்ளியது!)

புரட்சியாளர்கள் கொல்லப்பட்டாலும் அவர்களது துணிச்சலும் தீவிரமும் சரித்திரத்தில் நிலைத்துவிட்டது, 'டெரர்' என்கிற அந்தச் சொல்லைப் போலவே. மிக நல்ல அர்த்தத்தில் வைக்கப்பட்ட அந்தப் பெயரை, அதற்குப் பின்னால் அரசுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்யும் அத்தனை பேருக்கும் உரிய பெயராக்கிவிட்டார்கள். ஐரோப்பா முழுதும் எங்கெல்லாம் மன்னராட்சிக்கு எதிராக மக்கள் குரல் கொடுக்கிறார்களோ, அவர்களையெல்லாம் டெரரிஸ்ட் என்று அழைக்கத் தொடங்கினார்கள்.

பிற்பாடு கம்யூனிசம் தோன்றி, பரவி, சித்தாந்த பலத்துடன் புரட்சி ஒரு புதுப்

பரிமாணமெடுத்து சோவியத் ரஷ்யாவில் மையம் கொண்டபோது, கம்யூனிஸ்டுகள் எல்லோரும் தீவிரவாதிகள் என்று, அப்போது ரஷ்யாவை ஆண்டுகொண்டிருந்த ஜார் மன்னர் அறிவித்தார். உலகின் முதல் மக்களாட்சி தேசம் என்கிற பெருமை கொண்ட அமெரிக்கா, இது விஷயத்தில் அப்போது வாய்மூடி இருந்தது. இத்தனைக்கும் அமெரிக்கா அப்போது அத்தனை தீவிர கம்யூனிச எதிர்ப்பு தேசமெல்லாம் இல்லை. சொல்லப்போனால் கம்யூனிசம் அப்போது அமெரிக்கா பக்கம் கப்பல் ஏறி வந்திருக்கவே இல்லை. சும்மாதான் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

எப்படியானாலும் எதேச்சாதிகாரத்துக்கு எதிராகக் குரல் கொடுத்தவர்கள், தீவிரவாதிகள். இதுதான் பதினெட்டு, பத்தொன்பதாம் நூற்றாண்டுகள் வரைக்குமான நிலைமை.

இதைத்தான் இன்றைய ஹைடெக் தீவிரவாதிகள் தமக்குச் சாதகமான வாதமாக, இன்றுவரை உபயோகப்படுத்தி வருகிறார்கள். எதேச்சாதிகாரத்துக்கு எதிரான போர். ஆதிக்க சக்திகளுக்கு எதிரான ஆயுதப் போராட்டம். அடக்குமுறைக்கு எதிரான துவந்த யுத்தம். ஆனால் இவர்கள் யோசிக்கத் தவறும் விஷயம், பிரெஞ்சுப் புரட்சியின்போதோ, ரஷ்யப் புரட்சியின்போதோ, புரட்சியின் நோக்கம் மக்களாட்சி என்பதாக மட்டுமே இருந்தது என்பதுதான்! தவிரவும், இந்தப் புரட்சியாளர்கள் முடியாட்சிக்கு எதிராக, அமைதியான வழியில் மட்டுமே போராட்டத்தைத் தொடங்கினார்கள் என்பதையும் கவனிக்க வேண்டும். போராட்டத்தின் உச்சகட்டக் காட்சிகள் மட்டுமே நேரடி யுத்தமாக இருந்தன. போராட்டத்தில் எந்தப் பொதுச்சொத்தும் சேதமானதில்லை என்பதும், அப்பாவி மக்கள் பலிகடாக்களாக்கப்பட்டதில்லை என்பதும், கொடூரமான கொலைவெறிக் காட்சிகள் தினத்துக்கு ஒன்றாக அரங்கேறியதில்லை என்பதும் இதன் பின்னிணைப்புகள்.

புரட்சி என்ற சொல்லின் அர்த்தமே மாறிவிட்ட காலகட்டத்தில், தீவிரவாதத்தின் பாடு குறித்துச் சொல்லவேண்டாம். அந்தக் காலத்தில் புரட்சியாளர்கள், மக்களின் ஆசியுடன், மக்கள் மத்தியிலிருந்தே தோன்றினார்கள். இன்றைய தீவிரவாதிகள் உருவாகக் காரணமாக, சமூக விஞ்ஞானிகள் முன்வைக்கும் காரணங்களைப் பார்த்தால் மூச்சு முட்டும்.

ஏழைமை. கல்வியின்மை. பசி. இவற்றின் மீது ரகசியமாக ஏற்றப்படும் மதவெறி என்கிற விஷ ஊசி. இதன் விளைவாகப் பீறிடும் கோபத்தை அரசியல் லாபங்களுக்காகப் பயன்படுத்திக்கொள்ளும் சாமர்த்தியம். இந்தக் கோபம், எங்கெங்கோ மூலைகளில் எத்தனையோ பல தனிமனிதர்களுக்கு உருவாவதாகவே இருந்தாலும், இதனை ஒன்று சேர்ப்பது பெரிய விஷயமல்ல என்கிறார்கள் உளவியல் வல்லுநர்கள். அந்தக் காரியத்தைத்தான் ஒசாமா பின்லேடன் போன்ற தீவிரவாத மாஸ்டர்கள் திறம்படச் செய்துகொண்டிருக்கிறார்கள்.

விவரிக்கவே வேண்டாம். நாளது விய வருஷம் சித்திரை மாதக் கணக்குப்படி, நாற்பத்து மூன்று தீவிரவாத இயக்கங்கள் உலகம் முழுவதும் பீமபுஷ்டியுடன் ஜீவித்துக்கொண்டிருப்பதாக பல தேசத்துப் பாதுகாப்புத் துறைகள் கவலையுடன் கருத்துத் தெரிவிக்கின்றன. இதில் அரை பிளேடு இயக்கங்கள், பிக் பாக்கெட் இயக்கங்கள், மாமூல் வசூல் இயக்கங்கள், கைச்செலவுக்கு கஞ்சா கடத்தும் இயக்கங்கள் ஆகியவை சேராது. ஒரு குறிப்பிட்ட நோக்கத்துடன், நல்ல ஆள் பலம், ஆயுத பலங்களுடன் திட்டமிட்டு அரசுகளுடன் யுத்தம் புரியும் அமைப்புகளைத்தான் தீவிரவாத இயக்கங்களாகக் கருதவேண்டியிருக்கிறது. அரசுகளுடன் யுத்தம் புரிவதாகச் சொல்வார்களே தவிர, இதில் பெரும்பாலும் பாதிக்கப்படுவது பொதுமக்களாகத்தான் இருப்பார்கள். ஆனால், இயக்கங்களுக்கு அது குறித்தெல்லாம் கிஞ்சித்தும் கவலை கிடையாது. பொதுமக்களும் அரசுகளின் ஓரங்கம்தானே? வரி கட்டுகிறார்களல்லவா? சாகட்டும்.

இரண்டு உலகப்போர்கள் நடந்துமுடிந்து, பெரும்பாலான மேற்கத்திய நாடுகளும் சில கீழை நாடுகளும் நொந்து நூலாகிப் போன காலத்தில்தான், தீவிரவாதம் தன்னுடைய அடுத்த அவதாரத்தை எடுத்தது. பல மன்னராட்சி நாடுகளில் யுத்தத்துக்குப் பிறகு ஜனநாயகம் வந்துவிட்டது. மக்கள் வரிசையில் நின்று ஓட்டுப் போடும் கண்கொள்ளாக் காட்சியைப் பரவலாகப் பார்க்க முடிந்தது. குறிப்பாக, ஐரோப்பாவில். ஜனநாயகத்தின் சௌகரியங்கள் மக்களுக்கு அனுபவபூர்வமாகப் புரிந்துவிட்ட பிறகு, பழைய மகாராஜாக்கள் எல்லோரும் சமர்த்தாக மியூசியத்தில் போய் உட்கார்ந்துவிடவேண்டியதாகிவிட்டது. புரட்சி செய்தவர்கள் எல்லோரும் எங்கெங்கோ செட்டில் ஆகிவிட, புதிய புரட்சியாளர்கள் நான்கு காரணங்களுக்காக ஆயுதம் ஏந்திக் களத்தில் இறங்க ஆரம்பித்தார்கள்.

அரசியல் ரீதியிலான அடக்குமுறை. மத ரீதியிலான தாக்குதல்கள். இனக்குழு ரீதியிலான ஒழிப்பு நடவடிக்கைகள். பொருளாதார ரீதியிலான சுரண்டல்கள்.

இது ஒவ்வொன்றுமே மிக விரிவாகப் பார்க்கப்பட வேண்டிய விஷயங்கள். ஏனெனில் நல்லதும்

கெட்டதும் கலந்து ஜனநாயகம் கொடுத்த பரிசுகளில் இவை நான்குமே மிக முக்கியமானவை.

இன்றைக்குத் தீவிரவாத இயக்கம் என்று முத்திரை குத்தப்பட்டுள்ள எந்த ஓர் அமைப்பை எடுத்துக்கொண்டாலும், மேற்சொன்ன நான்கு காரணங்களுள் ஒன்றை முன்வைத்துத்தான் அவர்கள் போராடிக்கொண்டிருக்கிறார்கள் என்பது புரியும்.

தமிழர்களுக்குச் சம உரிமை மறுக்கப்பட்டபோதுதான் இலங்கையில் விடுதலைப் புலிகள் அமைப்பு உருவானது. மத்தியக்கிழக்கு தேசங்களின் எண்ணெய் வளத்தைச் சுரண்டுவதற்காகவே அந்தப் பகுதியில் ஏதாவது காரணம் சொல்லி வந்து கூடாரம் அடித்து உட்கார்ந்து, காலி செய்ய மறுக்கும் அமெரிக்காவை விரட்டி ஒழிப்பது ஒன்றே குறி என்று சொல்லித்தான், அல் காயிதா உருவானது. அயர்லாந்தில் பிரிட்டனின் ஏகாதிபத்தியத்தை ஒழிப்பதற்காகவே உருவானதுதான் ஐரிஷ் ரிபப்ளிகன் ஆர்மி. தொண்ணூறுகளின் தொடக்கத்தில் (குறிப்பாக 1994-ம் ஆண்டு) உலகையே உலுக்கிய ருவாண்டா இனப் படுகொலைகள் நினைவிருக்கிறதா? 80,000 அப்பாவி மக்கள் இறந்துபோனது சரித்திரத்தின் பழைய பக்கங்களாகிவிட்டது. இதற்குக் காரணமான 'இண்டரம்வெ' (வீஸீமீக்ஷீணீலீணீஷீமீ) இயக்கத்தின் செயல்களை எதனைக்கொண்டு நியாயப்படுத்த முடியும்?

முன்சொன்ன நான்கு விஷயங்கள்தான். ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு காரணம். ஒவ்வொரு சித்தாந்தம். கொள்கைகளும் கோட்பாடுகளும் வேறு வேறாக இருந்தாலும் உலகை நிரந்தர அச்சத்தில் இவர்கள் நிறுத்திவைத்திருப்பதை மட்டும் யாருமே மறுக்கமுடியாது.

இவர்களை மொத்தமாக மிக்ஸியில் அடித்து சாறு எடுத்துக் குடித்துப் பார்த்துப் புரிந்துகொள்ளவே முடியாது. ஒவ்வொருவரையும் தனித்தனியே அணுகி உற்றுப்பார்த்தால்தான் என்ன செய்கிறார்கள் என்று புரியும். என்ன செய்கிறார்கள் என்பதைக் காட்டிலும், எப்படிச் செய்கிறார்கள் என்பதில்தான் விசேஷம். வருடம் 1992. மாதம், டிசம்பர். இடம், ஏடன் துறைமுகம். அமெரிக்காவிலிருந்து சோமாலியாவுக்கு ஏராளமான நிவாரணப் பொருள்களை ஏற்றிக்கொண்டு நிறைய கப்பல்கள் போய்க்கொண்டிருந்த சமயம் அது. கப்பலில்

சென்றவை நிவாரணப் பொருள்கள் மட்டுமல்ல, நிறைய ராணுவத்தினரும் கூட.

எதற்குப் போனார்கள் என்பதை விவரிக்கவே தேவையில்லை. சோமாலியப் பஞ்சமும் பசியும் வறட்சியும் புகைப்படங்களில் அமரத்துவம் பெற்றுவிட்டவை. ஆனால், முஸ்லிம் தேசமான சோமாலியா மீது முஸ்லிம் விரோத அமெரிக்காவுக்கு ஏன் அக்கறை பீறிடுகிறது?

இந்தக் கேள்வி அல் காயிதாவுக்கு எழுந்தது. அதாவது, ஒசாமா பின்லேடனுக்கு. அப்போது அவர் இருந்த இடம் சூடானின் தலைநகரான கார்ட்டொம் நகரில். எதற்கு அங்கே போனார், என்ன செய்துகொண்டிருந்தார் என்பதையெல்லாம் பின்னால் பார்க்கத்தான் போகிறோம். இந்தச் சம்பவத்தை விவரிப்பதற்கான காரணம் வேறு.

சூடானில் இருந்த ஒசாமா பின்லேடன், சோமாலியாவுக்குப் போகும் அமெரிக்க ராணுவத்தினரை ஏடனில் வைத்துத் தீர்த்துக்கட்ட ஒரு திட்டம் தீட்டினார். கவனிக்கவும். சூடான் இருப்பது கிழக்கு ஆப்பிரிக்காவில். ஏடன் இருப்பது மத்திய ஆசியாவில். வருவது அமெரிக்கக் கப்பல். போகிற இடம் சோமாலியா.

ஒசாமாவின் திட்டம் என்ன? அமெரிக்க மாலுமிகள் ஏடன் துறைமுகத்தில் இறங்கும்போது, எப்படியும் அங்குள்ள சில நட்சத்திர ஓட்டல்களில்தான் தங்கி இளைப்பாறுவார்கள். அங்கே குண்டு வைத்து அழித்துவிடுவது.

இதையெல்லாம் அவர் ஐந்தாண்டுத் திட்டங்களாகச் சேகரித்துவைத்து யோசித்து முடிவு செய்யவில்லை. இரண்டு மூன்று நாள்களில் மேற்கொள்ளப்பட்ட முடிவு இது. அவகாசமே

கிடையாது. கப்பல் வரும்போது காரியத்தை முடித்துவிடவேண்டும். எப்படி முடிப்பது? யார் செய்யப்போகிறார்கள்? ஐ.எஸ்.டி. கால் போட்டு ஆள் பிடிக்க முடியாது. தகவல் தெரிவிக்கப் படவேண்டும். அதுவும் வெளியில் கசியாமல் காரியத்தை கனகச்சிதமாகச் செய்து முடிக்க வேண்டும்.

காரியம் நடக்கத்தான் செய்தது. ஏடனிலேயே இருந்த ஒரு சிறு போராளிக் குழுவைப் பிடித்து, அமெரிக்க மாலுமிகள் முன்பதிவு செய்திருந்த இரண்டு நட்சத்திர ஹோட்டல்களில் குண்டு வைத்து ரிமோட் மூலம் வெடிக்கச் செய்தார்கள்.

அமெரிக்கர்களுக்கு அந்தச் சந்தர்ப்பம் எப்படியோ அதிர்ஷ்டவசமாகிப்போனது. பெரிய பாதிப்பில்லாமல் தப்பித்துவிட்டார்கள், மாலுமிகள். குறைந்தது நூறு பேரையாவது கொல்லும் என்று ஒசாமா எதிர்பார்த்த அந்தக் குண்டுகள், வெறும் இரண்டு பேரின் உயிரைப் பறித்ததுடன் திருப்தியடைந்துவிட்டது.

தோல்விதான். செலவுதான். வீண் முயற்சிதான். அதற்காக அவர் சும்மா இருக்கவில்லை. வினாடி நேரத்தில் சுதாரித்துக்கொண்டு, சோமாலியாவுக்கு வரும் அமெரிக்க ராணுவத்தினரை, சோமாலிய இளைஞர்களைக் கொண்டே ஓட ஓட விரட ஒரு திட்டம் தீட்டி, உடனடியாக கென்யாவின் தலைநகரான நைரோபியில் ஒரு ஆபீஸ் திறந்து, சோமாலியாவிலிருந்து ஆட்களை அழைத்துவந்து பயிற்சி கொடுக்க ஆரம்பித்துவிட்டார்.

நூறு பேரைக் கொன்றால் போதும் என்று நினைத்தவர், இறுதியில் சோமாலியாவிலிருந்து ஒருத்தர் விடாமல் அத்தனை அமெரிக்க ராணுவ வீரர்களையும் ஓட ஓட விரட்டியடித்த கதையும் பின்னால் விரிவாக வரத்தான் போகிறது.

இந்தச் சம்பவத்தை இங்கே குறிப்பிட்டதற்குக் காரணம் நெட் ஒர்க் பலம். எப்படி முடிந்தது? சூடான் எங்கே, ஏடன் எங்கே, சோமாலியா எங்கே, கென்யா எங்கே? விரல் சொடுக்கினால் எப்படி உடனே உடனே வேலைகள் நடக்கின்றன? எங்கிருந்து கொட்டுகிறது பணம்? யார் உதவுகிறார்கள்? எப்படி ஆள் பிடிக்கிறார்கள்?

அல் காயிதாவுக்கு மட்டுமல்ல, இந்த பலம். அத்தனை இயக்கங்களுக்குமே இருக்கிறது. சில இயக்கங்களுக்கு அல் காயிதாவைக் காட்டிலுமே அசுர பலம் இருக்கிறது.

அல் காயிதாவிலிருந்தே ஆரம்பித்து அனைத்தையும் பார்க்கலாம்.



#3 மனித வாசனை இருக்கும் இடங்களிலெல்லாம் யாராவது ஒரு நாயர், டீக்கடை போட்டுவிடுவார் என்று ஒரு காலத்தில் ஜோக்கடிப்பார்கள். இப்போது டீக்கடை இல்லாத இடங்களில் கூட பெப்சியும் கோககோலாவும் கிடைக்கின்றன.

மார்க்கெட்டிங் என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள். சந்தைப்படுத்துதல் என்று தமிழிலும் படுத்தலாம். சாத்தியமான இடங்களில் எல்லாம் காற்றைப் போல் நிறைந்துவிடுவது.

விளையாட்டாகச் சொல்லிவிடலாம். இது எத்தனை கஷ்டம் தெரியுமா? எத்தனை வருட உழைப்பு தேவைப்பட்டிருக்கும் தெரியுமா? எத்தனை கோடிப் பணத்தைக் கொட்டிக்கொண்டே இருக்கவேண்டும் தெரியுமா? நமக்குத் தெரிந்த நம் ஊர் மட்டுமில்லை. உலகில் எந்தெந்த நாடுகளெல்லாம் உள்ளே வர அனுமதி கொடுக்கிறதோ, அத்தனை நாடுகளிலும் இந்த கம்பெனிகள் இப்படித்தான் தம் சரக்கைச் சந்தைப்படுத்துகின்றன. கற்பனை செய்யமுடியாத கோடிகளில் செலவழித்து, அதைவிடவும் அதிகமாக லாபம் எடுக்கின்றன.

பெப்சியும் கோக்கும் மட்டுமல்ல. இன்னும் எத்தனை எத்தனையோ மாபெரும் கார்ப்பரேட்டுகள் இப்படித்தான் உலகம் முழுவதும் கிளை விரிக்கின்றன. ஒவ்வொரு தேசத்தின் அரசியல் சூழ்நிலையைப் பார்த்து, அதற்கேற்ப தங்கள் வியூகங்களை வகுக்கின்றன. ஆடுகிற மாட்டை ஆடியும், பாடுகிற மாட்டைப் பாடியும் கறக்கின்றன. திறந்த பொருளாதாரம். ஆ, அது எத்தனை சௌகரியம்! உயிரோடு இருக்கிற ஒரு சில கம்யூனிச தேசங்கள் தவிர இவர்கள் தம் ராட்சஸக் கிளைகளை விரிப்பதற்கு உலகில் வேறு எங்கும் பெரிய தடையேதுமில்லை.

கிட்டத்தட்ட இதே மாதிரிதான். என்ன, கொஞ்சம் ரகசியமாக, இதே வழியைத்தான் அல் காயிதா பின்பற்றுகிறது. சாத்தியமுள்ள இடங்களிலெல்லாம் கடையை விரி. நேரடிக் கடைக்கு வாய்ப்பில்லை என்றால் அடுத்தவன் கடையை 99 வருஷ லீஸுக்கு எடு. அதுவும் முடியாவிட்டால் அடுத்தவன் கடையில் உன் பொருளையும் விற்பனைக்கு வை. அதற்கும் வழியில்லையா? அடுத்தவன் கடையையே ரகசியமாக நீ விலைக்கு வாங்கிவிடு.

இதில் மிகையே கிடையாது. ஒரு சதவீதம் கூடக் கிடையாது. அமெரிக்கா, கனடா, ஆப்ரிக்கா, ஐரோப்பா, மத்திய ஆசியா, கிழக்கு ஆசியா, ரஷ்யா, முன்னாள் சோவியத் யூனியன் மூட்டையிலிருந்து உருண்டு போன அத்தனை உருளைக்கிழங்கு தேசங்கள், ஆஸ்திரேலியா... இருங்கள், கொஞ்சம் மூச்சு வாங்கிக்கொள்ளலாம். லத்தீன் அமெரிக்கா என்று சொல்லப்படும் தென் அமெரிக்காவில் மட்டும் ஓரிரு இடங்களில் - மற்றபடி இன்று கடவுளுக்கு அடுத்தபடி நீக்கமற நிறைந்திருப்பது அல் காயிதாதான்.

ஒசாமா பின்லேடன் என்கிற ஒரு தனி மனிதரின் கனவுக் குழந்தை அது. தலைக்கு மேலே இரண்டு கொம்புகளை நீட்டிக்கொண்டு ஓனிடா சாத்தான் போல நமக்குத் தெரிந்தாலும், இந்தக் கணம் ஒசாமா ஒரு வார்த்தை சொன்னால் உடனே ஆயுதம் ஏந்துவதற்கு உலகம் முழுவதிலும் குறைந்தது ஒரு லட்சத்து இருபதாயிரம் பேர் தயாராக இருக்கிறார்கள் என்று அமெரிக்க உளவுத்துறையான சி.ஐ.ஏ., ஊரெல்லாம் சுற்றி கருத்துக் கணிப்பு நடத்திக் கவலைப்பட்டிருக்கிறது. ஆயுதம் ஏந்த மட்டும்தான் இத்தனை பேர். ஆதரவு மட்டும் தெரிவித்தால் போதுமென்றால், கண்ணை மூடிக்கொண்டு எழுபது லட்சம் பேர் கையைத் தூக்கிவிடுவார்கள்.

சொல்லித்தான் ஆகவேண்டும். இது ஒசாமாவின் இருபத்தைந்து வருடக் கடும் உழைப்பின் விளைவு. தமது சித்தாந்தத்தைப் பரவலாக்க அவர் தேர்ந்தெடுத்த மார்க்கெட்டிங் உத்தி கொடுத்த வெற்றி.

உலகில் அல் காயிதா தவிர பிற அத்தனை தீவிரவாத இயக்கங்களுக்குமே அவர்கள் வாழும் தேசத்து அரசுடன் மட்டும்தான் பிரச்னை. இலங்கைத் தீவில் தமிழர்களுக்குத் தனி நாடு வேண்டும் என்பது தவிர எல்.டி.டி.ஈ. வேறெதையும் கேட்பதில்லை. நேபாளத்தில் இத்தனை கலாட்டாக்கள் நடந்ததே, பிரபாகரன் ஏன் ஒரு சிறு அறிக்கை கூட வெளியிடவில்லை என்று யாராவது கேட்டார்களா? அட, இலங்கையில் இத்தனை வருஷங்களாகப் போராடிக்கொண்டிருக்கிறார்களே, இந்த ஹமாஸ் அதற்காக ஒரு துரும்பையாவது தூக்கிப்

போட்டிருக்குமா என்று உங்களுக்கு எப்போதாவது தோன்றியிருக்குமா? ஈராக்கில் தினசரி ரகளை. ஒரு ஹிஸ்புல் முஜாகிதினோ, குர்திஸ்தான் ஒர்க்கர்ஸ் பார்ட்டியோ, ரெட் ப்ரிகேடோ ஒரு வார்த்தை ஏனென்று கேட்கவில்லையே? அட, நேபாளத்தில்தான் மனிஷா கொய்ராலாவின் தாத்தா பிரதமராகிவிட்டாரே, இனிமேல் அந்த மாவோயிஸ்டு போராளிகளுக்கு அங்கே என்ன வேலை? பஸ் பிடித்து துருக்கிக்கோ தஜிகிஸ்தானுக்கோ போய் சண்டை போடவேண்டியதுதானே?

செய்யமாட்டார்கள் அல்லவா? இங்கேதான் மாறுபடுகிறது அல் காயிதா. மற்ற அனைத்துத் தீவிரவாத இயக்கங்களும் தம் சொந்த தேசத்தில் ஆட்சியாளர்களுக்கு எதிரான அதிருப்தியைத்தான் தமது நடவடிக்கைகளின் மூலம் தெரியப்படுத்துகிறார்கள். அல் காயிதா மட்டும்தான் எங்கெல்லாம் முஸ்லிம்கள் கஷ்டப்படுகிறார்களோ, அங்கெல்லாம் வந்து கைகொடுப்பேன் என்று சொன்ன ஒரே இயக்கம். ஒரு குறிப்பிட்ட தேசம் அதன் இலக்கல்ல. மாறாக, ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகத்தினருக்கும் தன்னை ஒரு பாதுகாவலனாகத் தானே நியமித்துக்கொண்ட அமைப்பு அது.

அல் காயிதாவின் இந்த இயல்பு உருவாக்கப்பட்ட விஷயமல்ல. மாறாக, ஒசாமா பின்லேடனின் அடிப்படை இயல்பே இதுதான்.

இல்லாவிட்டால் மிகப்பெரிய கட்டுமானக் குடும்பத்தின் வாரிசாக, பல கோடிக்கணக்கான சொத்துகளைச் சாப்பிட்டுக்கொண்டு, சௌக்கியமாக, வேண்டியமட்டும் கல்யாணம் பண்ணிக்கொண்டு, வம்ச விருத்தி செய்து வாழ்ந்து ரிடையர் ஆகியிருக்கவேண்டிய ஒசாமா, நாட்டுத்துப்பாக்கியைத் தூக்கிக்கொண்டு காட்டுக்குப் போயிருக்கமாட்டார்.

ஒசாமாவின் தந்தை முஹம்மது பின் லேடன், சவூதி அரேபியாவில் மிகப்பெரிய கட்டுமான நிறுவனம் ஒன்றை நடத்திவந்தார். லேடன் க்ரூப் என்பது இன்றும் அங்கே சக்கைப்போடு போட்டுக்கொண்டிருக்கும் ஒரு நிறுவனம். நம் ஊரில் எல் அண்ட் டி இருக்கிறதல்லவா? அந்த மாதிரி. இஸ்லாமியர்களின் மாபெரும் புனிதத் தலங்களான மெக்கா, மெதீனா நகரங்களில் அரசுக்கு என்ன கட்டுமான வேலை இருந்தாலும் 'கூப்பிடு முஹம்மது பின்லேடனை'தான்! ஜெருசலேத்தில் உள்ள (பிரச்னைக்குரிய) அல் அக்ஸா பள்ளிவாசலைச் செப்பனிடவேண்டும் என்று முடிவு செய்தபோது, இரண்டாவது அபிப்பிராயமே இல்லாமல் இதே லேடன் க்ரூப்பைத்தான் கூப்பிட்டார்கள். மத்தியக் கிழக்கு நாடுகள் முழுவதிலும் இந்த நிறுவனத்துக்கு அப்படியொரு செல்வாக்கு.

முஹம்மது பின்லேடன், ஜெத்தா துறைமுகத்தில் சரக்கு இறக்கும் கூலித்தொழிலாளியாகத்தான் தம் வாழ்க்கையைத் தொடங்கினார். எப்படி இப்படியொரு உயரத்தைத் தொட்டார் என்பது தனியே எழுதவேண்டிய ஒரு வெற்றிக்கதை. தீவிரமான பக்தி. தொழிலில் நேர்மை. நிறைய தான, தருமங்கள். அதே சமயம் தமது தனிப்பட்ட சந்தோஷங்களிலும் அவர் சமரசமில்லாதவர். இஸ்லாம் அனுமதித்தபடி நான்கு மனைவிகள். அது தவிர, தனது சொத்து அனுமதித்ததற்கேற்ப ஏழெட்டு சிறிய வீடுகள் அவருக்கு இருந்தன.

முஹம்மது பின்லேடனின் அத்தனை மனைவியருக்குமாகச் சேர்த்து மொத்தம் ஐம்பத்திரண்டு குழந்தைகள். இதில் ஒசாமா பதினேழாவது குழந்தை. ஒசாமாவின் தாய் ஹமீதா, சிரியாவிலிருந்து வந்த பெண்மணி. கொஞ்சம் படித்தவர் என்பது பிராந்தியத்தில் அடிக்கடி வியப்புடன் பேசப்பட்ட விஷயம். மகனைத் தீவிர பக்திமானாக, ஒரு நேர்மையான முஸ்லிமாக அவர் வளர்க்கத் தொடங்கினார்.

சுமாராகப் படித்தார் ஒசாமா. ரொம்ப அமைதியான பையன் என்று வகுப்புகளில் அவருக்கு நல்ல பெயர் உண்டு. மெதீனாவில் பள்ளிப்படிப்பை முடித்துவிட்டு, ஹிஜாஸில் மேல்படிப்பை முடித்தார். படிப்பு முடியும்போதே தமது தாய்வழி உறவுக்காரப் பெண் ஒருத்தியைத் திருமணம் செய்துகொண்டார். திருமணம் நடந்தது தெரியுமே தவிர தேனிலவுக்குப் போனாரா என்று

தெரியாது. ஆனால், ஒன்று நிச்சயம். கல்யாணம் ஆன சில தினங்களுக்குள்ளாகவே சவூதி மன்னர் அப்துல் அஜிஸ் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து நிர்வாகவியல் படிக்கத் தொடங்கிவிட்டார்.

இந்தக் காலகட்டத்தில்தான் ஒசாமாவின் மதப்பற்று அதிகரிக்க ஆரம்பித்தது. அந்நாளின் தலைசிறந்த இஸ்லாமியச் சிந்தனையாளர்கள் என்று சொல்லப்படும் அப்துல்லா அஸம், சையத் கதப், அவரது சகோதரரான அப்துல்லா கதப் போன்றவர்களின் தொடர்பும் அன்பும் ஒசாமாவுக்கு அப்போது கிடைத்தது. அவர்களிடம் இஸ்லாம் தொடர்பான பல சந்தேகங்களுக்கு விடை பெற்ற ஒசாமாவுக்கு தம் மதத்துக்குத் தம்மாலான எதையாவது தொடர்ந்து செய்துகொண்டே இருக்கவேண்டும் என்ற எண்ணம் வலுப்படத் தொடங்கியது.

இது ஒசாமாவே நினைத்துப் பார்க்காத மாற்றம். அவருடைய யோசனையெல்லாம் படிப்பை முடித்தோமா, அப்பாவின் கம்பெனியில் ஏதாவது ஓர் உத்தியோகத்தில் சேர்ந்தோமா, தொழில் கற்றுக்கொண்டு முன்னுக்கு வந்தோமா என்று இருப்பதில்தான். ஆனால் மேற்சொன்ன அறிஞர்களின் சகவாசம் அவரை நிர்வாகவியலிலிருந்து ரொம்ப தூரத்துக்கு இழுத்துக்கொண்டு போய்விட்டது.

பேப்பர் படித்து உலக விஷயம் தெரிந்துகொண்டவர் அல்லர் அவர். மாறாக, உலகெங்கும் முஸ்லிம் சமூகத்தவர்கள் எங்கெங்கே என்னென்ன கஷ்டப்படுகிறார்கள், அதற்கு என்ன காரணம், யார் காரணம், எதனால் கஷ்டம் தீராமல் இருக்கிறது என்று அக்குவேறு ஆணிவேறாகத் தம் ஆசிரியர்களிடம் விவாதித்து, அலசித் தெளிவு கொண்டவர்.

பாலஸ்தீன் முஸ்லிம்களுக்கு யூதர்களால் பிரச்னை. ஈராக் முஸ்லிம்களுக்கு சதாமால் பிரச்னை. ரஷ்ய உருளைக்கிழங்கு தேசங்களின் முஸ்லிம்களுக்கு கிறிஸ்துவர்களாலும் கம்யூனிஸ்டுகளாலும் பிரச்னை. ஐரோப்பிய முஸ்லிம்களுக்கு அத்தனை பேராலும் பிரச்னை. பாகிஸ்தான் முஸ்லிம்களுக்கு அரசாங்கமே பிரச்னை. ஆப்கனிஸ்தான் முஸ்லிம்களுக்கு -

அப்போதுதான் ஒரு ஹெலிகாப்டர் விபத்தில் ஒசாமாவின் தந்தை இறந்துபோனார். தாற்காலிகமாகத் தமது சொந்தச் சகோதரர்கள் துன்பத்தில் சாதல் கண்டு சிந்தை இரங்குவதை நிறுத்திவைத்துவிட்டு, அவசர அவசரமாக அப்பாவின் கம்பெனியில் போய்ச் சேர்ந்தார் ஒசாமா. போதாக்குறைக்கு சொத்துத் தகராறு வேறு. ஒன்றிரண்டு உடன்பிறப்புகள் இருந்தாலே சமாளிப்பது கஷ்டம். முஹம்மது பின்லேடன் அரை செஞ்சுரிக்கு மேலேயும் இரண்டு ரன் எடுத்தவர். கேட்கவேண்டுமா?

சவூதி அரேபிய மன்னரே ஒரு கமிட்டி அமைத்து லேடன் குடும்பத்துச் சொத்துகள் பிரிந்துவிடாமல் பராமரிக்கப்பட ஏற்பாடுகள் செய்தார் என்றால் பார்த்துக்கொள்ளுங்கள். அப்படியும் முடியவில்லை. ஒசாமாவின் சகோதரர்களுள் ஒருவரான அலி என்பவர் தன் பங்குச் சொத்தைப் பிரித்துத் தரத்தான் வேண்டும் என்று ஒன்றரைக் காலில் நின்று சாதித்தார். வேறு வழியில்லாமல் அவரது பங்கை மட்டும் பிரித்துக் கொடுத்து அனுப்பிவைத்தார்கள்.

இந்தச் சம்பவம் நடந்தபோது அலிக்கு வயது 21. இப்போது இவர் லெபனானில் வசிக்கிறார். தொடக்க காலத்தில் ஒசாமா குறித்த தகவல்களை இவரிடமிருந்தே சி.ஐ.ஏ. பெற்றுவந்தது.

இது ஒரு பக்கம் இருக்க, பிசினஸில் இறங்கிவிட்ட ஒசாமாவுக்குத் தமது மதப் பணிகளை அதன்பொருட்டு நிறுத்திவிடவோ, முற்றிலும் ஒரு பிசினஸ்மேன் ஆகி கோட் சூட் மாட்டிக்கொண்டு விமானத்தில் வலம் வரவோ துளியும் விருப்பமில்லை. ஓய்வு நேரம் கிடைக்கும்போதெல்லாம், எங்கெங்கே இஸ்லாமியர்கள் கஷ்டப்படுகிறார்கள் என்று கவனிக்கவும், அங்கேயெல்லாம் தன்னால் என்ன செய்யமுடியும் என்று சிந்திக்கவும் ஆரம்பித்தார்.

உதாரணமாக, அப்போது ஏமன் நாட்டின் தென்பகுதியில் முஸ்லிம்களுக்கு கம்யூனிஸ்டுகளால்

பெரும் பிரச்னை இருந்தது. அடிக்கடி மோதிக்கொண்டார்கள். வெறும் வாய்ச்சண்டை போலத் தொடங்கிய இது, நாளடைவில் மிகப் பெரிய யுத்தமாகவே ஆகிவிடும் அளவுக்குப் பரிணாம வளர்ச்சி கண்டது. ஒசாமாவுக்கு இது மிகவும் கவலை அளித்தது. தவிரவும் அங்கே கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த பெரும்பாலான முஸ்லிம்கள், சவூதியிலிருந்து பிழைப்புத்தேடி ஏமனுக்குப் போனவர்கள். போன இடத்தில் கம்யூனிஸ்டுகளால் கொத்து பரோட்டா போடப்பட்டவர்கள்.

ஒசாமா, இதற்கு ஏதாவது செய்யவேண்டும் என்று முடிவு செய்து, சவூதியிலிருந்து ஏமனுக்குப் போன தமது நண்பர்கள் மூலம் அவ்வப்போது நிறையப் பணம் கொடுத்து அனுப்பினார். வேறு என்ன வேண்டுமானாலும் கேளுங்கள் என்று அக்கறையுடன் தகவல் அனுப்பினார். கஷ்டப்படும் முஸ்லிம்களுக்கு உதவுவதைக் காட்டிலும் பெரிய இறைப்பணி இருக்கமுடியாது என்பது அவரது கருத்து.

ஏமன் போராளிகள் என்றில்லை. எங்கே முஸ்லிம்கள் கஷ்டப்படுவதாகக் கேள்விப்பட்டாலும் அவர் செய்யக்கூடியவராகவே இருந்தார். இது அவரது பிறவிக்குணம். இதே குணம்தான் அவரை முன்பின் தெரியாத ஆப்கனிஸ்தான் போராளிகளுக்கு உதவி செய்வதற்காக ரகசிய விமானம் ஏற்றி, பாகிஸ்தானுக்கு 1979-ல் அழைத்து வந்து சேர்த்தது.



#4 தேதி சரியாகத் தெரியவில்லை. ஆனால், வருஷம் 1980. ஜனவரி மாதம். சவூதி அரேபியாவிலிருந்து புறப்பட்டு, ஆப்கனிஸ்தான் தலைநகர் காபூலுக்கு வந்து சேர்ந்தார் ஒசாமா பின்லேடன்.

காபூலில் என்ன இருக்கிறது? உண்மையில் சொல்லப்போனால் ஒன்றுமில்லை. ஆப்கனில் சோவியத் படைகளுக்கு எதிராகப் புரட்சி செய்யலாம் என்று யோசித்துக்கொண்டிருந்த போராளிகளெல்லாம் பாகிஸ்தானில் பெஷாவரிலும் கராச்சியிலும் போய் உட்கார்ந்து, பல் குத்திக்கொண்டிருந்தார்கள். மிஞ்சிப்போனால் ஏழெட்டுத் தலைவர்கள். சுமார் ஐம்பது அல்லது அறுபது தொண்டர்கள். அவ்வளவுதான். இந்த பலத்தை வைத்துக்கொண்டு புரட்சியாவது புடலங்காயாவது?

வந்திருக்கும் சோவியத் ரஷ்யாவின் ராணுவத்தில் இருக்கிற தலைகளை எண்ணி மாளாது. நிற்கவைத்து பரேடு நடத்தினால் மைல் கணக்கில் நீளும் போலிருந்தது. தவிரவும் பீரங்கிகள் என்ன, இயந்திரத் துப்பாக்கிகள் என்ன, கண்ணிவெடிகள் என்ன, கைத்துப்பாக்கிகள் என்ன எல்லாவற்றைவிட முக்கியம், அவர்களிடமிருந்த வாக்கி டாக்கி. பீரங்கியைக் காட்டிலும் ஆப்கன் போராளிகள் அதைப் பார்த்துத்தான் பயந்தார்கள்.

யுத்தத்தில் வீரத்தைக் காட்டிலும் தகவல் தொடர்புதான் அதிமுக்கியமானது. உடனுக்குடன் தகவல்களைப் பரிமாறிக்கொள்ள முடிந்த அணிதான் வெற்றி பெறும் என்று நேற்று வரையிலான

யுத்த சரித்திரம் தெரிவிக்கிறது.

இதெல்லாம் ஆப்கன் போராளிகளுக்குத் தெரியும். ஆனால், அவர்களால் அப்போது பெருமூச்சு விட மட்டுமே முடிந்தது. காரணம், ஆள் பலம் போதாது. ஆயுத பலம் அறவே போதாது. அனுபவம்? ம்ஹும். அப்படியொன்றும் பிரமாதமாகச் சொல்லிக்கொள்ள ஏதுமில்லை. குறி பார்த்துச் சோடா பாட்டில் வீசத் தெரிந்த அனுபவம்தான்.

ஆனால் அவர்களுக்கு வேட்கை இருந்தது. அன்னியர் பிடியிலிருந்து ஆப்கனிஸ்தான் விடுதலை பெறவேண்டும் என்று, ஆத்மசுத்தியுடன் விரும்பினார்கள். உயிரே போனாலும் பரவாயில்லை; போராடிப் பார்த்துவிடுவது என்று முடிவு செய்துதான் போராட்டம் வரை உயிர் தப்பியிருப்பதற்காகப் பாகிஸ்தானுக்கு வந்து ஒளிந்துகொண்டிருந்தார்கள்.

ஆப்கனிஸ்தானுக்கு அது ஒரு சாபக்கேடு. இப்போதைய ஹமீத் கர்ஸாய்க்கு முந்தைய நாள் வரை தனது சரித்திரம் முழுவதையும் யுத்தங்களிலேயே கழித்த தேசம் அது. வழியில் போகிற வீரப்பனெல்லாம் கொஞ்ச கொஞ்சகாலம் வந்து அரசுக் கட்டில் அல்லது தொட்டிலில் உட்கார்ந்து அனுபவித்துவிட்டுப் போயிருக்கிறார்கள். சந்தேகமில்லாமல் அது ஆற்றில் போகிற தண்ணீர். அய்யா குடி, அம்மா குடி என்று அள்ளி அள்ளிக் குடித்து அனுபவித்துத் தீர்த்திருக்கிறார்கள்.

ஒசாமா அங்கே முதல் முதலில் வலது அல்லது இடது கால் எடுத்து வைத்த காலத்தில் ஆப்கனிஸ்தான், சோவியத் யூனியனின் கட்டுப்பாட்டில் இருந்தது. இத்தனைக்கும் ஐம்பது வருஷங்களுக்கு மேலாக ஆப்கனிஸ்தானுடன் மிக நல்ல உறவுடன் நட்பு தேசமாக இருந்தது அது. என்ன பிரச்னையாகிவிட்டது என்றால், ஆப்கனில் உள்நாட்டுக் குழப்பம். வேறென்ன, அதிபரைக் கவிழ்த்துவிட்டு ராணுவத் தளபதி ஆட்சியைப் பிடித்தார். கவிழ்ந்த அதிபரின் பெயர் நூர் முகம்மது தராக்கி. கவிழ்த்த புண்ணியவான், அஃபிசுல்லா அமீன்.

தராக்கி இருந்த காலத்தில், அவர் ரஷ்யாவுக்குச் செல்லப்பிள்ளை. சமர்த்தாகச் சொன்ன பேச்சைக் கேட்டுக்கொண்டு தானுண்டு, தன் தேசமுண்டு என்று இருந்தார். ஆனால், ராணுவத் தளபதி அமீன் ஆட்சிக்கு வந்ததும் முதலில் செய்த புண்ணிய காரியம், சோவியத் யூனியனின் உறவை முறித்துக்கொண்டது. அதுவும் சகட்டுமேனிக்கு கம்யூனிஸ்டுகளைத் திட்டி தினசரி ஓர் அறிக்கை விட்டுக்கொண்டு இருந்தால், செம்படை வீரர்கள் சும்மாவா இருப்பார்கள்?

சரிதான் வா, நீயாச்சு நானாச்சு என்று சோவியத் யூனியன் படை அனுப்பிவிட்டது. ஒரே நாள். ஒரே ராத்திரி. அஃபிசுல்லா அமீனைச் சுற்றி வளைத்து சட்னியாக்கிவிட்டார்கள். அப்புறமென்ன? தாங்கள் சொன்ன பேச்சைக் கேட்கும் ஓர் அரசை அமைக்கும் வேலையில் இறங்குவது போன்ற பாவனையில் ஆப்கன் முழுவதிலும் சோவியத் கொடியைப் பறக்கவிட்டுவிட்டார்கள்.

இதைப் பார்த்துக்கொண்டு அமெரிக்கா சும்மா இருக்குமா? ஏற்கெனவே சோவியத் – அமெரிக்கப் பனிப்போர் உச்சத்தில் இருந்த நேரம் அது. ஆசியாவில் தனக்கொரு தளம் கிடைக்குமா என்று ஆலாய்ப் பறந்துகொண்டிருந்தது அமெரிக்கா. ஆப்கனிஸ்தான் என்பது அமெரிக்காவுக்கு லட்டு. அங்கே கூடாரம் அடித்து உட்கார்ந்தால் ஒட்டுமொத்த ஆசியாக் கண்டத்தையும் கவனிக்கலாம். பரம சௌகரியமாக எண்ணெய் வர்த்தகத்துக்கு வழிகள் அமைக்கலாம். இதையெல்லாம் உத்தேசித்து அமெரிக்காவும் களத்தில் இறங்கிவிட்டால் பிறகு அது ஆப்கன், சோவியத் யுத்தமாக இருக்காது. அமெரிக்க ரஷ்ய யுத்தமாகிவிடும். அப்போது ஆப்கன் மக்கள்? சந்தேகமில்லாமல், கொத்து பரோட்டாதான்.

இதையெல்லாம் யோசித்த ஆப்கன் இளைஞர்கள் சிலர் ஒன்று திரண்டதன் விளைவுதான், சோவியத்துக்கு எதிராகப் போரைத் தொடங்கலாமா என்று பாகிஸ்தான் போய் ரூம் போட்டு உட்கார்ந்து யோசித்த காண்டம்.

ஆகவே, காபூலுக்கு வந்த ஒசாமாவுக்கு அங்கே வேலையில்லை. அன்றே புறப்பட்டு அவர் பெஷாவர் போய்ச் சேர்ந்தார்.

இதெல்லாம் சாதாரண விஷயமே இல்லை. ஒசாமா ஆப்கனிஸ்தானுக்கு வந்ததே ஒரு ரகசிய விமானத்தில். அங்கிருந்து பெஷாவர் போய்ச் சேர்ந்தது இன்னொரு ரகசிய விமானத்தில். மொத்தமாக நாலரை மணி நேரத்தில் அவருக்கு இது சாத்தியமானது என்றால் அவரது அப்போதைய பணபலம் என்னவாக இருக்கும் என்று யோசித்துப் பாருங்கள்.

எல்லாம் அப்பன் சொத்து. சவூதி மன்னரே ஒசாமாவுக்கு விமானம் ஏற்பாடு செய்து கொடுத்ததாகக் கூட ஒரு வதந்தி உண்டு. பாகிஸ்தானில் அவர் சந்திக்கவிருந்த ஆப்கன் புரட்சியாளர்களுக்கும் முன்னதாக அவரது வருகையைத் தெரிவித்து சவூதி அரசாங்கமே ரகசியத் தகவல் அனுப்பியிருந்தது.

ஆக, சவூதியிலிருந்து ஆப்கன் வழியே பாகிஸ்தான். பெஷாவர் வந்து சேர்ந்தார் ஒசாமா.

பெஷாவரிலேயே பஞ்சத்தில் அடிபட்ட மக்கள் வாழும் மிக மோசமான பகுதி அது. சாலை கிடையாது. விளக்குகள் கிடையாது. அவசர ஆத்திரம் என்று இயற்கை அன்னை அழைத்தால் கூட ஒதுங்க ஓரிடம் கிடையாது. அப்படியொரு இடத்தில் ஒரு சிறு மண் வீட்டைத் தேர்ந்தெடுத்து உள்ளே உட்கார்ந்து ஆலோசனை செய்துகொண்டிருந்தார்கள் அவர்கள்.

புர்ஹானுத்தீன் ரப்பானி (ஙிஹூகூஷீலீணீஸீஹூபீபீவீஸீ ஸிணீதீதீணீஸீவீ) என்பவர் அந்தக் குழுவில் மிக முக்கியமான நபர். ஜமாத் ஏ இஸ்லாமி இயக்கத்தின் தலைவர். சையது அகமது கைலானி (ஷிஹ்மீபீ கிலீனீமீபீ நிணீவீறீணீஸீவீ) என்று இன்னொருவர். மிகப் பெரிய மார்க்க அறிஞர். மஹஜ் ஏ மிலி (விணீலீணீக்ஷ்மிவிவீறீறீவீ) என்ற இயக்கத்தின் தலைவர். நபி முஹம்மதி (ழிணீதீவீ விஹூலீணீனீனீணீபீவீ) என்று இன்னொரு மாபெரும் மார்க்க அறிஞர். இவர்களைத் தவிர, ஹிஸ்ப் ஏ இஸ்லாமி அமைப்பின் தலைவர் குல்புதீன் ஹெக்மதியார், அதே அமைப்பைச் சேர்ந்த இன்னொரு தலைவரான யூனுஸ் காலிஸ், ஹர்கத் ஏ இன்குலாப் இஸ்லாமி என்னும் இயக்கத்தைச் சேர்ந்த நபி முகம்மதி, சிப்கத்துல்லா முஜாதிதி என்று பல பெருந்தலைகள் அங்கே கூடியிருந்தனர். சூப்பர் ஸ்டார் மாதிரி ஜமாத் ஏ இஸ்லாமியின் கமாண்டர் அஹமது ஷா மசூத் நடுநாயகமாக வீற்றிருந்தார்.

இவர்களில் புர்ஹானுத்தீன் ரப்பானியையும், அப்துர் ரப் ரசூல் சயஃப்பையும் மட்டும்தான் ஒசாமாவுக்குத் தெரியும். அதுகூட ஒரு சமயம் ஹஜ்ஜுக்குப் போனபோது வழியில் பார்த்து நாலு வார்த்தை பேசியது மட்டுமே. ஆனால் அதெல்லாம் ஒரு விஷயமா? சொந்தச் சகோதரர்கள் துன்பத்தில் சாகிறார்கள். சிந்தை இரங்குவதைக் காட்டிலும் வேறென்ன பெரிய வேலை?

ரப்பானி அவரை மற்றவர்களுக்கு அறிமுகப்படுத்தினார்.

“இந்த இளைஞர்தான் ஒசாமா. சவூதி மன்னர் ஃபைசல் இப்ன் அப்துல் அஜிஸின் (திணீவீஉணீறீ வீதீஸீ கிதீபீஹூறீ கிக்ஷ்வீக்ஷ்) நெருங்கிய நண்பரான முகம்மது பின்லேடனின் மகன்.”

முகம்மது பின்லேடனின் பெயரைச் சொன்னதுமே கூடியிருந்தவர்களுக்கு அவரது பணம் ஞாபகத்துக்கு வந்துவிட்டது. கொஞ்சநஞ்சப் பணக்காரரா! தவிரவும் சவூதி அரேபியாவில் மன்னருக்கு அடுத்தபடி செல்வாக்குப் பெற்ற குடும்பம். ஆகவே வரவேற்பதில் அவர்களுக்கு எவ்விதத் தயக்கமும் இல்லை. பேச ஆரம்பித்தார்கள்.

சவூதி மன்னருக்கு ஆப்கன் போராளிகள் மீது அனுதாபம் உண்டு. ஆனால், நேரடியாக அவரால் உதவ முடியாது. அப்படிச் செய்தால், சோவியத் யூனியனின் பகையைச் சம்பாதித்துக்கொள்வது போலாகிவிடும். ஆகவே, தன்னிச்சையாக ஆப்கன் போராளிகளுக்கு உதவி செய்வதற்காகக்

கிளம்பிய ஒசாமாவை அவர் தனது கருவியாகவும் பயன்படுத்திக்கொள்ள முடிவு செய்திருந்தார்.

என்ன உதவி வேண்டுமானாலும் செய்யுங்கள். உங்களுக்கு உதவ நானும் இருக்கிறேன். ஆனால் ரகசியமாக.

இதுதான் மன்னர் சொல்லியனுப்பிய செய்தி.

சரி, என்ன வேண்டும்? என்ன செய்யலாம்? நேரடியாகவே விஷயத்துக்கு வந்தார் ஒசாமா.

அஹமது ஷா மசூத் கேட்டார் : "அதெல்லாம் இருக்கட்டும்; நாங்கள் கஷ்டப்படுவது குறித்து உங்களுக்கு என்ன அக்கறை?"

ஒசாமா புன்னகையுடன் பதில் சொன்னார்: "எந்த முஸ்லிமை யார் அடித்தாலும் எனக்கு வலிக்கும்."

அல் காயிதாவின் இன்றுவரையிலான நோக்கம், செயல்திட்டம் அனைத்துமே இதுதான். இந்த ஒரு வரியைக் கொண்டுதான் அல் காயிதாவைக் கட்டினார் ஒசாமா பின்லேடன். அல் காயிதா என்ற சொல்லுக்கே அடித்தளம் என்றுதான் பொருள். மிக வலுவான அடித்தளம் இது. கவனித்துப் பார்த்தால் நிறைய பொருள் தரும் வாசகம் இது. முஸ்லிமை அடித்தால் வலிக்கும். எந்த முஸ்லிமை அடித்தாலும் வலிக்கும். யார் அடித்தாலும் வலிக்கும். எனக்கு வலிக்கும்."

அங்கே கூடியிருந்தவர்கள் ஒசாமாவை நூறு சதவிகிதம் நம்புவதற்கு, அந்த ஒரு வரி போதுமானதாக இருந்தது. உடனே ஆரம்பித்துவிட்டார்கள். என்ன செய்யலாம்? எப்படிச் செய்யலாம்?

ஆயுதங்கள் வேண்டும் என்பதுதான் அவர்களது மிக முக்கியமான கோரிக்கையாக இருந்தது. ரப்பானிக்கு அதுதான் தலைபோகிற கவலை. ஏனெனில், அவர்களுடனிருந்த சுமார் ஐம்பது வீரர்களுக்குப் போதுமான துப்பாக்கிகள் கூட இல்லை. ஷிப்ட் முறையில்தான் அவர்களுக்குத் துப்பாக்கியே கிடைக்கும். அதுவும் சாதாரண நாட்டுத் துப்பாக்கி. ஆப்கனில் பலசரக்குக் கடைகளில் கூட அப்போது அந்த ரகத் துப்பாக்கிகள் தாராளமாகக் கிடைக்கும். லைசென்ஸாவது மண்ணாங்கட்டியாவது? சின்னக் குழந்தைகளுக்குக் கூட அங்கே துப்பாக்கியுடன் சிநேகம் உண்டு. வீட்டில் இருக்கும் ஒட்டடைக் கொம்பு, துடைப்பம் போல, அதுவும் ஒரு வஸ்து. அவ்வளவுதான். துப்பாக்கிதான் அப்படி என்றால், ரவைகள்? அதுவும் சமையல் ரவை போலவே சுலபமாகக் கிடைக்கக் கூடிய ஒரு பொருள்தான். யுத்தம் சாதாரணமாகிவிட்ட தேசத்தில், துப்பாக்கிகளுக்குப் பெரிய மரியாதை இருப்பதில்லை போலிருக்கிறது.

ஆனால் ஒசாமாவுக்கு அப்போது துப்பாக்கி எப்படி இருக்கும் என்பதுகூடத் தெரியாது. ஒரு யுத்தம் எப்படி நிகழும் என்று தெரியாது. போர்த் தந்திரங்கள், ஒற்றறிதல், அணிவகுத்தல், வியூகம் அமைத்தல், ஆயுதச் சேகரிப்பு, பாதுகாத்து வைத்தல் எது குறித்தும் அரிச்சுவடி கூடத் தெரியாது.

அவரிடம் பணம் இருந்தது. கற்பனை செய்யமுடியாத அளவுக்குப் பணம். அள்ள அள்ளப் பணம். கட்டுமானத் தொழிலில் கொடிகட்டிப் பறந்தவரான அவரது தந்தை, தமது நான்கு மனைவியர் மூலம் பெற்றெடுத்த ஐம்பத்தியேழு குழந்தைகளுக்கும் விட்டுச் சென்ற சொத்தில் ஒசாமாவின் பங்குமட்டுமே நூறு கோடிகள் இருந்தன. அவர் மிகுந்த புத்திசாலித்தனமுடன் தமக்குக் கிடைத்த பணத்தைத் தமது குடும்ப நிறுவனமான சவூதி பின்லேடன் க்ரூப்பிலும் இதர பல நிறுவனங்களிலும் முதலீடு செய்து, மேலும் மேலும் பெருக்கிக்கொண்டிருந்தார்.

ஆகவே தயங்காமல் சொன்னார் : "ஆயுதம் வாங்கலாம். அது ஒரு பிரச்னை இல்லை. எத்தனை செலவானாலும் நான் பார்த்துக்கொள்கிறேன். ஆனால், ஐம்பது பேரை வைத்துக்கொண்டா

சோவியத் யூனியனை எதிர்க்கப் போகிறீர்கள்? இது எனக்கு அபத்தமாகப் படுகிறது.”

அபத்தம்தான். ஆனால் என்ன செய்யமுடியும்? கிடைத்தவர்கள் அவ்வளவு பேர்தானே?

ஒசாமா யோசித்தார். இறுதியில் சொன்னார்: “சரி. நாம் ஆயுதம் வாங்குவோம். ஆள்களையும் திரட்டுவோம். நான் பொறுப்பு.”

அன்றுதான் அது ஆரம்பித்தது.



#5 ஆப்கன் போராளிக் குழுக்களின் தலைவர்களுடன் பெஷாவரில் ஓரிரு வாரங்கள் தங்கியிருந்த ஒசாமா பின்லேடனுக்கு, அந்தக் காலகட்டத்தில் ஒரே ஒரு யோசனை மட்டுமே இருந்தது. எப்படி ஆட்களைத் திரட்டலாம்? என்ன சொல்லிக் கூப்பிடலாம்? ஆப்கனிஸ்தானிலிருந்து நூறு இருநூறு பேர் கிடைப்பார்கள். ஆனால், அது போதாது. ஆயிரங்களில் வேண்டும். லட்சங்களில்கூட வேண்டியிருக்கலாம். சகோதர முஸ்லிம்களுக்காக சர்வலோகத்திலிருந்தும் வீரர்கள் வந்தாகவேண்டும். வருபவர்கள் அத்தனை பேரும் வீரர்களாக இருக்கமுடியாது. ஆட்கள் வரக்கூடும். அவர்களை வீரர்களாக்குவது தனிக் காரியம். எப்படி இது சாத்தியம்?

அப்போதுதான் அவர், இஸ்லாமாபாத்திலுள்ள சர்வதேச இஸ்லாமியப் பல்கலைக்கழகத்தில் (மிஸீமீகூஷீஸீணீமீவீஷீஸீணீறீ மிஹறீணீனீவீநீ ஹிஸீவீஸ்மீகூஷீஉவீமீஹ்) பேராசிரியராகப் பணியாற்றிக்கொண்டிருந்த டாக்டர் அப்துல்லா அஸம் (ஞிகூஷீ. கிதீபீஹ்றீறீணீலீ கிக்ஷ்க்ஷ்ணீனீ) என்பவரைத் தற்செயலாகச் சந்தித்தார்.

டாக்டர் அப்துல்லா, சாதாரணமான ஆள் இல்லை. நம்மால் கற்பனை செய்துகூடப் பார்க்கமுடியாத அளவுக்குப் படித்த பெரும் பண்டிதர். அல் குர் ஆனில் அத்தாரிட்டி. ஜோர்டன் குடியுரிமை பெற்ற பாலஸ்தீனியர். ஒரு காலத்தில் யாசிர் அராஃபத்துடன் இணைந்து பாலஸ்தீன் விடுதலைப் போராட்டத்தை முன் நடத்திச் சென்றவர். ஓர் உறையில் இரண்டு வாள்கள் இருக்கமுடியாது இல்லையா? ஆகவே, முட்டிக்கொண்டுவிட்டது. பி.எல்.ஓ.விலிருந்து விலகி, தனியாவர்த்தனம் செய்ய ஆரம்பித்தார். பிறகு, ஒன்றும் சரிப்படாமல் பாகிஸ்தானுக்கு வந்து வாத்தியார் உத்தியோகம் பார்க்கத் தொடங்கிவிட்டார்.

ஒசாமா அவரைச் சந்தித்தபோது, டாக்டர் அப்துல்லாவுக்கு நாற்பத்தியொரு வயது. இளைஞர் என்று சொல்லிவிட முடியாது. மூத்தகுடிமக்கள் லிஸ்டிலும் சேர்க்கமுடியாது. உற்சாகமாக இருந்தார். துடிப்பாக இருந்தார். 'இஸ்லாமிய சகோதரத்துவம்' என்கிற கருத்தாக்கத்தை முன்வைத்து உலகெங்கும் உள்ள முஸ்லிம்களை ஒன்றிணைக்க வேண்டும் என்பது அவரது கனவு.

அடடே, ஒசாமாவுக்கும் அதுவேதான் லட்சியமல்லவா. ஆகவே, சுலபத்தில் நெருங்கிவிட்டார்கள். இதில் விசேஷம் என்னவென்றால், டாக்டரும் ஒசாமாவும் நண்பர்கள் போல வெளியே தெரிந்தாலும், உண்மையில் அவரை ஒசாமா தன் குருவாகத்தான் கருதினார். பயபக்தியுடன்தான் பேசுவார். அட, தனக்குப் பிறந்த முதல் மகனுக்கே அவர் அப்துல்லா என்றுதான் பெயர் வைத்தார் என்றால் பார்த்துக்கொள்ளுங்கள்!

அப்படியாகப்பட்ட உறவு மேலும் மேலும் புஷ்டியாக வளர, ஒசாமா அவரிடம் ஆப்கன் போராளிகளின் கனவு குறித்து எடுத்துச் சொல்லி, எப்படி உதவலாம் என்று கேட்டார்.

ஒரே ஆச்சர்யமாகப் போய்விட்டது அப்துல்லா அஸமுக்கு. ஏனெனில், அவரும் இப்படி யாராவது தம்மிடம் வரமாட்டார்களா என்றுதான் ஏங்கிக்கொண்டிருந்தார்! அவர் சந்தேகமில்லாமல் ஒரு சக்தி. ஆனால், செயல்படுத்த ஒரு கருவி வேண்டியிருந்தது. துப்பாக்கியாகவும் பீரங்கியாகவும் அவரால் இருக்கமுடியும். உள்ளே வெடிபொருளாக இருக்க ஆட்கள் தேவைப்பட்டார்கள். அவரால் திசைகாட்ட முடியும். படகு செலுத்த மாலுமிகள் வேண்டியிருந்தார்கள். ஒன்றல்ல, நூறல்ல, ஆயிரமல்ல. லட்சக்கணக்கில் ஆட்களை அவரிடம் அளித்தாலும், ஓரிரவில் அத்தனை பேரையும் அவரது மாணவர்களாக ஆக்கிக்கொண்டுவிட அவரால் முடியும். அவருக்குப் பல கனவுகள் இருந்தன. அகண்ட இஸ்லாமிய சாம்ராஜ்ஜியம் என்பது அதில் பெருங்கனவு. அடிமை வாழ்வில் அவதிப்படும் இஸ்லாமிய சமூகத்தினர், எங்கிருந்தாலும் தேடிச்சென்று விடுதலை பெற்றுத்தருவது அந்தக் கனவின் முதல் அத்தியாயம்.

இதற்கு ஒசாமாவைக் காட்டிலும் உன்னதமான ஆசாமி கிடைக்கமாட்டார் என்று தீர்மானமே செய்துவிட்டார். ஆகவே, அவர் தமது திட்டத்தை விரிவாக விளக்க ஆரம்பித்தார்.

உலகம் முழுக்கச் சுற்றி, இஸ்லாமியர்களைத் திரட்டி, அவர்கள் மத்தியிலிருந்து விடுதலை வேட்கைமிக்க இளைஞர்களைப் பொறுக்கி எடுத்து அவர் ஆப்கனிஸ்தானுக்கு அனுப்பிக்கொண்டே இருப்பார். கூடவே உலகெங்கும் வசிக்கும் பணக்கார முஸ்லிம்களிடம் போய்க் கையேந்தி நிதி திரட்டியும் அனுப்பிவைப்பார். அந்தக் காசை வைத்துக்கொண்டு, வருகிற இளைஞர்களுக்கு பாகிஸ்தானிலும் ஆப்கனிஸ்தான் காடுகளிலும் கூடாரம் அடித்து க்ளாஸ் எடுக்க வேண்டியது ஒசாமாவின் பொறுப்பு!

“ஆயுதம் ஏந்தச் சொல்லிக்கொடுத்தால் மட்டும் போதாது. நமது இளைஞர்களுக்குச் சித்தாந்த பலம் வேண்டும். புத்தியில் அவர்கள் வீரர்களாக வேண்டும். மார்க்கப் பற்றை அடித்தளமாக வைத்து அதற்கு மேல் விடுதலை உணர்ச்சியைக் கோட்டையாக எழுப்பவேண்டும்” என்று சொன்னார் டாக்டர் அப்துல்லா.

ஒருவழியாக 1984-ம் ஆண்டு கியீரீணீஸீ ஷிமீகூஷீஸ்வீநீமீ நிஜூகூஷீமீணீஜூ என்கிற அமைப்பைத் தொடங்கினார் ஒசாமா. இப்படிச் சொல்வது ஒருவேளை தப்பு. இருவரும் சேர்ந்து தொடங்கிய அமைப்புதான் அது. அப்துல்லா உலகம் சுற்றும் வாலிபரானார்; ஒசாமா உட்கார்ந்து க்ளாஸ் எடுக்கும் வாத்தியார் ஆனார்.

அப்துல்லா சுற்றுப்பயணம் தொடங்கிய ஓரிரு மாதங்களிலேயே, எங்கெங்கிருந்தோ ஆட்களையும் நிதியையும் திரட்டி அனுப்ப ஆரம்பித்துவிட்டார். முதலில் பத்துப் பத்தாக, ஐம்பது ஐம்பதாக ஆட்கள் வந்தார்கள். அஞ்சும் பத்துமாகப் பணம் வந்தது. போகப் போக, கொத்துக்கொத்தாக வந்து சேர ஆரம்பித்தார்கள்; கூடை கூடையாகப் பணம் குவிய ஆரம்பித்தது. ஒசாமாவும் தம் பங்குக்கு ஏராளமான பணத்தைக் கொண்டுவந்து கொட்டி ஆயுதங்கள் வாங்கினார். அனைத்தும் பாகிஸ்தானில் பதுக்கிவைக்கப்பட்டன. ஆப்கன் - பாகிஸ்தான் எல்லையோர மலைப் பகுதிகளில் கூடாரமடித்து போர்ப் பயிற்சிகள் ஆரம்பமாயின.

இத்தனைக்கும் ஒசாமாவுக்கு அப்போது ஆயுதங்களைக் கையாளத் தெரியாது. ஆனால் பழகிக்

கொண்டார். அவரைப் பொறுத்தவரை, அவரிடம் இருந்த மிகச் சிறந்த ஆயுதம் அவரேதான்! நோக்கமும் செயலும் ஒன்றாகவே இருந்ததால், மிகச் சுலபத்தில் ஆயுதப் பயிற்சி பெற்று, மற்றவர்களுக்குக் கற்றுத்தரவும் அவரால் முடிந்தது. ஒரு சில வருடங்களில் நூற்றுக்கணக்கான மாணவர்களின் விருப்பமான குருவாகவே அவர் ஆகிப்போனார்.

இந்தச் சமயத்தில்தான் ஓர் எதிர்பாராத தடாலடிச் சம்பவம் நடந்தது.

அமெரிக்க உளவுத் துறையான சி.ஐ.ஏ.வுக்கு, உலகத்திலேயே பிரமாதமான வேலை என்பது அடுத்தவர்களை வேவு பார்ப்பதுதான். ஆத்ம சுத்தியுடன் தப்புச் செய்யும் கோஷ்டி அது. நியாயமாக மாயவலை க்ரூப் லிஸ்டில் அவர்களையும் சேர்க்கவேண்டும். துரதிருஷ்டவசமாக ஓர் அரசாங்க அமைப்பாக அவர்கள் இருப்பதால், இந்தப் பட்டியலுக்குள் வரமுடியாத துர்ப்பாக்கியசாலிகளாகிவிட்டார்கள்.

அது நிற்க. ஆப்கனிஸ்தானில் சோவியத் படைகளுக்கு எதிராக ஆட்களைத் திரட்டி நிறுத்திக் கொண்டிருந்த ஒசாமாவை, சி.ஐ.ஏ. கண்காணிக்க ஆரம்பித்தது. யார் இந்த ஆசாமி? எங்கிருந்து புறப்பட்டு வந்து, என்ன செய்துகொண்டிருக்கிறான்? இத்தனை குறுகிய காலத்தில் எப்படி இத்தனை பேருக்கு இவனால் போர்ப் பயிற்சி தரமுடிகிறது? எத்தனை ஆயுதங்கள் வைத்திருக்கிறார்கள்? எங்கிருந்து பணம் வருகிறது?

மோப்பம் பிடிக்கத் தொடங்கினார்கள். ஒசாமாவின் பின்னணி குறித்துத் தெரிந்தபோது, உண்மையில் சி.ஐ.ஏ. மட்டுமல்ல; அந்நாளைய அமெரிக்க அதிபர் ரொனால்ட் ரீகனே ஆச்சர்யப்பட்டுப் போனார்.

இது பிரமாதமல்லவா! ஆப்கனில் சோவியத் ஆக்கிரமிப்பை ஒழித்துக்கட்ட, அமெரிக்கா சந்தர்ப்பம் பார்த்துக்கொண்டிருந்த நேரம் அது. நேரடியாக யுத்தத்தில் இறங்கமுடியாது. ஏதாவது டேபிளுக்கு அடியில்தான் காரியம் செய்தாக வேண்டும். என்ன செய்யலாம் என்று சிண்டைப் பிய்த்துக்கொண்டிருப்பதைக் காட்டிலும், இப்படி ஆப்கன் விடுதலை ஒன்றே குறி என்று போர்ப் பயிற்சி அளித்துக்கொண்டிருக்கும் ஒசாமாவை வளைத்துப் போட்டுவிட்டால் வேலை மிச்சமல்லவா?

குள்ள நரிகளுக்கும் சி.ஐ.ஏ. ஆபீஸர்களுக்கும் மட்டுமே தோன்றக்கூடிய யோசனை இது.

இந்த யோசனை அப்போது ரீகனுக்கும் சரியாகவே பட்டது. அமெரிக்கா அப்போது 'எத்தைத் தின்றால் பித்தம் தெளியும்' என்று இருந்த நேரம். ஆகவே, அதிபரின் ரகசிய அனுமதியுடன் ஒசாமா பின்லேடனை வளைத்துப்போடும் திட்டத்தைத் தொடங்கியது சி.ஐ.ஏ.

வந்து பார்த்துக் குசலம் விசாரித்துவிட்டு, என்ன வேண்டும் என்று கேட்டார்கள்.

என்ன வேண்டும்? பணம் வேண்டும். ஆயுதங்கள் வேண்டும். நவீன தொழில்நுட்ப சாதனங்கள் வேண்டும். போராளிகளுக்கு வேறென்ன வேண்டும்? வேளைக்கு ரொட்டி கிடைத்தால் யதேஷ்டம்.

ப்பூ! இவ்வளவுதானே, இந்தா என்றது அமெரிக்க ஜீபூம்பா.

உண்மையில் ஒசாமாவாலேயே நம்பமுடியாத உதவி அது. எத்தனை பணம்! எவ்வளவு ஆயுதங்கள்! கொண்டு வந்து குவித்துவிட்டார்கள். மேற்கொண்டு என்ன உதவி வேண்டுமென்றாலும் தயங்காமல் கேட்கலாம் என்று ஒப்பன் டிக்கெட்டும் கொடுத்துவிட்டு ஊர் போய்ச் சேர்ந்தார்கள் சி.ஐ.ஏ. ஆபீஸர்கள். போகிற போக்கில் அமெரிக்க அரசின் விருந்தாளியாக வந்து, ஊர் சுற்றிப் பார்க்கும்படி ஒசாமாவுக்கு ஓர் அழைப்பும் விடுத்தார்கள்.

“எனக்கு அமெரிக்காவில் என்ன வேலை? என் வேலை ஆப்கனில் இருக்கிறது. தவிர, விருந்து சாப்பிடும் உத்தேசம் ஏதும் எனக்கில்லை. மற்றபடி உங்கள் ஒத்தாசைக்கு நன்றி” என்று சொல்லிவிட்டார் ஒசாமா.

ஆனால், இந்த அழைப்பை அங்கே உலகம் சுற்றும் வாலிபர் டாக்டர் அப்துல்லா நன்றாகப் பயன்படுத்திக் கொண்டார். அமெரிக்காவில் இல்லாத ஆட்களா, செல்வங்களா?

அரசின் அதிகாரபூர்வ விருந்தாளியாக தேசம் முழுவதும் சுற்றி, நிதி திரட்டி அனுப்பிக்கொண்டே இருந்தார்.

இந்தப் பக்கம் ஆப்கன் காடுகளில் பயிற்சி முடித்த இளம் போராளிகளை, யுத்த முனைக்கு அனுப்ப ஆரம்பித்தார் ஒசாமா. சோவியத் படைகளுக்கு எதிரே அது ஒரு சோட்டா படைதான். ஆனாலும், ஒசாமாவின் பயிற்சியும், வலுவான ஆயுத சௌகரியங்களும் இருந்ததால், அவர்கள் ஆக்ரோஷமாகப் போரிட ஆரம்பித்தார்கள்.

சோவியத் யூனியன் இந்த விஷயத்தில் கொஞ்சம் தத்தியாகத்தான் இருந்திருக்கிறது. யுத்தம் தொடங்கி ரொம்ப காலம் வரை அவர்கள் ஒசாமாவை மோப்பம் பிடிக்கவேயில்லை. எங்கிருந்து இந்த இளைஞர்கள் வருகிறார்கள், யாரிடம் பயிற்சி பெறுகிறார்கள், எங்கிருந்து ஆயுதங்கள் இவர்களுக்குக் கிடைக்கின்றன என்று புரியாமல் சிண்டைப் பிய்த்துக்கொண்டார்கள்.

இதற்குள் வருடங்களே ஓடிப்போய்விட்டன.

ஆப்கன் - சோவியத் யுத்தம் என்பது ஒரு கஜகர்ப்பக் காலம் நடந்த யுத்தம். அதாவது, சுமார் பத்தாண்டுகள். இந்தக் காலத்தில் ஒசாமா தனது சொந்த நாடு, சொந்தபந்தம், மனைவி மக்கள் யாரையும் நினைத்துக்கூடப் பார்க்கவில்லை என்பதை கவனிக்க வேண்டும். (பத்து வருஷத்தில் அவர் மொத்தமே இரண்டு முறைதான் சவூதிக்குச் சென்று திரும்பியிருக்கிறார் என்று தெரிகிறது. அதிலும் ஒருமுறை போனது சந்தேகாஸ்பதம்.)

1980-ல் தொடங்கிய இந்த யுத்தம், 1989 கடைசியில் ஒருமாதிரி முடிவுக்கு வரும்போலிருந்தது. ரஷ்யாவில் மக்கள் வெறுத்துப் போய் அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டமெல்லாம் செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். எத்தனை வருஷம் அவர்களும்தான் உறவினர்களைப் போர்க்களத்துக்கு அனுப்பிவிட்டுச் சும்மா இருப்பார்கள்?

ஆகவே, சோவியத் அரசு தனது வீரர்களைத் திரும்ப அழைத்துக்கொள்ள முடிவு செய்தது.

ஒரு வழியாக ஆப்கனிஸ்தானுக்கு சுதந்திரம் வந்தபோது, அதைப் பெற்றுத்தந்த பெருமை ஒசாமா பின்லேடனுக்கு நூறு சதவிகிதம் வந்து சேரத் தயாராக இருந்தது.

அப்போதுதான் அமெரிக்கா ஒரு வேலை செய்தது. வழக்கமான அமெரிக்க வேலைதான் என்றாலும், ஒசாமா யார், எப்படிப்பட்டவர் என்பது தெரியாமல் அவருக்கே அல்வா கொடுக்க நினைத்த காரியம் அது.

முதல் முறையாக அப்போதுதான் ஒசாமாவும், அமெரிக்காவின் பக்கம் கோபமாகத் திரும்பிப் பார்த்தார்.

#6 சோவியத் ரஷ்யாவுக்கு எதிரான ஆப்கன் போராளிகளின் யுத்தத்தில், அவர்கள் வெற்றி பெற்றதற்கு ஒரே காரணம், ஒசாமா பின் லேடன். அவர் அளித்த பயிற்சி, அவர்

கையாண்ட யுத்த தந்திரங்கள், அவரது ஒருங்கிணைப்புத் திறமை, வியூகங்கள் அமைப்பதில் இருந்த தெளிவு, துல்லியமான தகவல் தொடர்புகளை ஏற்படுத்திக் கொடுத்த கெட்டிக்காரத்தனம், எல்லாவற்றுக்கும் மேலாக, அவர் கொட்டிய பணம்.

எந்த சரித்திர ஆசிரியரும் இதனை மறுத்ததில்லை. ஆயிரக்கணக்கில் போராளிகள் இருந்தாலும், அப்துல்லா அஸம் உலக நாடுகளின் உதவிகளை வாங்கி வாங்கி அனுப்பிக்கொண்டிருந்தாலும், அமெரிக்க அரசின் மறைமுக ஒத்துழைப்பு இருந்தபோதிலும், சோவியத் யூனியன் என்கிற யானையைத் திரும்ப ஓடவைத்தது ஒசாமாவின் தனிப்பட்ட வெற்றிதான். இதில் சந்தேகமே கிடையாது.

ஆனால், என்ன ஆகிவிட்டதென்றால், யுத்தம் முடிந்த அடுத்த வினாடியே, அமெரிக்கப் பிரசார பீரங்கிகள், இந்த வெற்றிக்குக் காரணமே அமெரிக்க அரசும் சி.ஐ.ஏ.வும்தான் என்று ஊர் முழுக்க டமாரம் அடிக்க ஆரம்பித்துவிட்டார்கள்.

பின்லேடனுக்கு இது மிகுந்த எரிச்சலைத் தந்தது. எல்லாப் புகழும் தன்னுடையதே என்று அவர் அப்போது சொல்லவில்லை. அப்படிச் சொல்லும் குணமும் அவருக்குக் கிடையாது. ஆனால், ஆப்கானியர்களின் வாழ்க்கை சார்ந்த ஒரு போராட்டத்தை, அமெரிக்கா தன்னுடைய சுயலாபத்துக்குப் பயன்படுத்திக்கொள்ளப் பார்க்கிறதே என்கிற கடுப்பு. இதையே சாக்காக வைத்து, நாளைக்கு அமெரிக்கா காபூலுக்கு வந்து கூடாரமடித்துக் குடித்தனம் நடத்த ஆரம்பித்துவிடுமே என்கிற கவலை.

எச்சரிக்கலாம் என்று முதலில் நினைத்தார். அதனால் பிரயோஜனமில்லை என்று தோன்றியதும், தன் எண்ணத்தை உடனே மாற்றிக்கொண்டு, தன்னுடைய வீரர்களிடம் அமைதியாக இருக்கும்படி கேட்டுக்கொண்டார். ஆனால், அமெரிக்க சகவாசம் இனிமேல் வேண்டாம் என்பதில் மட்டும் மிகத் தெளிவாக இருந்தார்.

இந்த இடத்தில்தான் அவருக்கு ஒரு மாபெரும் நெருக்கடி வந்து சேர்ந்தது. ஒசாமாவின் மானசீக குருவும் ஆப்கன் யுத்தத்தின் வெற்றியில், ஐம்பது சதவிகிதப் பங்கு போட்டுக்கொள்ளத் தகுதி வாய்ந்தவருமான டாக்டர் அப்துல்லா அஸம், அப்போது அமெரிக்காவில் இருந்தார். நம்பர் 566, அட்லாண்டிக் அவென்யூ, ப்ரூக்ளின். இதுதான் அவரது அப்போதைய முகவரி. ஆபீஸ் கம் வீடு. அங்கே உட்கார்ந்துகொண்டு, 'அல் ஜிஹாத்' என்றொரு பத்திரிகையை வேறு அவர் நடத்திக்கொண்டிருந்தார். சும்மா பத்தேமுக்கால் பேர் படிக்கிற சிறுபத்திரிகை அல்ல. அமெரிக்காவிலும் ஐந்தாறு ஐரோப்பிய நாடுகளிலுமாகச் சேர்த்து, மொத்தமாகச் சுமார் ஐம்பதாயிரம் பிரதிகள் விற்றுக்கொண்டிருந்த பத்திரிகை அது. பெரும்பாலும், ஆப்கன் யுத்தகளக் காட்சிகள் குறித்த நேரடி வருணனைகள் அடங்கிய கட்டுரைகளும், புகைப்படங்களுமே அதில் இடம்பெறும். மிச்சம் மீதி இடம் இருந்தால், 'நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்' என்று நோட்டீஸ் ஒட்டிவிடுவார்.

அமெரிக்காவில் உட்கார்ந்துகொண்டு, இப்படியொரு அரபுப் பத்திரிகையா என்று இப்போது ஆச்சர்யமாக இருக்கலாம். அன்றைய சூழ்நிலையில், அமெரிக்காவுக்கு இதெல்லாம் வேண்டித்தான் இருந்தது. டாக்டரை சகல சௌகரியங்களுடனும் தேசம் முழுவதும் சுற்றிவர அனுமதி அளித்து, வேண்டிய உதவி ஒத்தாசைகளும் செய்துகொடுத்திருந்தார்கள். அவரும் ஊர் ஊராகப் போவார். கூட்டம் கண்ட இடத்தில் மீட்டிங் போட்டு, வீராவேசமாகப் பேசுவார். சொற்பொழிவு, க்ளைமேக்ஸ் கட்டத்தைத் தொடும்போது, கீழே சில அடிப்பொடிகள் துண்டேந்திவிடுவார்கள். குவியும் டாலர்கள் அடுத்தநாளே ஆயுதங்களாக மாறி, ஆப்கனிஸ்தான் போய்ச் சேர்ந்துவிடும்.

இது ஒரு நாள் இரண்டு நாள் சங்கதி அல்ல. கிட்டத்தட்ட எட்டு வருடங்களுக்கு மேலாக நடந்துகொண்டிருந்த விஷயம். அப்துல்லா அஸமுக்கு அமெரிக்க அரசில் - குறிப்பாக, சி.ஐ.ஏ.வில் மிக நல்ல செல்வாக்கு இருந்தது. பல மூத்த அதிகாரிகள் அவருக்கு ஜிகிரி தோஸ்துகளாக இருந்தார்கள். விட்டால், அமெரிக்காவிலேயே ஒரு ஃப்ளாட் வாங்கிக்கொண்டு

செட்டில் ஆகிவிடுவார் போலிருந்தது. இது ஒசாமாவுக்கு சங்கடமளித்தது.

அமெரிக்காவுடன் தோழமை என்பதையே, அவரால் அந்தச் சம்பவத்துக்குப் பிறகு, நினைத்துப் பார்க்க முடியவில்லை. எத்தனை கீழ்த்தரமாக நடந்துகொண்டு, ஆப்கன் யுத்த வெற்றிக்குத் தான்தான் காரணம் என்று சொல்லித் திரிந்தார்கள்? அவர்கள் தோளில் கைபோட்டு அப்துல்லா அஸம் நடப்பதா?

“வேண்டாம் டாக்டர், அமெரிக்க சகவாசத்தை விட்டுவிடுங்கள்” என்று உரிமையுடன் கேட்டுக்கொண்டார்.

ஆனால் டாக்டர் இதை முற்றிலுமாக நிராகரித்துவிட்டார்.

“என்ன நீ பைத்தியம் மாதிரி பேசுகிறாய்? எனக்கு உலகம் முழுவதும் உள்ள அத்தனை அரசாங்கங்களுடனும், அத்தனை உளவு அமைப்புகளுடனும் தொடர்புகள் இருக்கின்றன. அவற்றால் உனக்கென்ன பிரச்னை?”

“இல்லை. அமெரிக்கா நாம் விரும்பக்கூடிய தேசம் இல்லை. அவர்களது நோக்கம், ஜிஹாதிகளுக்கு உதவுவது அல்ல. சோவியத் யூனியனை ஒழிப்பது மட்டும்தான்.”

“இருக்கட்டுமே. ஜிஹாதிகளுக்கு உதவினால்தானே, சோவியத் யூனியனை விரட்டமுடியும்?”

“நாம் சோவியத் யூனியனை விரட்டிய பிறகு, என்ன செய்யப்போகிறோம்? ஆப்கனை அமெரிக்காவுக்கு தாரைவார்க்கப் போகிறோமா?”

“இதோபார். நீ வீணாக பயப்படுகிறாய். சி.ஐ.ஏ., அத்தனை ஒன்றும் மோசமில்லை. என்னிடம் எத்தனை மரியாதையாக நடந்துகொள்கிறார்கள் தெரியுமா?”

ம்ஹூம். இது சரிப்படாது என்று ஒசாமாவுக்குத் தோன்றிவிட்டது. ஆப்கன் யுத்தமும் முடிந்துவிட்டது. வந்து சேர்ந்திருக்கும் ஆயிரக்கணக்கான இளைஞர்கள், அடுத்த வேலை என்ன என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் ஒரு பதில் சொல்லியாகவேண்டும். ஆனால், இந்த டாக்டர் ஏன் இப்படிச் சொதப்புகிறார்?

பின்லேடனின் எண்ணம், அந்த இளைஞர்களையெல்லாம் சிதறவிடாமல் தக்கவைத்து, அப்படியே ஒரு புதிய அமைப்பாகத் தொடங்கவேண்டும் என்பதுதான். ஒரு பெரிய மீட்புப்படை மாதிரி. சர்வதேச மீட்புப்படை. எங்கெல்லாம் முஸ்லிம் மக்கள் துன்பப்படுகிறார்களோ, அங்கெல்லாம் போய் உதவி செய்யும் ஒரு படை. இன்றைக்கு ஆப்கனிஸ்தான். நாளைக்குத் தேவைப்பட்டால் பாகிஸ்தான். அல்லது சூடான். அல்லது தஜிகிஸ்தான். காஷ்மீர். இடமா இல்லை? பிரச்னைதான் இல்லையா?

ஆனால், அப்துல்லா அஸமுக்கு இது பிடிக்கவில்லை. ஆப்கன் சர்வீஸ் ப்யூரோ ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கம், ஆப்கனிஸ்தான் விடுதலை. அது கிடைத்துவிட்டது என்றால், அமைப்பைக் கலைத்துவிட்டு ஊர்ப் போய்ச் சேர் என்று சொல்லிவிட்டார். பின்லேடனுக்கு இது மிகுந்த அதிர்ச்சியளித்தது. இப்படியா ஒரு மனிதர் மாறிப்போவார்? அமெரிக்காவின் மூளைச் சலவை, அப்துல்லா அஸமைக் கூடவா விட்டுவைக்காது?

பொறுக்கவேயில்லை அவருக்கு. என்ன செய்யலாம், என்ன செய்யலாம் என்று துடித்துக்கொண்டிருந்தார்.

அந்த நேரம் பார்த்து, எகிப்திலிருந்து ஷேக் உமர் அப்துர் ரஹ்மான் என்ற இஸ்லாமிய அறிஞர்

ஒருவர் பாகிஸ்தானுக்கு வந்தார். இவருக்குக் கண் தெரியாது. மிகச் சிறிய வயதிலேயே பார்வை போய்விட்டது. ஆனாலும், எதற்கும் மனம் தளராத விக்கிரமாதித்தன் போல ப்ரெய்லி முறையில் படித்தே பண்டிதரானவர் அவர். மத்தியக் கிழக்கு தேசங்கள் அனைத்திலும் அவருக்கு நல்ல புகழ் உண்டு. எல்லாப் பல்கலைக்கழகங்களும் அவரை விசிட்டிங் ப்ரொபஸராகக் கூப்பிட்டுக்கொண்டே இருக்கும். முழுநேரம் பாடம் எடுத்தது போக, பகுதி நேரம் புரட்சி செய்வதிலும் ஆர்வம் உள்ள ஷேக் அவர்.

அப்துல்லா அஸம் விஷயத்தில் மன வருத்தம் கொண்டிருந்த ஒசாமா, இந்த ஷேக்கைத் தேடி தினமும் போக ஆரம்பித்தார். ஒரு சர்வதேச இஸ்லாமிய ராணுவம் அமைப்பதில் தனக்கு இருந்த ஆர்வத்தை அவர் வெளிப்படுத்தியபோது, ஷேக் சொன்ன ஒரே பதில் : "ஏன் தாமதம்? உடனே ஆரம்பித்துவிட வேண்டியதுதானே?"

என்னதான் டாக்டர் அப்துல்லா அனுப்பிய இளைஞர்கள் என்றாலும், பத்து வருஷ காலம் அத்தனை பேரும் ஒசாமாவிடம் படித்து பக்தர்கள் ஆகியிருந்தார்கள் என்றபடியால், தனி அமைப்பு, புது அமைப்பு என்று தொடங்கினால், அத்தனை பேரும் அப்படியே தன்னுடன் இருந்துவிடுவார்கள் என்று பின்லேடன் நினைத்தார். பேசிப்பார்த்தார். எல்லாம் சரியாக வரும்போலத்தான் இருந்தது.

தனி இயக்கத்துக்கான ஆயத்தங்களின் ஒரு பகுதியாக, பெஷாவர் நகருக்கு வெளியே கொஞ்சம் ஒதுக்குப்புறமான இடமாகப் பார்த்து, விலைக்கு வாங்கி மேன்ஷன் மாதிரி ஒரு பெரிய கட்டடத்தைக் கட்டினார். ஹயாதாபாத் என்கிற அந்த இடம், அப்போது பெரும்பாலும் ஆடு, மாடுகளின் மேய்ச்சல் பூமியாக மட்டுமே இருந்தது. அங்கே வீரர்கள் தங்குவதற்கு மேன்ஷன் கட்டிவிட்டு, போர்ப்பயிற்சியளிப்பதற்குத் தோதாக சில கூடாரங்களையும் அடித்து, மணல் மூட்டைகளைக் கொண்டுவந்து அடுக்கினார். அடிப்படையில் கட்டுமானக் குடும்பத்திலிருந்து வந்தவர் என்கிறபடியால், தன்னாலான அதிகபட்ச வேகத்துடன் இந்தப் பணிகளைச் செய்துமுடித்தார் ஒசாமா. (ஒன்றரை மாதங்களில் ஒரு மாபெரும் மேன்ஷன் தயாராகிவிட்டது என்று தெரிகிறது. இருபத்தெட்டு நாட்களில் கட்டி முடித்துவிட்டார் என்றும் சிலர் சொல்கிறார்கள்.)

இதெல்லாம் நடந்துகொண்டிருக்கும்போது, சற்றும் எதிர்பாராவிதமாக டாக்டர் அப்துல்லா பாகிஸ்தானுக்கே வந்துவிட்டார். வந்தவர் ஒசாமாவை ஒரு மரியாதை நிமித்தமாகக் கூடச் சந்திக்காமல், வேறு எதற்கோ வந்தவர் மாதிரி யார் யாரையோ பார்த்துப் பேசிக்கொண்டிருந்தார்.

ஒசாமா பல்லைக் கடித்துக்கொண்டு அவருக்கு ஒரு கடிதம் எழுதினார்.

"நான் என் பாதையைத் தீர்மானித்துவிட்டேன். புதிய இயக்கம் தொடங்க முடிவு செய்துவிட்டேன். உங்கள் ஒத்துழைப்பு இல்லாவிட்டாலும், ஆப்கனிஸ்தானில் அல் - மஸதாவில் நாம் இணைந்து உருவாக்கிய பயிற்சி முகாமை மட்டும் நான் தொடங்கவிருக்கும் புதிய இயக்கத்தின் தலைமையகமாக அமைத்துக்கொள்ள அனுமதி தாருங்கள்."

டாக்டர் அப்துல்லாவிடமிருந்து உடனே பதில் வந்தது. "நோ."

-அவ்வளவுதான். அவர்கள் உறவு முறிந்துவிட்டது.

அது 1989-ம் வருடம். நவம்பர் மாதம் 24-ம் தேதி. பாகிஸ்தானுக்கு வந்திருந்த அப்துல்லா அஸம், தமது இரண்டு மகன்கள் (இப்ராஹிம், முஹம்மது) சகிதம் ஒரு மசூதிக்குத் தொழுகைக்குப் போய்க்கொண்டிருந்தார். அது அவரது கடைசித் தொழுகை. இருபது கிலோ டி.என்.டி. வெடிமருந்து நிரப்பப்பட்ட ஒரு குண்டை, அவரது காரில் வைத்துவிட்டுப் போய்விட்டது ஒரு கோஷ்டி. திரும்பி வந்து காரை ஸ்டார்ட் செய்ததும் அது வெடித்தது.

எந்த அப்துல்லா அஸமைத் தமது மானசீக குருவாக ஒசாமா கருதினாரோ, அதே அப்துல்லா அஸமைக் கொன்றுதான், அவர் தம் கணக்கையும் ஆரம்பித்தார்.

அப்போது ஒசாமாவிடமிருந்த அந்த ஆயிரக்கணக்கான போராளி இளைஞர்களும், இந்தக் கொலைச் சம்பவத்தைக் கேள்விப்பட்டதும் குலைநடுங்கிப் போனார்கள். ஒரு மாபெரும் சகாப்தத்தின் முடிவு இதுதானோ என்று அலறினார்கள்.

"ஒசாமா நிதானமாகச் சொன்னார்: "முடிவே அல்ல. இது இன்னொன்றின் தொடக்கம்."

'அல் காயிதா' என்கிற பெயரையும் அவர் அப்போதுதான் அறிவித்தார். அடித்தளம் என்று இதற்கு அர்த்தம்.

எதற்கு அடித்தளம் என்று அதன்பிறகுதான் வகுப்பெடுத்து விளக்க ஆரம்பித்தார்

#7 . எகிப்தியன் இஸ்லாமிக் ஜிஹாத்' என்று ஒரு புரட்சிகர அமைப்பு, எண்பதுகளின் தொடக்கத்தில் உயிருடன் இருந்தது. கொஞ்சம் தீவிரமாகக்கூட இருந்தது என்று சொல்லவேண்டும். இந்த அமைப்பைத் தோற்றுவித்தவர், ஒரு டாக்டர். போலி டாக்டரோ, காயகல்ப டாக்டரோ அல்ல. படித்துப் பட்டம் பெற்ற ஒரு நிஜமான மருத்துவர். அவரது குடும்பத்தில் அவரைத் தவிரவும் நிறைய டாக்டர்கள் இருந்தார்கள். அவரது தாயார் ஒரு காலத்தில் பாகிஸ்தானுக்கான எகிப்து தூதராகவே பணியாற்றியவர். எகிப்தில் மிகவும் புகழ்பெற்ற குடும்பம் அவர்களுடையது.

ஏனோ, இந்த டாக்டர் மட்டும் கொஞ்சம் வேறு மாதிரியானவராக இருந்தார். ஒசாமாவைக் கவர்ந்த 'இஸ்லாமிய சகோதரத்துவம்' என்கிற சித்தாந்தம் இந்த டாக்டரையும் கவர்ந்தது. அதனால்தான் வைத்தியம் பார்த்த நேரம் போக, ஜிஹாத் காரியங்களுக்கும் தன்னை அர்ப்பணித்துக்கொண்டார்.

இந்தப் பக்கம் ஆப்கனிஸ்தானில் சோவியத்துக்கு எதிரான யுத்தத்தை ஒசாமா நடத்திக்கொண்டிருந்தபோது, அந்தப் பக்கம் எகிப்தில், அதிபர் அன்வர் சதத்தைத் தீர்த்துக் கட்டும் ஒரு பெரிய ப்ராஜக்டைக் கையில் வைத்துக்கொண்டு, திரிந்துகொண்டிருந்தார் மேற்படி டாக்டர். ஓரிரு முறை முயற்சி செய்து சரியாக நடக்காத வருத்தத் தில் இருந்தவர், ஆப்கனிஸ்தானில் நடக்கும் யுத்தம் குறித்துக் கேள்விப்பட்டு, ஏதோ தம்மாலான உதவி என்று நினைத்து, ஒசாமாவுக்குக் கொஞ்சம் பணம் அனுப்பிவைத்தார். பணத்துடன் கூடவே ஒரு கடிதமும்.

அந்தக் கடிதம்தான் ஒசாமாவை முதலில் ஈர்த்தது. அழகான அரபு மொழி. இலக்கண சுத்தமான எழுத்து. மேலான உணர்ச்சிவேகம். ஒரே நோக்கம்; ஒரே சிந்தனை. போதாது?

யார் இந்த டாக்டர்? என்று பெயரைப் பார்த்தார். முடிந்தால் சந்திக்கலாம் என்று, பதிலுக்கு ஒரு கடுதாசி போட்டுவிட்டு வேலையில் ஆழ்ந்துவிட்டார்.

பின்னால் 1985-ம் ஆண்டு வாக்கில்தான் அவர்கள் சந்திப்பு நடந்தது. ஆப்கன் காடுகளின் அரை இருளில், கடும் குளிரெடுத்த ஒரு நள்ளிரவுப் போதில் டாக்டரும் ஒசாமாவும் சந்தித்துத் தோளோடு தோளணைத்துத் தங்கள் அன்பைப் பரிமாறிக்கொண்டார்கள்.

"என் பெயர் ஜவாஹிரி" என்றார் டாக்டர் ஐமன் அல் ஜவாஹிரி. ஐமன் என்பது அவரது பூர்வீகமான ஏமன் நாட்டைக் குறிக்கும் பதம்.

இந்த முதல் சந்திப்பில் அவர்கள் என்ன பேசினார்கள், எப்படிப் பழகினார்கள் என்பது குறித்த

ஆதாரங்கள் ஏதுமில்லை. ஆனால், இந்தச் சந்திப்புக்குப் பிறகு ஜவாஹிரி தன் வசிப்பிடத்தையே, ஆப்கனிஸ்தானுக்கு மாற்றிக்கொண்டுவிட்டார் என்பது மட்டும் நிச்சயம்.

ஜவாஹிரி முறையான போர்ப்பயிற்சி பெற்றவர். அல் காயிதாவில் இணைந்ததும் அவர் செய்த முதல் காரியம், கெரில்லா யுத்தம் மட்டுமே அறிந்திருந்த ஒசாமாவுக்கு, ஒழுங்கான போர்ப்பயிற்சி அளித்ததுதான். நவீன ஆயுதங்கள் அனைத்துடனும் அவருக்கு மிக நல்ல பரிச்சயம் இருந்தது. பெரிய பெரிய துப்பாக்கிச் சனியன்களையெல்லாம், பூனைக்குட்டியைத் தூக்கிக் கொஞ்சுவது போலக் கையாளக் கூடியவராக இருந்தார். குண்டுகள் தயாரிப்பது, வரைபடங்கள் தயாரிப்பது, வரைபடங்களை வைத்துக்கொண்டு இடங்களை அடையாளம் காண்பது, பீரங்கிகள் போன்ற கனரக ஆயுதங்களைக் கையாள்வது, உலகின் எந்தெந்த நாடுகளின் கருப்பு மார்க்கெட்டுகளில், என்னென்ன ஆயுத மூலப்பொருள்கள் கிடைக்கும், எங்கே சல்லிசான விலையில் கிடைக்கும், எந்தச் சரக்கு நல்ல சரக்கு, எது கெட்ட சரக்கு என்று முகர்ந்து பார்த்தே அடையாளம் காண்பது என்று ஏகப்பட்ட கலைகளில் வல்லுநராக இருந்தார்.

அப்படிப்பட்ட ஆசாமியிடம், ஒசாமா தமது புதிய குழந்தையான அல் காயிதா குறித்து விவரித்தபோது, பதில் பேச்சே இல்லாமல் உடனே இணைந்துவிடச் சம்மதித்தவர் ஜவாஹிரி. ஒசாமா அப்படி என்ன சொன்னார் என்பது இங்கே முக்கியம்.

"அல் காயிதா என்பது ஒரு பிராந்திய ராணுவமல்ல. இது ஒரு சர்வதேச ராணுவமாக இருக்கவேண்டும். உலகம் முழுவதும் நாம் பரவியாகவேண்டும். ஒவ்வொரு தேசத்திலும் நமக்கொரு தளம் இருக்கவேண்டும். அர்ப்பணிப்பு உணர்வுள்ள இளைஞர்களைத் தேடிக் கண்டுபிடித்து முதலில் சித்தாந்தப் பயிற்சி அளிக்க வேண்டும். அதன்பின் ராணுவப் பயிற்சி. உளவறியச் சொல்லிக் கொடுப்பது முக்கியம். அடிப்படை மருத்துவ ஞானத்தை அவர்களுக்கு ஏற்படுத்துவது அவசியம். உடற்பயிற்சி இன்றியமையாதது. எல்லாவற்றுக்கும் மேலாக, இஸ்லாத்தின் அடிப்படைகளை அவர்கள் புரிந்தவர்களாக இருக்கவேண்டும். கொள்கைக்காக உயிர்த்தியாகம் செய்ய அஞ்சுபவர்கள் இங்கே எட்டிப்பார்க்க வேண்டாம். அல்லாவைத் தவிர, வேறு யாருக்கு அஞ்சுபவனும் எனக்கு வேண்டாம்."

சொல்லப்போனால் ஜவாஹிரி அப்போது ஒரு நெருக்கடியிலிருந்து தப்பிக்கத்தான் ஒசாமாவிடம் வந்திருந்தார். 1981-ம் ஆண்டு அக்டோபர் 6-ம் தேதி எகிப்து அதிபர் அன்வர் சதத் படுகொலை செய்யப்பட்டார். ஒரு ராணுவ பரேடைப் பார்வையிட்டுக்கொண்டிருந்த அதிபரை, எதிர்பாராத கணத்தில் சுட்டுக்கொன்று சொர்க்கத்துக்கு அனுப்பிவிட்டார்கள் சில தீவிரவாதிகள். அன்வரைத் தன் கையால் கொல்லவேண்டும் என்று ஏற்கெனவே, சில முறை முயற்சி செய்தவர்தான் ஜவாஹிரி என்றாலும், குறிப்பிட்ட சம்பவத்துக்கு அவர் நேரடி காரணகர்த்தாவாக இல்லை. இருப்பினும் எகிப்தியன் இஸ்லாமிக் ஜிஹாத் ஆசாமிகளைத்தான் அரசு வலை போட்டுத் தேடிக்கொண்டிருந்தது. ஆகவே, நாலு வருஷம் ஊர் உலகமெல்லாம் சுற்றிவிட்டு, பதுங்க ஓர் இடமில்லாமல்தான் ஜவாஹிரி அப்போது ஒசாமாவைத் தேடி வந்திருந்தார்.

ஆக, ஜவாஹிரிக்கு ஒரு நிழல் வேண்டும். ஒசாமாவுக்கு ஒரு கூடுதல் மூளை வேண்டும். தீர்ந்தது விஷயம். இருவரும் ஒன்றாகிவிட்டார்கள்.

அல் காயிதா என்ன செய்யவேண்டும் என்கிற அடிப்படைத் திட்ட வரைவைத் தயாரித்தவர்கள் மூன்று பேர். ஒசாமா பின்லேடன் ஒருவர். ஷேக் உமர் அப்துர் ரஹ்மான் என்கிற குருட்டு ஷேக் இன்னொருவர். மூன்றாவது நபர் ஜவாஹிரி.

"உலகம் முழுவதும் நாம் இருக்கவேண்டும். அல்லது உலகம் முழுவதும் நம்முடையதாக இருக்கவேண்டும்" என்று இயக்கத்தின் நோக்கத்தை ஒரு வரியில் சொன்னார் ஒசாமா. இதற்கான சித்தாந்தக் கட்டுமானங்களை ஷேக் வகுத்துக் கொடுக்க, ராணுவத்தை ஒழுங்குபடுத்தும் பணியை ஜவாஹிரி எடுத்துக்கொண்டார். அதுநாள் வரை ஒசாமா தனக்குத்தானே உருவாக்கி ஒரு

வெற்றியும் கண்டிருந்த கெரில்லா யுத்தப் பயிற்சி மட்டும்தான் அல் காயிதாவின் வீரர்களுக்கு இருந்தது. ஜவாஹிரி வந்தபிறகுதான் முறையான போர்ப்பயிற்சிகள் வழங்கப்பட்டன.

இதன் சர்வதேசத் தன்மையை எப்படி நிறுவுவது என்பது குறித்து, ஒசாமா அளித்த விளக்கம் இங்கே மிக முக்கியமானது.

"அல் காயிதா என்பது தனியொரு அமைப்பாக இருக்கக்கூடாது. அதே சமயம், இதர இயக்கங்களுடன் கூட்டணி வைத்துச் செயல்படும் அமைப்பாகவும் இருக்காது. உலகம் முழுவதும் இயங்கக்கூடிய, நமது சித்தாந்தங்களுக்குப் பொருந்திவரக்கூடிய அத்தனை இயக்கங்களுடனும் நாம் நல்லுறவு கொள்வதில் பிரச்னை இல்லை. ஆனால், அவர்களுடன் கூட்டணி என்றில்லாமல் நமது கிளைப் பிரிவாக அந்தந்த இயக்கங்களே அந்தந்தப் பிராந்தியங்களில் செயல்படவேண்டும். அவர்களுக்கு வேண்டிய போர்ப் பயிற்சிகள், ஆயுதங்கள், பண உதவி போன்றவற்றை அல் காயிதா செய்யும். அவர்களது சொந்தப்பெயர் அப்படியே இருக்கலாம். ஆனால், செயல்பாடுகள் நம்முடையதாக இருக்கவேண்டும்." - இதுதான் ஒசாமாவின் அடிப்படை எண்ணம்.

இதை எளிமையாகப் புரிந்துகொள்ள இப்படிச் சொன்னால் போதும் : நம் ஊர்ச் சாலைகளில் ஓடும் மாருதி கார்களை தினமும் பார்க்கிறோம். இந்திய கார் என்றுதான் நினைக்கிறோம். ஆனால், சுஸூகி நிறுவனத்தின் பெயரும் ஜப்பானியத் தொழில்நுட்பமும் அதன் அந்தராத்மாவுக்குள் ஒளிந்துகொண்டிருக்கிறதல்லவா? அந்த மாதிரி. மாமண்டூர் போகிற வழியில் பெப்ஸி கம்பெனியைப் பார்ப்பீர்கள். மாமண்டூரில்தான் அது உற்பத்தியாகிறது. ஆனால், ஃபார்முலா? அது அமெரிக்கச் சரக்கு. இல்லையா? அப்படித்தான் இதுவும்.

முதலில் குறைந்தது ஐம்பது நாடுகளிலாவது அல் காயிதாவுக்குத் தளங்கள் அமைக்கவேண்டும் என்பதுதான் ஒசாமாவின் இலக்கு. கூடவே ஆப்கனிஸ்தான் தவிர, வேறு சில மத்தியக் கிழக்கு தேசங்களில் பயிற்சி முகாம்கள் அமைக்கலாம் என்று தீர்மானிக்கப்பட்டது.

இந்த விஷயத்தில் மட்டும் "மத்தியக் கிழக்கோடு சுருக்கிக்கொள்ளவேண்டாம்" என்று ஜவாஹிரி சொன்னார். சூடான் போன்ற ஆப்பிரிக்கத் தேசங்களிலும் பிலிப்பைன்ஸ், இந்தோனேஷியா போன்ற தூரக் கிழக்கு நாடுகளிலும் அல் காயிதாவுக்கான பயிற்சி முகாம்களை நிறுவவேண்டும் என்பது அவர் கருத்து. காரணம், உலகம் முழுவதும் நீக்கமற நிறையவேண்டும் என்கிற ஒசாமாவின் கனவு நனவாகவேண்டுமென்றால், பயிற்சி முதற்கொண்டு அப்படியேதான் நடக்கவேண்டும்.

ஆனால், ஒசாமாவுக்கு சூடானைக் காட்டிலும் கொசோவா, செச்னியா, பிலிப்பைன்ஸ், எகிப்து மற்றும் டுனிஷியாவில் தமது பயிற்சி முகாம்களை நிறுவுவதில்தான் ஆர்வம் அதிகம் இருந்தது.

"எங்கெல்லாம் ஆளுங்கட்சிகளுக்கு உள்ளூர்த் தீவிரவாதிகளால் பிரச்னை இருக்கிறதோ, அங்கெல்லாம் அரசின் ஒத்துழைப்பைச் சுலபமாகப் பெறமுடியும்" என்பது ஜவாஹிரியின் சித்தாந்தம்.

சூடானை அவர் வலியுறுத்தியது இதனால்தான். சூடானின் கதை மிகவும் சோகமயமானது. எப்போதும் உள்நாட்டுப் போர்களும் கல்லடிகளும் கடையடைப்புகளும் குண்டுவீச்சுகளும் அங்கே இருந்தபடியேதான் இருக்கும். அரசாங்கத்துக்கு என்று உருப்படியானதொரு ராணுவம் கிடையாது. வாடகைக்கு அங்கே கொஞ்சம் இங்கே கொஞ்சமென்று, போராளிகளை விலைக்கு வாங்கி அரசாங்க ராணுவமாக அவ்வப்போது பயன்படுத்திக்கொள்வார்கள். இன்றைக்கு இருக்கிற அரசே நாளைக்கு இருக்குமா என்று சொல்லமுடியாது. நாளைக்கு வரும் இன்னொரு அரசு, அடுத்த வாரம் இருக்குமா என்று கேட்கக்கூட முடியாது.

இதனை மனத்தில் கொண்டுதான் ஜவாஹிரி, அப்படியொரு யோசனையைச் சொன்னார். சூடான்

அதிபரை வளைத்துப்போட்டு, அவர்களுக்கு ராணுவ ஒத்துழைப்பு தருவதாகச் சொல்லி காரியத்தைச் சாதிக்கலாம் என்பது அவர் எண்ணம்.

"முஸ்லிம்கள் கஷ்டப்படும் ஒவ்வொரு இடமாக எடுத்து வைத்துக்கொண்டு ஆராயவேண்டும். எங்கு உடனே நிவாரணம் தேவைப்படுகிறதோ, அங்கு நாம் செல்லவேண்டியது அவசியம்" என்று ஒசாமா சொன்னார்.

"இருக்கலாம். ஆனால், ஆப்கனிஸ்தானுக்கு வெளியே நாம் நிறுவும் முதல் பயிற்சி முகாம்கள் சிக்கலில்லாமல் நடைபெறத் தொடங்குவது, அதைக்காட்டிலும் முக்கியம். அதனைக் கொண்டுதான் நமது எல்லைகளை விஸ்தரிக்க முடியும். சூடானின் அரசியல் சூழல் நமக்குச் சாதகமாக இருக்கும் என்று நினைக்கிறேன்" என்றார் ஜவாஹிரி.

ஒசாமா சம்மதித்தார். அடுத்தக்கட்ட பணிகள் பரபரவென்று நடந்தேறின. அல் காயிதாவின் உறுப்பினர்களை ஒசாமா மூன்று பிரிவினராகப் பிரித்தார். ஒரு குழு திட்டமிடும் பணிகளை மட்டும் பார்க்கும். அடுத்த குழு களப்பணியில் மட்டும் கவனம் செலுத்தும். மூன்றாவது குழு, அனுபவம்மிக்க மூத்த உறுப்பினர்களைக் கொண்ட ஆலோசனைக் குழு. இதில் அரசியல் பிரிவு, மதப்பிரிவு என்று இரண்டு கிளைகள் அமைக்கப்பட்டன.

சர்வதேச அரசியல் நிலைமைகளைத் தொடர்ந்து கண்காணித்து, மாற்றங்களையும் சீர்திருத்தங்களையும் சீர்கேடுகளையும் அலசி ஆராய்ந்து, எப்போதும் புள்ளி விவரங்களை விரல் நுனியில் வைத்திருக்கும் அரசியல் குழு, அல் காயிதாவின் சர்வதேசப் பிரிவுகளின் இயக்கத்தையும் கண்காணித்தபடி இருக்கும். இஸ்லாத்துக்கு எதிரான சக்திகள் என்று இனம் கண்டு ஒசாமா யுத்தம் தொடுக்க முடிவு செய்யும் கணத்தில், அதற்கான சாதகமான காலத்தை வகுத்துத் தருவதுடன், தேவையான சமயத்தில் அறிக்கைகள் தயாரித்து வெளியிடுவது, மீடியாவுடன் தொடர்புகொள்வது, பேட்டிகள் தருவது உள்ளிட்ட அத்தனை பணிகளையும் அரசியல் குழு மேற்கொள்ளும்.

மதப்பிரிவின் முக்கியப் பணி, போராளிகளிடையே ஒழுக்கத்தை வலியுறுத்தி, சர்வஜாக்கிரதையாக அவர்கள் திசைமாறாமல் பார்த்துக்கொள்வது. ஃபத்வாக்கள் வெளியிடுவதும் இக்குழுவின் பணியே. சித்தாந்த வகுப்புகள் எடுப்பது, ஷரியத் சட்டப்படி இஸ்லாமிய தேசங்கள் ஆட்சி புரிகின்றனவா என்று கண்காணிப்பது, மதரஸாக்கள் நடத்தி, குழந்தைகளுக்கு மார்க்கக் கல்வி வழங்குவது போன்றவை உப பணிகள்.

களப்பணிப் பிரிவு என்று சொல்லப்படும் அல் காயிதாவின் ராணுவம்தான் இவற்றுள் மிக முக்கியமானது. ஒசாமாவின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் தளபதி. அவருக்குக் கீழே லெப்டினெண்டுகள். லெப்டினெண்டுகளின் கீழே முக்கியத் தாக்குதல்களுக்கு அனுப்பப்படும் முதல் நிலை வீரர்கள். அவர்களுக்கு அடுத்தபடியாக இரண்டாம் நிலை வீரர்கள் (இவர்கள் நேரடி யுத்தங்களில் முன்னணி வரிசையில் செல்பவர்கள்.) அதற்கும் கீழே பயிற்சி நிலை வீரர்கள். இவர்களுள் ஒவ்வொருவரும் தமக்கு மேலே உள்ள உடனடித் தலைமையுடன்தான் நேரடியாகத் தொடர்புகொள்ள முடியும். ஒரு பயிற்சி நிலை வீரர் ஒருபோதும் முதல் நிலை வீரருடனோ, லெப்டினெண்டுடனோ தொடர்பு கொண்டுவிட முடியாது. அதேபோல், முதல்நிலை வீரர் நேரடியாகத் தளபதியைத் தொடர்புகொண்டு பேசிவிட முடியாது. எல்லாமே சிஸ்டமேடிக்.

அல் காயிதா ஆரம்பித்த காலத்தில், அபூ அயூப் என்கிற ஈராக் தேசத்துப் போராளி ஒருவர், அதன் தளபதியாக இருந்தார். அப்புறம் அல் பன்ஷிரி (Al Banshiri) என்பவர் அந்தப் பொறுப்புக்கு வந்தார். மூன்றாவதாக தளபதி பதவிக்கு வந்தவர்தான் முஹம்மது அடீஃப். செப்டம்பர் 11, 2001 சம்பவத்துக்குப் பிறகு நடந்த அமெரிக்க - ஆப்கன் யுத்தத்தின்போது, ஒரு ராக்கெட் தாக்குதலில் அடிபட்டு இறக்கும்வரை அடீஃப்தான் அல் காயிதாவின் தளபதி.

அவருக்குப் பிறகு, இன்றுவரை யார் என்று யாருக்கும் தெரியாது.

இது ஒருபுறமிருக்க, இத்தகைய ஏற்பாடுகளையெல்லாம் துல்லியமாகச் செய்துவைத்த பிறகு ஒரு புதிய, அதி நவீனமான கட்டளையொன்றை ஒசாமா பிறப்பித்தார். ஆரம்பத்தில் ஜவாஹிரிக்கே அது முழுக்கப் புரியவில்லை. ஆனால், புரிந்தபோது வாய் பிளப்பதைத் தவிர, வேறெதுவும் செய்யமுடியாமல் போய்விட்டது.

#8 தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியில் ஒரு குடுமிப் பிடிக் காட்சி அரங்கேறுகிறது. யார் வந்து தீர்த்து வைக்கிறார்கள்?

கர்நாடகத்திலிருந்து யாராவது ஒருத்தர். இல்லாவிட்டால், உத்தரப்பிரதேசம் அல்லது குஜராத் அல்லது மகாராஷ்டிரத்திலிருந்து ஒரு பிரகஸ்பதி. மேலிடத்துப் பார்வையாளர் என்று நீளத் துண்டும், கூப்பிய கைகளுமாக வந்து சேர்ந்து ஏதோ தம்மாலானதைச் செய்துவிட்டு, அல்லது தம் பங்குக்குக் கொஞ்சம் வாங்கிக் கட்டிக்கொண்டு போய்ச் சேர்கிறார் இல்லையா?

கொஞ்சம் பின்னால் திரும்பி யோசித்துப் பாருங்கள். இந்திரா காந்தி பிரதமராக இருந்த காலங்களில், டெல்லியில் எப்போது என்ன கலாட்டா வந்தாலும் இங்கே நம் ஊரிலிருந்து காமராஜ் போய்த்தான் தீர்த்துவைத்துவிட்டு வருவார். அரசியல் தீர்க்கதரிசி, ராஜதந்திரி என்பதெல்லாம் ஒரு பக்கம் இருக்கட்டும். தரணி புகழும் தலைநகரத்தில் வேறு ஓர் ஆசாமி கூடவா கிடையாது?

விஷயம் என்னவென்றால், இந்தியா என்றில்லை. எல்லா தேசங்களிலுமே, எல்லா மாபெரும் கட்சிகளிலுமே இந்த நடைமுறை காலம் காலமாக இருந்து வருகிறது. உள்ளூர்ப் பிரச்னைகளை, உள்ளூர்க்காரர்களைக் கொண்டு தீர்க்க நினைக்காதே. கொஞ்சம் தள்ளி இருப்பவர்களைக் கூப்பிட்டு நாட்டாமை செய்யச் சொன்னால், தீர்ப்பு உருப்படியாக இருக்கும்.

இது அரசியலில் பாலபாடம். திராவிட முன்னேற்றக் கழகத்தில் முரசொலி மாறன் ஆற்றிய பங்கைக்கூட, இத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கலாம். என்னதான் கலைஞரின் மருமகன் என்றாலும், மாறனுக்குக் கடைசி வரை கழகத்தில் ஒரு டெல்லிக்கார இமேஜ்தான் மேலோங்கியிருந்தது என்பதை நினைத்துப் பாருங்கள்! கலைஞரால் தீர்க்க முடியாத தலைவலிகளைக் கூட எத்தனையோ முறை மாறன் வந்து தீர்த்துவைத்திருக்கிறார்; கட்சியில் வேறு யாராலும் கேட்க முடியாத கேள்விகளையெல்லாம், அவர் வந்து கேட்டுப் பல பேரின் அடிவயிற்றில் உப்பு சேர்த்துப் புளி கரைத்திருக்கிறார் என்பதற்கெல்லாம், இது மிக முக்கியமானதொரு காரணம். புவியியல் ரீதியில், கொஞ்சம் விலகியிருக்கும் சொந்தங்களைச் சிக்கல் மிக்க நேரங்களில் அருகே அழைத்து, முக்கியத்துவம் கொடுத்துக் கருத்துக் கேட்டால், வருகிற பதில் உருப்படியாகவும், உள்ளூர் கோஷ்டிகள் ஏற்கும்படியும் இருக்கும்.

பதினெட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த, ஆஸ்திரியப் பிறப்பாளரான மேன்மை தாங்கிய பிரெஞ்சு மகாராணியார் மேரி ஆண்டனி காலத்திலிருந்து நடைமுறையில் இருந்துவரும் வழக்கம் இது.

மகாராணியின் கதை நமக்குத் தேவையில்லை. மகா வில்லன் ஒசாமா பின்லேடன் கொண்டுவந்த ஓர் அவசரச் சட்டத்தைக் குறித்துப் பேசிக்கொண்டிருந்தோம்.

அல் காயிதாவின் நெட் ஒர்க் மற்றும் செயல்பாடுகளை, வலிமைமிக்கதாகக் கட்டமைக்கும் முயற்சியில், ஒசாமா மேற்கொண்ட முதல் அதிரடி நடவடிக்கை இதுதான். உலகம் முழுக்க அல் காயிதாவின் ஆட்கள் இருக்கவேண்டும். ஆனால், எந்த முக்கிய ஜோலிக்கும் உள்ளூரிலிருந்து ஆளெடுக்காதே.

யாருக்குமே மறந்திருக்க சாத்தியமில்லாத, செப்டம்பர் 11 தாக்குதல் திட்டத்தையே உதாரணத்துக்கு எடுத்துக்கொள்ளலாம்.

தாக்குதல் நடந்தது அமெரிக்காவில். திட்டம் தீட்டப்பட்டது, ஆப்கனிஸ்தான் காடுகளில். தாக்குதலுக்கு ஒரு மணிநேரம் முன்புவரை, அல் காயிதாவிலேயே இந்தத் திட்டம் குறித்த முழுத் தகவல்கள் நான்கு பேருக்குத்தான் தெரியும். ஒரு தலை, ஒசாமா பின்லேடன். இரண்டாவது தலை, அல் ஜவாஹிரி. மூன்றாவது, ராணுவத் தளபதி முஹம்மது அடீஃப். நான்காவது நபர், காலீத் ஷேக் முஹம்மது என்கிற இத்திட்டத்தின் ஒருங்கிணைப்பாளர்.

இதில் ரொம்பப் பெரிய ஆச்சர்யம் என்னவென்றால், தொண்ணூறுகளின் தொடக்கத்தில் இருந்தே காலீத் ஷேக் முஹம்மதுவுக்கும் ஒசாமாவுக்கும் நட்பும் நெருக்கமும் இருந்திருக்கிறது. 1993-ல் நடந்த அல் காயிதாவின் முந்தைய அமெரிக்கத் தாக்குதல் சம்பவத்தின்போதே (அதே வர்த்தக மையக் கட்டடம். அடித்தளத்தில் ஆர்.டி.எக்ஸ்.) காலீத், அந்தத் திட்டத்துக்குத் தம்மாலான அத்தனை உதவிகளையும் செய்தவர். சொல்லப்போனால் செப்டம்பர் 11 சம்பவத்துக்கான அடிப்படை யோசனையைத் தெரிவித்து, பிள்ளையார் சுழி போட்டு ஆரம்பித்து வைத்தவரே அவர்தான்.

அப்படிப்பட்ட ஆசாமிக்குக் கூட திட்டத்தைச் செயல்படுத்தத் தேர்ந்தெடுக்கப்பட்ட தினம் ‘செப்டம்பர் 11’ என்பது, சம்பவ நாளுக்கு ஒரு வாரம், பத்து நாள் முன்னால்தான் தெரியும். அதுவும் எப்படி? அவர் போய் அமெரிக்காவில் உட்கார்ந்துகொண்டு, தீவிரவாதிகளுக்கு நான்கு விமானங்களில் பயணம் செய்ய டிக்கெட்டெல்லாம் வாங்குவதற்கு ஏற்பாடு செய்து, அவர்களுக்கு விமானம் ஓட்டப் பயிற்சி அளிப்பதற்கெல்லாம் உதவிகள் செய்து, முன்னதாக சிங்கப்பூர், மலேசியா, பாங்காக் போன்ற இடங்களுக்கு அவர்களை அழைத்துச் சென்று, வேண்டிய பயிற்சிகள் அளித்து, எல்லாம் செய்த நபருக்கே இந்த கதி!

அதுவும் கூட எப்படி? ஒரு பப்ளிக் பூத்திலிருந்து தொலைபேசியில் அழைக்கச் சொல்லி யாரோ ஒரு கோவிந்தசாமியை விட்டு, குறிப்பிட்ட தேதியைச் சங்கேதமாகச் சொல்லச் சொல்லியிருக்கிறார்கள். “பத்தாந்தேதிக்கு ஒருநாள் கழிச்சி ஆட்டுக்குட்டி முட்டை போடுதுங்க” என்று சொல்லியிருப்பார்கள் போலிருக்கிறது.

காலீத் குவைத்காரர். 1983-லிருந்து 86 வரை ஒரு மூன்று வருஷ காலம் அமெரிக்காவில் படித்தவர் என்பதுடன் சரி. செப்டம்பர் 11 திட்டத்தின் ஒருங்கிணைப்பாளர் அவர்தான் என்கிற விஷயம், அமெரிக்காவிலேயே இருந்த அல் காயிதா ஆட்கள் யாருக்கும் சம்பவம் நடந்து முடியும் வரை தெரியாது.

அவர் விஷயம்தான் இப்படி என்றால், திட்டத்தில் சம்பந்தப்பட்ட பத்தொன்பது அல் காயிதா போராளிகள் விஷயத்திலும் நடந்தது இதுதான். பத்தொன்பது பேரில் ஒருத்தருக்குக் கூட அமெரிக்கா கருப்பாக இருக்குமா, சிவப்பாக இருக்குமா என்று தெரியாது.

எகிப்தில் பிறந்து, ஜெர்மனியில் படித்து வளர்ந்த முஹம்மது அட்டாதான் விமானக் கடத்தல் வைபவத்தின் கமாண்டர். கடத்தல் திட்டத்தில் பெரும்பங்காற்றிய பெரும்பாலான இளைஞர்கள் அத்தனை பேரும் சவூதி அரேபியாவிலிருந்து அனுப்பப்பட்டவர்கள். ஏமனிலிருந்து, ஐக்கிய அரபு எமிரேட்ஸிலிருந்து, லெபனானிலிருந்து எல்லாம் ஆட்களை ஆப்கனிஸ்தானுக்கு வரவழைத்துப் பயிற்சி கொடுத்தார்கள்.

ராணுவப் பயிற்சி ஆப்கனிஸ்தானில். தடவித் தடவியாவது இங்கிலீஷ் பேசப் பயிற்சி கொடுத்தது, பாகிஸ்தானில். ஒரு விமானம் எப்படி இருக்கும், உள்ளே எந்தப் பகுதி எந்தமாதிரி இருக்கும், பைலட் அமர்ந்திருக்கும் காக்பிட் என்பது எங்கே, எப்படி இருக்கும் என்பதையெல்லாம் தெரிந்துகொள்ள, சுற்றிக்காட்ட அவர்கள் தேர்ந்தெடுத்த இடம் பாங்காக்.

இதைவிட காமெடி, மேற்சொன்ன பத்தொன்பது பேருக்கும் அடிப்படை விஷயம் ஒன்று, கடைசி வரை தெரியாது.

அது, தாங்கள் அனைவரும் ஒரே இடத்தில், ஒரே காரியத்தைச் செய்யத்தான் பயிற்றுவிக்கப்படுகிறோம் என்பது!

ஆ... அது முக்கியம். ரகசியக் காப்பு. அல் காயிதாவில் இது இன்னொரு ஆதிப் பாடம். எந்தத் திட்டத்தையும் எப்போதும் எல்லோருக்கும் அவர்கள் உடைத்துச் சொன்னதே கிடையாது. களத்துக்குப் போய்ச் சேரும்வரை தான் எதற்காகப் போகிறோம் என்பதே சம்பந்தப்பட்ட போராளிக்குத் தெரியாது. சினிமாவில் போலீஸ் வரும் காட்சி போல, கட்டக்கடைசியில் எங்கிருந்தோ ஓர் உத்தரவு, காற்றில் வந்து காதில் விழும். 'இதைச் செய்' அவ்வளவுதான்.

செய்து முடிப்பது ஒன்றுதான் அவனுடைய கடமை. யார் உத்தரவிடுகிறார்கள்? எங்கிருந்து அந்த உத்தரவு வருகிறது? தன்னை ஏன் தேர்ந்தெடுத்தார்கள்? சரியாகச் செய்யாவிட்டால் என்ன ஆகும்? செய்துமுடித்தபின் தப்பிப்போமா? செத்துப் போய்விடுவோமா? தெரியாது.

அவன் தப்பித்தாகவேண்டும் என்று மேலிடம் முடிவு செய்தால், தப்பிப்பான். எப்படித் தப்பிப்பான்? யார் வந்து காப்பாற்றுவார்கள்? அது தெரியாது. சொல்லமுடியாது. எப்படியாவது தப்பித்தே தீருவான். யார் வேண்டுமானாலும் வந்து காப்பாற்றுவார்கள்.

காப்பாற்ற அனுப்பப்படுபவனுக்கு அவனை முன்பின் தெரிந்திருக்காது. ஆயிரக்கணக்கான கிலோமீட்டர்கள் தொலைவிலிருந்து அவன் இதற்காகவே வேலை மெனக்கெட்டு வந்திருப்பான். ஆனால் உள்ளூரில் இருக்கும் போராளிகளுக்கு இந்த விஷயமெல்லாம் மறுநாள் தினத்தந்தியில்தான் தெரியவரும்.

இது ஒரு சூட்சுமம். மிகப்பெரிய சூட்சுமம். ஆள்பவர்களைக் குழப்புவதற்காகவும் அடையாளங்களை மறைப்பதற்காகவும் உள்நாட்டுப் போராளிகளின் பாதுகாப்புக்காகவும் மேற்கொள்ளப்படும் ஓர் உத்தி.

அமெரிக்கத் தாக்குதலுக்கு சவூதி அரேபியாவிலிருந்து ஆட்கள் போவார்களென்றால், சவூதி அரேபியாவில் ஒரு காரியத்தை முடிக்க வேண்டுமென்றால், சூடானிலிருந்தும் தான்சானியாவிலிருந்தும் படை வரும். ஆப்கனிஸ்தானை சோவியத்திடமிருந்து காப்பாற்ற, சவூதியிலிருந்து ஒசாமா வந்து இறங்கியதைப் போல!

ஆனால், மிகத் துல்லியமான தகவல் தொடர்பு ஏற்பாடுகள் இல்லாமல் இதெல்லாம் எப்படிச் சாத்தியம்? அதுதான் சொன்னார்களே, சாட்டிலைட் போன், இன்டர்நெட் இத்தியாதிகள் என்று உடனே ஒரு முடிவுக்கு வந்துவிடக் கூடாது.

உண்மையில் 1994-ம் ஆண்டு காலகட்டம் வரை அல் காயிதாவுக்கு இது ஒரு பிரச்னையாகத்தான் இருந்திருக்கிறது. அதுவும் தலைபோகிற பிரச்னை. இன்டர்நெட்டெல்லாம் வந்துவிட்ட காலம்தான் என்றபோதிலும், அல் காயிதா குடித்தனம் நடத்திக்கொண்டிருந்த ஆப்கனிஸ்தான் காடுகளிலும் பாகிஸ்தான் எல்லைப்பிரதேசங்களிலும் புறா காலில் லிகிதம் கட்டியனுப்பும் கலாசாரத்தின் எச்சங்கள்தான் அப்போதும் மிச்சமிருந்தன.

தொண்ணூறுகளின் தொடக்க வருடங்களிலேயே, ஒசாமா பின்லேடனிடம் ஒரு சாட்டிலைட் போன் இருந்தது என்றபோதிலும் ஆப்கன், பாகிஸ்தான், சூடான் போன்ற ஒசாமா தேசங்களில் தொழில்நுட்ப வளர்ச்சி எருமை மாட்டு வேகத்தில்தான் இருந்தது. ஆகவே, அவர்தம் சாட்டிலைட் போனை ஒரு அலங்கார வஸ்துவாக மட்டுமே வைத்துப் பராமரிக்க வேண்டிய நிர்ப்பந்தம்.

அவரால் கம்ப்யூட்டர்கள் வாங்க முடியும். இன்டர்நெட் தொடர்புக்கு என்ன செலவானாலும் செய்யமுடியும். தனியே ஒரு கேபிள் லைன் வேண்டுமானாலும் போட்டுக்கொள்ளக்கூடிய சக்தி படைத்த ஆசாமிதான். விட்டால், அவரே ஒரு சர்வீஸ் ப்ரொவைடர் ஆகக்கூடியதும் பிரமாதமான காரியமில்லை. ஆனால், அந்த நாடுகளில் அப்போது இன்டர்நெட் என்பது மெட்ராஸ் மழைமாதிரி ஒரு விஷயம்தான். தகவல் தொடர்புச் சேவையில் அரசுகள் மிகவும் பின் தங்கியிருந்த தருணம். தொழில்நுட்பம் என்பது மந்தத்திலும் படுமந்தம்.

ரொம்ப காலம் வரை, ஆட்கள் மூலம் கடிதம் கொடுத்தனுப்பும் புராதன முறையைத்தான் அல் காயிதாவும் கையாண்டிருக்கிறது என்பது, சொன்னால் நம்பமுடியாத விஷயம். ஆனால், அதுதான் உண்மை. இருந்திருந்து சாட்டிலைட் போனில் ஒரு கால் போட்டு யாருக்காவது அஸ்ஸலாமு அலைக்கும் சொல்லலாம் என்றால் கூட, அப்போதைய பாகிஸ்தானின் பேனசிர் புட்டோ அரசு, ஆத்ம சுத்தியுடன் ஒட்டுக்கேட்டுக்கொண்டே இருக்கும்.

சி.ஐ.ஏ., இன்னும் சுத்தம். பழைய நண்பன் என்றெல்லாம் பார்க்காமல், பாகிஸ்தான் எல்லைப்பகுதிகளில் யார், யாருக்கு போன் செய்தாலும் ஒட்டுக்கேட்க தனியே ஒரு ஆபீஸையே திறந்துவைத்துவிட்டு நாலு பேருக்குச் சம்பளம் கொடுத்துக்கொண்டிருந்தது.

ஆயிரத்துத்தொள்ளாயிரத்து தொண்ணூற்று நான்காம் வருடம்தான் ஒசாமா பின்லேடன் முதல் முதலில் இன்டர்நெட் மூலம் தொடர்பு கொள்ள முடிவு செய்து முயற்சிகளை ஆரம்பித்தார். இப்போது உள்ள அளவுக்கு அப்போது இணையம் அத்தனை பிரபலம் இல்லை. ஏதோ சயின்ஸ் ஃபிக்ஷனில் வரும் உடான்ஸ் மேட்டர் என்பது போலத்தான் கிழக்கு உலகம் அதனை நினைத்துக்கொண்டிருந்தது.


அதைச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு, அல் காயிதாவுக்கென்று தனியே புனைபெயரில் ஒரு வெப்சைட் ஆரம்பித்து, ஒரு மெயில் சர்வர் சௌகரியத்தை ஏற்படுத்திக்கொண்டு தமது ஆட்களுக்கு மின்னஞ்சல் மூலம் தகவல் தெரிவிக்கத் தொடங்கியது அல் காயிதா.

அப்போதெல்லாம் பிணீநீளீவீஸீரீ என்று சொல்லப்படும் ரு இணைய வேட்டை அத்தனை பரவலாகவில்லை. அடுத்தவரின் இணையத் தளத்தை, மின்னஞ்சலை அத்துமீறி உடைத்துப் பார்த்துத் தகவல் திருடும் கலை வளரவில்லை. ஆகவே, தகவல் பரிமாற்றம் அவர்களுக்கு மிகச் சுலபமாக இருந்தது. தவிரவும் இணையமே சிறுபான்மை பணக்காரர்களின் ஆடம்பர சாதனமாகத்தான் அப்போது பார்க்கப்பட்டது என்பதால், ஆபத்தில்லாமல் செயல்பட முடிந்தது.

ஒவ்வொரு தாக்குதல் நடவடிக்கை தொடர்பான உத்தரவுகளையும் பகுதி பகுதியாகப் பிரித்து, சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்புவதே அல் காயிதாவில் வழக்கம். ஒரு ப்ளூ ப்ரிண்ட், ஒருபோதும் ஒரே நபருக்கு முழுமையாகப் போனது என்கிற சரித்திரமே கிடையாது. ஒவ்வொரு பகுதியாகத்தான் போகும். வேறு வேறு நபர்களுக்குத்தான் போகும்.

அல் காயிதாவைப் பொறுத்தவரை ரகசியம் என்பது பாதுகாப்பின் இன்னொரு பெயர். அப்படித்தான் ஒசாமா கருதினார். தொடக்க தினங்களில் இருந்து இன்றுவரை இந்த விஷயத்தில் அல் காயிதா சமரசம் செய்துகொண்டதே இல்லை.

அவர்கள் சமரசம் செய்துகொள்ள விரும்பாத இன்னொரு விஷயம் நிதி ஆதாரம்.



பொதுவாகத் தீவிரவாத இயக்கங்களுக்கு எல்லாம் பேர்தான் பெத்தபேராக இருக்குமே தவிர, உள்ளுக்குள் பரம ஏழைகளாக இருப்பார்கள். கூப்பிட்டு ஒரு கவர்மெண்ட் உத்தியோகம் கொடுத்தால், துப்பாக்கியையெல்லாம் தூக்கிப் போட்டுவிட்டு, சமர்த்தாகக் கைகட்டிக்கொண்டு ஃபைல் பார்க்கக்கூடிய ஆசாமிகள் நிறைந்த இயக்கங்கள், உலகம் முழுக்க நிறைய உண்டு. கொள்கை, கோட்பாடு எல்லாம் இருக்கும்தான். ஆனால், ஆதியிலிருந்து உடன் வந்த வயிறு என்று ஒன்று கூடவே இருக்குமல்லவா?

மனோதத்துவ ரீதியில், பல தனி நபர்கள் தனித்தனியே ஒரே விதமாக பாதிக்கப்பட்டுத்தான், இம்மாதிரி களேபரக்காரர்கள் ஆகிறார்கள் என்று ஒரு தியரி இருக்கிறது. உதாரணத்துக்கு, நமது வட கிழக்கு மாநிலங்களில் இயங்கிவரும் இயக்கங்களை எடுத்துக்கொள்ளுங்கள். உல்ஃபா கொஞ்சம் பெரிசு. பேர் தெரியும், கேள்விப்பட்டிருப்பீர்கள். இன்னும் கொஞ்சம் விவரமானவர்களுக்கு National Socialist Council of Nagaland, All Tripura Tiger Force, Arunachal Dragan Force, People Liberation Front of Meghalaya என்று இன்னும் கொஞ்சம் பெயர்கள் தெரிந்திருக்கலாம். இவையெல்லாம் தவிர, மேலும் சுமார் முப்பது கோஷ்டிகள் அந்த ஏழு மாநிலங்களில் ஜிந்தாபாத் அல்லது முர்தாபாத் போட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

சீனியர் குழுக்களுக்கு அவ்வப்போது வேண்டப்பட்ட உதவி ஒத்தாசைகள் செய்வது, எங்காவது சந்து பொந்துகளில் பட்டாசு வைத்து, சில்லறைப் புரட்சிகள் செய்வது, கட்டப்பஞ்சாயத்து என்று பிழைப்பை ஓட்டும் இக்குழுக்கள், எப்போதாவது அரசுத் தரப்பில் பேச்சுவார்த்தைக்குக் கூப்பிட்டால் உடனே ஆஜராகிவிடுவார்கள். துப்பாக்கிகளைக் கீழே போட்டுவிட்டு பேப்பர் போட்டோக்களுக்கு போஸ் கொடுப்பார்கள். கவர்மெண்ட் உத்தியோகம் இல்லாவிட்டாலும், கிடைக்கிற வரை லாபம் என்று திருப்தியடைந்துவிட்டு, தேசிய நீரோட்டத்தில் அவ்வப்போது கலந்துவிடுவார்கள். மீண்டும் கோபம் வந்தால் மீண்டும் துப்பாக்கி.

இந்தியாவில் மட்டுமல்ல. உலகம் முழுக்கவே இம்மாதிரியான பகுதிநேரத் தீவிரவாதக் குழுக்கள் நிறைய உண்டு. திடீரென்று நம்மூர் கிரிமினல் சந்தன வீரப்பன், தமிழ்த் தீவிரவாதியாகப் புதிய அவதாரம் எடுக்கவில்லை? அந்தமாதிரி.

இந்த வகையில், உலகில் உள்ள வேறெந்தத் தீவிரவாத இயக்கத்துடனும் ஒப்பிடவே முடியாத ஓர் அமைப்பு உண்டென்றால், அது அல் காயிதா மட்டுமே. அடிப்படையிலேயே மிகமிகப் பணக்கார அமைப்பு அது. அல் காயிதாவின் நிதி என்பது, இரண்டு விதங்களில் வருவது. முதலாவது, புரவலரும் தலைவரும் தளபதியும் எல்லாமும் ஆன ஒசாமா பின்லேடனின் வற்றாத சொத்து. இன்னும் நாற்பது தலைமுறைக்கு உட்கார்ந்து சாப்பிடும் அளவுக்கு, அவரது தகப்பனார் சேர்த்துவைத்துவிட்டுப் போய்விட்டபடியால், பணப்பிரச்னை என்பது அவருக்கு அறவே கிடையாது.

ஆனால், ஒரு கணக்கு வைத்துக்கொண்டிருக்கிறார் ஒசாமா. வசூல் மூலம் ஒரு வருஷத்துக்கு எத்தனை பணம் தேறுகிறதோ, அதனைப்போல் ஐந்து மடங்கு தன் பங்காக அவர் இயக்கத்துக்குத் தருவார். ஆக, அல் காயிதாவில் வசூலுக்கு முக்கிய இடம் உண்டு. இந்த வசூல் என்பது நமது தலைவர்கள் பிறந்த நாள் சமயத்தில் வசூலிப்பது போன்றதுதான். ஆனால், வருடம் ஒருமுறை நடப்பதல்ல; வருடம் முழுவதுமே. மிகவும் டெக்னிகலாக, திட்டமிடப்பட்ட, ஊர்வாரி, மாகாணவாரி, தேச வாரி, கண்ட வாரி வசூல். இதற்காகவே நன்கு படித்த, மிக நன்றாகப் பேசத் தெரிந்த மார்க்கெட்டிங் ஆபீஸர்கள் அல் காயிதாவில் இருக்கிறார்கள். ஒவ்வொருவருக்கும் ஏரியா ஒதுக்கிக்கொடுத்து, வருஷத்துக்கு இத்தனை என்று டார்கெட் நிர்ணயித்து, டார்கெட்டைத் தாண்டுபவர்களுக்கு இன்ஸெண்டிவ் எல்லாம் கொடுத்து பக்காவாக வைத்திருக்கிறார்கள். மிகையே இல்லை. இப்படித்தான் நடக்கிறது. அல் காயிதாவின் மார்க்கெட்டிங் ஆபீஸர்களை ஏகே - 47 தூக்கிக்கொண்டு தலையில் முண்டாசும் முகத்தில் மூணு மண்டல கால தாடியுமாக தயவுசெய்து கற்பனை செய்துவிடாதீர்கள். ஒரு பன்னாட்டு நிறுவன மார்க்கெட்டிங் ஆபீஸர் எப்படி இருப்பாரோ, அப்படித்தான் இவர்களும் இருப்பார்கள். ஊருக்கேற்ற வேஷம். வேலைக்கேற்ற கோஷம். என்ன விசேஷம் என்றால், இவர்கள் யாரும் 'அல் காயிதாவுக்கு நிதி கொடுங்கள்' என்று கேட்கமாட்டார்கள். 'உலகம் முழுக்க லட்சக்கணக்கான முஸ்லிம்கள் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்; அவர்களுக்கு உதவி செய்யுங்கள்' என்றுதான் கோரிக்கை வைப்பார்கள். முஸ்லிம் சமூகத்தவர்கள்தான் இதற்குப் பெரும்பாலும் நிதியளிப்பார்கள் என்றபோதும், ஜெர்மனி, பெல்ஜியம் போன்ற சில தேசங்களில் முஸ்லிம் அல்லாதவர்களும் ரெகுலராக நிதியளித்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். இதில் வேறு பல நுணுக்கங்களும் இருக்கின்றன. நிதி கேட்பவர்கள் அல் காயிதாவுக்காகத்தான் கேட்கிறார்கள் என்று தெரிந்தே சிலர் அளிப்பார்கள். அவர்களுக்கெல்லாம் அல் காயிதாவைப் பிடித்துத்தான் இருக்கவேண்டும் என்கிற அவசியம் கூட இல்லை. அமெரிக்காவைப் பிடிக்காதிருந்தாலே போதும். அது கூட இல்லாமல், பின்லேடனை ஒரு ஹீரோவாக நினைத்துச் சில்லறை வாரிவிடும் விசிலடித்தான் குஞ்சுகளும் உலகம் முழுக்கப் பலபேர் இருக்கிறார்கள்.

இதெல்லாம் ஐரோப்பிய நாடுகளிலும், கனடா மற்றும் அமெரிக்காவிலும் உள்ள நிலவரம். இது தவிர, இன்னும் சில வழிகளிலும் அல் காயிதா தனக்கான நிதியைத் திரட்டுகிறது. முதலாவது, ஒசாமா பின்லேடனின் முதலீடுகள். அப்பா சொத்தை உட்கார்ந்து கரைக்கிற ஜாதி இல்லை அவர். மாறாக, தன் தந்தை இறந்தபிறகு, தனக்குக் கிடைத்த பங்குகளை லேடன் க்ரூப் கம்பெனிகளில் முதலீடு செய்தது போக, மிச்சமிருந்த தொகையை உலகின் பல்வேறு பாகங்களில், பல்வேறு தொழிற்சாலைகளில் மிகுந்த புத்திசாலித்தனமுடன் பினாமி பெயர்களில் முதலீடு செய்திருக்கிறார்.

இது தவிர, அவரே முதல் போட்டு ஆரம்பித்த தொழிற்சாலைகளும் அநேகம் உண்டு. குறிப்பாக, 1991 ரூ 96 காலகட்டங்களில் சூடானிலும் பாகிஸ்தானிலும் தான்சானியாவிலும் பல தொழிற்சாலைகளை பின்லேடன் கட்டினார். உள்ளூர் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும் என்கிறபடியால், அந்தந்த தேசத்து அரசுகள் இதற்கு மறைமுக ஆதரவு தெரிவித்தன. சாதாரண கட்டுமான கம்பெனிகள். ஷூ தயாரிக்கும் கம்பெனிகள். குப்பை வாரி ஊரைச் சுத்தம் செய்யும் க்ளீனிங் கம்பெனிகள். மணல், ஜல்லி சப்ளை செய்யும் நிறுவனங்கள்.

ஊருக்கேற்ற தொழில். ஆட்களுக்கேற்ற வேலை வாய்ப்பு. ஆனால், எல்லாமே ஓரளவு லாபம் தரக்கூடிய தொழில்களாகவே அவர் ஆரம்பித்தார்.

இதுதவிர, வேறு பல நிறுவனங்களில் venture capitalist மாதிரி முதலீடும் செய்திருந்தார். எங்கிருந்து இத்தனை பணம் வருகிறது, யார் பின்னணியில் இருக்கிறார்கள் என்றெல்லாம் கேட்கக் கூடாது. ஷோக்காக டை கட்டிய ஆசாமிகள்தான் வந்து பிசினஸ் பேசுவார்கள். பேலன்ஸ் ஷீட் பார்த்து, கணக்கு வழக்கெல்லாம் கரெக்டாக இருந்தால் முதலீடு கிடைக்கும். எத்தனை கோடிகள் வேண்டுமானாலும் கிடைக்கும். ஒழுங்காக வட்டியுடன் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும். அது முக்கியம்.

அல் காயிதாவின் இன்னொரு பணம் வரும் வழி, ஹவாலா. பாகிஸ்தான், துபாய் உள்ளிட்ட சில தேசங்களுக்கு இடையே, ஹவாலா முறைப்படி பணப் பரிமாற்றம் செய்து, அதில் கிடைக்கும் கமிஷன் தொகையை இயக்கத்துக்காகப் பயன்படுத்துவார்கள். 1998-ல் கிழக்கு ஆப்பிரிக்காவில் உள்ள கென்யாவிலும் தான்சானியாவிலும் இருந்த அமெரிக்கத் தூதரகங்களை வெடிவைத்துத் தகர்க்கும் முயற்சி மேற்கொள்ளப்படும் முன்னர்வரை, வங்கிகள் மூலம் இத்தகைய பணப் பரிமாற்றம் செய்வதில், அல் காயிதாவுக்குப் பெரிய பிரச்னை ஏதும் இருக்கவில்லை. ஆனால், தூதரகத் தகர்ப்பு முயற்சிகளுக்குப் பிறகு, சர்வதேச அளவில் அல் காயிதாவுக்குப் பல நெருக்கடிகள் ஏற்பட்டு, அதன் வங்கிப் பயன்பாடு முற்றிலுமாக நிறுத்திக்கொள்ளப்பட்ட பிறகு, இந்த ஹவாலா முறை சற்றே தொய்ந்துபோனது.

இதெல்லாம் தவிர, இன்னொரு வழியும் உண்டு. பங்குச் சந்தை. இந்தோனேஷியா, பிலிப்பைன்ஸ் ஆகிய இரண்டு தேசங்களின் பங்குச் சந்தையில் அல் காயிதா விளையாடியிருப்பதற்கான ஆதாரங்கள் நிறைய கிடைத்திருக்கின்றன. இதே நாடுகளில் பல நட்சத்திர ஓட்டல்கள் கட்டி, அதன்மூலமும் பணம் பண்ணியிருக்கிறார்கள்.

தவிரவும், கிரெடிட் கார்ட் மோசடி. இதில் அல் காயிதா மார்க்கெட்டிங் டீம், படு கெட்டி. பணக்கார ஐரோப்பிய நாடுகளைக் குறிவைத்து இந்த வேலையை அவர்கள் செய்கிறார்கள். இங்கிலாந்தில் கொஞ்சம் அதிகம்.

அல் காயிதாவின் வழக்கப்படி, இங்கிலாந்தில் இந்த வேலையைச் செய்வது அல் காயிதாவின் இங்கிலாந்துப் பிரிவு அல்ல. மாறாக, அல்ஜீரியாவிலிருந்து இதற்கென்றே பயிற்சி அளிக்கப்பட்டு, இங்கிலாந்துக்குக் கொண்டுவந்து 'தொழில்' செய்ய விடப்பட்ட ஒரு மாபெரும் கூட்டமே இருக்கிறது. இவர்கள் மாதத்துக்குக் குறைந்தது ஒரு மில்லியன் டாலர்களாவது கொள்ளையடிக்கிறார்கள் என்று கணக்குக் காட்டுகிறது இங்கிலாந்து அரசு.

பல்வேறு அறக்கட்டளைகள் மூலம் பணம் திரட்டுவது, சுயநிதிக் கல்லூரிகள் நடத்துவது, மருத்துவமனைகள் நடத்துவது என்று அல் காயிதாவின் பண உற்பத்தி இயந்திரத்தின் வேர்கள், கண்ணுக்குத் தெரியாத எல்லைகளுக்கெல்லாம் வியாபித்திருப்பவை.

இப்படிச் சேர்க்கும் பணத்துக்கு முறைப்படி கணக்கு வைத்துக்கொள்வது, அல் காயிதாவில் மிக முக்கியமானதொரு விதியாகவே கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. வருடாந்திரத் தணிக்கை உண்டு. ஆடிட்டர் கேள்வி கேட்பார். ஒரு பைசா குறையாமல் கணக்கு ஒப்பித்தாக வேண்டும். யாரும் அத்தனை சுலபத்தில் யானைக்கு அல்வா வாங்கிப் போட்டுவிட முடியாது! (தொடரும்)

அல் காயிதாவின் ஈராக் பிரிவு தளபதி, அபூ மூசாப் அல் ஜர்காவி (Abu Musab al – zarqawi) அமெரிக்க வீரர்களால் சுட்டுக்கொல்லப்பட்டான் என்கிற செய்தியால், கடந்த வியாழக்கிழமை செய்திப் பத்திரிகைகள் சாபல்யமடைந்தன. (பலபேர் ஜர்காவியை ஜவாஹிரியுடன் போட்டுக் குழப்பிக்கொண்டு, அல் காயிதாவின் முதன்மை தளபதியைச் சுட்டுவிட்டார்கள் என்று அலறினார்கள்!)

மீடியா இத்தனை உரக்கப் பேசுமளவுக்கு ஜர்காவி ஒன்றும் ரொம்பப் பெரிய ஆள் இல்லை. மிகவும் சாதாரணமான லோக்கல் ரவுடிதான். 2004-ம் ஆண்டு வரை அவன் பெயர் யாருக்கும் தெரியாது. யாருக்கும் என்பதை அடிக்கோடிட்டுப் படியுங்கள்; ஒசாமா பின்லேடனுக்கே தெரியாது! Tawhid என்கிற பெயரில் ஓர் அமைப்பைத் தொடங்கி, ஈராக்கில் குண்டுபோட்டுக்கொண்டிருந்தவன். சதாம் உசேன் கைது செய்யப்பட்டபிறகு, 'ஏற்பாடு செய்யப்பட்ட' கலவரங்களுக்கு மிகவும் ஒத்தாசையாக இருந்தபடியால், உள்ளூரில் கொஞ்சம் பிரபலமானான்.

ஈராக்கில் அமெரிக்கப் படையின் ஆட்சிதான் உண்மையில் நடக்கிறது என்கிறபடியால், அல் காயிதாவால் நேரடியாக அங்கே எந்தத் திருவிளையாடலையும் நிகழ்த்தமுடியாத சூழ்நிலை. ஆகவே, ஜர்காவியை வாடகைக்கு எடுத்தார்கள். சொல்லிக்கொள்ளும்படி அல் காயிதாவுக்கு இப்போது ஈராக்கில் ஒரு நெட் ஒர்க் இல்லாத காரணத்தால், ஜர்காவியையும் அவனது அடியாட்களையுமே on behalf of al qaeda வேலை செய்யச் சொல்லிவிட்டார்கள். இதனடிப்படையில்தான் ஜர்காவியை அல் காயிதாவின் ஈராக் தளபதி என்று மீடியா சொல்கிறது.

ஆனால், ஜர்காவிக்கு அல் காயிதாவின் தொடர்பும் ஆதரவும் கிடைத்தபிறகு, நிறைய நாசவேலைகளைக் குறுகிய காலத்தில் செய்தான் என்பதை மறுக்கமுடியாது. ஜோர்டனிலும் ஈராக்கிலும் பணியாற்றிக்கொண்டிருந்த பல பெரிய அமெரிக்க அதிகாரிகளைத் தீர்த்துக்கட்டியது, இவனது திருப்பணிகளில் முதன்மையானது. ஈராக்கில் மட்டும் எழுநூறு பேரைப் படுகொலை செய்ததில் ஜர்காவியின் பெயர் சம்பந்தப்பட்டிருக்கிறது.

நவம்பர் 2005-ல் ஜோர்டன் தலைநகர் அம்மானில் நட்சத்திர ஓட்டல்கள் மூன்றில் குண்டு வெடித்துப் பலபேர் இறந்த சம்பவம் நினைவிருக்கிறதா? அது ஜர்காவியின் காரியம்தான். ஜோர்டன் நீதிமன்றம் ஜர்காவிக்குப் பதினைந்து வருட சிறைத்தண்டனை எல்லாம் விதித்து உள்ளே தள்ளியது. தப்பித்து எப்படி வெளியே வந்தான் என்பதை, அவனே ஒரு வாழ்க்கை வரலாறு எழுதியிருந்தால்தான் தெரிந்துகொண்டிருக்க முடியும்!



வாடகை வீட்டுக்காரர்களுக்கு என்று எப்போதும் சில பிரச்னை இருக்கும். வீட்டுக்காரன் உலக உத்தமனாக இருந்தாலும், ஏதாவது ஒரு சனி தசையில் உயிரை வாங்கவே செய்வான். திடீரென்று ஒரு மச்சானைக் கூப்பிட்டுவந்து மாடியில் குடிவைப்பான். அவன் ஒரு குடிகாரப் பாவியாக இருப்பான். அல்லது கக்கூஸ் ரிப்பேர் பண்ணுகிறேன் என்று கல்லையும் மண்ணையும் கொண்டுவந்து குவித்துவிட்டு, கார்ப்பரேஷன்காரர்கள் மாதிரி கண்டுகொள்ளாமல் மாதக்கணக்கில் கழுத்தறுப்பான். முன்னறிவிப்பு இல்லாமல் வாடகை ஏற்றுவான். குழாயில் தண்ணீர் வரும் வழியை கோலி குண்டு போட்டு அடைத்து வைப்பான்.

இதற்கெல்லாம் கல்யாண குணங்கள் என்று பெயர். நாம் செய்யக்கூடியது ஒன்றுமே இல்லை, சொந்தமாக ஒரு வீடு கட்டிக்கொண்டு போவதைத் தவிர. ஒரு பார்வையில், உலகம் முழுக்க என் வீடுதான் என்று ஒசாமா பின்லேடன் இண்டர்நேஷனல் அல்லது மல்டி நேஷனல் கம்பெனியாகத் தமது தீவிரவாத பிசினஸை விஸ்தரித்துக்கொண்டிருந்தது வியப்புக்குரிய விஷயமாகவே இருந்தாலும், ஒவ்வொரு தேசத்திலும் ஒவ்வொரு காலகட்டத்திலும் அவருக்குத் திருகுவலிகள் இருக்கவே செய்தன.

உதாரணமாக, 1991-ம் ஆண்டு பாகிஸ்தானில் அவருக்கு நேர்ந்த ஒரு நெருக்கடியை எடுத்துக்

கொள்ளலாம்.

ஒசாமா தீர்த்துக்கட்டிய முதல் நபர் டாக்டர் அப்துல்லா அசம் என்றால், அவர் கொல்ல விரும்பிய இரண்டாவது நபர், பேனசிர் புட்டோ. ஒருமுறை அல்ல, இரண்டுமுறை இதற்கான முயற்சியும் மேற்கொள்ளப்பட்டது. பேனசிர் வீட்டிலிருந்து அலுவலகம் வரும் வழியில் குண்டு நிரப்பப்பட்ட காரை மோதச் செய்து வெடிக்க வைப்பது ஒருமுறை. மிக நேரடியாக ஓரடி அல்லது ஒன்றரை அடி இடைவெளியில் நின்று துப்பாக்கியால் சுட்டுக்கொல்வது இன்னொரு முறை.

இரண்டு முயற்சிகளும் தோல்வியடைந்தன. திட்டம் செயல்படுத்தப்படுவதற்கு முன்னாலேயே முறியடிக்கப்பட்டது. அப்போதெல்லாம் பாகிஸ்தான் காவல்துறை கொஞ்சம் உஷாராகவே இருந்தது.

பின்லேடனுக்கு பேனசிருடன் என்ன பகை? பாகிஸ்தானுடன் நல்லுறவு, ஆனால் பாகிஸ்தான் பிரதமருடன் பகை என்பது புரிந்துகொள்ளக்கூடியதாக இல்லையே? என்றால், விஷயம் இருக்கிறது.

ஆகஸ்ட் 2, 1990. இது ஒரு முக்கியமான தேதி. ஒட்டுமொத்த மத்தியக் கிழக்கு நாடுகளும் தம் வாழ்நாளில் மறக்கவே முடியாத தேதி. அன்றுதான் குவைத் மீது ஈராக் படை எடுத்தது. ஈராக் என்றால் சதாம் உசேன். ஒரே நாள். ஒரே அடி. குவைத், ஈராக்கின் வசமாகிப் போனது. இந்தச் சந்தர்ப்பத்தில்தான் குவைத்துக்கு உதவுகிறேன் பேர்வழி என்று புறப்பட்ட அமெரிக்கா, சவூதி அரேபியாவில் தன் படைகளைக் கொண்டுவந்து இறக்கியது.

யாருக்காவது அப்போது சவூதி அரேபியாவின் மன்னர் யார், அவர் பேரென்ன என்று கேட்டால் தெரியுமா? ஆனால் ஒசாமாவின் சொந்த ஊர் அதுதான் என்பதும், ஆப்கனிஸ்தான் வரை சென்று தன் பெயரையும் ஊர்ப்பெயரையும் நிரூபித்துவிட்டு வந்தவர் என்பதும் தெரியுமல்லவா?

ஒசாமா, சவூதி மன்னரிடம் வேண்டிய மட்டும் எடுத்துச் சொல்லிப் பார்த்தார். அமெரிக்கப் படை களுக்கு இடம் கொடுக்காதீர்கள். ஈராக்கைப் பார்த்து பயப்பட வேண்டாம். என்னிடம் ஆயிரக்கணக்கான வீரர்கள் இருக்கிறார்கள். அத்தனை பேரும் ஆப்கனில் தம் திறமையை நிரூபித்தவர்கள். சதாம் உசேன் நம்மிடம் ஒருவேளை வாலாட்டினால் வாலை ஒட்ட நறுக்க நான் கேரண்டி என்று.

ஆனால் மன்னர் கேட்கவில்லை. அவருக்கு அப்போது ஒசாமாவின் மீது அவ்வளவாக நம்பிக்கை இல்லை போலிருக்கிறது. ஆகவே அமெரிக்கப் படைகளுக்கு அழைப்பிதழ் அனுப்பிவிட்டார். ஆக, சவூதி அரேபியாவுக்கு அமெரிக்கா நண்பன் ஆகிவிட்டது. ஏற்கெனவே அமெரிக்கா பாகிஸ்தானுக்கும் நண்பன் என்கிறபடியால், இப்போது சவூதி அரேபியாவும் பாகிஸ்தானும் நண்பர்கள் ஆகிவிட்டார்கள்.

இரண்டு நண்பர்களுக்கும்தான் வேண்டும் என்கிறபடியால், அமெரிக்கா இரண்டு பேரிடமும் ஒரு கோரிக்கை வைத்தது. ஒசாமாவை ஆதரிக்காதீர்கள். அல் காயிதாவின் முகாம்களை எங்கு கண்டாலும் அழித்துவிடுங்கள். ஆப்கன் யுத்தத்தின் இறுதியில் ஏற்பட்ட இருதரப்புக் கசப்பின் விளைவு இது.

இப்போது புரிகிறதா, ஒசாமாவுக்கு ஏன் பேனசிரைப் பிடிக்காமல் போனது என்று?

முன்சொன்ன அந்த இரு கொலை முயற்சிகளுக்கு முன்னால் வேறொரு ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சியைக் கூட ஒசாமா செய்துபார்த்தார். அவர்பாட்டுக்குச் சமர்த்தாகத் தீவிரவாதம் வளர்த்துக்கொண்டிருந்திருக்கலாம். தண்டத்துக்கு அரசியல் முயற்சியெல்லாம் கூட செய்து பார்த்திருக்கிறார் என்பது பலருக்கு வியப்பளிக்கலாம். ஆனால் நடந்தது உண்மை. ஒசாமாவுக்கு ஒரு அமெரிக்கா என்றால், பேனசிர் புட்டோவுக்கு ஒரு நவாஸ் ஷெரீஃப். பஞ்சாபைச் சேர்ந்த

கடைந்தெடுத்த தொழிற்சங்கவாதி. கையில் பலூனைத் தூக்கிக்கொண்டு ஓடி விளையாடவேண்டிய காலத்திலிருந்தே கொடி தூக்கி கோஷமிட்டுப் பழகியவர். அவருக்கும் பேனசிருக்குமான துவந்த யுத்தத்தை நம் ஊர் ஜெயலலிதா - கருணாநிதி யுத்தத்துடன் மிகச் சுலபமாக ஒப்பிட்டுவிடலாம். ஒரே வித்தியாசம், கருணாநிதி எப்போதும் டிஃபென்ஸ் தாக்குதல்தான் நடத்துவார். நவாஸ் ஷெரீஃப் எப்போதும் அஃபென்ஸிவ்தான்.

எப்படியாவது நாடாளுமன்றத்தில் ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்து பேனசிர் ஆட்சியைக் கவிழ்த்துவிட மாட்டோமா என்று நவாஸ் ஷெரீஃப் அப்போது மிக மும்முரமாகக் கணக்குப் போட்டுக்கொண்டிருந்தார். பாகிஸ்தானில் ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருவதெல்லாம் மிகவும் செலவு பிடிக்கும் காரியம். உண்மையிலேயே நம்பிக்கை இல்லாத எம்.பி.க்களைத் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களிக்கச் செய்யக்கூட, பலகோடி ரூபாய் செலவு செய்தாக வேண்டும். அது போதுமா என்றால், போதாது! நம்பிக்கை உள்ள ஆசாமிகள் சிலரையும் சேர்த்து நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு ஆதரவளிக்கச் செய்யவேண்டும். அதற்கு மேலும் பல கோடிகள் செலவாகும். குறைந்தது நூறு கோடியாவது செலவு செய்தால்தான் ஆட்சியைக் கவிழ்க்கமுடியும் என்கிற நிலைமை.

நவாஸ் ஷெரீஃப் அத்தனை செலவுக்கு பயந்துதான் பேசாமல் இருந்தார்.

இந்த விஷயத்தை யாரோ உத்தமோத்தமர் கர்ம சிரத்தையாகக் கொண்டுவந்து ஒசாமா பின்லேடன் காதுகளில் போட்டுவைத்தார்.

ஒசாமா யோசித்தார். பேனசிர் ஒரு பிரச்னை. பாகிஸ்தானில் இருக்கும் அல் காயிதாவின் பயிற்சி முகாம்களையெல்லாம் அவர் அழிக்கப் பார்க்கிறார். தொலைபேசிகளை ஒட்டுக் கேட்கிறார். தவிரவும் உளவுத்துறை எப்போதும் மோப்பம் பிடித்துக்கொண்டே வேறு இருக்கிறது. எல்லாவற்றுக்கும் பின்னணியில் அமெரிக்காவும் சவூதி அரேபியாவும் இருக்கிறது என்றபோதும், உள்ளூரில் இப்படி ஓர் ஆமாம்சாமி பிரதமர் இருப்பதுதானே ஆதிமூலக் காரணம்? பேனசிரைப் பதவியிலிருந்து இறக்கிவிட்டால் பிரச்னை தீர்ந்துவிடுமல்லவா? புதிய பிரதமர் ஒருவேளை தமக்குச் சாதகமான நபராக இருக்கலாம். அல்லது தான் சொல்லக்கூடியதைக் கேட்கக்கூடியவராக, குறைந்தபட்சம் தனக்குத் தொந்தரவு தராதவராக இருக்கலாம். ஒரு முயற்சிதானே? செய்து பார்த்தால் என்ன?

இப்படி யோசித்துத்தான் பேனசிருக்கு எதிராக பாகிஸ்தான் நாடாளுமன்றத்தில் ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவர ஏற்பாடு செய்தார். கவனிக்கவும். இந்த ஏற்பாடு நவாஸ் ஷெரீஃபின் ஏற்பாடல்ல. முழுக்க முழுக்க ஒசாமாவின் ஏற்பாடு. ஆகவே, நவாஸ் கட்சி, பேனசிர் கட்சி, மற்ற சில உப்புமாக் கட்சிகள் எல்லாவற்றிலிருந்தும் கலந்து கட்டி எம்.பி.க்களை விலைக்கு வாங்கினார்கள். தலைக்கு இத்தனை என்று பேரம் பேசி அறுபது, அறுபத்தைந்து கோடி வரை செலவும் செய்தாகிவிட்டது. எல்லாம் நல்லபடியாக முடிந்தவுடன் மேற்கொண்டு ஊக்க போனஸ் கொடுத்து காரியத்தை முடித்துவிடலாம் என்பது ஏற்பாடு.

இந்த மாதிரி அரசியல் விவகாரங்களிலெல்லாம் ஒசாமாவுக்கு அனுபவம் கிடையாது. ஆகவே, ஆரம்பத்திலேயே ஷேக் உமர் அப்துர் ரெஹ்மான் எச்சரித்தார். தெரியாத இடத்தில் மூக்கை நுழைக்காதே. ஆனால், ஏதாவது செய்து பேனசிரை வீட்டுக்கு அனுப்பினால்தான் பாகிஸ்தானில் அல் காயிதா இருக்கமுடியும் என்கிற நிலை. வேறு வழியில்லாமல், தனக்கே அத்தனை விருப்ப மில்லாமல்தான் ஒசாமா இந்த ஏற்பாட்டைச் செய்தார். இறுதியில் என்ன ஆயிற்று? ஒசாமா எத்தனை மோசமான அரசியல்வாதி என்பதும் பேனசிர் எப்பேர்ப்பட்ட பிறவி அரசியல்வாதி என்பதும், அதைக்காட்டிலும், பாகிஸ்தான் அரசியல்வாதிகள் எத்தனை உத்தமோத்தமர்கள் என்பதும் ஒரே நாளில் தெரிந்துபோனது.

இங்கே ஒசாமா பாயிடம் பெட்டி வாங்கிக்கொண்ட எம்.பி.க்கள் சமர்த்தாக பேனசிரிடம் போய்

விஷயத்தைச் சொல்லி, உங்களால் எத்தனை தரமுடியும் என்று கேட்டார்கள். ஆ, நம்பிக்கைத் துரோகிகளே, தேசத் துரோகிகளே என்றெல்லாம் அலறாமல், வாங்கிய பெட்டிக்கு மேலே ஒரு சின்ன பர்ஸ் வைத்துத் திரும்பக் கொடுத்து பேனசிர் நம்பிக்கை வாக்கெடுப்பில் ஜெயித்துவிட்டார்.

பின்லேடன் முகத்தில் ஈயாடவில்லை. தனக்கு அரசியல் எல்லாம் சரிப்பட்டுவராது என்று அவர் உணர்ந்த தருணம் அதுதான். என்ன, கொஞ்சம் அதிக விலை கொடுத்துக் கற்றுக்கொண்ட பாடம். பாதகமில்லை.

அதன்பிறகுதான் பேனசிரைக் கொன்றுவிடலாம் என்று முடிவு செய்தது. இந்த யோசனையை அளித்தது ஜவாஹிரி. அதற்கான இரண்டு முயற்சிகள்தான் தோல்வியைத் தழுவின. (இந்தக் கொலை முயற்சித் திட்டத்தையும் பேனசிரிடம் போட்டுக்கொடுத்தது, பெட்டி வாங்கிய எம்.பி.க்கள் சிலர்தான் என்று ஒரு வதந்தி உண்டு. ஊர்ஜிதமாகவில்லை.)

எப்படியோ, ஒசாமாவும் அல் காயிதாவும் பேனசிர் இருக்கும்வரை பாகிஸ்தானில் இருக்கமுடியாது என்றாகிவிட்டது. வேறு என்ன செய்யலாம் என்று யோசித்தார்கள். உண்மையில் எதுவும் செய்யக்கூடியதாக இல்லை. ஆப்கனிஸ்தானில் இருக்கலாம்தான். ஆனால் வெறுமனே இருக் கத்தான் முடியுமே தவிர, வளர முடியாது. தவிரவும் இயக்கம் கொஞ்சம் பலம் பெறும்வரை அமெ ரிக்காவின் மறைமுகத் தொந்தரவுகள் எட்டிப்பார்க்க முடியாத பிரதேசம் எங்காவது போய்விடலாம் என்று ஒசாமா நினைத்தார்.

அப்போதுதான் சூடான் கூப்பிட்டது. கிழக்கு ஆப்பிரிக்காவில் இருக்கும் ஓர் ஏழை முஸ்லிம் தேசம்.

1989-ம் ஆண்டிலிருந்து சூடானில் தேசிய இஸ்லாமிய முன்னணி என்ற கட்சி ஆட்சி செய்து வந்தது. அசன் அல் துராபி என்பவர் இந்தக் கட்சியின் தலைவர் அல்லது வழிகாட்டி அல்லது தளபதி அல்லது மதகுரு அல்லது பால் தாக்ரே.

அவர்களுக்கு அங்கே என்ன பிரச்னை என்றால் சூடானின் மைனாரிடிகளான கிறிஸ்துவர்களின் பிரதிநிதியாக, அரசுடன் சண்டை போட்டுக்கொண்டிருந்த ஒரு போராளி இயக்கம். சூடான் மக்கள் விடுதலை முன்னணி என்று அவர்களுக்குப் பேர்.

சூடான் அரசால், இந்த கிறிஸ்துவப் போராளிகளைச் சமாளிக்க முடியவில்லை. காரணம், ஒழுங்கான ராணுவம் கிடையாது. எல்லாம் அரை டிக்கெட்டுகள். பிளேடு பக்கிரிகளும் பிச்சுவா பிச்சுமணிகளும் ராணுவத்தில் இருந்தால் என்னாவது? ஆகவே, தமது ராணுவத்துக்குப் போர்ப்பயிற்சி தர ஒரு வாத்தியாராக வரமுடியுமா என்று கேட்டு, ஒசாமா பின்லேடனை அணுகி னார் அசன் அல் துராபி. பதிலுக்கு சூடானில் அல் காயிதா ஒரு நிரந்தரமான தளம் அமைத்துக் கொண்டு என்ன வேண்டுமானாலும் செய்துகொள்ள பூரண ஒத்துழைப்புத் தருவதாகவும் சொன்னார்.

ஒசாமா சரி என்றார். அப்போதைக்கு அல் காயிதா பாதுகாப்பாக வளர அந்த ஏற்பாடு உதவும் என்று மட்டும்தான் அவருக்குத் தோன்றியது. உண்மையில் அல் காயிதாவுக்கு உலகின் இண்டு இடுக்கு விடாமல் எல்லா இடங்களிலும் வலுவான நெட் ஒர்க் அமையவும், கோடி கோடியாகப் பணம் வந்து குவியவும், பல்லாயிரக்கணக்கில் ஆள்பலம் சேர்க்கவும் சூடான்தான் சரியான அடித்தளம் அமைத்துக்கொடுக்கப் போகிறது என்று நினைத்துக் கூடப் பார்த்திருக்க மாட்டார்!



டிசம்பர் 1991 முதல் மே 1996 வரை என்றால், கிட்டத்தட்ட நாலரை வருடங்கள். அல் காயிதாவுக்கென்று ஒரு பலமான, மிகப் பலமான நெட் ஒர்க் உலகம் முழுக்க உருவானது இந்தக் காலகட்டத்தில்தான். ஒசாமா பின்லேடன் ஆப்கனிஸ்தானில் இருந்தபோதோ, பாகிஸ்தானில் வாழ்ந்தபோதோ நடைபெறாத இந்தக் காரியம், மேற்சொன்ன நாலரை ஆண்டு கால இடைவெளியில், அவர் சூடானில் இருந்தபோது சாத்தியமாகிவிட்டது.

என்ன நினைத்தாரோ அது. எப்படி நடக்கவேண்டும் என்று ஆசைப்பட்டாரோ, அப்படியே. எங்கெங்கெல்லாம் தாம் பரவவேண்டும் என்று விரும்பினார்களோ அங்கெல்லாம். பின்னால் என்னென்னவெல்லாம் செய்யவேண்டும் என்று ஆசைப்பட்டு லிஸ்ட் போட்டு வைத்தார்களோ, அதையெல்லாம் நிறைவேற்றிக்கொள்வதற்கான அடிப்படை நிதி, ஆயுத ஆதாரங்களை அல் காயிதா சேகரித்துக்கொண்டதும் இந்தச் சூடான் வருடங்களில்தான். நம்மால் எல்லாம் கற்பனை கூடச் செய்து பார்க்க முடியாத அரசியல் சூழ்நிலை அது. ஒரு தேசத்தின் ராணுவத்துக்குப் பயிற்சி கொடுப்பதற்காக, ஒரு தீவிரவாத இயக்கத்தை வரவழைப்பார்களா? சூடான் செய்யும். அந்த இயக்கம் கேட்கும் எந்தவொரு அதி நவீன ஆயுதத்தையும் அரசாங்கமே முன் நின்று பேரம் பேசி வாங்கித் தருமா? சூடான் தரும். அல் காயிதாவின் சர்வதேச நெட் ஒர்க் சரியாக அமைவதன் பொருட்டு ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு மாபெரும் தீவிரவாத இயக்கங்களின் மாநாட்டை, அரசு தன் செலவில் நடத்திக் கொடுக்குமா? சூடான் நடத்தும்.

கல்வி அறிவு, பொருளாதார பலம், வேலை வாய்ப்புகள், தொழில்நுட்பப் பரிச்சயம் என்று எந்தெந்த ஜிகிரி வஸ்துக்களெல்லாம் வளர்ச்சிக்குத் தேவையோ, அவை எதுவுமே சூடானுக்குள் எட்டிப்பார்க்கவில்லை. அவர்களிடம் இருந்தது ஒரு கலாசார பலம் மட்டுமே. அது சூடானின் மிகப் பாரம்பரியமான விருந்தோம்பல் கலாசாரம். நம்மால் எல்லாம் நினைத்துக் கூடப் பார்க்க முடியாத பேரன்பு அது. நண்பனோ, எதிரியோ. நல்லவனோ, கெட்டவனோ. தங்கள் தேசத்துக்கு வந்துவிட்ட ஒருத்தன் என்ன கேட்டாலும் செய்து கொடுத்தாக வேண்டும் என்பது சூடானில் அதிபர் முதல் அதிபர் வீட்டு வாட்ச்மேன் வரை காலம் காலமாகக் கடைப்பிடித்துவரும் ஒரு பழக்கம்.

இதை வெறும் வார்த்தைகளில் விவரிக்கவே முடியாது. எத்தனை ஏழையாக இருந்தாலும், ஒரு சூடானியர் வீட்டுக்கு யாராவது விருந்தாளி வந்துவிட்டால், தலையை அடகு வைத்தாவது அவர் விரும்புவதையெல்லாம் செய்துகொடுப்பார்கள். சூடானில் விருந்தாளி என்பவர், கடவுளுக்குச் சமானம்.

அல் காயிதா தன்னுடைய தளத்தை சூடானில் நிறுவ முடிவு செய்ததற்கு, அதிபரின் அழைப்பு மட்டும் காரணமல்ல. சூடானியர்களின் இந்தக் குணமும் மிக முக்கியக் காரணம். ஒருவேளை தான் சூடானுக்கு இடம் பெயர்ந்த விஷயம் அமெரிக்காவுக்குத் தெரிந்து, அங்கும் வந்து ஏதாவது வாலாட்டுமானால், தன் சார்பில் சூடான் அரசே அமெரிக்காவுடன் மல்லுக்கு நிற்கும் என்று

கணக்குப் போட்டுத்தான் ஒசாமா சூடான் புறப்பட்டு வந்தார்.

ஆனால், அடிப்படையில் ஒசாமா ஒரு சுயநலவாதி இல்லை என்கிறபடியால், தமக்கு அடைக்கலம் கொடுக்கும் தேசத்துக்குத் தன்னால் என்ன செய்யமுடியும் என்று யோசித்து, ஒரு திட்டமுடன் தான் வந்திருந்தார்.

அசன் அல் துராபி கேட்டபடி சூடான் ராணுவத்துக்குப் போர்ப்பயிற்சி. அது செய்துவிடலாம்; பிரச்னையில்லை. வேறென்ன செய்யலாம்?

முதலாவது, சூடானில் எந்த ஒரு இடத்திலும் சரியான சாலைகள் கிடையாது. எங்கு பார்த்தாலும் மணல் மூடிய மேடுகள்தான். நிறைமாத கர்ப்பிணி போலத்தான் வண்டிகள் தள்ளாடிச் செல்லும். தேசம் முழுக்க சாலை போடுவதென்றால் அதற்கு ஆகும் செலவுக்கு சூடான் தயாரில்லை. மக்களுக்கு இரண்டு வேளை சாப்பாட்டுக்கு உத்தரவாதம் கொடுக்கவே ததிங்கிணத்தோம் போட்டுக்கொண்டிருந்த அரசு அது. குடிநீர் வசதி கிடையாது. பெரும்பாலான கிராமப்புறங்களில் மின்சாரம் என்கிற வஸ்துவை மக்கள் பார்த்தது கூடக் கிடையாது. எங்காவது கூலி வேலை கிடைக்கிறது என்று தெரிந்தால் கூட்டம் கூட்டமாக ஓடுவார்கள். கிடைக்கிற சொற்பக் கூலியை வைத்துக்கொண்டு சில தினங்கள் ஓட்டுவார்கள். அடுத்த வேலைக்கான நிச்சயமில்லாமல் காத்திருப்பார்கள். காத்திருக்கும் காலங்களுக்குத் தண்ணீரும் சோளமும் தான் உணவு. தண்ணீருக்கும் பல மைல்கள் நடக்கவேண்டும்.

ஏழைமையின் பரிபூரண அரவணைப்பில் இருக்கிற ஒரு தேசத்தை, சொற்களைக்கொண்டு வரைந்துகாட்டமுடியாது. அது நிரந்தர சோகம். செய்யக்கூடியது ஏதுமில்லை.

ஆனால் தன்னாலான முதல் செங்கற்களையாவது எடுத்து வைக்கலாம் என்ற முடிவுடன் வந்திருந்த ஒசாமா, ஒரு பக்கம் ராணுவத்தினருக்குப் பயிற்சிகள் ஆரம்பித்த கையோடு மறுபுறம் சூடானின் முக்கியப் பகுதிகளில் சாலைகள் போட்டுத்தரவும் தொடங்கினார். சூடானின் தலைநகரான கார்ட்டொம் (Khartoum) நகரிலிருந்து சூடான் துறைமுகம் வரையிலான ஆயிரக்கணக்கான கிலோமீட்டர் நீளமுள்ள மாபெரும் தேசிய நெடுஞ்சாலைத் திட்டம் ஒன்றைத் தன் சொந்தப் பொறுப்பில் எடுத்துக்கொண்டு, வழுவழுவென்று வெண்ணெய் மாதிரி வழுக்கிக்கொண்டு போகும் தார்ச்சாலையை அமைத்துக்கொடுத்தார்.

இது யாருமே எதிர்பாராதது. துராபி கனவில் கூட நினைத்துப் பார்த்திருக்க முடியாது. "நீங்கள் இப்படியொரு உதவி செய்வதற்கு நாங்கள் அருகதையானவர்களே இல்லை. நாங்கள் உங்களுக்கு என்ன செய்துவிட்டோம்?" என்று ஒசாமாவின் கைகளைப் பிடித்துக்கொண்டு கண்ணீர் விட்டார் அதிபர் துராபி.

ஒசாமா புன்னகை செய்தார். சந்தர்ப்பத்தை மேலும் வண்ணமயமாக்கும் விதமாக, இன்னொரு ப்ளூ ப்ரிண்ட் ஒன்றை எடுத்து நீட்டினார்.

அது சூடானில் அவர் தொடங்கவிருந்த சில தொழிற்சாலைகளுக்கான வரைபடம். முழுக்க முழுக்க சூடானியர்களே வேலை பார்க்கப் போகிற தொழிற்சாலைகள். குறைந்தது சில ஆயிரம் பேர்களாவது பசியின்றி வாழ்வதற்கு ஒரு வழி.

ஆவென்று வாய்பிளந்துவிட்டது சூடான் அரசு. அதுநாள் வரை அரசு சார்பில் உருப்படியாக ஒரு வேலை வாய்ப்புத் திட்டத்தைக் கூட அவர்களால் அங்கே செயல்படுத்த முடிந்ததில்லை. ஏதோ செய்தார்கள். எப்படியோ சமாளித்தார்கள் என்றுதான் சொல்லவேண்டும். உண்மையில் சூடானின் மக்கள் தொகைக்கும் அந்தத் தேசத்தின் நிதி ஆதாரத்துக்கும் ஏணி அல்ல; ஹெலிகாப்டர் வைத்தாலும் எட்டாது.

இத்தனைக்கும் சூடானின் மண் அத்தனையொன்றும் மோசமானதல்ல. வெட்டிப்போட்டால் தங்கம் கிடைக்கிற பூமிதான். ஆனால் தொழில்நுட்ப வாசனை இல்லாத காரணத்தால், தங்கத்தை வெட்டி எடுத்துப் பிரித்து உருக்கிக் காசாக்கத் தெரியாமல் இருந்தார்கள்.

ஒசாமா அதற்கும் ஒரு திட்டத்தை முன்வைத்தார். சூடானில் தங்கம் கிடைக்கும் இடங்களில் அல் காயிதாவின் சார்பில் சுரங்கங்கள் தோண்டப்படும். தங்கத்தை எடுத்து, பிரித்து, சர்வ தேசக் கள்ள மார்க்கெட்டில் விற்று, பணத்தை அப்படியே அரசுக்குத் தந்துவிடுவார்கள்.

"உங்களுக்கு?" என்றார் துராபி. "ஒரு பைசா பங்கு கூட வேண்டாம்."

"இல்லை. நாங்கள் உங்களுக்கு ஏதாவது செய்யவேண்டும். என்ன வேண்டும் என்று தயவுசெய்து சொல்லுங்கள். எங்களைக் கடன்பட்டவர்களாகவே இருந்துவிடச் செய்துவிடாதீர்கள்!" என்று மன்றாடினார் துராபி.

ஒசாமா கேட்ட முதல் உதவி, கொஞ்சம் நிலம். கார்ட்டொம் நகருக்கு வெளியே அல் காயிதாவின் பயிற்சி முகாம்களை நிறுவவும், தொந்தரவில்லாமல் பயிற்சிகள் நடக்கவும் அமைதியான, ஒதுக்குப் புறமாகக் கொஞ்சம் நிலம். அவ்வளவுதானே என்று ஒரு கிராமத்தையே கொடுத்தார் துராபி.

கட்டுமான எக்ஸ்பர்ட்டான ஒசாமா, அந்த இடத்தை மிகச் சரியாக அளவெடுத்து, வேண்டிய கட்டடங்கள், மைதானங்கள், கிணறுகள், தடுப்புச் சுவர்கள், செயற்கை மலைப்பகுதிகள் என்று தங்கள் பயிற்சிக்குத் தேவையான விதத்தில் வடிவமைத்துக்கொண்டார். மறக்காமல், நிலம் கொடுத்த தற்கு நன்றி தெரிவித்து அதிபருக்கு ஒரு கடிதம் எழுதினார்.

துராபி தன் வாழ்நாளிலேயே இப்படியொரு சிறப்பான நடவடிக்கையை மேற்கொண்டதில்லை என்பதாக நினைத்தார். எங்கோ ஆப்கனிலிருந்து ஒரு மனிதன் புறப்பட்டு வருகிறான். பல்லாயிரக் கணக்கான கிலோ மீட்டர்களுக்குச் சாலை போட்டுக் கொடுக்கிறான். ஏராளமான தொழிற்சாலைகள் அமைத்து வேலை வாய்ப்புகளை உருவாக்கித் தருகிறான். ராணுவத்துக்குப் போர்ப்பயிற்சி தருகிறான். செய்தவேலைக்குச் சம்பளம் என்று ஒரு பைசா கேட்பதில்லை! கேவலம், இருக்க இடம் மட்டுமே நாம் தந்திருக்கிறோம். அதுவே போதுமா? போதும் என்கிறானே? என்ன இது, என்ன இது என்று சந்தோஷத்தில் அவருக்குப் பேச்சே வரவில்லை.

இப்படி மேலும் மேலும் நெகிழவைத்து ஒரு வழிபண்ணிய பிறகுதான் ஒசாமா மெல்ல ஆரம்பித்தார்.

"நாங்கள் ஆதிக்க சக்திகளுக்கு எதிராக யுத்தம் தொடங்கியிருக்கிறோம்."

"அப்படியா? மிகவும் நல்லது. நான் என்ன செய்யவேண்டும்?"

"எங்களது முதல் இலக்கு அநேகமாக அமெரிக்காவாக இருக்கும்."

"சபாஷ். உங்களைத் தவிர வேறு யாரால் இது முடியும்?"

"சவூதி அரேபியாவிலிருந்தும் உலகின் பிற அனைத்துப் பகுதிகளிலிருந்தும் அமெரிக்கப் படைகள் வெளியேற வேண்டும். அதுவரை எங்கள் யுத்தம் ஓயாது."

"மிகவும் நல்ல காரியம். பூனைக்கு யாராவது மணி கட்டித்தான் ஆகவேண்டும். நான் என்ன செய்யவேண்டும் என்று சொல்லுங்கள்."

அப்போதுதான் ஒசாமா சொன்னார். "மதிப்புக்குரிய தலைவர் அவர்களே! எங்களுக்கு ஆயுதங்கள்

வேண்டும். வெடி மருந்துகள் வேண்டும். அமெரிக்காவிடம் என்னென்ன நவீன ஆயுதங்கள் இருக்கின்றனவோ, அவையெல்லாம் அல் காயிதாவிலும் இருக்கவேண்டும். அப்போதுதான் சம பலத்துடன் நாம் யுத்தம் செய்யமுடியும்.”

“சரிதான். ஏற்றுக்கொள்கிறேன். ஆயுதம் வாங்க உங்களுக்குப் பணம்..”

ஒசாமா சிரித்தார். “கஷ்டப்படும் உங்களிடம் பணம் கேட்டால் அது பாவம். பணம் எனக்குப் பிரச்னை இல்லை. அது பல்வேறு வழிகளில் வருகிறது. ஆனால் எங்களுக்கு பெரிய அளவில் ஆயுதங்கள் வாங்குவதில் சிக்கல் இருக்கிறது. வாங்குவதில் உள்ள சிக்கலைக் காட்டிலும், கொண்டு வருவதில் உள்ள சிக்கல்கள் அதிகம். புரியுமென்று நினைக்கிறேன்.”

துராபி யோசித்தார்.

சூடானின் மாபெரும் மதத்தலைவரும் ஆட்சித் தலைவருமான அவருக்கு இது ஒரு பெரிய வேலையாக இருக்காது. ஆனால் சூடான் ஏன் திடீரென்று இத்தனை ஆயுதங்கள் வாங்கவேண்டும் என்கிற கேள்வி எழும். இத்தனை ஆயுதங்கள் வாங்குவதற்கு அவர்களிடம் ஏது பணம் என்கிற துணைக்கேள்வி உடனே எழும். பாகிஸ்தானிலிருந்து காலி செய்துவிட்ட அல் காயிதா இப்போது எங்கே இருக்கிறது என்று உடனடியாகத் தேட ஆரம்பித்துவிடுவார்கள். இரண்டு மணி நேர தூரத்தில் பதுங்கியிருப்பவர்களைக் கண்டுபிடிப்பது பெரிய விஷயமாக இருக்காது. ஏற்கெனவே பாகிஸ்தானில் சுற்றித் திரிந்துகொண்டிருக்கும் சி.ஐ.ஏ.வின் ஏஜெண்டுகள் இந்நேரம் மோப்பம் பிடித்து தம் அரசுக்குச் செய்தி அனுப்பியிருப்பார்கள்.

ஆனாலும் ஒசாமாவுக்கு இந்த உதவியைச் செய்துதான் ஆகவேண்டும். அப்புறம் நட்புக்கு என்ன அர்த்தம்?

“சரி, நான் பொறுப்பு” என்றார் துராபி.



சூடான் அரசாங்கத்தைச் சுருட்டிப் பொட்டலம் கட்டித் தன் தலைப்பாகைக்குள் வைத்துக்கொண்ட பிறகு, ஒசாமா பின்லேடன் ஒரு வினாடி கூடத் தாமதம் செய்யவில்லை. சவூதி அரேபியா, எகிப்து, ஜோர்டன், லெபனான், ஈராக், ஓமன், அல்ஜீரியா, துனீஷியா, லிபியா, மொராக்கோ, சோமாலியா. ஆக மொத்தம் பதினொரு நாடுகள் ஆச்சா? இந்தப் பதினொரு இடங்களிலும் நல்ல நாள் பார்த்துப் பால் காய்ச்சி சாப்பிட்டுவிட்டு, அல் காயிதாவின் கிளைகளைத் தொடங்கிவிட்டார்.

ஏற்பாடு இதுதான். ஷேக் உமர் அப்துர் ரஹ்மான் ஒவ்வொரு நாடாகப் போவார். உலகெங்கும் கஷ்டப்படும் முஸ்லிம்களைப் பற்றிய கண்ணீர்க் கதைகளை உணர்ச்சிமயமாக எடுத்துச் சொல்லி

இளைஞர்களை வசீகரிப்பார். அவர் போய்வந்த சூட்டோடு ஜவாஹிரி ஒரு ரவுண்டு போவார். ஆர்வமும் துடிப்பும் மிக்க இளைஞர்களை ஒருங்கிணைத்து ஓர் அமைப்பாக இருந்து செயல்பட ஓர் இடத்தையும் ஏற்பாடு செய்து கொடுத்துவிட்டு, அல் காயிதாவின் சித்தாந்தங்களை அவர்களுக்குப் போதிப்பார். பொதுவாக ஷேக்கின் முதல் சுற்றுப் பேச்சுகளிலேயே இளைஞர்கள் மயங்கி, என்ன சொன்னாலும் தலையாட்டத் தயாராகிவிடுவார்கள். ஜவாஹிரியின் நரம்புகளைச் சுண்டும் வீராவேசச் சொற்பொழிவையும் கேட்டபிறகு கையோடு கிளம்பிச் சூடானுக்கு வரத் தயாராகிவிடுவார்கள்.

தவிரவும் தனி விமானத்தில் பறந்துவந்து இயக்கத்துக்கு ஆள் சேர்க்கும் ஒரே அமைப்பு, உலகத்தில் அல் காயிதாவாக மட்டுமே இருக்கமுடியும் என்கிறபடியால், இயல்பாகவே முஸ்லிம் இளைஞர்கள் மத்தியில் ஒருமாதிரியான பரவசமும் பிரமிப்பும் அப்போது இருந்தது என்பதை மறுக்கமுடியாது.

அது ஒரு சுவாரசியமான கதை.

உலகம் முழுக்கப் போய் அல் காயிதாவைப் பரப்பவேண்டும். ஊருக்கு ஊர், நாட்டுக்கு நாடு ஆள் பிடிக்க வேண்டும். அது மட்டுமல்லாமல் ஏற்கெனவே இருக்கும் இயக்கங்களுடன் நட்பு வளர்க்கவும் வேண்டும். மேலும் நிதி சேர்ப்பு நடவடிக்கைகள். இதெல்லாம் பொடிநடையாக வண்டி கட்டிக்கொண்டு போய் நடக்கிற காரியமா என்ன?

ஆகவே ஒசாமா ஓர் உபாயம் செய்தார். துராபியிடம் பேசி, சூடான் தேசத்துக்குச் சொந்தமான ஓர் அரசாங்க விமானத்தைக் குத்தகைக்கு எடுத்துக்கொண்டார். அந்த விமானத்துக்கான பராமரிப்புச் செலவுகள் அத்தனையும் அல் காயிதாவைச் சாரும். ஜவாஹிரியோ, ஷேக் உமர் அப்துர் ரஹ்மானோ, வேறு யாரோ எங்கு போகவேண்டுமானாலும் அந்த விமானத்தில் போவார்கள். ஆனால், அல் காயிதாவின் ஆட்கள் தனி விமானத்தில் வந்து இறங்குவதை எந்த தேசத்து விமான நிலையம் வெற்றிலை பாக்கு வைத்து வரவேற்கும்? ஆகவே அதற்கும் ஓர் ஏற்பாடு. அல் காயிதாவினர் புறப்படும்போதெல்லாம் சூடான் அரசின் அமைச்சர்கள் அல்லது உயர்மட்ட அதிகாரிகள் சிலர் ஏதோ வேலை வைத்துக்கொண்டு அந்த விமானத்தில் கூட வருவார்கள். அரசாங்கப் பணியாக சூடானிலிருந்து சில அதிகாரிகள் வந்திருக்கிறார்கள் என்பதாகத்தான் மற்றவர்களுக்குச் சொல்லப்படும். சூடானின் 'அரசுக் குழு' உறுப்பினர்களோடு உறுப்பினர்களாக அல் காயிதாவினர் சென்றுவிடுவார்கள். எந்த தேசத்துக்குப் போகிறார்களோ, போய்ச் சேர்ந்ததும் நிஜமான அரசுக் குழுவும் அல் காயிதா குழுவும் ஆளுக்கொரு திசையில் பிரிந்துவிடும். அல் காயிதாவினர் தம் வேலையை முடித்துக்கொண்டு திரும்ப வரும்வரை சூடான் விமானம் சமர்த்தாகக் காத்திருக்கும். சூடான் அதிகாரிகளோ உல்லாசமாக ஊர் சுற்றிப் பார்த்துவிட்டு, நன்றாகச் சாப்பிட்டு உடம்பையும் பார்த்துக்கொண்டு விமான நிலையத்துக்கு வந்து காத்திருப்பார்கள். அவர்கள் ஊர் சுற்றிப் பார்க்கும் செலவெல்லாம் அல் காயிதாவினுடையது.

ஜவாஹிரியும் ஷேக்கும் தம் வேலைகளை முடித்துக்கொண்டு வந்து மீண்டும் சூடான் அரசுக் குழுவுடன் சேர்ந்து விமானம் ஏறி டாட்டா காட்டிவிட்டுப் போய்விடுவார்கள்.

சிந்துபாத் கதைகளில் கூடச் சாத்தியமில்லாத இதெல்லாம், அல் காயிதா விஷயத்தில் சூடான் அரசிடம் சாத்தியமானது என்பது நம்பமுடியாத உண்மை.

1991 மே மாத வாக்கில் ஆரம்பமான இப்பணிகள், மிகச் சில மாதங்களிலேயே சூடு பிடித்து பிரமிக்கத்தக்க வேகத்தில் அல் காயிதா ராட்சஸ வளர்ச்சி காண ஆரம்பித்தது. ஜெர்மனி, பிரான்ஸ், நெதர்லாந்து, ஸ்வீடன், டென்மார்க், அயர்லாந்து, ஆஸ்திரியா என்று பல்வேறு ஐரோப்பிய நாடுகளிலும் அல் காயிதாவின் கிளைகள் வெற்றிகரமாக நிறுவப்பட்டன.

ஆப்கன் யுத்த காலத்தில் டாக்டர் அப்துல்லா அசம், அமெரிக்காவில் தங்கி நிதி வேட்டையில்

ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது, அவருக்குப் பெரிய அளவில் ஒத்தாசைகள் செய்த அமைப்பு ஒன்று அமெரிக்காவில் இருந்தது. அதன் பெயர் அல் கைஃபா. அப்துல்லா அசம் கொலை செய்யப்பட்ட பிறகு அவர்கள் வேறு வழி தெரியாமல் 'பொது வாழ்க்கையிலிருந்து விலகி'யிருந்தார்கள். ஒசாமா பின்லேடன் சமயோசிதமாக அவர்களிடம் பேசி 'அல் காயிதாவின் அமெரிக்க வேர்களை ஆழமாக ஊன்றுவதற்கு உதவ முடியுமா? என்று கேட்டார். கசக்குமா என்ன? அவர்களே எப்போது ஒசாமா தங்களை அழைப்பார் என்றுதான் காத்திருந்தார்கள். ஆகவே, 'நீங்கள் கவலையே படவேண்டாம். அமெரிக்காவில் நமக்கு எப்போதும் ஐயாயிரம் பேர் இருப்பார்கள். அதற்கு நாங்கள் உத்தரவாதம்' என்று வாக்களித்தார்கள்.

மறுபுறம் தூரக் கிழக்கு தேசங்களின் நிலைமையை ஆராய்ந்து அங்கும் வலுவான அடித்தளம் அமைப்பதற்காக, பாலஸ்தீனின் காஸா பகுதியில் பிறந்த அபூ சுபைதா என்கிற இருபது வயது இளைஞன் ஒருவனை இந்தோனேஷியாவுக்கு அனுப்பிவைத்தார் ஒசாமா. பின்னாளில் முகம்மது அடஃப் இறந்த பிறகு அல் காயிதாவின் தளபதியாகவே விளங்கி ஏகப்பட்ட நாச காரியங்களை வெற்றிகரமாக நடத்திக்கொடுத்த பெரிய கை அது. இந்த அபூ சுபைதாவுக்கு, மற்ற யாருக்குமில்லாத இரண்டு சிறப்புகள் உண்டு. ஒன்று, ஆயிரத்தெட்டு அயோக்கியத்தனங்களை முன்னின்று நடத்தியவன் என்ற போதிலும் எந்த நாட்டுக் காவல் துறையும் இவன் மீது ஒரு வழக்குக் கூட பதிவு செய்ததில்லை. அதாவது, கழுவுகிற மீனில் நழுவுகிற மீன். இன்னொரு சிறப்பு, மிகச் சாமர்த்தியமாகத் தன் புகைப்படம் எதுவும் அதிகம் வெளியே வராமல் கடைசி வரை பார்த்துக்கொண்டவன். 'தனி நபர்களல்ல; இயக்கமே முக்கியம்' என்கிற ஒசாமாவின் கொள்கைக்கு அப்படியே அர்த்தமாக வாழ்ந்து காட்டியவன் இவன்.

அபூ சுபைதா செய்த மிக முக்கியமான காரியம், இந்தோனேஷியாவில் வேர் கொண்டு கிழக்காசிய நாடுகள் முழுக்கக் கோலோச்சிக்கொண்டிருந்த ஜமா இஸ்லாமியா என்கிற அமைப்புடன் அல் காயிதாவுக்கு ஆரம்ப கட்டத் தொடர்புகளை உருவாக்கியது. செப்டெம்பர் 11 சம்பவத்தின் மிக முக்கியப் பொறுப்பாளரான காலீத் ஷேக் முகம்மது என்கிற குவைத்தைச் சேர்ந்த 'ஃப்ரீலான்ஸ்' தீவிரவாதிதான் (பின்னாளில் அல் காயிதா உறுப்பினராக ஆகிவிட்டவர். இவரைக் குறித்துப் பின்னால் பார்க்கலாம்.) ஜமா இஸ்லாமியாவுக்கும் அல் காயிதாவுக்குமான பலமான கான்க்ரீட் உறவுப்பாலம் போட்டவர் என்றாலும் அவருக்கெல்லாம் முன்னாலேயே இரண்டு இயக்கங்களும் இணைந்து பணியாற்றுவதற்கான சாத்தியங்கள் இருப்பதைக் கண்டுபிடித்தவன் அபூ சுபைதாதான்.

ஜமா இஸ்லாமியாவின் தலைவர் ரிதுவன் இஸாமுத்தீன். இந்தப் பெயரைச் சொன்னால் அவரது மனைவி மக்களுக்கே சட்டென்று அடையாளம் தெரியாது. ஹம்பாலி என்றால் புரியும். கிழக்காசிய நாடுகளில் ஜிஹாதைப் பரவலாக்குவதை நோக்கமாகக் கொண்டு தீவிரமாக உழைத்துக்கொண்டிருந்தவர். இவரும் சரி, காலீத் ஷேக் முகம்மதுவும் சரி, இந்தத் தொடரில் பல்வேறு இடங்களில் பல்வேறு அமைப்புகளின் சார்பில் இடம்பெறப்போகிற இன்னும் எத்தனை எத்தனையோ தீவிரவாதிகளும் சரி. அத்தனை பேருக்குமே பொதுவான ஓர் ஒற்றுமை என்னவென்றால், இவர்கள் எல்லோருமே ஏதோ ஒரு வகையில் ஆப்கன் யுத்தத்தில் பங்குபெற்றவர்கள். சிலர் ஒசாமாவுக்கு அப்போதே நேரடியாகத் தெரிந்தவர்கள். சிலர் தூர இருந்து பார்த்தவர்கள். சிலர் கடைசி வரை பார்க்காமலேயே காதல் கொண்டவர்களாக இருந்தவர்கள். உதாரணமாக, காலீத் ஷேக் முகம்மது ஆப்கன் யுத்தத்தில் பங்குகொண்ட காலத்தில் ஒரு சாதாரண கடைநிலை சிப்பாய். ஒசாமாவை அவர் ஒரே ஒரு சந்தர்ப்பத்தில் மட்டும் ஒரு பரேடில் பார்த்திருக்கிறார். அவ்வளவுதான். ஹம்பாலி அதுகூடப் பார்த்ததில்லை. அவர் ஆப்கன் யுத்தத்தின்போது போராளிகளுக்கு உணவு சப்ளை செய்த வண்டிகளில் ஒன்றை ஓட்டிக்கொண்டிருந்த ஒரு டிரைவர். பிறகு பிரமோஷன் பெற்று சிப்பாய் ஆனவர். கொஞ்சம் உயர்நிலை சிப்பாய் ஆவதற்குள் யுத்தம் முடிந்துவிட்டபடியால், சமர்த்தாக ஊர் போய்ச் சேர்ந்து அங்கே ஜிஹாத் கனவுகளில் மூழ்கி ஜமா இஸ்லாமியாவை ஆரம்பித்தார். ஒசாமாவின் பலமே இதுதான். 'இஸ்லாமிய சகோதரத்துவம்' என்கிற சித்தாந்தத்தை முன்வைத்துத்தான் அவர் அனைவரையும் அல் காயிதாவுக்கு அழைத்துக்கொண்டிருந்தார். எந்த வழியாக எப்படிப் போனாலும் எங்கோ ஒரு புள்ளியில் அத்தனை பேரும் ஆப்கன் யுத்தத்தில் ஒசாமாவுக்குக் கீழே

பணியாற்றியவர்களாகவே இருந்தார்கள். ஆகவே, ஒரு குரல் கொடுத்ததும் ஓடிவர அத்தனை பேருமே தயாராக இருந்தார்கள்.

இவ்வாறாக, சூறாவளி வேகத்தில் உலகம் முழுவதும் அல் காயிதாவின் கிளைகளை நிறுவத் தொடங்கிய பிறகு, இந்த அப்ரண்டீஸ் போராளிகளுக்கெல்லாம் பயிற்சி கொடுக்கும் பணி, ஆரம்பமானது. மூன்று இடங்கள். சூடான் ஒன்று. ஆப்கன் ஒன்று. மொராக்கோ ஒன்று.

ஆப்கனிஸ்தானில் உள்ள கோஸ்ட் (Khost), அல் பத்ர் (Al Badr), அல் கத்பா (Al Katbah) ஆகிய இடங்களில் அல் காயிதாவின் பயிற்சி முகாம்கள் நிறுவப்பட்டன. மொராக்கோவில் டெருண்டா (Derunta) என்ற இடத்தில் ஒரு முகாம் அமைக்கப்பட்டது. சூடானைப் பற்றிச் சொல்லவே வேண்டாம். பார்லிமெண்ட் தவிர, மற்ற அனைத்து இடங்களிலும் அல் காயிதா பயிற்சி கொடுக்க அனுமதி இருந்த தேசம் அது.

இந்த மூன்று இடங்களுக்கும் போராளி இளைஞர்களைக் கொண்டுவந்து பயிற்சிகளை ஆரம்பித்தார்கள்.

ஆரம்பத்திலிருந்தே ஒசாமா ஒரு விஷயத்தில் மிகத் தெளிவாக இருந்தார். ஒவ்வொரு தேசத்திலிருந்தும் வரும் இளைஞர்களை ஒரே இடத்தில் வைத்திருப்பதில்லை என்பதே அது. பயிற்சிக்கு மட்டுமல்ல; மிக விரைவில் ஆரம்பமாகவிருந்த தாக்குதல் நடவடிக்கைகளுக்கும் சேர்த்தேதான் இந்த ஏற்பாடு.

இங்கிலாந்தில் உள்ள ஒரு அல் காயிதா செல்லில் இங்கிலாந்து முஸ்லிம் இளைஞர்கள் யாரும் இருக்கமாட்டார்கள். மாறாக டுனீஷியாவிலிருந்தும் மொராக்கோவிலிருந்தும் சூடானிலிருந்தும் தான்சானியாவிலிருந்தும் சவூதி அரேபியாவிலிருந்தும் ஆட்கள் போயிருப்பார்கள். இதே சவூதி அரேபியாவை எடுத்துக்கொண்டால் பெரும்பாலும் லெபனான், பாலஸ்தீன், ஜோர்டன் பகுதி இளைஞர்கள்தான் இருப்பார்கள். அமெரிக்க முஸ்லிம் இளைஞர்களை அழைத்துப்போய் பிரான்சிலும் ஜெர்மனியிலும் விட்டுவிடுவார்கள். ஜெர்மனியிலிருந்து ஆட்களைப் பொறுக்கி துருக்கியில் கொண்டுவந்து உட்காரவைப்பார்கள்.

இந்த ஏற்பாட்டில் சில வியக்கத்தக்க லாபங்கள் உண்டு. முதலாவது மொழி மூலம் கிடைக்கக்கூடிய லாபம். ஒரு தேசத்தில் ஓர் அல் காயிதா கூடாரத்தைச் சேர்ந்த சிலரை, காவல் துறை அல்லது ராணுவம் சுற்றி வளைக்கிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். அவர்கள் பேசுகிற பாஷையை வைத்து யார் எந்த நாட்டைச் சேர்ந்தவர் என்றே கண்டுபிடிக்க முடியாது. அவன் அமெரிக்க முஸ்லிமாக இருப்பான். பிறந்து வளர்ந்ததிலிருந்து இங்கிலீஷ் மட்டுமே பேசிக்கொண்டிருப்பவனாக இருப்பான். பிரான்ஸில் பிடிக்கிறார்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள். என்னடா இவன், அரபி மொழியே தெரியவில்லையே, இவன் எப்படி அல் காயிதாக்காரனாக இருக்கமுடியும் என்று குழம்பிவிடுவார்கள். சுத்தமான இங்கிலீஷில் பேசியே தப்பித்த அல் காயிதா போராளிகள் பலபேர் ஐரோப்பாவில் உண்டு.

அதே மாதிரி இங்கிலீஷ் வாசனையே இல்லாத கடைந்தெடுத்த பட்டிக்காட்டு சவூதி அரேபிய இளைஞன் ஒருத்தனை இங்கிலாந்தில் பிடித்தாலும் விசாரணை அதிகாரிகளுக்குத் தாவு தீர்ந்துவிடும். அவன் பேசும் நாட்டுப்புறத்து அரபி மொழி, நல்ல அரபி தெரிந்தவர்களுக்குக் கூட சமயத்தில் புரியாது. இதனை உத்தேசித்துத்தான் ஒசாமா இப்படி ஒரு ஏற்பாடு செய்தார். இதற்கு இன்னொரு வலுவான காரணமும் உண்டு. ஒத்த கருத்துள்ள பல்வேறு தேசத்து இளைஞர்களை ஒரே செல்லில் தங்கவைத்துப் பயிற்சி அளிப்பதன் மூலம் ஒவ்வொருவருக்கும் பல்வேறு நாடுகளின் கலாசாரம், பண்பாடு, அரசியல், சமூக நிலவரங்கள் குறித்த அடிப்படை அறிவு கிடைக்கும் என்பதே அது. தவிரவும் ஒரு தாக்குதல் என்று வரும்போது யாருமே யூகிக்க முடியாத இடங்களிலிருந்து, யூகிக்க முடியாத நபர்களை வேறு வேறு இடங்களிலிருந்து

பொறுக்கியெடுத்து அனுப்பும்போது, எந்த ஏரியாக்காரர்கள் எதில் எக்ஸ்பர்ட்டாக இருக்கிறார்கள் என்று சுலபமாக அடையாளம் காணமுடியுமே? அதற்கேற்ப பயிற்சி முறையிலும் மாற்றம் தேவைப்பட்டால் செய்யலாமே? ஆ, பயிற்சி! மிக முக்கியமாகச் சொல்லப்படவேண்டிய விஷயம் அது. அல் காயிதா தன் வீரர்களுக்கு அளிக்கும் பயிற்சிகள் குறித்துத் தனியே ஒரு புத்தகமே எழுதலாம். ஒசாமா பின்லேடனே தன் வீரர்களுக்காகக் கையாலேயே ஒரு கோனார் நோட்ஸ் எழுதி வெளியிட்டிருக்கிறார். சி.ஐ.ஏ. உபயத்தில் இன்றைக்கு நமக்கு எளிதில் வாசிக்கக் கிடைக்கும் அந்த அமர காவியம்



1998-ம் ஆண்டுக்கு முன்னதாகத் தயாரிக்கப்பட்டு, 2002-ம் ஆண்டு ஆப்கன் காடுகளில் அமெரிக்க - பிரிட்டன் கூட்டு ராணுவப் படையினரால் கண்டெடுக்கப்பட்ட அல் காயிதாவின் பயிற்சிக் கையேடு, பல வியப்பூட்டும் தகவல்களையும் அதிர்ச்சிகளையும் கொண்டது. இப்படியெல்லாம் யோசிப்பார்களா, இப்படிக்கூடச் செய்யமுடியுமா, இப்படியும் ஒரு மனநிலை சாத்தியமா என்று பக்கத்துக்குப் பக்கம், வரிக்கு வரி நம்மை தூக்கிவாரிப்போடச் செய்கிற ஒரு தீவிரவாத நோட்ஸ் அது.

'ஐமன் அல் ஜவாஹிரி, முஹம்மது அடஃப், காலீத் ஷேக் முகம்மது போன்ற சிலரது துணையுடன் ஒசாமா பின்லேடனே உட்கார்ந்து தயாரித்த நோட்ஸ்' என்று சில மத்தியக் கிழக்குப் பத்திரிகையாளர்கள் முன்னெப்போதோ எழுதியிருக்கிறார்கள். அதெல்லாம் குருட்டாம்போக்கில் சொல்லப்படும் விஷயங்களாகத்தான் இருக்கவேண்டும். தக்க ஆதாரம் ஏதும் கிடையாது. ஒசாமா பின்லேடனோ, வேறு யாரோ! நூலாசிரியர் யார் என்பதா இதில் முக்கியம்?

ஆனால் ஒன்று நிச்சயம். மிகப்பெரிய ராணுவ, உளவு மூளைகள் சம்பந்தப்படாமல், இப்படியொரு கையேட்டைத் தயாரித்திருக்கவே முடியாது.

ஆப்கனிஸ்தான் காடுகளில் அமெரிக்கக் கூட்டு ராணுவப் படைகள், ஒசாமாவையும் அந்தக் கண்ணில்லாத தாலிபன் தாத்தா.. அவர் பேர் என்ன.. ஆங், முல்லா முஹம்மது ஒமர்.. அவரையும் சேர்த்துத் தேடிக்கொண்டு கொஞ்ச நாளை வெத்துக்குக் கழித்தார்கள் அல்லவா? அப்போது அகப்பட்டதுதான் இந்த நோட்ஸ்.

நல்ல சுத்தமான அக்மார்க் அரபியில் எழுதப்பட்டு, மிகப் புராதனமான அச்சுக் கோக்கும் முறைப்படி அச்சடிக்கப்பட்டு, பின் செய்யப்பட்டிருந்தது. அமெரிக்க வீரர்களுக்கோ, பிரிட்டிஷ் படையினருக்கோ, அதில் ஓர் அட்சரம் கூடப் புரியவில்லை. முதல் முதலில் கண்டெடுத்தவர்கள் என்கிற முறையில்; பிரிட்டிஷ் வீரர்கள்தான் அந்த நோட்ஸை எடுத்துக்கொண்டு போனார்கள்.

ராணுவ அதிகாரிகளும் மொழிபெயர்ப்பு நிபுணர்களும் டீகோடிங் ஸ்பெஷலிஸ்டுகளும் உட்கார்ந்து, அதில் என்ன எழுதப்பட்டிருக்கிறது என்று தோண்டித் துருவிப் பார்க்கத் தொடங்கினார்கள்.

ம்ஹூம். ஒன்றும் பெயரவில்லை. புரியாத பாடங்களைப் புரிய வைப்பதற்குத்தான் நோட்ஸ். ஆனால், நோட்ஸே புரியவில்லை என்றால்? அரபிதானா அது என்றால், அரபிதான். ஆனால், ஒரு வார்த்தை புரியவேண்டுமே? அத்தனையும் சங்கேத வார்த்தைகள்!

முற்று முழுக்க சங்கேத வார்த்தைகளாலேயே ஒரு நோட்ஸ்! என்ன சைஸ் என்று நினைக்கிறீர்கள்? ஒரு முழு குமுதம் ரிப்போர்ட்டர் சைஸ். என்ன ஒன்று, நடுப்பக்கக் கவர்ச்சிப் படம் மட்டும் கிடையாது.

மிக நீண்ட போராட்டத்துக்குப் பிறகும் பிரிட்டிஷ் அதிகாரிகளால், அந்த நோட்ஸை மொழிபெயர்த்துப் புரிந்துகொள்ள முடியாமல் போய்விடவே, வேறு வழியின்றி அமெரிக்க உதவியைக் கேட்டார்கள். மத்தியக் கிழக்கிலிருந்து பல மொழி வல்லுநர்களையெல்லாம் வரவழைத்து, வார்த்தை வார்த்தையாகப் பெயர்த்துப் போட்டு, ஒருவழியாகப் படிக்க முடிந்தபோது, அதிர்ச்சியில் வாயடைத்துவிட்டார்கள்.

உலகில் வேறு எந்த ஒரு தீவிரவாத இயக்கமும் அத்தனை துல்லியமாகப் போர்த் தந்திரங்களைப் பாடமாக எழுதிப் பயிற்றுவிப்பதில்லை. வேறு எந்த இயக்கமும் இத்தனை தீவிரமாகக் கொள்கையே உயிரும் உடலுமாக வாழ்வதுமில்லை. (எல்லா இயக்கங்களும் ஏதோ ஒரு சந்தர்ப்பத்திலாவது, அமைதிப் பேச்சுவார்த்தைக்குப் போய் உட்காரும். என்றைக்காவது அல் காயிதா உட்கார்ந்திருக்கிறதா?) வேறு எந்த இயக்கமும் இத்தனை சூட்சுமங்களைப் பயிற்றுவிப்பதுமில்லை.

அல் காயிதாவின் அந்தப் பயிற்சிப் புத்தகத்தில் அப்படி என்ன இருக்கிறது? பார்க்கலாம். உலகெங்கும் இஸ்லாமியர்கள் மேற்கத்திய நாடுகளைச் சேர்ந்தவர்களால் பழிவாங்கப்படுகிறார்கள். இஸ்லாமியப் பெண்களை எண்ணி எண்ணி விதவைகளாக்குகிறார்கள். உணவுக்கு, உறைவிடத்துக்கு, வருமானத்துக்கு, வாழ்க்கைக்கு வழியின்றி ஊர் ஊராக ஓடவிடுகிறார்கள். மத்தியக் கிழக்கின் எண்ணெய் வளத்தையெல்லாம் மேலை நாடுகள் அபகரிக்கப் பார்க்கின்றன. எதிர்த்துப் பேச திராணியற்ற அரசாங்கங்களே அங்கு இருக்கின்றன. ஆகவே, சர்வதேச இஸ்லாமிய சமூகத்தின் நலனுக்காக நாம் ஜிஹாத் செய்வோம் என்கிற அறைகூவலுடன் ஆரம்பமாகிறது பாடம்.

எதிரி யார்? நேரடியாகச் சொல்லப்படவில்லை என்றாலும், அமெரிக்கா மற்றும் அதன் கூட்டணி தேசங்களைத்தான், இக்கையேடு தங்கள் எதிரிகளாகச் சொல்கிறது. இதனுடன் யூதர்களையும் சேர்த்துக்கொள்கிறது.

இந்த எதிரிகளை ஒழிப்பதற்காகப் புறப்பட்ட ஒரு ராணுவ இயக்கமாகத் தங்களை அடையாளம் காட்டிக்கொண்டு, ஒரு ராணுவ இயக்கத்துக்கு என்னென்ன தேவை என்று முதல் பாடம் ஆரம்பமாகிறது.

தெளிவான செயல்திட்டம், தேர்ந்த கமாண்டர்கள், அவர்களுக்கு வழிகாட்டும் தனி கவுன்சில். நன்கு பயிற்றுவிக்கப்பட்ட ராணுவம்.

இந்த ராணுவம் என்னென்ன செய்யவேண்டும்? தேவைப்படும் அரசாங்கக் கோப்புகளை எப்பாடுபட்டாவது களவாடி, ஃபோர்ஜரி செய்வது.

தேவைப்பட்டால் எதிரிகளைக் கடத்துவது, ஆவணங்களைக் கடத்துவது, எதிரி ராணுவ ரகசியங்களை ஒற்றறிந்து வருவது, ஆயுதங்களைக் களவாடுவது.

எதிரி ராணுவ அதிகாரிகளையும் வெளி நாட்டு சுற்றுலாப் பயணிகளையும் கடத்துவது, கொல்வது. எதிரி ராணுவத்தினராலும் காவல் துறையினராலும் கைது செய்யப்பட்ட முஸ்லிம் சகோதரர்களை, எப்பாடு பட்டாவது விடுவிப்பது. எதிரியைக் குறித்த வதந்திகளையும் அச்சமூட்டும் விவரங்களையும் பொதுமக்களிடம் தொடர்ந்து பரப்பிக்கொண்டிருப்பது. எதிரி தேசத்துக் கேளிக்கை மையங்களை வெடிவைத்துத் தகர்ப்பது.

எதிரி தேசங்களின் தூதரகங்களையும் பொருளாதாரக் கேந்திரங்களையும் வெடி வைத்துத் தகர்ப்பது. (இந்தக் குறிப்பினைக் கொண்டுதான் இக்கையேடு, 1998-க்கு முன்னதாக எழுதப்பட்டிருக்கவேண்டும் என்று யூகிக்க வேண்டியிருக்கிறது. இதன்பின்தான் கென்யா மற்றும் தான்சானியாவில் உள்ள அமெரிக்கத் தூதரகங்கள் தாக்கப்பட்டன.)

முக்கிய நகரங்களை இணைக்கும் பாலங்களை வெடி வைத்துத் தகர்ப்பது.

நீண்ட நாள் இலக்காக, 'உலக முஸ்லிம்களின் விடுதலை' என்பதை முன்வைத்து மேற்கொள்ளப்படும் குறுகிய கால நடவடிக்கைகளாக, மேற்சொன்னவற்றைப் பின்பற்றவேண்டும் என்பதுடன் முதல் பாடம் முடிகிறது.

இக்கையேட்டின் இரண்டாவது பாடம், போராளிகளின் தகுதி பற்றியது. ஓர் அல் காயிதா போராளியின் அடிப்படைத் தகுதியாக இக்கையேடு சொல்வது, அவர் ஒரு முஸ்லிமாக இருக்கவேண்டும் என்பதுதான். 'கிறிஸ்துவர்களும் யூதர்களும் கம்யூனிஸ்டுகளும் போலி மதச்சார்பின்மைவாதிகளும் எப்படி நமக்காகப் பாடுபடுவார்கள் என்று எதிர்பார்க்கமுடியும்?' என்று கேட்கிறது இக்கையேடு.

தவிரவும் தலைமையைக் கேள்வி கேட்காத, அப்பட்டமான அடிபணியும் குணம், ஒரு முக்கியத் தகுதியாக முன்வைக்கப்படுகிறது. ராணுவத்தின் ஆதார இலக்கணமே அதுதான் அல்லவா? அதேசமயம், சிறுவர்கள் கண்டிப்பாக இயக்கத்துக்குத் தேவையில்லை என்று அடித்துச் சொல்கிறது. 'நாம் செய்வது மிகவும் ஆபத்தான, தொடர்ச்சியான, கடினமான பணி. இதற்கு மனத்தளவிலும் சிந்தனை அளவிலும் புத்திசாலித்தனத்தின் அளவிலும் மிக மேலான முதிர்ச்சி தேவைப்படுகிறது. குழந்தைகள் இப்பணிக்குச் சரிப்படமாட்டார்கள். மேலும், இறைவன் பெயரால் யுத்தத்தில் உயிர் விடச் சித்தமாக இருப்பவர்கள் மட்டுமே நமக்குத் தேவையாக இருக்கிறார்கள் என்கிற படியால், வருகிற அனைவரையும் ஏற்பது இயலாது' என்கிறது இக்கையேடு.

மூன்றாவது பாடம், நிதியை எப்படிக் கையாள்வது என்பது குறித்துப் பேசுகிறது. 'எத்தனை பணம் வந்தாலும் சரி, இரண்டாகப் பிரி. ஒன்றைப் பாதுகாப்பான முதலீடுகளில் போடு. அது பிற்காலத்துக்கு உதவும். இன்னொன்றை உடனடிப் பணிகளுக்கு அளந்து அளந்து பயன்படுத்து. பணத்தை மொத்தமாக ஒரே இடத்தில் சேர்த்து வைக்காதே. இயக்கத்தின் அத்தனை உறுப்பினர்களுக்கும் பணம் எங்கே இருக்கிறது என்கிற விஷயம் தெரியவேண்டிய அவசியம் இல்லை. பணத்தைக் கையாளக்கூடிய அனுமதி படைத்த கமாண்டர்கள் மட்டும் செய்தால் போதும். ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்துக்குப் பெரிய அளவில் பணத்தை எடுத்துச் செல்வதென்றால், மிகவும் பாதுகாப்பாக எடுத்துச் செல்லவும். ஒரு படையையே பாதுகாப்புக்கு அழைத்துச் சென்றாலும் பாதகமில்லை. ஒவ்வொரு பைசாவும் ஏழை முஸ்லிம்களின் ஒவ்வொரு சொட்டு ரத்தம் என்பதை மறந்துவிடாதீர்கள். தேவைப்பட்டால், இயக்கத்தில் இல்லாத வெளி ஆளிடம் விவரம் சொல்லாமல் பணத்தைக் கொடுத்துவைத்து, தேவைக்கேற்ப உபயோகித்துக்கொள்ளலாம். ஆனால், ஜாக்கிரதை!'

இப்படி விரியும் இந்தப் பாடங்கள் ஒவ்வொன்றும், தேவையான இடங்களில் வரைபடங்களையும் கொண்டிருக்கிறது. எல்லாமே கையால் வரைந்து அப்படியே அச்செடுக்கப்பட்ட படங்கள்.

அல் காயிதா மிகவும் கவனம் செலுத்தும் விஷயங்கள் இரண்டு. ஒன்று, தங்குவதற்கு அபார்ட்மெண்டுகளை வாடகைக்கு எடுக்கிற விஷயம். இரண்டாவது, ஆயுதங்களை பத்திரமாகப் பராமரிப்பது, கையாள்வது தொடர்பானது.

இந்த இரண்டு விஷயங்கள் குறித்துத்தான், இந்தக் கையேட்டில் பக்கம் பக்கமாக எழுதப்பட்டிருக்கிறது. முதலில் அபார்ட்மெண்ட் விஷயம்.

ஒசாமாவும் அவரது முதன்மைத் தளபதிகளும் அதிகம் கவலைப்படும் விஷயம், தம் இயக்கத்தின் போராளிகளின் பெயர்கள் சம்பந்தப்பட்டது. ஒவ்வொருவரும் ஒவ்வொரு தேசத்திலிருந்து வருபவர்கள். ஒவ்வொரு பிராந்தியத்துக்கும் ஒவ்வொருவிதமான கலாசார அடையாளம் இருக்கும். அதற்கேற்ப, போராளிகளின் பெயர்கள் அமையும்.

வேறு வேறு பிராந்தியங்களைச் சேர்ந்த போராளிகளை, ஒரு திட்டத்துடன் ஏதாவது ஒரு தேசத்துக்கு அனுப்பி, அபார்ட்மெண்ட் வாடகைக்கு எடுத்துத் தங்கச் சொன்னால், முதலில் கேட்கப்படுகிற விஷயம், உங்கள் பெயர் என்ன?

ஏதாவது ஒரு முஸ்லிம் பெயர்தான் சொல்வார்கள் என்றாலும், ஒவ்வொருத்தர் சொல்லும் பெயரும் ஒவ்வொரு தேசத்தைச் சுட்டிக்காட்டினால், வீட்டு ஓனருக்கு சந்தேகம் வந்துவிடும். உதாரணத்துக்கு நம் ஊரில் அல்லா பிச்சை என்று ஒரு பெயர் இருக்கிறது. கடவுள் போட்ட பிச்சை என்கிற நல்ல அர்த்தம் தரும் பெயர். இந்தப் பெயருடன் ஒருத்தர் அமெரிக்காவுக்குப் போய் வாடகைக்கு ரூம் கேட்டால், முஸ்லிம்தானா என்றே சந்தேகப்படலாம் அல்லவா? இம்மாதிரியான குழப்பம், எல்லா தேசங்களிலும் இருக்குமல்லவா? அதுதான் விஷயம்.

ஆகவே, எந்த ப்ராஜெக்டுக்கு எத்தனை பேர் போனாலும், முதல் காரியமாக அவர்கள் அனைவருக்கும் சந்தேகம் எழாத பொதுவான பெயர்களைச் சூட்டுவது மிக முக்கியம் என்கிறது இந்தக் கையேடு.

வாடகைக்கு எடுக்கும் வீடுகள் அல்லது அபார்ட்மெண்டுகளைப் பெரும்பாலும் நகர்ப்புறங்களிலேயே பார்க்கும்படி அறிவுறுத்துகிறார்கள். தகவல் தொடர்பு வசதி கருதி, இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கலாம். ஏதாவது பிரச்னை வந்தால் மட்டும் புற நகரங்களுக்குத் தப்பித்துவிட வேண்டும். அப்படி, வாடகைக்கு ஓர் இடத்தைத் தேர்ந்தெடுத்துவிட்ட பிறகு, தாங்கள் வந்த காரியத்துக்கு ஏற்ப இருப்பிடத்தில் சௌகரியங்களை உருவாக்கிக்கொள்ள வலியுறுத்துகிறது இந்தக் கையேடு.

என்ன காரியத்துக்காக ஓர் அபார்ட்மெண்டை வாடகைக்கு எடுக்கிறோம்? சந்தித்துப் பேசுவதற்கா? ஆயுதங்களைப் பதுக்கிவைப்பதற்கா? யுத்த ஆயத்தங்களுக்காகவா? எதுவாக இருந்தாலும் தரைத்தளத்திலேயே வீடு பார். தப்பிப்பதற்கு அதுதான் சுலபம்.

எந்த இடத்தில் வீடு பார்த்தாலும், உடனடியாக வீட்டுக்காரராலேயே கண்டுபிடிக்க முடியாதபடி, ஒரு ரகசிய இடத்தை அங்கே ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துகிறார்கள். காலி செய்துகொண்டு போகும்போது, ஒரு துரும்பைக்கூட விட்டுவரக்கூடாது என்பது சிவப்பால் அண்டர்லைன் செய்யப்பட்ட தங்க விதி!



ஒரு அபார்ட்மெண்ட் வாடகைக்கு எடுக்கப்பட்டாகிவிட்டது. வீட்டுக்கார கோயிந்தசாமிக்கு எந்தச் சந்தேகமும் இல்லை. பரம சௌக்கியமாகத் தீவிரவாதம் வளர்ப்பதில் ஒரு பிரச்னையும் இல்லை. அடுத்தபடியாக?

ஒரு விஷயம். அல் காயிதா ஒரு போதும் சும்மா உட்கார்ந்து பொழுதுபோக்குவதற்காகவோ, டி.வி.டி.யில் படம் பார்த்து என்ஜாய் பண்ணுவதற்காகவோ அபார்ட்மெண்டை வாடகைக்கு எடுப்பதில்லை. ஒரு ஆபரேஷன் முடிவானால் மட்டுமே அபார்ட்மெண்ட் காண்டம் ஆரம்பிக்கும். ஆகவே, வீடு பார்த்து செட்டில் ஆன மறுகணமே, வேலையை ஆரம்பித்துவிடுவார்கள்.

ஏதோ ஓரிடத்தில் குண்டு வைக்கிற அசைன்மெண்ட் என்று ஓர் உதாரணத்துக்கு எடுத்துக்கொள்ளுங்கள். திட்டத்தின் வேறு வேறு கட்டங்களில் பணியாற்றக் குறைந்தது பத்துப் பேர் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பார்கள். இந்தப் பத்துப் பேரும், பத்து வேறு வேறு இடங்களில் வீடு வாடகைக்கு எடுத்துத் தங்கவேண்டும். இது முதல் உத்தரவு.

திட்டத்தின் கமாண்டராக நியமிக்கப்பட்டிருப்பவர், எந்த இடத்தில் குண்டு வைக்கப் போகிறார்களோ, அதற்குக் கொஞ்சம் பக்கத்தில் ஃப்ளாட் பார்த்திருப்பார். அதுதான் தலைமை அலுவலகம். அந்த இடத்தில் அந்த கமாண்டரைத் தவிர, வேறு யாரும் இருக்கமாட்டார்கள். ஆனால், போராளிகளுக்கான அறிவுரை வகுப்புகள், என்ன செய்யவேண்டும், எப்படிச் செய்யவேண்டும் போன்ற பாட வகுப்புகளெல்லாம் அங்கேதான் நடைபெறும்.

எப்படி? மொத்தமாக வரவழைத்தா? சான்ஸே இல்லை. ஒரு நாளைக்கு ஒருத்தர்தான் வரலாம். அவருக்கு அன்று முழுக்கப் பாடங்கள் நடக்கும். பாடம் முடிந்ததும் கிளம்பிப் போய்விட வேண்டும். மறுநாள் இன்னொரு போராளி வருவார். அடுத்த நாள் வேறொருவர்.

கடைசி நாள் வரை யார் யார் திட்டத்தில் சம்பந்தப்படுகிறார்கள் என்பது யாருக்கும் தெரியாது, அந்த கமாண்டர் ஒருத்தரைத் தவிர.

ஆனால் தியரிடிகலாக, நீ என்ன செய்யவேண்டும், நீ எங்கே போகும்போது யார் வந்து உன்னுடன் எப்போது சேர்ந்துகொள்வார்கள், எப்படி அவனை அடையாளம் கண்டுகொள்வது, அவனது பங்கென்ன, உன் வேலை என்ன என்று அக்கு அக்காக விளக்கிச் சொல்லப்பட்டிருக்கும்.

யாரோ தன்னுடன் வரப்போகிறார்கள்; தான் மட்டும் தனியே செய்யப்போவதில்லை என்பது மட்டும்தான், ஒவ்வொரு போராளிக்கும் தெரியும். ஆனால், யார்? எப்போது வருவார்? எங்கிருந்து முளைப்பார்? தெரியாது. கடைசிக் கணம் வரை தெரியாது. அப்படி வருபவர்கள், முன்பின் அறிமுகமானவர்களாக இருக்கவே மாட்டார்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு தேசம். ஒவ்வொரு

பிராந்தியம். செயல் மட்டும்தான் ஒன்று. உத்தரவிடும் தலைமை ஒன்று. அவ்வளவுதான்.

அல் காயிதாவின் இந்தப் பயிற்சிக் கையேட்டில், இரண்டு பேர் ஒரு அபார்ட்மெண்டில் கூடிப் பேசும்போது, எப்படிப் பேசவேண்டும் என்பது பற்றிக்கூட விரிவாக எழுதப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு முறை பேச்சைத் தொடங்கும்போதும் சுற்றுமுற்றும் நன்றாக நோட்டமிடு. யாராவது உன்னை கவனிக்கிறார்களா? கதவு, ஜன்னல்கள் சரியாக மூடப்பட்டிருக்கிறதா? வீட்டுக்குள் தேவையற்ற ஒயர்கள் ஏதும் கிடக்கிறதா? ஒட்டுக்கேட்கும் கருவிகள் ஏதும் இருக்கப்போகிறது, ஜாக்கிரதை!

பேச்சைத் தொடங்குமுன் கமாண்டர், பாதுகாப்பு சிக்னல் தரவேண்டும். சுற்று வட்டாரத்தை நன்கு நோட்டமிட்டு, கவனித்துவிட்டு, ஒன்றும் ஆபத்தில்லை என்று தெரிந்த பிறகே, 'என்ன மாப்ள சௌக்கியமா?' என்று கேட்கவேண்டும்.

அப்புறமும் கூட, நேரடியாக விஷயத்துக்கு வந்து, "என்ன குண்டு வெக்கப்போறோம் இப்பம்? ஆர்.டி.எக்ஸா? எத்தினி கிலோ?" என்றெல்லாம் அபத்தமாகப் பேச்சைத் தொடங்கக் கூடாது.

கூடுமானவரை மிகத் தாழ்ந்த குரலில், சங்கேத மொழியில் மட்டுமே பேசவேண்டும். உதாரணமாக, குண்டு என்கிற வஸ்துவை மிகச் சுலபமாகத் தக்காளிப் பழத்தின் தலையில் ஏற்றி வைக்க முடியும். (அல் காயிதா பல சந்தர்ப்பங்களில் கையாண்ட சங்கேதச் சொல் இதுதான்.)

இரண்டு தக்காளி வியாபாரிகள் பேசிக்கொள்வது போலவே, ஒரு முழு குண்டுவெடிப்புத் திட்டத்தையும் பேசி விளக்கி / விளங்கிக்கொள்ள முடியும்.

"மார்க்கெட்டுல நல்ல கூட்டம் பங்காளி."

"ஆங்.. நான் காலீல பத்து மணி கணக்கா தக்காளி எடுத்துட்டுப் போயிருவேன்."

"ஐய.. தலமேல வெச்சா கொண்ட்டு போவ? பாண்டிபஜார் சிங்காரம் வண்டி எட்த்தாரேன்னான். மெயின் கேட்டாண்ட போய் நின்னன்னா, நீலக்கலரு சைக்கிள் ரிக்ஷா வரும். ஏத்திக்கினு போவியா.."

"சிங்காரம் லோடு அடிப்பானான்ன?"

"அவன் அசிஸ்டெண்டு ஒருத்தன் ஜாபர்கான்பேட்ட பக்கமா வந்து ஏறிக்குவான். ரெண்டு பேரும் நல்லா சைக்கிள் ஓட்டுவாங்க. நீ கவலையே படாத."

"கூலி?"

"அட, அவவன் கூலிய ஆண்டவன் குடுப்பாம்பா. நமக்கெதுக்கு அதெல்லாம்? போனமா? சரக்க வித்தமா? நடைய கட்னமான்னு இருக்கணும்."

"வூட்டுக்குப் போவச்சொல்ல இருட்டிறாது?"

"பத்தேமுக்காலுக்கு நம்ம ஐயப்பன், அந்தாப்ல லோடு எறக்கிட்டு வருவான். அவன் வண்டில ஏறி, நீ காவாங்கர பக்கம் போயிரு. நாஷ்டா துன்னுட்டு ரெஸ்ட் எடு. அங்க நம்ம சகல நீலகண்டன் இருக்கான்ல? அவன் வூட்டாண்ட தங்கிக்க. பச்ச கலரு மச்சு வூடுப்பா.. ஒனக்குத் தெரியுமே..?"

"ஆங்.. ஒருக்கா போயிருக்கேன்.."

"அதேதான். அங்க ஒனக்குச் சௌகரியமா இருக்கும். போய்க் கொஞ்சநேரம் குந்திக்க. வெய்யத்தாழ பசங்கள அனுப்பறேன். வலைய எடுத்துக்கிட்டு காவாப்பக்கமா வந்து சேரு. போட்டுங்க இருக்கும். பாத்துக்குவம்.."

மேற்படி உரையாடலில் உங்களுக்குக் கொஞ்சம் விவரம் புரிவது போலிருக்கும். நமது புரிதல் சௌகரியம் கருதி சென்னைத் தமிழில், நமக்குப் பரிச்சயமான இடங்கள், பெயர்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இதே உத்தியை, அமெரிக்கா முதல் அண்டார்டிகா வரை எந்தப் பிராந்தியத்துக்கும் பயன்படுத்துவதுதான் அல் காயிதாவின் ஸ்டைல்.

ஒரு அபார்ட்மெண்டில் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் கூடிப் பேசுகிறபோது, கடைப்பிடிக்கவேண்டிய மிக முக்கியமான ஒழுக்க விதி, 'மொத்தமாக ஒருபோதும் வெளியே போகாதீர்' என்பது. ஒவ்வொருவராகத்தான் பிரிய வேண்டும். போதிய அவகாசம் விட்டு. அப்படி வெளியே போகிறவர்களும் ஒரே திசையில் போகக்கூடாது. நேராக மெயின் ரோடுக்குப் போய்விடக் கூடாது. குறைந்தது, நாலைந்து சந்துகளையாவது சுற்றிக்கொண்டுதான் தங்கள் வழிக்குப் போகவேண்டும். இதைவிட முக்கியம், வெளியிலிருந்து வருபவர் என்ன கொண்டுவந்தாலும், கையோடு எடுத்துச் சென்றுவிட வேண்டும். அபார்ட்மெண்ட் வளாகத்தில், சந்தேகத்துக்கு இடமாக ஒரு பிஸ்கட் பொட்டலத்தைக் கூட விட்டுச் செல்லக்கூடாது என்கிறது இந்தக் கையேடு.

அதே மாதிரி பயணம். ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்துக்குப் போவது குறித்த பால பாடங்கள் நிறையச் சொல்கிறார்கள். கூடுமானவரை மாநகரப் பேருந்துகளையே பயன்படுத்துங்கள். அல்லது மின்சார ரயில். அதுவும் புறப்படுகிற இடத்தில் ஏறாதீர்கள். செக்கிங் தொல்லைகள் இருக்கும். ரயில் அல்லது பஸ் புறப்படும் இடத்திலிருந்து ஒன்று அல்லது இரண்டு ஸ்டேஷன்கள் வரை நடந்துபோய் அங்கிருந்து ஏறுவதே நல்லது.

ஏதாவது முக்கிய ஆவணங்களை எடுத்துச் செல்வதென்றால், பாதுகாப்பு விஷயத்தில் மிகவும் கவனமாக இருக்கச் சொல்கிறது இந்தக் கையேடு. எதையோ பாதுகாப்பாக எடுத்துச் செல்கிறான் இந்த ஆசாமி என்று தோன்றாத வண்ணம் எடுத்துச் செல்வதே பாதுகாப்பு!

பெரிய பெரிய லக்கேஜ்களை ரயிலில் எடுத்துப் போகவேண்டி வந்தால், லக்கேஜை வேறு கம்பார்ட்மெண்டில் பயணிகள் லக்கேஜோடு லக்கேஜாக வைத்துவிட்டு, போராளி வேறொரு கம்பார்ட்மெண்டில் ஏறிக்கொள்ள வேண்டுமாம். பெட்டி மாட்டினாலும் போராளி தப்பிவிடுவான். போராளி மாட்டினால் பெட்டி தப்பிவிடும்!

அது எப்படி?

ஒரு போராளி, முக்கிய ஆவணங்கள் அல்லது பொருள்கள் அடங்கிய லக்கேஜுடன் ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்துக்குப் பயணம் செய்கிறான் என்றால், அவனுக்கும் லக்கேஜுக்கும் தனித்தனியே பாதுகாப்பு ஆட்கள் போவார்கள். அவர்களைச் சம்பந்தப்பட்ட போராளிக்குத் தெரியாது. ஒன்றும் பிரச்னை இல்லாமல் நல்லபடியாகப் போய்ச் சேர்ந்து பெட்டியை இறக்கிவிட்டால், கடைசி வரை கூடத் தனக்குப் பாதுகாப்புக்கு வந்திருக்கும் தோழர் யார் என்று சம்பந்தப்பட்ட போராளிக்குத் தெரியாமலேயே இருந்துவிடும்.

ஒருவேளை பிரச்னை என்றால், போராளி முக்கியமா, பெட்டி முக்கியமா என்று முதலில் தீர்மானிப்பார்கள். பெட்டிதான் முக்கியம் என்றால், அதை எப்படியாவது காப்பாற்றிவிடுவார்கள். போராளி தான் முக்கியம் என்றால், அவன். இதையெல்லாம் எங்கிருந்து யார் கவனித்துக்கொண்டிருக்கிறார்கள், எப்படி நொடிப்பொழுதில் நடவடிக்கைகள் நிகழ்கின்றன என்று யாருக்குமே தெரியாது.

இதுவே ஒரு தற்கொலைத் தாக்குதல் திட்டம் என்றால், இந்த அமைப்பு, செயல்பாடுகள், திட்டமிடுதல், கால்குலேஷன் எல்லாமே வேறு. முற்றிலும் வேறு.

ஓரிடத்தில் ஒரு தற்கொலைத் தாக்குதல் நடத்த முடிவு செய்யப்படுகிறது என்றால், அதற்கான ஆட்களைத் தேர்ந்தெடுப்பதிலிருந்தே அல் காயிதா முற்றிலும் புதிய பாடங்களை அறிமுகப்படுத்திவிடுகிறது. தாக்குதல் தினம்தான் நமக்குச் செய்திகளின் வழியே அறிமுகமாகிறது. அதற்கு முன்னால் எத்தனை நாட்கள், எத்தனை வார, மாதங்கள் சமயத்தில் வருடங்கள், அதற்கான திட்டங்கள், பயிற்சிகள் நடைபெறுகின்றன என்பது தெரிந்தால் வாயடைத்துப் போவீர்கள்.

ஒரே ஒரு சம்பவத்தை மட்டும் சற்றே விரிவாகப் பார்க்கலாம். ரொம்பப் பழைய சம்பவம்கூட வேண்டாம். நமக்கு மிகப் புதிதாக நினைவில் இருக்கக்கூடிய ஒரு சம்பவத்தையே எடுத்துக் கொள்ளலாம்.

ஜூலை 7, 2005. இங்கிலாந்தின் தலைநகரமான லண்டன் நகரம். நல்ல கூட்டம் வழியும் காலை நேரம். மணி சரியாக 8.50.

மக்கள் பரபரப்பாக அலுவலகங்களுக்குப் போய்க்கொண்டிருந்தார்கள். எப்போதும்போல் அன்றும் லண்டன் பாதாள ரயில்களில் நல்ல கூட்டம் முண்டியடித்துக்கொண்டிருந்தது.

அப்போதுதான் அந்த முதல் குண்டு வெடித்தது. வெடித்தது குண்டுதானா என்று தெரிவதற்குள்ளாகவே (ஐம்பது வினாடி இடைவெளியில்) அடுத்த குண்டு. இதுவும் குண்டு தானா என்று எண்ணிப்பார்ப்பதற்குள் (இன்னொரு ஐம்பது வினாடி) மேலும் ஒரு குண்டு.

எத்தனை உயிர்கள்! எத்தனை நசுங்கல்கள்! அச்சத்தில், கலவரத்தில் மக்கள் அங்கும் இங்கும் தலை தெரிக்க ஓடிக்கொண்டிருக்க, காவல் வாகனங்களின் சைரன் ஒலி காற்றை நிறைக்கிறது. அத்தனை பேர் கவனமும் பாதாள ரயில் நிலையத்தில் பதிந்திருக்க, சாவகாசமாக ஒரு முக்கால் மணி நேர இடைவெளிவிட்டு (டீ சாப்பிட்டு வரப் போயிருப்பார்கள் போலிருக்கிறது.) டாவிஸ்டாக் சதுக்கம் என்கிற இடத்தில் ஒரு பேருந்தில் அடுத்த குண்டு வெடிக்கிறது.

நான்காவது குண்டு. ஒரே நாள். ஒரே மணி நேர இடைவெளியில். சர்வ வல்லமை பொருந்திய இங்கிலாந்து தேசத்தின் தலைநகரத்தில். மாட்சிமை பொருந்திய மகாராணியாரும் மரியாதைக்குரிய இளவரசரும் அலறி அடித்துக்கொண்டு எழுந்து உட்கார, பிரதமர் டோனி ப்ளேயர் செய்வதறியாமல் பதற்றத்தில் பல்லைக் கடித்துக்கொண்டிருந்தார்.

செய்தது அல் காயிதா. எப்படிச் செய்தார்கள்? பார்க்கலாம்.



முஹம்மது சித்திக் கான் (Mohammed Sidique Khan) என்கிற லண்டன் கான். ஷேஸாத் தன்வீர் (Shehzad Tanweer). ஜமால் லின்ஸே (Jamal Lindsay). ஹஸீப் ஹுஸைன் (Hasib Hussain).

இந்த நான்கு பெயர்களைக் கண்டிப்பாக யாரும் கேள்விப்பட்டிருக்கமாட்டீர்கள். அல் காயிதாவின் அட்டண்டன்ஸ் ரிஜிஸ்தரில்கூட, இந்தப் பெயர்கள் கிடையாது. ஆனால், ஜூலை 7, 2005-ல் நடைபெற்ற லண்டன் தொடர் வெடிகுண்டுத் தாக்குதலில், அல் காயிதாவின் ஆயுதங்களாகப் பயன்பட்டவர்கள் இந்த நான்கு பேர்தான்.

ஆனானப்பட்ட இங்கிலாந்து காவல்துறையும், உலகப் புகழ்பெற்ற அவர்களது உளவுத்துறையான வி16 அமைப்புமே சம்பவம் நடந்த கொஞ்ச காலத்துக்கு, இது அல் காயிதாவின் கைங்கர்யம்தான் என்பதைக் கண்டே பிடிக்க முடியாமல் திணறினார்கள். அதைவிட காமெடி, பாதாள ரயில் குண்டுவெடிப்பு குறித்து ஆராய்ந்தபோது, முதலில் 'கண்டுபிடிக்கப்பட்ட' விஷயம், இது மின்சாரக் கோளாறினால் ஏற்பட்டது என்பதுதான்! சர் இயான் ப்ளேர் (sir ian Blair) என்கிற லண்டன் மெட்ரோபாலிடன் போலீஸ் கமிஷனர்தான், தலையில் அடித்துக்கொண்டு, இது தீவிரவாத வேலை என்று எடுத்துச் சொன்னார்.

பொதுவாக, இம்மாதிரி பெரிய அளவில் ஏதாவது தீவிரவாதச் செயல் திட்டமிடப்பட்டால், விஷயம் எப்படியாவது உளவுத்துறைகளுக்குத் தெரிந்துவிடும். நேரடியாகத் தெரியாவிட்டாலும், என்னமோ கெட்ட வாசனை அடிக்கிறதே என்று மோப்பம் பிடித்து, ஒரு பொதுவான அபாய அறிவிப்பாவது வெளியிடுவார்கள். செப்டெம்பர் 11 சம்பவத்தின்போது, இப்படித்தான் அமெரிக்க உளவுத்துறை எஃப்.பி.ஐ.க்கு அவ்வப்போது கெட்ட வாசனை அடித்தது. ஓரிரு சந்தர்ப்பங்களில் சம்பந்தப்பட்ட தீவிரவாதிகளையே நெருங்கிப் போயும் பிடிக்கமுடியாமல் போயிருக்கிறது.

ஆனால், இந்த லண்டன் குண்டுவெடிப்பைப் பொறுத்தவரை, இம்மாதிரியான துளி சந்தேகமும் வந்துவிட முடியாதபடிக்குக் காரியத்தைக் கச்சிதமாக முடிக்க, மேற்படி நால்வர் அணிக்குப் பயிற்சி கொடுத்தது அல் காயிதா.

ஒசாமாவும் அவரது உடன்பிறப்புகளும் அப்போது (இப்போதும்) ஆப்கனிஸ்தானில்தான் இருந்தார்கள். ஒரு பக்கம் அமெரிக்க ராணுவம் தரைவழி, கடல் வழி, விமான வழி, சாட்டிலைட் வழி என்று சகல வழிகளிலும் சல்லடை போட்டுத் தேடிக்கொண்டிருந்தது. மறுபக்கம் அல் காயிதாவின் அத்தனை ஐரோப்பிய வாசல்களும் அடைக்கப்பட்டுவிட்டிருந்தன. முன்னைப்போல் பணப்புழக்கம் கூட அவ்வளவாகக் கிடையாது. வெளி நாட்டுப் பயிற்சி முகாம்களெல்லாம் மூடப்பட்டு நீண்டநாள் விடுப்பு விடப்பட்டிருந்தது. இந்தப் பக்கம் பாகிஸ்தான் தலைவலி, ஆப்கனிஸ்தானில் ஹமீத் கர்சாய் திருகுவலி, எங்கே போனாலும் ஆதரவின்மை என்று ஏழரைச் சனி காலம்தான்.

ஆனாலும், இந்தத் திட்டத்தை அல் காயிதா எப்படி வெற்றிகரமாக நிறைவேற்றிக் காட்டியது என்பதைத் தெரிந்துகொண்டால், அல் காயிதாவின் நெட் ஒர்க் பலம் எப்படிப்பட்டது என்பது புரிந்துவிடும்.

இப்போது அடியைப் பிடிக்கலாம். முதல் வரியில் பார்த்த அந்த நாலு பேர். யார் இந்த இளைஞர்கள்?

இவர்கள் நான்கு பேருமே தீவிரவாதத் துறைக்குப் புதியவர்கள். ஐரோப்பாவிலேயே பிறந்து வளர்ந்த முஸ்லிம் இளைஞர்கள். அடிப்படையில் மேற்கத்திய ஜனநாயகத்தின் மீதும் ஐரோப்பிய

நாடுகளில் முஸ்லிம்கள் ஒடுக்கப்படுவது குறித்தும் விமர்சனங்கள் கொண்டவர்கள். ஒரு சிறு கோபம் அவர்களுக்கு இருந்திருக்க வேண்டும். மற்றபடி, ஆயுததாரிகளாக மாறுவார்கள்; அவர்களே ஆயுதங்களாகவும் மாறுவார்கள் என்றெல்லாம் நினைத்துப் பார்த்திருக்க மாட்டார்கள்.

அந்த நான்கு பேர் டீமின் தலைவனான முஹம்மது சித்திக் கான் என்கிற லண்டன் கான்தான், வயதில் கொஞ்சம் மூத்தவன். (1974 அக்டோபர் 20-ம் தேதி லீட்ஸ் நகரில் பிறந்தவன்.) பள்ளிப்படிப்பையெல்லாம் சமர்த்தாக முடித்துவிட்டு, லீட்ஸ் மெட்ரோபாலிடன் பல்கலைக்கழகத்தில் மேற்படிப்புக்காகப் போய்ச் சேர்ந்து ஒழுங்காகப் படித்துக்கொண்டும் இருந்தான். 2001-ம் ஆண்டு இந்திய வம்சாவளியைச் சேர்ந்த முஸ்லிம் பெண்ணான ஹஸீனா பாட்டீல் என்பவரைத் திருமணமும் செய்துகொண்டான். 2004-ம் ஆண்டு மரியம் என்கிற பெண்குழந்தை ஒன்று இவனுக்குப் பிறந்தது. ஓர் ஆரம்பப் பள்ளிக்கூடத்தில், வெளிநாடுகளிலிருந்து வந்து சேரும் குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக்கொடுக்கும் உன்னதமான உத்தியோகம் பார்த்துக்கொண்டிருந்தவன். உடன் வேலை பார்த்தவர்கள் கருத்துப்படி, கான் ஒரு சமர்த்து வாத்தியார். ரொம்ப சாதுவும் கூட. 'அவனா தீவிரவாதி?!' என்று அத்தனை பேரும் பிற்பாடு பேப்பர் பார்த்து வாய் பிளந்திருக்கிறார்கள்.

இத்தனைக்கும் அவன் குண்டுவைக்கப் போன சமயத்தில், அவன் மனைவி இரண்டாவது முறையாகக் கருத்தரித்து, நிறைமாத கர்ப்பிணியாக வேறு இருந்திருக்கிறாள். அழகான குடும்பம், குழந்தை, உத்தியோகம், இன்னொரு புது வரவு என்று இருந்த ஒருவன், எப்படி மனித வெடிகுண்டாக மாறமுடிந்தது?

அதுதான் அல் காயிதா. எப்படிச் செய்தார்கள் என்று பார்ப்போம்.

இங்கிலாந்தின் தலைநகரத்தில் ஒரு தீபாவளி கொண்டாடிவிடுவது என்று அல் காயிதா முடிவு செய்தது. அமெரிக்காவுக்கு உண்டாக்கிய அதே அதிர்ச்சியைக் இங்கும் வழங்கவேண்டும் என்பதுதான் நோக்கம்.

தனது இங்கிலாந்து செல்லில் இருக்கும் ஆட்களை விட்டு நோட்டம் பார்க்கச் சொன்னார்கள். யார் யார் தீவிர முஸ்லிம்கள்? யார் யார் இங்கிலாந்து அரசின்மீது வெறுப்பில் இருக்கிறார்கள்? யாரை எளிதில் கரைக்க முடியும்? யாரை பேசிப்பேசி மாற்றமுடியும்?

இப்படித் தேடியபோது, அகப்பட்டவர்கள்தான் கானும் அவனது நண்பர்களும். அத்தனை பேருமே இளைஞர்கள். அத்தனை பேரும் இஸ்லாத்தில் தீவிரப் பற்றும் மதத்துக்காக ஏதேனும் செய்யவேண்டும் என்கிற எண்ணமும் உள்ளவர்கள். பணியாற்றும் நேரம் போக, ஒரு சிறு நட்பு வட்டமாக ஒத்த சிந்தனை உள்ள முஸ்லிம்களை ஒருங்கிணைத்து சிறு கூட்டங்கள் நடத்துவது, ஆன்மிகச் சொற்பொழிவுகள் ஏற்பாடு செய்வது போன்ற காரியங்களை இவர்கள் செய்துகொண்டிருந்தது, கூடுதல் தகுதியாகக் கருதப்பட்டது. தவிரவும் 'ஹமாரா ஹெல்த்தி லிவிங் சென்டர்' (Hamara Healthy living Centre) என்றொரு ஆரோக்கிய அமைப்பையும் தொடங்கி, எளிய மருத்துவச் சேவைகளும் செய்துகொண்டிருந்ததாகத் தெரிகிறது.

ஆகவே வளைக்கப்பட்டார்கள்.

எங்கிருந்து, யார் மூலம் அழைப்பு வந்தது என்றே தெரியவில்லை. ஆனால், கானுக்கு திடீரென்று ஒருநாள் பாகிஸ்தானுக்கு வரும்படி ஓர் அழைப்பு வந்தது. ஏதோ இஸ்லாமிய அமைப்பின் பெயரில் அனுப்பப்பட்ட அழைப்பு. கௌரவ விருந்தினராக வரச்சொன்ன அழைப்பு.

ஆகவே புறப்பட்டுப் போனான். விசா, போகவர செலவுகள் அனைத்தையும் ஏற்பாடு செய்து யாரோ அழைக்கிறார்கள் என்றால் கசக்கிறதா? அதுவும் தன்னுடைய மதச் சேவைகளைக் கவனித்து யாரோ பாராட்ட அழைக்கிறார்கள் என்னும்போது?

அப்படி பாகிஸ்தான் போன முஹம்மது சித்திக் கான், அங்கிருந்து ஆப்கனிஸ்தானுக்கும் அழைத்துச் செல்லப்பட்டான். கொஞ்சம் கொஞ்சமாக மூளைச் சலவை செய்யப்பட்டது. மதத்துக்குச் செய்யும் சேவை என்பது என்ன? பிற மதத்தவர்களின் தாக்குதல்களிலிருந்து காப்பதைக் காட்டிலும் பெரிய சேவை இருக்கமுடியாது. எப்படிக் காப்பது? அச்சமூட்டுவதன் மூலம் அதனைச் செய்யமுடியும். எப்படி அச்சமூட்டுவது? சில அதிரடிக் காரியங்களின் மூலம். என்ன அதிரடி? சில கொலைகள். அல்லது பல கொலைகள். ஒரு பெரும் குண்டுவெடிப்பு. உலகையே திரும்பிப் பார்க்கச் செய்வது. ஆனால், உயிர் போகும் அபாயம் இருக்கிறதே?

போனால் என்ன? மதத்துக்காக உயிர் விடுபவர்களுக்குச் சொர்க்கத்தின் கதவுகள் எப்போதும் திறந்திருக்கும். இறைவனின் சன்னிதானத்தை விடவா இங்கிலாந்து வாழ்க்கை பெரிது? குடும்பம், குழந்தை?

நீயா அவர்களைக் காப்பாற்றுவதாக நினைத்துக்கொண்டிருக்கிறாய்? இறைவன் பெரியவன். அவன் காப்பாற்றுவான். உன்னை இப்புனிதப் பணிக்குத் தேர்ந்தெடுத்த இந்த இயக்கம் காப்பாற்றும். சரித்திரத்தில் உன் பெயர் காலமெல்லாம் நிலைத்திருக்கும்.

இவ்வாறாகப் பேசிப்பேசி கானின் மனத்தை முதலில் மாற்றினார்கள். அப்புறம் கான் மூலம் அவனது பிற நண்பர்களையும் வளைத்தார்கள். அதன்பிறகு, அடிக்கடி கானும் நண்பர்களும் ஆப்கனிஸ்தானுக்கு ரகசிய வழிகளில் வரவழைக்கப்பட்டார்கள். (இந்த ரகசிய வழி என்பது மிகவும் பேஜாரான ரூட். தலையைச் சுற்றி மூக்கைத் தொடுவது கூட இல்லை. மூன்று பேர் தலையைச் சுற்றித் தன்னுடைய மூக்கைத் தொடுவது போல. இங்கிலாந்திலிருந்து கனடாவுக்குப் போய் அங்கிருந்து கப்பல் மார்க்கமாக ஏதேனும் ஓர் ஆப்பிரிக்க தேசத்தை அடைந்து, அங்கிருந்து எகிப்து வழியே மத்தியக் கிழக்கின் எல்லையைத் தொட்டு, நாலைந்து தேசங்களைச் சாலை வழியே கடந்து, ஐக்கிய அரபு எமிரேட்ஸைத் தொட்டு, அங்கிருந்து பாகிஸ்தான், அதன்பிறகு ஆப்கன்.) ஒவ்வொரு முறை பயணம் செய்வதே ஒரு மாத காலத்தைச் சாப்பிட்டுவிடும். அதன்பிறகு, குறைந்தது ஒரு மாதகாலமாவது அங்கே தங்கி, பயிற்சிகள் மேற்கொள்ள வேண்டியிருக்கும். பிறகு, மீண்டும் அதே மூன்று தலை சுற்றி மூக்கைத் தொட வேண்டும்.

இப்படி ஆப்கன் காடுகளில் கான் நண்பர்களுக்கு அடிப்படைத் தீவிரவாதப் பயிற்சிகள் அளித்த பிறகு, அல் காயிதா அவர்களை 'மேல் படிப்பு'க்காக இந்தோனேஷியாவுக்கு அனுப்பியது.

அமெரிக்க ராணுவத்தின் தொந்தரவுகள் இல்லாமல் பயிற்சிகள் நடைபெறவேண்டும். அது ஆப்கனில் சாத்தியமில்லை என்னும்போது, அல் காயிதா அளவுக்கே தகுதியும் திறமையும் படைத்த இன்னொரு அமைப்புதான், அந்தப் பயிற்சியைத் தரவேண்டும். ஆகவே, கூப்பிடு ஜமா இஸ்லாமியாவை.

ஏற்கெனவே பார்த்திருக்கிறோம். ஹம்பாலியின் ஜமா இஸ்லாமியா. இந்தோனேஷியாவின் நீண்டநாள் தலைவலியாக இருக்கும் ஒரு பயங்கரவாத அமைப்பு. ஆப்கன் யுத்த காலத்திலிருந்து ஹம்பாலிக்கு ஒசாமாவின் மீது மதிப்பும் மரியாதையும் உண்டு. என்னதான் அவர் அப்போது அமெரிக்கச் சிறையில் இருந்தாலும், ஒசாமா ஓர் உதவி என்று கேட்டு ஆள் அனுப்பும்போது, அங்கிருந்தபடியே தன் ஆட்களுக்கு உத்தரவிட்டு, வரும் விருந்தாளிகளைக் கவனித்துக்கொள்ளச் சொல்லி ஏற்பாடு செய்தார்.

இதெல்லாம் 2005-ம் ஆண்டு தொடக்கத்திலேயே நடந்துவிட்டது. இந்தோனேஷியாவின் தலைநகர் ஜகார்த்தாவுக்கு ஐம்பது கிலோ மீட்டர் தொலைவில் உள்ள ஒரு குக்கிராமம் பயிற்சிக் களமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. முதலில் கிராமத்தைச் சுற்றி பாதுகாப்பு வளையங்களை அமைத்தார்கள். ஏகப்பட்ட லேயர்

கள் செக்யூரிட்டி போட்டுவிட்டுப் பயிற்சிகளை ஆரம்பித்தார்கள்.

குண்டுகள் தயாரிப்பதிலிருந்து பாடம். வெடி மருந்துகளை எப்படிக் கையாள்வது? ஒரு புதுப்பெண்டாட்டியைப் போல. தொடுவது தெரியாமல் தொடுவது. படுவது தெரியாமல் படுவது. அப்படியே உருட்டிச் சுருட்டி உள்ளே வைத்து சூடா ஒரு பார்சல்!

விளையாட்டே இல்லை. ஒரு குண்டு வைக்கப் போகிற தீவிரவாதி, ஒரு குண்டு தயாரிக்கத் தெரிந்த விஞ்ஞானியாகவும் இருக்கவேண்டும் என்பதுதான் அல் காயிதாவின் அடிப்படை ரூல். இயற்பியல், வேதியியல், கணக்கு தொடங்கி, எலக்ட்ரிக்கல் இன்ஜினீயரிங், மெக்கானிகல் இன்ஜினீயரிங், லாங் ஜம்ப், ஹை ஜம்ப் என்று, ஒரு திட்டத்துக்கு எதெல்லாம் தேவைப்படுகிறதோ, அத்தனையிலும் எக்ஸ்பர்ட் ஆனாலொழிய களத்துக்கு அனுப்பாது அல் காயிதா.

இப்படியாக, இந்தோனேஷியப் பங்காளிகளிடம் பாடம் படிக்க அனுப்பிவிட்டு, கற்றுத் தேறியவுடன் ஆப்கனுக்கு வரவழைத்து பரீட்சை செய்து பார்த்தார்கள். திருப்தி என்று மேலிடங்கள் முடிவு செய்த பிறகு, பத்திரமாக லண்டனுக்கு அனுப்பி வைத்தார்கள்.

நடுவில் ஏதோ காரணத்துக்காக, கான் மட்டும் ஒருமுறை இஸ்ரேலுக்குப் போய் வந்திருப்பதாகத் தெரிகிறது. எதற்கு என்று தெரியவில்லை. முன்னதாக, 2003 ஏப்ரலில் டெல் அவிவில் நடைபெற்ற ஒரு மூன்றுபேர் படுகொலைச் சம்பவத்துடன், கானின் பெயரை இணைத்துப் பின்னால் லண்டன் குண்டுவெடிப்புகளுக்குப் பிறகு ஒரு செய்தி வந்து பல பேரைக் குழப்பியது. ஆனால், கானின் பயக்ர.ஃபியை ஆராய்ந்தால், அவன் 2003-ல் எல்லாம் தீவிரவாதியாக இல்லை என்பது போலத்தான் தெரிகிறது. ஊர்ஜிதப்படுத்த முடியவில்லை.

2004 இறுதியில்தான் கானுக்கு அல் காயிதா தொடர்பு ஏற்பட்டிருக்கிறது. அந்த ஆண்டு நவம்பர் 19-ம் தேதி பாகிஸ்தானின் கராச்சி விமான நிலையத்துக்கு கானும், இன்னொரு லண்டன் குண்டுவெடிப்புத் தீவிரவாதியான ஷேஸாத் தன்வீரும் வந்து இறங்கியதை, விமான நிலைய சிசி டி.வி. படமெடுத்துப் பத்திரமாக வைத்திருந்திருக்கிறது. குண்டு வெடிப்புக்குப் பிறகு தோண்ட ஆரம்பித்தபோது, மேற்படி வீடியோ க்ளிப்பிங் அகப்பட்டு, கானின் பாகிஸ்தான்- ஆப்கன் தொடர்புகள் அதன்பிறகுதான் உறுதி செய்யப்பட்டன.

எப்படியும் சுமார் ஓராண்டுப் பயிற்சிகள் இருந்திருக்கின்றன. அதன்பிறகுதான் களமிறக்கியிருக்கிறார்கள். பாதாள ரயில் நிலையமும் ஒரு மாநகரப் பேருந்தும். அந்த நாள் ஜூலை மாதம் 7-ம் தேதி என்று நிச்சயிக்கப்பட்டது.



உலகம் முழுவதும் மாறிவரும் தட்பவெப்பம் குறித்தும் ஆப்பிரிக்க நாடுகளின் பொருளாதாரத் தேக்க நிலை குறித்தும் உட்கார்ந்து யோசித்துக் கவலைப்படுவதற்கான ஜி எட்டு நாடுகளின் (ஜி8 என்றால், Group of Eight என்று பொருள். இங்கிலாந்து, அமெரிக்கா, கனடா, பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான், ரஷ்யா ஆகிய தேசங்கள் இந்தக் குழுவில் அடக்கம்.) பிரதிநிதிகள், அதற்கு முதல் நாள்தான் இங்கிலாந்துக்கு வந்திருந்தார்கள். ஜூலை 6 முதல் 8 வரையிலான மூன்று நாள் மாநாடு. உலகம் முழுவதும் இங்கிலாந்தை கவனித்துக் கொண்டிருந்த சமயம். பிரதமர் டோனி ப்ளேருக்கு உள்ளூரில் மக்கள் செல்வாக்கு குறைந்துகொண்டிருப்பதாக வந்துகொண்டிருந்த செய்திகளை, அந்த மாநாட்டில் பேசும் பேச்சின் மூலம்தான் அவர் போக்கவிருந்தார்.

இங்கிலாந்தில் ஒரு ரகளை செய்ய இதனைக் காட்டிலும் ஓர் உன்னதமான சந்தர்ப்பம் கிடைத்துவிடுமா என்ன? ஆறாம் தேதியிலிருந்து எட்டாம் தேதி வரைதானே மாநாடு? நாம் ஏழாம் தேதி பட்டாசு வெடித்துவிடலாம் என்று முடிவு செய்து, கான் நண்பர்களுக்கு அறிவித்தது அல் காயிதா.

திட்டம் மிகத் தெளிவாக முன் கூட்டியே அனைவருக்கும் அறிவிக்கப்பட்டிருந்தது. நான்கு பேரில் மூன்று பேர் லண்டன் பாதாள ரயில் நிலையங்களுக்குப் போய்விட வேண்டும். ஆளுக்கு ஒரு ரயிலை எடுத்துக்கொண்டு தகர்த்துவிடுவது. நான்காவது நபர் ஏதாவது ஒரு மாநகரப் பேருந்தில் மனித வெடிகுண்டாக ஏறி, நிறைய மக்கள் பயணம் செய்யும் சமயமாகப் பார்த்து வெடிக்கச் செய்வது.

அத்தனை பேரும் பாதுகாப்பாக உடலெங்கும் வெடிகுண்டுகளைக் கட்டிக்கொண்டு, மேலே அழகாக ஜாக்கெட் போட்டு மறைத்துக்கொண்டுவிட வேண்டும். கையில் சூட்கேஸ் அல்லது ஹோல்ட் ஆலுடன் யாருக்கும் சந்தேகம் வரமுடியாதபடி, சராசரிப் பயணிகள் போலவே போய் ஒழுங்கு மரியாதையாக டிக்கெட் வாங்கிக்கொண்டு, ரயில் மற்றும் பஸ்ஸில் ஏறவேண்டும். யாருடனும் அநாவசியப் பேச்சுகள் கூடாது. வண்டியில் ஏறும் நேரத்துக்கும் வெடிக்கும் நேரத்துக்கும் அதிக இடைவெளி இல்லாதிருப்பது நல்லது. ஏறும்போதே கூட்டம் உள்ள வண்டியாகப் பார்த்து ஏறுவது சிலாக்கியமானது.

வெளிநாட்டுத் தலைவர்கள் இங்கிலாந்துக்கு வந்திருக்கிறபடியால், வழக்கத்தைக் காட்டிலும் கொஞ்சம் கூடுதல் செக்யூரிடி கெடுபிடிகள் இருக்கலாம். மெட்டல் டிடெக்டர் பரிசோதனைகள் இருக்கலாம். ஆகவே, உடலில் கட்டிய பாம் தவிர, வேறு ஒரு சாவிக்கொத்து கூட எடுத்துச் செல்லவேண்டாம் என்று முன்னெச்சரிக்கையாகச் சொல்லிவைத்தார்கள். சூட்கேஸ்களில் கூட வெறும் பனியன், ஜட்டி இருந்தால் போதும் என்று சொல்லப்பட்டிருந்தது.

பொதுவாக இம்மாதிரி பொது இடங்களில் குண்டுவெடிக்கிற திட்டம் என்றால், அல் காயிதா கூடுமானவரை தான் தயாரிக்கும் குண்டுகளில் இரும்பு சம்பந்தப்பட்ட உபகரணங்களை உபயோகிக்காது. பிளாஸ்டிக்தான். ரிமோட் மூலம் வெடிப்பது என்றால், பாட்டரி வேண்டியிருக்கும். மேற்படி சம்பவத்தில் அதற்குக் கூட வாய்ப்புக் கொடுக்காமல் கையால் நிமிண்டியே வெடிக்கச் செய்யும் விதத்தில் குண்டுகளைப் பொருத்தியிருந்தார்கள். ஏனெனில், மெட்டல் டிடெக்டர் சோதனைக்கு ஆளாகவேண்டி வந்தால், 'பீப் பீப்...' என்று அந்தச் சனியன் கத்தி, காரியத்தைக் கெடுத்துவிடக்கூடுமே என்கிற கவலை.

இப்படி ஒவ்வொரு விஷயத்தையும் முன்கூட்டி யோசித்துத் திட்டமிட்டு, மனித வெடிகுண்டுகளைத் தயாரித்து அனுப்பிவைத்தது, அல் காயிதா. நான்கு பேரும் கோயிலுக்கு நேர்ந்துவிட்ட ஆடுகள் போல, அவரவர் இலக்குகளை நோக்கிப் போக ஆரம்பித்தார்கள். யாரும் முன்னதாகத் தத்தம் வீடுகளில் இது குறித்தெல்லாம் சங்கேதமாகக் கூடச் சொல்லியிருக்கவில்லை. உணர்ச்சிகரமான

கடைசிக் கண்ணீர்க் கடிதமெல்லாம் எழுதி ஸ்டாம்ப் ஒட்டாமல் போஸ்ட் செய்யவில்லை. அத்தனை பேரும் அன்றைய காலை நேரத்து ஆஃப் பாயிலோ, ஆம்லெட்டோ... நாஷ்டாவை முடித்துவிட்டு, வேலைக்குப் போவது போலத்தான் புறப்பட்டார்கள். லண்டன் பாதாள ரயில் நிலையத்துக்கு நான்கு பேரும் ஒன்றாகத்தான் வந்து டிக்கெட் வாங்கினார்கள். அப்போதுதான் அந்த க்ளோஸ்டு சர்க்யூட் டிவி, அவர்களைப் படம் பிடித்திருக்கிறது. டிக்கெட் வாங்கிய பிறகுதான் ஆளுக்கொரு ரூட்டில் ரயிலைப் பிடித்தார்கள்.

மணி எட்டு நாற்பது.. மூன்று ரயில்கள். ஒவ்வொன்றும் ஒவ்வொரு திசையில் போகிற ரயில்கள். முதல் குண்டு வெடித்த செய்தி பன்னிரண்டே நிமிடத்தில் வந்துவிட்டது. சரியாக எட்டு ஐம்பதுக்கு வெடித்தது அது. லிவர்பூல் தெருவுக்கும் ஆல்ட்கேட் ரயில்நிலையத்துக்கும் நடுவே நடந்த கோரச் சம்பவம்.

வெடித்த சப்தம் கேட்டவுடனேயே இரண்டு ரயில்கள் மோதிக்கொண்டு விட்டன என்றுதான் முதலில் நினைத்தார்கள். எழுந்த கரும்புகையும் அலறல் சப்தங்களும் ரத்தக் காயங்களுடன் கதவுகளைப் பிளந்துகொண்டு விழுந்த மனிதர்களும், சில வினாடிகளில் நடந்ததைப் புரிய வைத்துவிட்டார்கள்.

கிட்டத்தட்ட அதே நேரம். அதே பாணி. கிங்ஸ் க்ராஸ் ரயில் நிலையத்துக்கும் ரஸ்ஸல் சதுக்கத்துக்கும் இடையே போய்க்கொண்டிருந்த இன்னொரு ரயிலிலும் சில பெட்டிகள் இதே மாதிரி வெடித்துச் சிதறின. இந்த ரயில் வெடித்தபோது, சிலபேர் வெளியே சற்றுத் தொலைவிலிருந்து நேரில் பார்த்திருக்கிறார்கள். முதலில் வெளியிலிருந்து ரயிலை நோக்கி யாரோ தாக்குதல் நடத்துவது போலத்தான் தெரிந்தது என்று, இவர்கள் பின்னால் சாட்சியளித்தபோது சொல்லியிருக்கிறார்கள். அது ஒரு தோற்ற மயக்கமாக மட்டுமே இருக்கமுடியும் என்று மிக விரைவில் தெரிந்துவிட்டது.

ஏனெனில், மேலும் ஒரு சில நிமிட இடைவெளியில் எட்வேர் ரோடு ரயில் நிலையத்தில் ஒரு வண்டி நுழைந்த தருணத்தில் வெடித்துச் சிதறியபோதும் இதே போன்ற உணர்ச்சி சிலருக்கு ஏற்பட்டது, பின்னால் விசாரணையின்போது தெரியவந்தது.

மூன்று ரயில்கள். ஐம்பதுக்கும் மேற்பட்டவர்கள் உடனடி மரணம். கிட்டத்தட்ட எழுநூறு பேர் படுகாயமடைந்து உயிருக்குப் போராடிக்கொண்டிருந்த நிலையில், உடனடியாக மருத்துவமனைகளுக்குத் தூக்கிச் செல்லப்பட்டார்கள். அதில் இருபத்திரண்டு பேர் மிக மிக மோசமான பாதிப்புகளுக்கு உள்ளாகியிருந்தார்கள். சிலருக்குக் கைகள் துண்டாகியிருந்தன. நூற்றுக்கணக்கான பெண்களும் ஆண்களும் அலறிக்கொண்டு ரயில் நிலையங்களெங்கும் ரத்தம் சொட்டச் சொட்ட குறுக்கும் நெடுக்கும் ஓடிக்கொண்டிருந்தார்கள். ரயில்வே ஆபீஸர்களுக்கும் காவல் துறையினருக்கும் என்ன செய்வதென்றே புரியவில்லை. குண்டுவெடித்துச் செத்தவர்களை விட, ஒரு கலவரத்தில் மிதிபட்டுச் சாகக்கூடியவர்களின் எண்ணிக்கை கண்டிப்பாக அதிகமாகவே இருக்கும். எப்படிக் கட்டுப்படுத்துவது? என்ன செய்து சமாளிப்பது? யாருக்குமே புரியவில்லை.

கிட்டத்தட்ட ஒருமணி நேரம் அந்தப் பிராந்தியமே ரணகளமாகிவிட்டது. சைரன்கள் ஒலிக்க, காவல் துறையினர் மக்களை அமைதிப்படுத்தி, அப்புறப்படுத்தப் படாதபாடு பட்டார்கள். விஷயம் உடனடியாகப் பிரதமர் அலுவலகத்துக்கும் மகாராணியாரின் அரண்மனைக்கும் தெரிவிக்கப்பட்டது. நாடெங்கும் ரயில்வே உஷார் படுத்தப்பட்டது. ஆங்காங்கே இருந்த அத்தனை போலீஸாரும், ஸ்டேஷன்களில் கொண்டு குவிக்கப்பட்டார்கள். ஆபீஸுக்குப் போகாவிட்டால் பாதகமில்லை என்று, ரயில் ஏற வந்த அத்தனை பேரையும் வீட்டுக்கு அனுப்பிக்கொண்டிருந்தார்கள்.

ஒட்டுமொத்த தேசத்தின் கவனமும் பாதாள ரயில் நிலையங்களின் மீது குவிந்திருந்த அந்தச் சமயத்தில்தான் (காலை 9.47 மணி), பஸ் ஏறப்போன நான்காவது பிரகஸ்பதி, முப்பதாம் நம்பர் டவுன் பஸ்ஸில் ஏறி, மார்பிள் ஆர்ச்சுக்கும் டவிஸ்டாக் சதுக்கத்துக்கும் இடையே தன் குண்டை

வெடிக்கச் செய்தான்.

குப்புற அடித்துக் கவிழ்ந்து தூள் தூளானது அந்தப் பேருந்து. அடுத்த வினாடியே லண்டன் முழுவதும் பாதாள ரயில் நிலையங்கள் மூடப்பட்டன. மாநகரப் பேருந்துகள், இருக்கும் இடங்களிலேயே நிறுத்தப்பட்டு, பயணிகள் பத்திரமாக இறக்கி அனுப்பப்பட்டனர்.

கிட்டத்தட்ட லண்டன் நகரையே பூட்டி வைத்துவிட்டார்கள். ஒரு ஈ, கொசு கூட வெளியிலிருந்து உள்ளேயோ, உள்ளிருந்து வெளியேவோ போகமுடியாதபடி, தடுப்பு அரண்களை அமைத்துவிட்டார்கள். ஜி எட்டு மாநாட்டிலிருந்து அவசரமாக பர்மிஷன் வாங்கிக்கொண்டு வெளியே வந்த டோனி ப்ளேர், 'யாரும் கலவரமடைய வேண்டாம்' என்று கதறாத குறையாகக் கேட்டுக்கொண்டார். என்ன கேட்டு என்ன புண்ணியம்? மக்கள் கிட்டத்தட்ட பயத்திலேயே உயிரை விட்டுவிடும் நிலையில்தான் இருந்தார்கள்.

பேய் வேகத்தில் புலன் விசாரணை முடுக்கிவிடப்பட்டது. ஒரு மணி நேரத்தில் கிட்டத்தட்ட அறுநூறு ஏரியாக்களைச் சந்தேக லிஸ்டுக்குள் கொண்டுவந்து, சுற்றி வளைத்துச் சல்லடை போட்டுத் துழாவ ஆரம்பித்தார்கள். (அத்தனையும் முஸ்லிம்கள் வசிக்கும் ஏரியாக்கள்தான் என்பதைச் சொல்லத் தேவையில்லை.) அஃபிஷியலாகவும் அன் அஃபிஷியலாகவும் எத்தனையோ பேரைக் கைது செய்து, ரகசியமாகத் தள்ளிக்கொண்டு போய் உரிய முறையில் விசாரித்தார்கள்.

மறுபுறம், அன்றைய தினம் லண்டன் ரயில் நிலைய சிசி டி.வி.யில் பதிவான ஒவ்வொரு வினாடிக் காட்சியையும் கண்கொத்திப் பாம்பாகக் கண்காணித்து, சந்தேகத்துக்குரிய அந்த நான்கு நண்பர்களை வட்டமிட்டார்கள். அவர்கள் ஸ்டேஷனுக்குள் நுழையும்போது, யாருக்கும் எழாத சந்தேகமெல்லாம் சம்பவம் நடந்தபிறகுதான் எழுகிறது. அடடே, இவர்கள் போட்டுக்கொண்டிருக்கிற ஜெர்க்கின்கள் மட்டும் ஏன் இத்தனை குண்டாக இருக்கிறது? இவர்கள் மட்டும் ஏன் அடிக்கடி திரும்பித் திரும்பிப் பார்த்தபடி நடக்கிறார்கள்? நான்குபேரும் ஒன்றாகத்தான் உள்ளே வருகிறார்கள். அடிக்கடி ஜாடையில் பேசிக்கொள்கிறார்கள். ஆனால், திடீரென்று எங்கே பிரிந்து போனார்கள்? இவர்கள் நடையில் மட்டும் ஏன் இத்தனை பதற்றம் இருக்கிறது? ஒரு கை ஏன் எப்போதும் இடுப்பிலேயே இருக்கிறது?

கேள்விகள், கேள்விகள், மேலும் கேள்விகள்.

இதற்கிடையில், சம்பவம் நடந்த இரண்டரை மணி நேரத்தில் (மதியம் சுமார் 12.10 மணி வாக்கில்), அல் காயிதா ஆதரவு இணையதளம் ஒன்றில், சுமார் ஒரு பக்கம் வரக்கூடிய ஒரு வாக்குமூல அறிக்கை வெளியிடப்பட்டிருப்பதாக பிபிசி தொலைக்காட்சி அறிவித்தது. Der Spiegel என்கிற ஜெர்மானிய மொழிப் பத்திரிகை ஒன்றும் இதே தகவலை உடனடியாக ஊர்ஜிதப்படுத்தியது. அதன்படி லண்டன் குண்டுவெடிப்புகளுக்கு 'அல் காயிதாவின் ஐரோப்பியப் பிரிவைச் சார்ந்த ஒரு ரகசிய இயக்கம்' பொறுப்பு என்று தெரியவந்தது.

அது என்ன ரகசிய இயக்கம்?

அதன் பெயர் அல் கல்லாட்டி (Al qallati தமிழில் புனித அரண்மனை எனலாம்.) என்று அந்த இணையதள அறிக்கை சொன்னது. உண்மையில் இம்மாதிரியான பெயரில் லண்டனிலோ, இங்கிலாந்திலோ தனியொரு அமைப்பு இருப்பதாக அதற்குமுன் யாரும் கேள்விப்பட்டது கூட இல்லை. அது ஓர் இணையதளக் குழு. எந்தத் தீவிரவாதக் குழு வேண்டுமானாலும், என்னவிதமான நாசவேலை செய்தாலும் இந்த அல் கல்லாட்டி அல்லது அல் கல்லா குழுவின் தளத்தில் தங்கள் அறிக்கையை வெளியிடலாம். அல் காயிதாவின் பல அறிக்கைகள் இந்தத் தளத்தின் மூலம் முன்னதாக வெளியிடப்பட்டிருக்கின்றன. வேறு பல குழுக்களின் அறிக்கைகளும் இதில் இடம்பெற்றிருக்கின்றன.

இம்மாதிரியான இணையதளங்களில் ஒரு சௌகரியம் என்னவென்றால், யாரும் தங்களை அடையாளம் காட்டிக்கொள்ள வேண்டிய அவசியமே இல்லை. நீங்கள் தீவிர நாத்திகராக இருந்தாலும் திருப்பதி வெங்கடாஜலபதி பேரில் ஏதாவது அறிக்கை எழுதி, போஸ்ட் பண்ணிவிடலாம். ஏண்டா என்று கேட்க ஏழுமலையானால் கூட முடியாது. ஆகவே, இம்மாதிரியான தளங்களில் வெளியாகும் அறிக்கைகளை, நூறு சதவிகிதம் நம்பிவிடமுடியாது.

மேற்படி சம்பவம் நடந்த அன்று, இத்தளத்தில் வெளியான அறிக்கையின் ஒரு வரி சாரம் இதுதான்: '2003-ம் ஆண்டு அமெரிக்காவுடன் ஜோடி சேர்ந்து ஈராக்கினுள் அத்துமீறி நுழைந்ததற்காகவும், ஆப்கனிஸ்தான் மீது அமெரிக்காவுடன் இணைந்து தாக்குதல் தொடுத்ததற்காகவும் பழிவாங்கும் நடவடிக்கையாக இது செய்யப்பட்டது'.

போலீஸெல்லாம் கிடக்கட்டும். வல்லுநர்கள் சும்மா இருப்பார்களா? 2004-ம் ஆண்டு மார்ச் 11 அன்று ஸ்பெயின் நாட்டில் மாட்ரிட் நகரில் நிகழ்த்தப்பட்ட ரயில் குண்டுத் தாக்குதல்களுடன் மேற்படி சம்பவத்தை ஒப்பிட்டு, அதே பாணி, அதே ரகம், அதே உத்தி என்று புல்லரித்து, 'சந்தேகமே இல்லை; இது அல் காயிதாதான்' என்று அடித்துச் சொன்னார், செபாஸ்டியன் கோர்கா (Sebestye'n Gorka) என்கிற புடாபெஸ்டைச் சேர்ந்த ஒரு பாதுகாப்புத்துறை மூத்த அதிகாரி.

ஜூலை 7 சம்பவம் நடந்ததா? ஆகஸ்டு இறுதிவரை சிண்டைப் பிய்த்துக்கொண்டுதான் இருந்தார்கள். செப்டம்பர் 1-ம் தேதி அல் ஜஸீரா தொலைக்காட்சி, ஒரு டேப்பை ஒலிபரப்பியது.

லண்டன் குண்டுவெடிப்புச் சம்பவ நாயகர்கள் நாலு பேரின் தலைவனான முகம்மது சித்திக் கான் என்கிற லண்டன் கான், தனது கடைசிப் பயணத்துக்கு முன்னால் பேசி அனுப்பிய டேப்.



"நான் நீட்டி முழக்கப் போவதில்லை. எனக்கு முன்னால், என்னைக் காட்டிலும் தகுதியான எத்தனையோ பேர், எத்தனையோ முறை பேசியும் நீங்கள் புரிந்துகொள்ளவில்லை. அவர்கள் அனைவரும் அரபியில் பேசினார்கள் என்பது, ஒரு காரணமாக இருக்கலாம். அதனால்தான், நான் உங்கள் மொழியைத் தேர்ந்தெடுத்திருக்கிறேன். இதுவாவது உங்களுக்குப் புரிகிறதா பார்க்கலாம்.

எங்கள் வார்த்தைகள் மதிப்பிழந்து, இறந்துவிட்டன. எங்கள் ரத்தத்தைச் சிந்தித்தான் நாங்கள் அதற்கு உயிர்கொடுக்க வேண்டியிருக்கிறது.

இந்தச் சில சொற்களேகூடப் போதும். மீடியா இதற்குள் என்னைப் பற்றி ஒரு வண்ணப்படம் வரைந்து பாகம் குறித்துவிட்டிருக்கும். உண்மையில் நானும் என்னைப்போன்ற ஆயிரக்கணக்கானவர்கள் வாழ்வது, செயல்படுவது அனைத்தும் நாங்கள் நம்பும் ஒரு

விஷயத்துக்காக மட்டுமே. இந்த உலகம் எங்களுக்குத் தரத் தயாராக இருக்கும் சுக சௌகரியங்களுக்காக, நாங்கள் வாழவில்லை. எங்கள் நோக்கமும் செயல்பாடுகளும் அதற்கெல்லாம் அப்பாற்பட்டவை. இஸ்லாம் எங்கள் மதம். ஏக இறைவனை நம்பி, அவனது இறுதித் தூதரின் அடியொற்றி நடக்கிறவர்கள் நாங்கள்.

எங்கள் செயல்பாடுகளை, இந்தச் சட்டத்துக்குள்தான் நாங்கள் அமைத்துக்கொள்கிறோம்.

உங்களது தேர்ந்தெடுத்த ஜனநாயக அரசுகள் உலகெங்கும், தொடர்ந்து எங்கள் மக்களுக்கு எதிரான அட்டூழியங்களை நிகழ்த்தி வருகின்றன. இந்த அரசுகளின் குடிமக்களாகிய நீங்கள், எப்படி உங்கள் அரசுகளை ஆதரித்து இதற்கு முழுப் பொறுப்பாகிறீர்களோ, அதே மாதிரிதான் என் முஸ்லிம் சகோதர, சகோதரிகளைக் காப்பாற்றும் முழுப் பொறுப்பாளனாக என்னை நான் உணர்கிறேன்.

நாங்கள் பாதுகாப்பாக இருப்பதாக உணராதவரை, நீங்கள் எங்கள் இலக்காகவே இருப்பீர்கள். எங்கள் மக்களின் மீது நீங்கள் குண்டு வீசி, விஷப்புகை வீசி, அவர்களைச் சித்திரவதைப்படுத்துவதை நிறுத்தாதவரை, நாங்கள் எங்கள் யுத்தத்தை நிறுத்தப்போவதில்லை.

இறைவனை நான் பிரார்த்திக்கிறேன். இறைவனின் தூதர்களுக்கு நிகராக நான் மதிக்கும் தற்கொலைப் போராளிகளை, என் அன்புக்குரிய தலைவர்களான ஒசாமா பின்லேடன், டாக்டர் ஐமன் அல் ஜவாஹிரி, இன்னும் எத்தனையோ போராளிச் சகோதர சகோதரிகளின் உயர்ந்த ஸ்தானத்துக்கு, என்னை உயர்த்திய பரம்பொருளுக்கு நன்றி கூறுகிறேன்.

என்னுடைய இந்தச் செயலின் முக்கியத்துவம் உணர்ந்து, எனக்கான மறுமை சிறப்பாக அமைய, இறைவனைப் பிரார்த்திக்கும்படி என் சகோதர, சகோதரிகளைக் கேட்டுக்கொள்கிறேன்.."

- முகம்மது சித்திக் கான் என்கிற லண்டன் கான், எப்போது தன்னுடைய இந்த இறுதி உரையை நிகழ்த்தி, டேப் செய்து, அல் ஜசீரா தொலைக்காட்சிக்கு அனுப்பிவைத்தான் என்பது குறித்த சரியான தகவல்கள் இல்லை.

மேற்படி ஆங்கில உரை முழுமையானதும் இல்லை. ஒலிப்பதிவில் நிகழ்ந்திருக்கும் சில கோளாறுகள் காரணமாக, நான்கு அல்லது ஐந்து இடங்களில் வரிகள் சரியாகப் புரிவதில்லை. குறிப்பாக, இந்தச் சிறு உரையின் கடைசி இரு பத்திகளில், அதிகத் தெளிவில்லை. ஒரு குத்துமதிப்பாகத்தான் மொழிபெயர்த்திருக்கிறேன். அது ஒரு பெரிய பிரச்னை இல்லை.

விஷயம் என்னவென்றால், இந்த உரை அல் ஜசீராவில் ஒலிபரப்பப்பட்ட பிறகுதான், லண்டன் குண்டுவெடிப்புச் சம்பவத்துடன் அல் காயிதாவுக்கு இருக்கும் தொடர்பே உறுதிப்படுத்தப்பட்டது.

இந்த ஒலிபரப்புக்குப் பிறகு, இது தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொண்ட சில மத்தியக் கிழக்கு நாடுகளைச் சேர்ந்த பத்திரிகையாளர்கள், கான் பேசிய டேப் அப்படியே ஒலிபரப்பப்படவில்லை என்றும், அது அல் காயிதா மேலிடத்துக்குப் போய், அங்கே எடிட் செய்யப்பட்டு வந்த பிறகே, ஒலிபரப்பப்பட்டது என்றும் தெரிவித்திருக்கிறார்கள். குறிப்பாக, இதில் கையாளப்பட்டிருக்கும் சில சொற்களை வைத்து, இதனை எடிட் செய்தது ஜவாஹிரியாகத்தான் இருக்கவேண்டும் என்கிற முடிவுக்கு வந்திருக்கிறார்கள். எடிட்டிங்கில் நேர்ந்த சில தொழில்நுட்பச் சிக்கல்கள் காரணமாகத்தான் டேப் தெளிவாக இல்லை.

7 ஜூலை 2005 அன்று நடைபெற்ற இந்த லண்டன் குண்டுவெடிப்புச் சம்பவத்தின் தொடர்ச்சி, 21 ஜூலை அன்று மீண்டும் அரங்கேறி நான்கு குண்டுகள் வெடித்தன; அதன் தொடர்பாக, மேலும் நான்கு பெயர்கள் வெளியிடப்பட்டன. அதுவும் அல் காயிதாவின் திருவிளையாடல்தான் என்றபோதும், ஒவ்வொரு சம்பவத்தையும் விவரிப்பது இங்கே நோக்கமில்லை என்பதால், இது

தொடர்பான விவரங்களை இந்த இடத்தில் நிறுத்திக்கொள்வோம். இந்தச் சம்பவம் நமக்குத் தெரிவிக்கும் விவரங்கள் என்ன? அதுதான் முக்கியம். ஒரு பட்டியல் போட்டுவிடுவோமா?

எத்தனை புற நெருக்கடிகள் இருந்தாலும் (அமெரிக்கத் தேடுதல் வேட்டை, ஹமீத் கர்சாய் ஆட்சி, உற்ற தோழர்களான தாலிபன்கள் காணாமல் போனது, வங்கிக் கணக்குகள் முடக்கம் இன்னபிற.) அல் காயிதா ஒரு செயலைச் செய்ய முடிவு செய்துவிட்டால், எப்படியும் அதனைச் செய்தே தீரும்.

தன்னிடம் ஆயிரக்கணக்கில் ஆள் பலம் இருந்தாலும், மிகப்பெரிய காரியங்களைத் தயங்காமல் புதுமுகங்களைக் கொண்டு செய்வார்கள்.

போராளிகளுக்குப் பயிற்சியளிக்கும் நிலையில், தான் இல்லாதபோதும் தனது நெட் ஒர்க் பலத்தைக் கொண்டு, உலகின் எந்த மூலையில் வேண்டுமானாலும் அவர்களுக்கான பயிற்சியை, யாரைக் கொண்டு வேண்டுமானாலும் அளிப்பார்கள்.

மூளைச் சலவை எக்ஸ்பர்ட்ஸ்.

புதுமுகப் போராளிகளே ஈடுபடுகிறார்கள் என்றாலும், காரியம் முடியும்வரை விஷயம் வெளியே சிந்தாமல் பார்த்துக்கொள்ளும் வல்லமை படைத்த இயக்கம்.

பயிற்சிக்கு, செயலுக்கு எத்தனை செலவானாலும் கவலைப்படாதவர்கள்.
தானே முன்வந்து ஒப்புக்கொள்ளாதவரை அல்லது தெரியப்படுத்தாதவரை, தன் பெயர் வெளியே வராதபடி பார்த்துக்கொள்ள அல் காயிதாவால் முடியும்.

இஸ்லாமிய சகோதரத்துவம் என்கிற சித்தாந்தத்தை முன்வைத்து, சூடானில் உட்கார்ந்துகொண்டு சுற்றுமுற்றும் உள்ள அத்தனை தேசங்களிலும் அல் காயிதாவின் கிளைகளை ஒசாமா நிறுவிக்கொண்டிருந்த கட்டத்தைப் பார்த்துக்கொண்டிருந்தோம். தனது போராளிகளுக்கு, அல் காயிதா எப்படிப் பயிற்சி கொடுக்கிறது என்பதைக் கவனித்தபோது, அந்த அரபி பயிற்சிக் கையேடு, அங்கிருந்து இங்கிலாந்து, கான் நண்பர்கள் என்று ஐந்து அத்தியாயங்களில் எங்கெங்கோ போய்விட்டோம்.

வேறு வழியில்லை. மீண்டும் சூடானுக்குத்தான் திரும்பியாகவேண்டும். இந்த எழுச்சி, பயிற்சி, கிளர்ச்சி சமாசாரங்களெல்லாம் வெண்ணெய் மாதிரி வழுக்கிக்கொண்டு சுலபமாக நடந்தபோது, மிக மிக முக்கியமான இன்னொரு காரியத்தையும், அல் காயிதா சூடானில் இருந்தபடிக்குச் செய்ய ஆரம்பித்தது.

நம் ஊர் அரசியல்வாதிகள் எல்லாம் அவ்வப்போது மாநில மாநாடுகள், கூட்டணிக் கட்சி மாநாடுகள் என்று நடத்துவார்கள் இல்லையா? அந்த மாதிரி அல் காயிதா, சூடான் தலைநகர் கார்ட்டொம் நகரில் சில சர்வதேச மாநாடுகள் நடத்த ஆரம்பித்தது. இதில் விசேஷம் என்னவென்றால், கூட்டணிக் கட்சிக்காரர்கள் மட்டும் கலந்துகொள்ளும் மாநாடுகள் அல்ல அவை. மாறாக, எதிர்க்கட்சிக்காரர்களையும் பிரதானமாகக் கூப்பிட்டு உட்காரவைத்து நடத்தப்பட்ட மாநாடுகள்.

ரொம்ப விசித்திரமான, அதே சமயம் படு சாமர்த்தியமான விஷயம் இது.

நாமெல்லாம் என்ன நினைத்துக்கொண்டிருக்கிறோம்? அல் காயிதா என்பது ஒரு மாபெரும் தீவிரவாத இயக்கம். ஆகவே, தீவிரவாத மனோபாவம் கொண்ட அத்தனை முஸ்லிம்களுமே அல் காயிதாவை ஆதரிப்பார்கள். அப்படித்தானே?

அதுதான் இல்லை. ஒசாமா பின்லேடன் ஒரு சன்னி முஸ்லிம். அல் காயிதாவில் இருக்கிற அத்தனை பேருமே இஸ்லாத்தின் சன்னி பிரிவைச் சார்ந்தவர்கள். ஒசாமாவுக்குத் தனிப்பட்ட முறையில் ஷியா முஸ்லிம்களைப் பிடிக்காது. ஆகவே, ஷியா தீவிரவாத இயக்கங்களையும். உதாரணமாக, லெபனானிலிருந்து இயங்கும் ஹெஸ்புல்லா இயக்கத்தை எடுத்துக்கொள்ளலாம். இது ஒரு ஷியா தீவிரவாத அமைப்பு. தெற்கு லெபனானில் அத்துமீறி நுழைந்து, இஸ்ரேல் ஆக்கிரமித்து வைத்திருக்கும் பகுதிகளை மீட்பதைத் தங்கள் முதல் நோக்கமாகக் கொண்டு, 1982-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ஓர் இயக்கம். பின்னால் இந்த இயக்கத்தின் அரசியல் பிரிவு தேர்தலிலெல்லாம் நின்று, லெபனான் அரசியல் வானைக் கலக்கிய சமாசாரங்களையெல்லாம் பிறகு விரிவாகப் பார்க்கத்தான் போகிறோம்.

படு தில்லாக, ஒரு பக்கம், நூற்று நாற்பத்தெட்டாவது வட்டத்தின் சார்பில் பொதுக்கூட்டங்கள் நடத்தி, வோட்டு வாங்கி பார்லிமெண்ட்டுக்கும் போவார்கள்; இன்னொரு பக்கம், ஏகே 47ஐ எடுத்துக்கொண்டு பட்டாசு வெடிக்கவும் போவார்கள். ஏன் என்று லெபனானில் ஒரு கொசு கூடக் கேட்காது. அவர்களுடைய செல்வாக்கு அப்படிப்பட்டது.

கிட்டத்தட்ட அல் காயிதா வயதுதான் ஹெஸ்புல்லாவுக்கும். 'அல் முகாவாமா அல் இஸ்லாமியா' என்கிற இந்த அமைப்பின் ராணுவத்தில் உத்தியோகம் பார்க்கும் சாதாரண ஜவான் முதல் தலைமைத் தளபதி வரை அத்தனை பேருக்கும், ஒசாமா பின்லேடனையும் அவரது அல் காயிதாவையும் ஆதியோடு அந்தமாகத் தெரியும். இவர்களில் பலரும் கூட ஆப்கன் யுத்தத்தில் பங்குபெற்றிருக்கிறார்கள்.

இத்தனை இருந்தும் ஹெஸ்புல்லாவை அல் காயிதா கிட்டே சேர்க்காது. ஊர் உலகமெல்லாம் இருக்கிற இஸ்லாமியத் தீவிரவாத அமைப்புகளிடம் போய் On behalf of al gaida வேலை பார்க்கச் சொல்லி கேன்வாஸ் செய்து, ஏகப்பட்ட செலவும் செய்யும் அல் காயிதா, பீமபுஷ்டி பலம்மிக்க ஹெஸ்புல்லா வலிய வந்தாலும் ஏற்காது. ஓர் உதாரணத்துக்குத்தான் இந்த ஹெஸ்புல்லா. இம்மாதிரி ஒட்டவே ஒட்டாத எத்தனையோ பல பெரிய, நடுத்தர, சிறிய தீவிரவாத அமைப்புகள் அல் காயிதாவுடன் சேராதவை இருக்கின்றன.

இவர்களையெல்லாம் கடைசி வரை கிட்டே சேர்க்காமலேயே இருப்பதா அல்லது கொள்கை அளவில் மட்டும் தோழர்கள் ஆக்கிக்கொள்வதா, செயல்திட்டங்களின் அடிப்படையில், அசைன்மெண்ட் அடிப்படையில் மட்டும் நல்லுறவு கொள்வதா? என்கிற கேள்வி எழுந்தபோதுதான், அல் காயிதாவுக்கு அந்த மாநாட்டு ஐடியா வந்தது.

இஸ்லாமிய சகோதரத்துவம் என்று பேசுகிறோம். ஆனால், ஷியாக்களைச் சகோதரர்களாக ஏற்காத ஓர் இயக்கத்தைப் பார்த்துச் சிரிக்கமாட்டார்கள்? இந்தக் கேள்வியின் விளைவுதான் மேற்சொன்ன மாநாடுகள்.

இந்தக் கேள்வியைக் கேட்டு, ஒசாமாவை இது விஷயத்தில் சற்றே வித்தியாசமாகச் சிந்திக்கத் தூண்டியவர், சூடானின் அதிபர் அசன் அல் துராபி. மேற்படி மாநாட்டு யோசனையை முன்வைத்தவரும் அவர்தான்.

"அவர்களும் முஸ்லிம்கள்தான். அவர்களும் ஆதிக்க சக்திகளுக்கு எதிராகத்தான் போராடிக்கொண்டிருக்கிறார்கள். நாம் இணைந்து பணியாற்றாவிட்டாலும் நமக்குள் நல்லுறவு இல்லாவிட்டாலும் பகை இல்லை என்றாவது உலகுக்குத் தெரியப்படுத்த வேண்டாமா?" என்று கேட்டார் துராபி.

இதில் உள்ள நியாயத்தைக் கணக்கில்கொண்டு ஒசாமா சகல இஸ்லாமிய அமைப்புகளுக்கும் சூடான் அரசு சார்பில், மாநாடுகளில் கலந்துகொள்ள அழைப்பு அனுப்ப ஒப்புக்கொண்டார்.

என்ன மாநாடு?
சூடானில் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை அரசின் ஆதரவோடு, யாராவது மக்கள் நலப்பணி அமைப்பின் பெயரில், ஒரு சர்வதேச இஸ்லாமிய அறிஞர்கள் மாநாடு திடீரென்று ஏற்பாடு ஆகும்.

நிஜமான அறிஞர்கள் சிலரும் அழைக்கப்படுவார்கள். அவர்களெல்லாம் மேடை போட்டு மைக் வைத்து மக்கள் மத்தியில் பேசிக்கொண்டிருப்பார்கள். கூடவே உலகெங்கும் இயங்கும் பல்வேறு இஸ்லாமியத் தீவிரவாத அமைப்புகளின் தலைவர்களும் அழைக்கப்படுவார்கள். இவர்கள் தனியே மீட்டிங் ரூமில் ரகசிய மாநாடு நடத்துவார்கள். அழைப்பிதழில் ஒசாமாவின் பெயர் இருக்காது. ஆனால், அவர் பின்னணியில் இருக்கிறார் என்கிற தகவல் அனுப்பப்பட்டுவிடும். ஷியா, சன்னி பாகுபாடெல்லாம் இந்த மாநாட்டில் பார்க்கப்படாது. 'இஸ்லாமியத் தீவிரவாத அமைப்பா? வா, வந்து உட்கார்.' அவ்வளவுதான். போகவர ஆகும் செலவுகள், தங்கும் வசதி, சாப்பாடு அனைத்தையும் சூடான் அரசாங்கம் பார்த்துக்கொள்ளும். (அதாவது சூடான் அரசுக்கு, அல் காயிதா நிதி உதவி செய்யும்.)

ஜோராக ஊரை அடைத்து ஷாமியானா போட்டு, கவனமாக சர்வதேச மீடியாவை உள்ளே விடாமல் தடுத்துவிட்டு மாநாடு நடக்கும். பிரமாதமான விஷயம் ஏதுமில்லை என்றாலும், இஸ்லாமிய சகோதரத்துவம் என்கிற சித்தாந்தம், இஸ்லாத்தில் உள்ள இரு பிரிவுகளைக் காரணம் கொண்டு கேலிப்பொருளாகிவிடக் கூடாது என்பதைத்தான், அதிகம் வலியுறுத்துவார்கள்.

சுமார் ஆறு அல்லது ஏழு மாநாடுகள் இப்படியாக நடந்தன. எந்த மாநாட்டுக்கும் ஒசாமா செல்லவில்லை. ஆனால், அல் காயிதாவின் மூத்த தளபதிகள் பலரும் கலந்துகொண்டார்கள். ஒரே ஒரு மாநாட்டுக்கு மட்டும் பார்வையாளராக ஒசாமா கலந்துகொள்ளப் போனார். அதுவும் கூட, துராபியின் வற்புறுத்தலினால்தான்.

அந்தச் சந்தர்ப்பத்தில்தான், யாருமே எதிர்பாராத ஒரு விஷயம் நடந்தது.



அரசியலில் இரண்டு எதிரெதிர் துருவங்கள், ஏதோ ஒரு காரணத்தால் நட்புக்கொள்கின்றன என்று வைத்துக்கொள்ளுங்கள். நாங்கள் நண்பர்கள், இதயத்தில் கண்டிப்பாக இடம் உண்டு என்று சொன்னால் மட்டும் உறவு நிலைக்குமா? தேர்தலில் கூட்டணி வைத்து, சுமுகமாகத் தொகுதிப் பங்கீடு செய்ய முடிந்தால் அல்லவா நட்பு அங்கீகரிக்கப்படும்?

இதே மாதிரியான ஒரு கோரிக்கையைத்தான், சூடான் மாநாட்டுக்கு வந்த ஓர் ஈரானிய தீவிரவாதக் குழு அல் காயிதாவிடம் முன்வைத்தது.

"எல்லாம் சரிப்பா. நான் ஷியா. நீ சன்னி. ஆனா நாம ரெண்டு பேரும் முஸ்லிம். பொது எதிரிதான் நம்ம குறிக்கோளா இருக்கணும்ங்கறத நானும் ஏத்துக்கறேன். ஆனா, நாம சேர்ந்து

வேலை செய்யவேணாமா? நீ பாட்டுக்கு உன் ரூட்ல பாம் போடுவ. நான் பாட்டுக்கு என் ரூட்ல கண்ணிவெடி வெப்பேன். எங்க ஏரியா, உள்ளே வராதேன்னு சொல்லாம இருக்கணும்னா... நம்ம நட்புக்கு ஒரு அடையாளம் வேணாமா? உன் தரப்புல நீ ஒரு கல்லைத் தூக்கி வை. என் தரப்புல நான் ஒரு வூடு கட்டிக் காட்டறேன்" என்று, அப்போது யாரும் எதிர்பாராவிதத்தில் ஒசாமாவிடம் ஒரு கோரிக்கை வைத்த அந்த ஈரானிய அமைப்பின் பெயர், Islamic Republic of Iran.

அல் காயிதா, ஹமாஸ், ஹெஸ்புல்லாவுக்கு அடுத்தபடி மிகத் தீவிரமாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கும் ஓர் இயக்கம். இதில் விசேஷம் என்னவென்றால், அதற்குமுன் அல் காயிதா நீங்கலாக, மத்தியக் கிழக்கில் இருந்த அத்தனை தீவிரவாத இயக்கங்களுடனும் இந்த ஈரான் இஸ்லாமிக் ரிபப்ளிக் அமைப்புக்கு, மிக நெருக்கமான தொடர்புகள் இருந்தன. பிராந்தியத்தில் குறிப்பிடத்தகுந்த தாதா என்று வைத்துக்கொள்ளுங்கள்.

ஈரான் இஸ்லாமிக் ரிபப்ளிக் அமைப்பு இப்படி ஒரு கோரிக்கையை வைத்ததும், வேறு பல குட்டி இயக்கங்களும் அதை உடனடியாக ஆமோதித்தன. அல் காயிதாவுக்கு ஷியா, சன்னி பாகுபாடு இல்லை என்பதை நிரூபிக்கும் விதமாக, ஏதாவது ஒரு காரியம் செய்தே ஆகவேண்டும் என்கிற நிர்ப்பந்தம் என்றே இதனைச் சொல்லலாம்.

ஒசாமா, துராபியுடன் கலந்து ஆலோசித்தார். அவர் முன்வைத்த நட்புத்திட்டம் இதுதான். ஈரானிய ஷியா இயக்கங்களை அல் காயிதா மதிக்கிறது; நட்புக்கொள்ள விரும்புகிறது என்பதன் அடையாளமாக, சில நூறு அல் காயிதா போராளிகள், பயிற்சிக்காக ஈரானுக்கு அனுப்பிவைக்கப்படுவார்கள். அதாவது, புதிய போராளிகள். அவர்கள் ஈரானில் சுமார் ஒரு வருடகாலம் தங்கி, ஆயுதப் பயிற்சி பெறுவதற்கு ஈரான் இஸ்லாமிக் ரிபப்ளிக் பொறுப்பு. அவர்களது தோழமை இயக்கங்களும் இதற்குப் பொறுப்பு.

இதற்குப் பிரதி உபகாரமாக, ஈரான் தீவிரவாத அமைப்புகள் அனைத்துக்கும் அல் காயிதா ஆயுத உதவிகள் செய்யும்.

அசந்துபோய்விட்டார்கள் ஈரானியர்கள். எப்பேர்ப்பட்ட வாய்ப்பு! ஆயுத உதவி என்பதை அவர்கள் கனவிலும் எதிர்பார்த்திருக்கவில்லை. தொண்ணூறுகளின் தொடக்க வருடங்களில், அல் காயிதாவிடம் இருந்த ஆயுத பலத்தில் நான்கில் ஒரு பங்கு கூட, ஏனைய அனைத்து இயக்கங்களிடமும் இருப்பதைச் சேர்த்தால் தேறாது. தவிரவும், துராபியின் சில குள்ளநரித்தனங்களால், சோவியத் யூனியனிலிருந்து சிதறிய பல தேசங்களின் ராணுவத்திலிருந்து ஏராளமான ஆயுதங்களும் ரகசியமாக 'விலைக்கு வாங்கப்பட்டு' அல் காயிதாவிடம் அளிக்கப்பட்டிருந்தன. இது தவிர, ரஷ்ய மாஃபியாக் கூட்டங்களும் அல் காயிதாவுக்கு ரெகுலராக ஆயுத சப்ளை செய்யும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு மாதம் மும்மாரி பொழிந்துகொண்டிருந்தார்கள்.

ஈரான் இயக்கங்கள் சாதாரணத் துப்பாக்கிகள் வாங்கவே சிரமப்பட்டுக்கொண்டிருந்த நேரம் அது. நாட்டுத்துப்பாக்கிகள்தான். கையெறி குண்டுகள்தான். பெரும்பாலும் பெட்ரோல் குண்டுகளை வைத்துக்கொண்டுதான் அவர்கள் தீவிரவாதம் வளர்த்துக்கொண்டிருந்தார்கள். ஆகவே, ஒசாமாவின் நல்லுறவு தங்களுக்கு மிகப்பெரிய லாபம் என்று அவர்கள் நினைத்ததில் வியப்பில்லை.

மிகப்பெரிய லாபம், அதைக்காட்டிலும் பெரிய சந்தோஷம் என்னும்போது, உதவிக்கரத்தை இன்னமும் கொஞ்சம் நீட்டலாமே?

"ஈரானில் அல் காயிதாவின் போராளிகள் பயிற்சிக்கு வருவதை வரவேற்கும் விதத்தில், ஈரான் அரசின் மறைமுக ஆதரவை அல் காயிதாவுக்குப் பெற்றுத்தரும் பொறுப்பு எங்களுடையது" என்று

அறிவித்தார்கள், ஈரான் இஸ்லாமிக் ரிபப்ளிக் அமைப்பினர்.

இது சிக்ஸர். அமைப்புகளின் ஆதரவு எங்கே, அரசின் ஆதரவு எங்கே? ஒசாமாவுக்குச் சட்டென்று புரிந்துவிட்டது. மிகச்சிறிய தூண்டிலே போதும். விழப்போவது மீன்கள் இல்லை, திமிங்கிலங்கள்.

ஆகவே தன் திட்டத்தை இன்னும் கொஞ்சம் விஸ்தரித்தார் ஒசாமா.

ஈரானியத் தீவிரவாத அமைப்புகள் அப்போது அதிகம் கவனம் செலுத்திக்கொண்டிருந்த ஏரியா, இஸ்ரேல். பாலஸ்தீன் போராளி அமைப்புகளுக்குத் துணை அமைப்புகள் போலத்தான் அவை செயல்பட்டுக்கொண்டிருந்தன. இஸ்ரேல் இலக்குகளைத் தாக்குவது, கொரில்லா யுத்தங்களின்போதும் இண்டிஃபாதா போராட்டங்களின்போதும் பி.எல்.ஓ., ஹமாஸ் போன்ற இயக்கங்களுக்குப் பக்கபலமாக நின்று உதவுவது போன்ற காரியங்களைச் செய்துவந்தார்கள்.

ஒசாமா அவர்களிடம் ஒரு வாக்குறுதியை அளித்தார். ஈரான் குழுக்களிடம் பயிற்சி பெறும் அல் காயிதா போராளிகள், பயிற்சி முடிந்ததும் இஸ்ரேலுக்கும் அமெரிக்காவுக்குமே அனுப்பிவைக்கப்படுவார்கள். இஸ்ரேலில் களப்பணியாற்றும் ஈரானியக் குழுவினருக்கு உதவிகள் செய்வதே அவர்களது தலையாய பணியாக இருக்கும். இதன்மூலம் பாலஸ்தீன் சகோதரர்களுக்கு அல் காயிதாவின் நேரடி ஆதரவும் உதவியும் இருக்கும் என்பது நிலைநிறுத்தப்பட்டுவிடுகிறது அல்லவா? தவிர, அந்த உதவிகள் ஈரானியக் குழுக்களின் மூலமாகவே செய்யப்படுகிறது என்னும்போது அவர்களின் மகிழ்ச்சிக்குக் கேட்பானேன்?

மெய்சிலிர்த்துவிட்டன ஈரான் அமைப்புகள். உடனடியாக இந்தத் தகவல், ஈரான் அரசுக்குத் தெரிவிக்கப்பட்டது. முதலில் ஈரானின் அரசு அதிகாரிகளால் இதனை நம்பமுடியவில்லை. சன்னி இயக்கமான அல் காயிதா, ஈரான் போராளி இயக்கங்களுடன் நட்புறவு கொள்வதாவது என்று சந்தேகத்துடன்தான் பார்த்தார்கள். ஆனால் கார்ட்டொம் மாநாடுகள் முடிவடைந்து, ஈரான் போராளிகள் ஊர் திரும்பும்போதே ஆப்கனிஸ்தானில் இருந்து ஒரு பெரிய அல் காயிதா படை ஈரானுக்கு வந்து சேர்ந்தது, அவர்களை வியப்பில் ஆழ்த்தியது.

ஒசாமா உண்மையாகத்தான் நல்லுறவு கொள்ள விரும்புகிறார் என்பதை உறுதிசெய்துகொண்ட ஈரான் அரசு, தன் பங்குக்கு இன்னொரு 'வரத்தை' அல் காயிதாவுக்கு அளித்தது.

ஈரானின் தோழமை தேசம் லெபனான். ஹெஸ்புல்லாவின் லெபனான். உடனடியாக லெபனான் அரசுடன் ஈரான் கலந்துபேசி, அல் காயிதாவுக்கு உதவி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டது. ஒசாமாவும் ஈரான் அமைப்புகளுடன் செய்துகொண்ட ஒப்பந்தம் போலவே ஹெஸ்புல்லாவுடனும் சில ஏற்பாடுகள் செய்துகொள்ளவே, அவர்களுக்கும் உதவி செய்வதில் பிரச்னை ஏதுமில்லை என்றாகிவிட்டது.

ஆக, அல் காயிதா , சூடான், ஈரான், லெபனான் ரூ பாலஸ்தீன் என்றொரு புதிய கூட்டணி உருவாகிவிட்டது. இது மற்ற யாராலும் கனவில் கூட நினைத்துப் பார்க்கமுடியாத ஒரு கூட்டணி. மூன்று நாடுகளின் தீவிரவாத அமைப்புகளுடன் கூட்டணி வைப்பதன்மூலம், மூன்று அரசுகளின் ஆதரவை ஒரே சமயத்தில் அல் காயிதா பெற்றது என்பதை நம்புவது, இந்தியச் சூழலில் கொஞ்சம் சிரமமானதுதான். மத்தியக் கிழக்கின் அன்றைய அரசியல் சூழ்நிலை அப்படிப்பட்டது. பெரும்பாலான அரசுகளை இத்தகைய இயக்கங்கள்தான் அன்று போஷித்து, ஆதரித்து நடத்திவந்தன என்றால் நம்பித்தான் ஆகவேண்டும்.

அரசுகளுக்குத் தீவிரவாத இயக்கங்களின் உதவி வேண்டியிருந்தது. இயக்கங்களுக்கு அரசுகளின் ஒத்துழைப்புப் பல வகைகளில் தேவையாயிருந்தது. ஆக, ஒன்றை ஒன்று சாராமல் ஒரு பருப்பும் வேகாது என்கிற நிலைதான். குறிப்பாக லெபனான், பாலஸ்தீன், சிரியா, ஈரான், ஜோர்டன், ஏமன்

போன்ற தேசங்களில், அரசு இயந்திரம் இயங்கியதே இத்தகைய இயக்கங்களைப் பராமரிப்பதற்குத்தான் என்று சொல்லிவிடலாம். பதிலுக்கு ஒரு ராணுவத்தால் தரமுடியாத பாதுகாப்பை இந்த இயக்கங்கள் அந்தந்த நாட்டு அரசுகளுக்கு வழங்கிக்கொண்டிருந்தன.

மற்ற இயக்கங்களைக் குறித்து விரிவாகப் பார்க்கும்போது, இந்த விஷயத்தை விளக்கமாகப் புரிந்துகொள்ள முடியும். இப்போது மீண்டும் சூடான், மீண்டும் அல் காயிதா.

ஈரான் மற்றும் லெபனானின் அதிகாரபூர்வ ஒத்துழைப்பு அல் காயிதாவுக்குக் கிடைத்ததை அடுத்து, சூடான் அதிபர் அசன் அல் துராபி மிகத் தீவிரமாக ஒரு தீவிரவாத அமைப்பின் தலைவர் போலவே திட்டங்கள் தீட்ட ஆரம்பித்துவிட்டார்.

இரண்டு ஷியா தேசங்கள் முன்வந்து உதவ முடிவு செய்திருப்பதை எடுத்துக் காட்டி, நாம் ஏன் ஏனைய அனைத்து மத்தியக் கிழக்கு தேசங்களையும் உதவிக்கு அழைக்கக் கூடாது? அதாவது, 'அஃபிஷியலி ஸ்பான்ஸர்டு தீவிரவாத இயக்கமா'க அல் காயிதாவை முன்னிறுத்த ஏதாவது செய்யமுடியுமா என்று யோசித்தார் துராபி. ஒட்டுமொத்த மத்தியக் கிழக்கு தேசங்களும் தங்களது சம்பளம் வாங்காத எக்ஸ்டிரா ராணுவமாக அல் காயிதாவை நியமித்துக்கொள்வது. பதிலுக்கு அல் காயிதா அந்தந்த தேசங்களில் சுதந்தரமாக இயங்குவதற்கும் ஆயுதப் பரிமாற்றங்கள் உள்ளிட்ட பிற அனைத்து நடவடிக்கைகளுக்கும் மறைமுகமாக உதவுவது.

ஒசாமா புன்னகை செய்தார். ஏனெனில், துராபிக்குத் தெரியாத சில விஷயங்கள் இருந்தன. சவூதி அரேபியா நீங்கலாக, அத்தனை மத்தியக் கிழக்கு தேசங்களுமே அப்போது அல் காயிதாவை மறைமுகமாக ஆதரித்துக்கொண்டுதான் இருந்தன. ஆகவே, அத்தனை தேசங்களும் அல் காயிதாவைப் போலவே சவூதி அரேபியாவை அமெரிக்க அடிவருடி தேசமாகவே பார்த்துக்கொண்டும் இருந்தன. அமெரிக்காவுக்கு எதிராக அல் காயிதா நிகழ்த்த இருந்த யுத்தத்தைப் போல, சவூதி அரேபியாவுக்கு எதிராகவும் ஒரு போரைத் தீர்மானித்தால், அதற்கும் மறைமுக ஆதரவு தர அத்தேசங்கள் தயாராக இருந்தன.

இதற்கெல்லாம் பதிலாக ஒசாமா, அவர்களுக்குச் செய்யக்கூடிய விஷயங்கள் என்ன?

இதனை ஆராயப் புகுந்தால் மத்தியக் கிழக்கின் எண்ணெய்ப் பொருளாதாரத்தில் கொண்டுபோய் நிறுத்தும். அமெரிக்கா உறிஞ்சிக் குடிக்கத் திட்டமிட்டிருந்த சவூதி அரேபியாவின் எண்ணெய் வளத்தை, சிரியா, ஜோர்டன், பாலஸ்தீன் போன்ற அத்தனை பணக்காரத்தனமில்லாத தேசங்களுக்குப் பகிர்ந்து வழங்க முடியும் என்றொரு யோசனை ஒசாமா பின்லேடனுக்கு இருந்தது. என்னதான் தாய்நாடென்றாலும் சவூதி அரேபியா இப்போது எதிர்க்கட்சி தேசமாகிவிட்டபடியால், ஆத்மசுத்தியுடனேயே இதனை அவரால் சிந்திக்க முடிந்தது.

குறிப்பாக, இஸ்ரேலுடன் பாலஸ்தீனியர்கள் நடத்திக்கொண்டிருந்த யுத்தம் பெரிய அளவில் வெற்றி பெற முடியாமலிருந்ததற்குப் பணப் பஞ்சம்தான் காரணம். பல நட்பு இயக்கங்களின் உதவியுடன்தான் பாலஸ்தீன் போராட்டத்தைத் தொடர்ந்துகொண்டிருந்தது. சுற்றியுள்ள தேசங்களின் ஆதரவு கொஞ்சம் இருந்ததால். வேளைக்குச் சாப்பிட்டுக்கொள்ள மட்டும் முடிந்தது. சவூதி அரேபியாவின் எண்ணெய் வளத்தை ஓரளவு கொள்ளை கொள்ள முடிந்தால், இந்தப் பிரச்னையைப் பெருமளவில் தீர்க்கலாம் என்று சொல்லி, அதற்கொரு ப்ளூ ப்ரிண்ட்டும் தயாரித்திருந்தார் ஒசாமா.

இது அன்றைக்கு அத்தனை மத்தியக் கிழக்கு தேசங்களுக்கும் உவப்பான விஷயமாக இருந்தது. அப்படி சவூதியுடன் யுத்தம் என்று ஒன்று வருமானால் ஈராக்கின் உதவியும் இருக்கும் என்று அவர்கள் கணக்கிட்டார்கள்.

இதெல்லாமே நீண்டநாள் திட்டங்கள்தான். ஆனால் உடனடியாக அல் காயிதாவுக்குச் சாத்தியமான

விஷயம், அந்த தேசங்களின் நட்பு. மற்றும் உதவிகள். பொருளுதவி. ஆயுத உதவிகள். பயிற்சியளிக்கும் விஷயங்களில் கிடைத்த உதவிகள். விசா, பாஸ்போர்ட் தொந்தரவுகள் இல்லாமல் எங்கு வேண்டுமானாலும் பறந்துபோய்க் காரியத்தை முடித்துவிட்டு வரக் கிடைத்த அனுமதி உதவி.

சுருக்கமாகச் சொல்வதென்றால், துராபி செய்துவந்தவற்றையேதான், மத்தியக்கிழக்கு தேசங்களும் அன்றைக்கு அல் காயிதாவுக்குச் செய்துவந்தன.

ஆனால், அந்த தேசங்கள் அனைத்தும் தப்பித்துவிட்டன. துராபி மட்டும் ஒரு கட்டத்தில் மாட்டிக்கொண்டார்.



தமது மலேசிய ரசிகர் செய்த குறும்பு கலந்த கிரிமினல் நடவடிக்கைக்காகக் கடந்த வாரம் முழுவதும் நடிகர் சிவகுமார், படாதபாடு பட்ட செய்தியை பேப்பரில் படித்திருப்பீர்கள். ரசிகரையும் விட்டுக்கொடுக்காமல், பிரச்னையும் பெரிதாகாமல் தவிர்க்க, அவர் எத்தனை அவஸ்தைப்பட்டாரோ, அவருக்குத்தான் தெரியும்.

நேரடி உவமையாக இதனைச் சொல்லமுடியாது என்றாலும், கிட்டத்தட்ட இதேபோன்றதொரு தர்ம சங்கடத்தில்தான் ஒசாமா விஷயத்தில், அசன் அல் துராபி மாட்டிக்கொண்டார். சிவகுமாரின் மலேசிய ரசிகர், விளையாட்டாக போன் செய்ததுடன் விட்டுவிட்டார். ஒசாமாவை அந்த லிஸ்டில் சேர்க்கமுடியாதல்லவா? அவர் வாழ்க்கையில் விளையாட்டு என்பதே கிடையாது. எல்லாமே வினைதான்.

துராபி மாட்டிக்கொண்ட காண்டத்தைப் பார்ப்பதற்கு முன்னால், அதன் பின்னணி கலாட்டாக்களைத் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம். இந்தத் தொடரின் முதல் சில அத்தியாயங்களுக்குள்ளாகவே, நாம் பார்த்த ஏடன் துறைமுகத் தாக்குதல் திட்டத்தில் தொடங்குகிறது அது.

சூடானில் தனது தளத்தை மிக வலுவாக நிறுவி, ஏனைய இஸ்லாமியத் தீவிரவாத இயக்கங்களுடன் நல்லுறவு வளர்த்துவிட்டு, கிட்டத்தட்ட அத்தனை மத்தியக் கிழக்கு தேச அரசுகளின் ரகசிய ஆதரவையும் பெற்று, அல் காயிதா ராட்சஸ பலம் அடைந்திருந்த நிலையில்தான், சோமாலியாவுக்கு அமெரிக்க ராணுவம் ஒரு மீட்புப் படைபோலப் புறப்பட்டுச் சென்றுகொண்டிருந்தது. மீட்புப் படை என்று கூடச் சொல்லிக்கொள்ளவில்லை. உதவிப் படை. கப்பல் கப்பலாக சோமாலியப் பஞ்சத்துக்கு நிவாரணமாக உதவிப் பொருள்கள், மருந்துப் பொருள்களை ஏற்றிக்கொண்டு போனார்கள்.

இதனை யாராவது மருத்துவர்கள் அடங்கிய குழுக்களோ, சமூக நல அமைப்புகளோ செய்திருக்கலாம். அல்லது அவர்களை அமெரிக்க அரசே அனுப்பியிருக்கலாம். மாறாகத் தனது ராணுவத்தை, அமெரிக்கா அனுப்பியதுதான் சிக்கலாகிவிட்டது. அதுவும், பட்டாலியன்

பட்டாலியனாக கப்பல் நிறைய ஆயுதங்களுடன் உதவி செய்யப்போகிறேன் என்றால், என்ன நினைக்கத் தோன்றும்?

அல் காயிதாவின் ஏடன் துறைமுகத் தாக்குதல் திட்டம், தோல்வியடைந்த கதையை ஏற்கெனவே பார்த்தோம். அதன் தொடர்ச்சியாகத்தான் ஒசாமா பின்லேடன், சோமாலிய மண்ணிலேயே அமெரிக்கப் படைகளை துவம்சம் செய்ய முடிவு செய்தார். அதுவும் எப்படி? சோமாலிய இளைஞர்களைக் கொண்டே தாக்குதல் நடத்தவேண்டும். எவ்வித நவீன ஆயுதங்களுடனும் பரிச்சயம் இல்லாத அவர்களைக் கொண்டே, அமெரிக்க ராணுவத்தினரைச் சின்னாபின்னப்படுத்தவேண்டும். எப்படி, யாரால், எங்கிருந்து இவர்களுக்கு ஆயுத பலமும் போர்த்தந்திரங்களும் வருகின்றன என்று, கண்டேபிடிக்க முடியாதபடி, அசுர வேகத்தில் தாக்குதல் ஆரம்பித்து முடித்துவிட வேண்டும். இதுதான் திட்டம். இதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். எப்படி, எங்கிருந்து ஆரம்பிப்பது?

அப்போது ஒசாமாவின் மூத்த தளபதிகள் சிலரும் துராபியும்தான் அந்த ஆலோசனையை வழங்கினார்கள்.

சோமாலிய இளைஞர்களைக் கூட்டிவைத்துப் பயிற்சி அளிப்பது என்பது மிகப்பெரிய காரியம். அதனைச் சோமாலியாவில் செய்யமுடியாது. சோமாலியாவுக்கு வெளியே வேறெங்காவதுதான் செய்யவேண்டும். கண்டிப்பாக சூடானில் செய்யமுடியாது. அவர்களை சூடானுக்கு வரவழைத்தாலே, அமெரிக்க உளவுத்துறை மோப்பம் பிடித்துவிடும். ஒருத்தர், இரண்டு பேர் என்றால் சரி. சுமார் ஆயிரம் இரண்டாயிரம் பேரைக் கூப்பிட்டு வந்து சோறு போட்டுப் பயிற்சி அளித்து அனுப்புவது என்றால், மிகவும் கஷ்டம். ஆகவே, சோமாலியாவுக்கு வெகு தொலைவிலும் அல்லாமல், சோமாலியாவாகவும் அல்லாமல் ஓரிடத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும். பிரச்னையில்லாமலும் காரியம் நடக்க வேண்டும். எங்கே செய்யலாம்?

கென்யாவின் தலைநகரான நைரோபியை அவர்கள் தேர்ந்தெடுத்தார்கள். சோமாலியாவைப் போலவே அதிகம் பொருளாதார சௌகரியங்கள் ஏதுமில்லாத ஓர் ஏழை நாடு, கென்யா. அரசு அதிகாரிகளைக் கொஞ்சம் கவனித்தார்கள். நைரோபியிலேயே ஒதுக்குப்புறமாக ஓரிடம், சுமார் ஒரு வருடக் குத்தகைக்குக் கிடைத்தது. ஏற்கெனவே, அங்கிருந்த அல் காயிதாவின் கிளையை உசுப்பிவிட்டார்கள். சோமாலியாவிலிருந்தும் ஜோர்டனிலிருந்தும் அல் காயிதாவின் மூத்த தளபதிகள் சிலர், நைரோபிக்கு அனுப்பிவைக்கப்பட்டார்கள். சிரியா, பாலஸ்தீன் ஆகிய தேசங்களைச் சேர்ந்த வேறு சில போராளிக் குழு தளபதிகளும் சிறப்புப் பயிற்சியாளர்களாக அழைக்கப்பட்டார்கள்.

அடுத்தபடியாக, சோமாலிய இளைஞர்களைத் திரட்டி வருவதற்காக, ஒரு குழு ரகசியமாக அந்நாட்டுக்குப் போனது. பொதுவாக ஒப்பந்த அடிப்படையில் வேலை செய்வதற்காக, சோமாலியர்கள் அடிக்கடி வெளிநாடுகளுக்கு லாரியில் போவது வழக்கம். ஒரு மாதம், மூன்று மாதம், ஆறுமாதம் என்று கட்டுமானப் பணிகளுக்காக, அவர்களை அழைத்துப்போய் குறைந்த கூலியில் வேலை கொடுத்து அனுப்புவது, ஏனைய ஆப்பிரிக்க நாடுகளில் எப்போதும் உள்ள வழக்கம்தான். பைசாவையே கண்ணில் பார்க்காத மக்களுக்குக் கொடுக்கிற கூலி குறைவாக இருந்தால் என்ன? அதிகமாக இருந்தால் என்ன? சந்தோஷமாகப் புறப்பட்டு வந்துவிடுவார்கள்.

அந்த மாதிரியான பாவனையில்தான், அல் காயிதாவின் போராளிகள் முதலில் சோமாலியாவுக்குப் போனார்கள். அங்குள்ள இளைஞர்களைச் சந்தித்துப் பேசி, முஸ்லிம் தேசமான சோமாலியாவுக்குள் கிறிஸ்துவ அமெரிக்கப் படைகள் வந்திருப்பது, நலத்திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக அல்ல; மாறாக, சோமாலியாவையே அடிமைப்படுத்துவதற்காகத்தான் என்று தொடர்ந்து பேசிப்பேசி, மூளைச் சலவை செய்தார்கள். இல்லாவிட்டால், ராணுவம் ஏன் வருகிறது என்று கேட்டு, அவர்களையும் கொதிப்படையச் செய்தார்கள்.

கிட்டத்தட்ட மூன்று மாதகாலம் இந்த வேலை நடந்தது. சுமார் ஆயிரத்து எண்ணூறு இளைஞர்கள், சோமாலிய மண்ணில் அமெரிக்கப் படைகளுக்கு எதிராகப் போரிடத் தயார் என்று அறிவித்தார்கள். அவர்களைச் சல்லடை போட்டுச் சலித்து ஆயிரத்து நூறு பேரை மட்டும் தேர்வு செய்து, கென்யாவுக்கு அழைத்துச் சென்றது அல் காயிதா.

பயிற்சிகள் ஆரம்பமாயின. முதலில் ஆயுதங்களுடனான பரிச்சயம். துப்பாக்கிகளை எப்படித் தூக்குவது? எப்படிக் கையாள்வது என்று பாலபாடம் ஆரம்பித்தார்கள். உணவின்றி, உடல் நலமின்றி இருந்த சோமாலிய இளைஞர்கள் பலருக்கு, கனரக ஆயுதங்களைத் தூக்குவதே முதலில் கஷ்டமாக இருந்தது. அவர்களுக்கு வேண்டிய சத்துணவுகள், மருந்துகள் அளித்து, முதலில் உடம்பைத் தேற்றி, உடற்பயிற்சிகள் செய்ய வற்புறுத்திக் கொஞ்சம் பலம் சேர்த்தார்கள். அதன்பின் போர்ப் பயிற்சிகள் ஆரம்பமாயின.

கிட்டத்தட்ட ஓராண்டுக் காலம் நடந்தன இந்தப் பயிற்சிகள். கல்வியறிவோ, முறையான போர்ப் பயிற்சியோ இல்லாதுபோனாலும், சொல்லிக்கொடுப்பதை அப்படியே பிடித்துக்கொள்ளும் திறமை அந்த இளைஞர்களிடம் இருந்தது. குறிபார்த்துச் சுடுவதில் அவர்கள் ஒசாமா பின்லேடனையே வியப்பில் ஆழ்த்தும் அளவுக்குத் தேறினார்கள். கொஞ்சம் காட்டுத்தனமான தாக்குதல் உத்திகள்தான் அவர்களுக்குச் சரிப்பட்டது. ஆகவே, முறையான போர்ப்பயிற்சிகளைக் காட்டிலும் கெரில்லாத் தாக்குதல் முறைகள் அதிகம் கற்றுத்தரப்பட்டன.

ஓரளவு அவர்கள் பயிற்சியில் தேறிவிட்டார்கள் என்பது உறுதியானதும், உரிய ஆயுதங்களைக் கொடுத்து அவர்களை ஒரு முகூர்த்த வேளை பார்த்து, சோமாலியாவுக்கு அனுப்பிவைத்தது அல் காயிதா.

'எதற்காகவும் காத்திருக்காதீர்கள். ஒரு போதும் அச்சப்படாதீர்கள். போய் இறங்கியதுமே அடிக்க ஆரம்பித்துவிடுங்கள். நீங்கள் கவனமாக இருக்க வேண்டிய ஒரே விஷயம், நீங்கள் எங்கே இருந்து தாக்குகிறீர்கள் என்பது மட்டும் அமெரிக்கர்களுக்குத் தெரியவே கூடாது.'

- இதுதான் அல் காயிதா அவர்களுக்குச் சொன்ன அதிமுக்கியமான அறிவுரை. கெரில்லாத் தாக்குதலின் அடிப்படையே இதுதான். தாக்குதல் நடத்துபவர்கள் பதுங்கியிருக்கும் இடம் கண்டிப்பாக எதிரிக்குத் தெரியக்கூடாது.

சோமாலியாவில் பாலைவனங்கள் அதிகம். மலை மாதிரி மணல் மேடுகள் சகட்டுமேனிக்கு இருக்கும். சும்மா வானம் பார்த்துப் படுத்துக்கொண்டு மண்ணை வாரி மேலே போட்டுக்கொண்டாலே கண்டுபிடிப்பது கஷ்டம். அப்படியிருந்தும், அந்த இளைஞர்கள் கவனமாகப் பாலைவனப் பகுதிகளில், தங்களுக்கான ரகசியப் பதுங்கு குழிகளை ஒழுங்காக அமைத்துக்கொண்ட பிறகுதான் யுத்தத்தை ஆரம்பித்தார்கள்.

அதுவரை சோமாலியாவில் தங்களுக்கு எதிராக ஒரு தாக்குதல் நடக்கக் கூடும் என்பது குறித்தே சிந்தித்திராத அமெரிக்க ராணுவம், துப்பாக்கிகளையே தூக்காமல் சமூக சேவை செய்வதில் குறியாக இருந்தது. திடீரென்று இந்த இளைஞர்கள், அமெரிக்க முகாம்களைக் குறிவைத்துத் தாக்குதல் நிகழ்த்தத் தொடங்கியதும் முதலில் வெலவெலத்துப் போய்விட்டார்கள். சுதாரித்துக் கொள்வதற்குள், ஏராளமான ஆயுதங்கள் களவாடப்பட்டுவிட்டன.

அல் காயிதா சந்தோஷப்பட்டது. அமெரிக்கா பதிலடி தரத் தயாரானபோது சோமாலியர்கள், மிக உக்கிரமான கெரில்லாத் தாக்குதல்களில் இறங்கிவிட்டார்கள். இரவு வேளைகளில் அவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்றே தெரியாது. வெயில் சுட்டெரிக்கும் பகல் பொழுதுகளில், அமெரிக்க ராணுவத்தினர் பெரிய பெரிய கண்டெய்னர் வண்டிகளுக்குள்ளே ஏர் கூலர் வைத்துக்கொண்டு, வெயிலுக்குப் பதுங்கியிருக்கும் வேளை பார்த்து, கையெறி குண்டுகளை வீச ஆரம்பிப்பார்கள். நிறுத்தாமல் பல ரவுண்டுகள் சுட்டுக்கொண்டே இருப்பார்கள்.

பதில் தாக்குதலுக்கு அமெரிக்கர்கள் வெளியே வந்தால், அவர்களால் சோமாலிய வெயிலைச் சில மணிநேரங்களுக்கு மேல் தாங்கமுடியாது. அந்த முதல் சில மணிநேரங்கள் மட்டும் சோமாலியர்கள் காணாமல் போய்விடுவார்கள். அமெரிக்கப் படை தேடி அலுத்து, சோர்வுடன் திரும்பும் வேளையில் மீண்டும் தாக்குதல் தொடங்கும்.

1993 அக்டோபர் மாதம் சோமாலியாவில், கடும் குளிர் வீசத் தொடங்கியது. அமெரிக்கர்களாலேயே தாக்குப்பிடிக்க முடியாத பேய்க்குளிர் அது. அந்தச் சமயத்தில், சோமாலியர்கள் தங்கள் தாக்குதலை இரவுப் பொழுதுக்கு மாற்றிக்கொண்டார்கள். பனிக்கரடிகள் கூட வெளியே வரத் தயங்கும் குளிர்ப்பொழுதில், அவர்கள் மிக உக்கிரமாக கெரில்லாத் தாக்குதல் நடத்த ஆரம்பித்தார்கள். யாராலுமே வீழ்த்த முடியாத அமெரிக்க விமானப்படை ஹெலிகாப்டர்கள் இரண்டை, அவர்கள் வெகு அநாயாசமாகச் சுட்டு வீழ்த்தியிருந்தார்கள். நூற்றுக்கணக்கான அமெரிக்க வீரர்களைக் கொன்றும் இருந்தார்கள். ஏராளமான சேதம் மற்றும் ரத்தம். நிலைகுலைந்துவிட்டது அமெரிக்க ராணுவம். எத்தனையோ உத்திகளைக் கையாண்டு, அவர்களை ஒடுக்கப் பார்த்தும் முடியவில்லை.

அப்போதுதான், அமெரிக்கா விழித்துக்கொண்டு அல் காயிதாவை கவனிக்கத் தொடங்கியது. சோமாலியப் படைக்கு உதவி செய்ய, மூன்று அல் காயிதா கமாண்டர்களும் சோமாலியாவுக்குள் வந்திருந்தார்கள். அவர்கள் திட்டமிட்டுத் தர, சோமாலிய இளைஞர்கள் தாக்குதலை நடத்திக்கொண்டிருந்தார்கள். மறுபுறம் நைரோபியிலிருந்து தீரத் தீர ஆயுதங்களும் வெடிமருந்துகளும் ரகசிய வழிகளில் அனுப்பப்பட்டுக்கொண்டே இருந்தன.

இனி தாக்குப்பிடிக்கவே முடியாது என்று முடிவு செய்து, 1994-ம் ஆண்டுத் தொடக்கத்தில் அமெரிக்கா, சோமாலியாவிலிருந்து முற்றிலுமாகத் தனது படைகளை விலக்கிக் கொண்டுவிட்டது. சோமாலியாவிலிருந்து படைகளை விலக்கிய அதே கணத்தில், தனது பார்வையை மிகத் தீவிரமாக அல் காயிதாவின் பக்கம் செலுத்தத் தொடங்கியது.

அதுநாள் வரை தனது புகழ்பெற்ற உளவு அமைப்பான சி.ஐ.ஏ., வெறுமனே லாலிபாப் சாப்பிட்டுக்கொண்டிருந்ததை எண்ணி, தலையில் அடித்துக்கொண்டது. ஆப்கனிஸ்தானில் ஒசாமா இல்லை; வேறெங்கோ போயிருக்கிறார் என்பது மட்டுமே தெரிந்திருந்த அமெரிக்காவுக்கு, ஒசாமா சூடானில்தான் இத்தனை ஆண்டுகளாக உட்கார்ந்துகொண்டு வேலை பார்த்திருக்கிறார் என்கிற செய்தி மிகத் தாமதமாகவே தெரியவந்தது.

ஒரு வகையில் இதனைக் குற்றம் சொல்லவும் முடியாது. இன்றைக்கு இருக்கிற அளவுக்கு, அப்போது ஒசாமா ஒன்றும் அத்தனை மோசமான தீவிரவாதியாக அடையாளம் காணப்படவில்லை. தாக்குதல்களுக்கான ஆயத்தங்களில்தான் அவர் ஈடுபட்டிருந்தாரே தவிர, பெயர் சொல்வது போலப் பெரிய தாக்குதல்கள் ஏதும் அதுவரை நடைபெற்றிருக்கவில்லை. தவிரவும், அமெரிக்காவின் மீது அவர் கொண்டுள்ள கோபம் எப்படிப்பட்டது என்பது வெளிப்படையாகத் தெரிகிற அளவுக்கு, அறிக்கைகள் ஏதும் கூட வெளியிடப்பட்டிருக்கவில்லை. அதனால், சி.ஐ.ஏ. அவரையும் அல் காயிதாவையும் அவ்வளவாகப் பொருட்படுத்தாமல் இருந்தது வியப்புக்குரிய விஷயமல்ல. ஆனால், மேற்படி சோமாலிய சம்பவமும் அது நடந்து கொண்டிருக்கும் காலத்திலேயே திட்டமிடப்பட்டு, வெற்றிகரமாக நிறைவேறிய 1993 அமெரிக்க உலக வர்த்தக மைய முதல் தாக்குதல் (2001 தாக்குதலுக்கு முன்பு) நடவடிக்கையும் அமெரிக்காவுக்கு எச்சரிக்கை மணி அடித்துவிட்டன.

சோமாலியத் தோல்வியைக்கூட அமெரிக்கா ஜீரணித்திருக்கும். ஆனால், தனது சொந்த மண்ணிலேயே நிகழ்த்தப்பட்ட அந்தக் கோரத் தாக்குதல் அவர்களைத் திக்குமுக்காட வைத்துவிட்டது.



கர்ர்ர்ர்ர்ர்ர்ர் என்று தொண்டையைக் கனைத்தபடி, விவேக் ஒரு படத்தில் காறித் துப்புவார்.

எதிரே இருப்பவர், 'எதுக்குடா இப்ப துப்பின?' என்று கேட்பார். அதற்கு விவேக் சொல்லும் பதில்: 'உன்ன அவமானப்படுத்தத்தான்.'

இப்படி யோக்கியமான தமிழில் எழுதிப் படித்தால், மேற்படி இரண்டு வசனங்களும் சிரிப்பை வரவழைக்காது. ஆனால், படத்தில் பார்க்கும்போது, சிரிப்பு பிய்த்துக்கொண்டு போகும்.

சிரிக்க வேண்டுமானால் இப்படிச் செய்யலாம். உண்மையிலேயே அவமானப்படுத்த வேண்டுமென்றால்? அதுவும் ஒரு தனி நபரை அல்லாமல் ஒரு தேசத்தையே?

அதுதான் அல் காயிதாவின் உத்தேசம். இலக்கு அமெரிக்கா. திட்டம் செயல்படுத்தப்பட்ட ஆண்டு 1993, பிப்ரவரி மாதம் 26-ம் தேதி. கவனித்துக்கொள்ள வேண்டிய தேதி இது. அமெரிக்கா மீதான அல் காயிதாவின் முதல் தாக்குதல் நடந்தது அப்போதுதான். அதுவும் அமெரிக்க மண்ணிலேயே. சோமாலிய ரகசியத் திருப்பணிகள் ஒரு பக்கம் நடந்துகொண்டிருந்தபோதே திட்டமிடப்பட்டு அமெரிக்காவில் நிகழ்த்தப்பட்ட இந்தத் தாக்குதலில், சரியாக ஆயிரம் பேர் படுகாயமடைந்து மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டார்கள். ஆறுபேர் தலத்திலேயே பிராணனை விட்டார்கள்.

வல்லரசு என்றும், உலகின் போலீஸ்காரன் என்றும் தெனாவட்டுடன் வலம் வந்த அமெரிக்காவுக்கு, அன்றைக்கு விழுந்த அடி சாதாரணமானதல்ல. ஆறுபேர் உயிரிழப்பல்ல; உலக வர்த்தக மையக் கட்டடம் என்கிற அமெரிக்காவின் பொருளாதார நாடி இயங்கிக்கொண்டிருந்த இடத்துக்கு அடியில் வைக்கப்பட்ட குண்டு என்பதால், அது ஒரு தேசிய அவமானமாக உடனடியாகக் கருதப்பட்டுவிட்டது.

இந்தத் தாக்குதல் திட்டத்தின் சூத்திரதாரியாகச் செயல்பட்டு, பின்னால் 1995-ம் ஆண்டு பாகிஸ்தானில் வைத்துக் கைது செய்யப்பட்ட ரம்ஸி யூசுஃப் (Ramzi Yousef) என்கிற இளைஞன், ஒரு பேட்டி கொடுத்தான். அந்தப் பேட்டியில் அவன் உதிர்த்த ஒரு திருவாய்மொழி: "எப்படியும் 2,50,000 பேரையாவது தீர்த்துக்கட்டவேண்டும் என்று நினைத்தேன். எங்கேயோ கணக்கு பிசகிவிட்டது."

இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம் பேரை ஒரு குண்டு கொல்லுவதற்கான ப்ராக்டிகல் சாத்தியங்கள் என்ன என்பது ஒருபுறம் இருக்க, நோக்கத்தில் இருந்த தீவிரத்தைப் பாருங்கள்!

அதுதான் அல் காயிதா. ரம்ஸி யூசுஃப் என்றொரு தீவிர ஜென்மம் அமெரிக்காவில் ஏதாவது நாச காரியம் செய்ய நினைத்து, அலைந்துகொண்டிருக்கிறது என்பதுகூட, அல் காயிதாவில் யாருக்கும் அப்போது தெரியாது. தற்செயலாகத்தான் ஒரு நூலிழை அகப்பட்டது.

ரம்ஸி யூசுஃப், குவைத்தில் பிறந்தவன். அவனது தந்தை ஒரு பாகிஸ்தானி. குவைத் ஏர்வேஸில் கௌரவமான உத்தியோகம் பார்த்துக்கொண்டிருந்தவர். ஆனால், அவர்கள் குவைத்தில் வசித்துவந்த பகுதியில் பாலஸ்தீனிய அகதிகள் அதிகம் இருந்தார்கள். அவர்களும் முஸ்லிம்கள். குவைத்தும் ஒரு முஸ்லிம் நாடுதான். ஆனபோதிலும், பாலஸ்தீன அகதிகள் இரண்டாம்தரக் குடிமக்களாக அங்கே நடத்தப்பட்டதைப் பார்த்து, சிறிய வயதிலேயே மிகுந்த கோபமடைந்தான் ரம்ஸி யூசுஃப். அவனது கோபத்தை ஊதிப் பெரிதாக்க, அவனது தாய்மாமன் ஒருத்தரும் அங்கேயே இருந்தார். ஒரு பக்கம் இந்தக் கோபத்தை வளர்த்துக்கொண்டு, மறுபக்கம் நன்றாகப் படிக்கவும் செய்தான் யூசுஃப்.

1989-ம் ஆண்டு இன்ஜினீயரிங் டிகிரி முடித்துவிட்டு, குவைத்தின் திட்டத்துறை அமைச்சகத்தில் தகவல்தொடர்புத்துறையில் ஓர் இளநிலைப் பொறியாளராக உத்தியோகத்தில் சேர்ந்தான். ஒழுங்காக உத்தியோகம் பார்த்திருக்கலாம். ஆனால், முஸ்லிம் சகோதரத்துவ சித்தாந்தம் அவனை சும்மா இருக்கவிடவில்லை. வேலையை விட்டுவிட்டு, சாகசம் செய்யக் கிளம்பிவிட்டான். தாய்மாமனின் ஆசீர்வாதமும் ஆதரவும் இருந்தபடியால், தயங்காமல் தீவிரவாதம் செய்ய உலக நாடுகள் பலவற்றுக்குக் கிளம்பிப் போகத் தொடங்கினான்.

என்ன செய்வது, எங்கிருந்து தொடங்குவது? என்று யோசித்துக் கொண்டிருந்தபோதுதான், அமெரிக்கா மீதான தாக்குதலில் ஆரம்பித்தால் ஒரு நல்ல கவனம் கிடைக்கும் என்று முடிவு செய்து, அமெரிக்காவுக்கு 1992-ம் ஆண்டு தொடக்கத்தில் வந்து சேர்ந்தான்.

வர்த்தக மையக் கட்டடத்தைத் தாக்கலாம் என்று முடிவு செய்து, அதற்கான வேலைகளை அவன் செய்துகொண்டிருந்தபோது, திடீரென்று ஒரு சமயம் அவனுக்குப் பணமுடை ஏற்பட்டது. அவசரமாக ஒரு அறுநூறு டாலர் வேண்டியிருந்தது. அந்தப் பணம் கிடைத்தால்தான் காரியம் ஒழுங்காக நடக்கும் என்கிற நிலைமை. என்ன செய்யலாம்? திக்கற்றவர்களுக்கு தெய்வமும் தாய்மாமனுமே துணை.

யூசுஃப் உடனே துபாயில் இருந்த தன் மாமனுக்கு டெலிபோன் செய்தான். ‘இந்த மாதிரி ஒரு காரியத்தை உத்தேசித்திருக்கிறேன். நீங்கள் கொஞ்சம் பண உதவிக்கு ஏற்பாடு செய்யமுடியுமா?’ என்று கேட்டான்.

யூசுஃப் ஒரு கத்துக்குட்டி, சுயமுயற்சித் தீவிரவாதி. அவனுக்கு அப்போது எந்த இயக்கத்தின் பின்புலமும் இல்லை. அவனது மாமா கொஞ்சம் தேர்ந்த தீவிரவாதி. ஆனால், அவரும் எந்த இயக்கத்திலும் இல்லை. ஒப்பந்த அடிப்படையில் யார் கூப்பிட்டாலும் போய்த் தீவிரவாதம் வளர்த்துவிட்டு வரும் நபர் அவர். அவர் பெயரை இப்போதாவது சொல்லிவிடலாம்.

காலீத் ஷேக் முகம்மது. ஆம். செப்டெம்பர் 11, 2001 அன்று அதே அமெரிக்காவில், அதே உலக வர்த்தக மையக் கட்டடத்தின்மீது விமானங்களை மோதி இடித்த அல் காயிதாவின் திருப்பணிக்கு, அவர்தான் சூத்திரதாரி.

சீனியர் தீவிரவாதியான அந்த ஷேக் மாமா, தன் மருமகனுக்கு உடனடியாக அறுநூறு டாலர் கிடைக்க உதவி செய்ததுடன் நிறுத்திக்கொள்ளாமல், உடனடியாக அல் காயிதாவுடன் தொடர்புகொண்டு, ரம்ஸி யூசுஃபின் திட்டத்தை விளக்கினார். WTC கட்டட வளாகத்தில் மிகப்பெரிய சேதத்தை உண்டாக்குவதன் மூலம் அமெரிக்க அரசுக்கு அதிர்ச்சிவைத்தியம் தரும் பணியை அல் காயிதா தொடங்க, ரம்ஸி யூசுஃப் ஒரு நல்ல கருவியாக இருப்பான் என்றும் சொன்னார்.

அல் காயிதா விழித்துக்கொண்டது. இதுதான் தருணம் என்று முடிவுசெய்து, உடனே தன்

அமெரிக்கப் பிரிவை அழைத்து, விஷயத்தை விவரித்தது. அன்றைய அல் காயிதாவின் அமெரிக்கப் பிரிவு என்பது, தனியொரு கட்டடத்தில் இயங்கிக்கொண்டிருந்த கோஷ்டியல்ல. தேசம் முழுவதும் வேறு வேறு பெயர்களில் எத்தனையோ நூறுபேர் அல் காயிதாவின் ஆட்களாக உலவிக்கொண்டிருந்தார்கள். அவர்களையெல்லாம் ஒருங்கிணைக்கும் பணியில், கண்ணில்லாத கிழவரான ஷேக் உமர் அப்துர் ரெஹ்மான் படு தீவிரமாக இருந்தார்.

ப்ரூக்ளின் நகரின் மத்தியில் இருந்த ஃபாரூக் மசூதிதான் அவரது ஆபீஸ். அங்கேதான் அவர் எப்போதும் இருப்பார். மேலுக்குச் சில சிறுபத்திரிகைகள் நடத்திக்கொண்டு, உலக அமைதிக்காகப் பிரார்த்தனைகள் செய்துகொண்டு, அவ்வப்போது பொதுக்கூட்டங்கள் நடத்தி நிதி வசூலித் துக்கொண்டிருந்த நல்ல தாத்தாவாக அவர் அடையாளம் காணப்பட்டிருந்தார்.

அமெரிக்க போலீஸுக்கோ, உளவுத்துறைக்கோ அவர்மீது துளி சந்தேகமும் கிடையாது. ஆகவே அல் காயிதா தலைமை உடனடியாக அவரைத் தொடர்புகொண்டு, ரம்ஸி யூசூஃபுக்கு வேண்டிய உதவிகள் செய்யும்படி கைகாட்டிவிட்டது.

உதவி என்றால் என்ன? வைப்பதற்கு குண்டு வேண்டும். அதை எந்த மளிகைக்கடைக்கும் போய் வாங்கமுடியாது. மூலப் பொருள்களை வாங்கி, சொந்தமாக குண்டு தயாரிக்க வேண்டும். அது ஒரு தொழிற்கல்வி. அந்தக் கல்விக்கு எங்கே போவது?

பிரச்னையே இல்லை என்றார் அல் காயிதாவின் அமெரிக்கத் தாத்தா. ரம்ஸி யூசூஃபும் அவனது இன்னொரு கூட்டாளியான அஜாஸ் என்பவனும் உடனடியாக ஆப்கனிஸ்தானுக்கு மாட்டுவண்டியிலோ, விமானத்திலோ அனுப்பிவைக்கப்பட்டார்கள்.

ஆப்கன் காடுகளில் இயங்கிவந்த அல் காயிதாவின் முகாம்களிலேயே அவர்கள் தங்கவைக்கப்பட்டார்கள். ஒருவாரம் அங்கே தங்கிவிட்டு ரம்ஸி யூசூஃப் மட்டும் வேறு சில பணிகளுக்காக பாகிஸ்தான் போய்விட, அவனது கூட்டாளி அஜாஸ் அங்கேயே காத்திருந்தான். காபூலிலிருந்து வெடிகுண்டு தயாரிக்கத் தேவையான மூலப் பொருள்கள் அங்கே வந்து சேர்ந்தன. பாகிஸ்தானைச் சேர்ந்த ஒரு பார்ட் டைம் தீவிரவாதி வந்து எப்படி மூலப்பொருள்களைக் கையாள்வது, எதையெதை எத்தனை தேக்கரண்டி சேர்ப்பது என்பது போன்ற பாடங்களை நடத்தினார்.

ஒருவாறு அவன் குண்டு தயாரிக்கக் கற்றுக்கொண்டபிறகு, ஆப்கன் ரூ பாகிஸ்தான் எல்லையில் உள்ள கால்டான் (Khaldan) என்னும் இடத்தில் இருந்த அல் காயிதா முகாமிலிருந்து அவர்களுக்கான பயிற்சிக் கையேடு ஒன்று பிரத்தியேகமாகத் தயாரிக்கப்பட்டு வந்து சேர்ந்தது. அதையும் வாங்கிக்கொண்டு அவன் பாகிஸ்தானுக்குப் போய் ரம்ஸி யூசூஃபுடன் சேர்ந்துகொண்டான்.

அவர்கள் மீண்டும் அமெரிக்கா போய்ச் சேர்ந்து கற்றுத்தேர்ந்த விஷயங்களைச் செயல்படுத்திப் பார்க்க நினைத்தபோதுதான், துரதிர்ஷ்டவசமாக அஜாஸுக்கு அந்தக் கலவை ஃபார்முலா சரியாக நினைவுக்கு வரவில்லை. எதை எதை எந்த அளவு சேர்த்தால் குண்டு தயாராகும் என்கிற ஃபார்முலா. ஆகவே மீண்டும் ப்ரூக்ளின் மசூதிக்குப் போய் விஷயத்தைச் சொல்லி, உதவக் கேட்டுக்கொண்டார்கள்.

பார்வையற்ற ஷேக், இதெல்லாம் வேலைக்கு ஆகாது என்று நினைத்தாரோ என்னமோ. உடனடியாக ஈராக்கைச் சேர்ந்த ஒரு பாம் எக்ஸ்பர்ட் வரவழைக்கப்பட்டான். அவன் பெயர் அப்துல் ரஹ்மான் யாசின். அல் காயிதா என்றில்லை. எந்த இயக்கம் குண்டு வைப்பதென்றாலும், அதைத் தயாரித்துத் தருவதுதான் இவனது முழுநேரப் பணி. யார், என்ன காரணத்துக்காக குண்டு கேட்கிறார்கள், எங்கே வைக்கப்போகிறார்கள், எத்தனை பேர் இறப்பார்கள் என்றெல்லாம் கேட்க

மாட்டான். கொடுத்த காரியத்தை ஆத்மசுத்தியுடன் முடித்துக்கொடுத்துவிட்டு, கூலி வாங்கிக்கொண்டு ஊர் போய்ச் சேர்ந்துவிடும் சமர்த்துத் தீவிரவாதி இவன்.

அந்த யாசின் பாய் வந்தவுடன் ரம்ஸி யூசுஃபும் அஜாஸும் உட்கார்ந்து அவனுடன் விவாதித்தார்கள். தங்கள் திட்டத்தை விவரித்து, எப்படியும் பல்லாயிரக்கணக்கான மக்கள் இறக்கவேண்டும் என்கிற தங்கள் லட்சியத்தையும் சொன்னார்கள்.

பல்லாயிரக்கணக்கு என்றால் தயாரிக்கப்போகிற குண்டு கொஞ்சம் பலமாகவே இருக்கலாமே? யாசின் கணக்குப் போட்டு வேலையை ஆரம்பித்தான்.

உரமாகப் பயன்படும் யூரியாதான் மூலப்பொருள் என்று முடிவு செய்து, 600 கிலோ யூரியாவை முதலில் வாங்கினான். அதில் நைட்ரோக்ளிஸிரின், சல்ஃபூரிக் ஆசிட், அலுமினியம் அஜைட் (aluminium azide), மக்னீசியம் அஜைட் (magnesium azide) ஆகிய வேதிப்பொருள்களை வேண்டியமட்டும் கலந்தான். (இந்த azide என்பது நைட்ரஜன் சேர்மங்களின் அடிப்படையிலான ஆர்கானிக் கெமிக்கல் வகையறா. யாக்கை ரசாயனம் என்று ராஜாஜி தமிழில் சொன்னால் மண்டை காய்ந்துவிடும். ஆக, அது அப்படியே இருக்கட்டும். மிகவும் ஆபத்தான ரசாயனக் கலவை என்பது மட்டும் நமக்குப் போதும்.) பாட்டிலில் அடைக்கப்பட்ட உயர் அழுத்த ஹைட்ரஜன் கொஞ்சம் சேர்த்துக்கொள்ளப்பட்டது. எதற்கும் இருக்கட்டும் என்று கொஞ்சம் சோடியம் சயனைடையும் சேர்த்தான். இது எதற்கு என்றால், குண்டு வைக்கப்படும் இடத்தைச் சுற்றி உள்ள கதவு இடுக்குகள், ஜன்னல்கள், பிளாஸ்டிக் மற்றும் இரும்புக் குழாய்கள் எது இருந்தாலும், எங்கே கொஞ்சம் ஓட்டை இருந்தாலும் அதன் வழியே மெல்ல நுழைந்து கட்டடத்தின் மேலே போய்விடும். சுவாசித்தால் அடுத்த செகண்ட் சொர்க்கலோகப் பிராப்திதான். இவ்வாறாக, அட்வான்ஸ்டு லெவல் குண்டு தயாரிப்பை ரம்ஸி யூசுஃபுக்குப் பக்கத்தில் இருந்து செய்துகாட்டி சிலிர்ப்படையச் செய்துவிட்டு, தான் தயாரித்த கலவையை ஒரு பெரிய சிலிண்டருக்குள் திணித்து வெளியே ஒரே ஒரு ஃப்யூஸ் (fuse) மட்டும் தெரிகிறபடி ஏற்பாடு செய்துகொடுத்தான்.

ரம்ஸி யூசுஃப் செய்யவேண்டியது என்ன? மேற்படி குண்டு சிலிண்டரைப் பத்திரமாக எடுத்துச் சென்று உரிய இடத்தில் வைத்துவிட வேண்டியது. சும்மா தம்மடிப்பது மாதிரி சிகரெட் லைட்டரை எடுத்து, தீ வரவழைத்து, அந்த ஃப்யூஸின் மேல் லேசாகக் காட்டிவிட்டு இடத்தைவிட்டுப் போய்விட வேண்டியதுதான்.

வெளியே சின்னதாக ஒரு வெள்ளைப்பூண்டு மாதிரி தெரியும் அந்த ஃப்யூஸின் உண்மையான நீளம் இருபது அடி. ஆகவே முனையில் வைக்கப்பட்ட நெருப்பு, அந்த இருபது அடியையும் கடந்து வேதிப் பொருள் கேந்திரத்தைத் தொடுவதற்கு சரியாகப் பன்னிரண்டு நிமிடங்கள் ஆகும் என்று யாசின் சொல்லியிருந்தான்.

அந்தப் பன்னிரண்டு நிமிடங்கள்தான் யூசுஃபுக்கு இருக்கும் நேரம். அதற்குள் அவன் தப்பித்து வெளியேறி காணாமல் போய்விடவேண்டும். இல்லாவிட்டால் அவனுக்கும் பரலோகப் பிராப்தி நிச்சயம்.

மூலப் பொருள்களுக்கான செலவுத்தொகையாக முந்நூறு டாலர்களையும் தன் செய்கூலி, சேதாரம் எல்லாம் சேர்த்து சில ஆயிரம் டாலர்களையும் வாங்கிக்கொண்டு யாசின் ஊரைப் பார்க்கப் புறப்பட்டுப் போனான்.

குண்டு ரெடி. அடுத்து, அதை எப்படி வர்த்தக மையக் கட்டடத்துக்கு எடுத்துச் செல்வது? இந்த இடத்தில்தான் சிக்கல் வந்தது.



அது ஒன்றும் கையடக்கத் திருக்குறள் சைஸில் தயாரிக்கப்பட்ட வஸ்து அல்ல. அறுநூறு கிலோ யூரியாவை மூட்டை மூட்டையாக அடைத்தாலே, எப்படியும் ஐந்தாறு மூட்டைகள் ஆகிவிடும். ஒரு பெரிய கண்டெய்னரில் அதைத் திணித்து, மேலுக்கு சாமக்கிரியைகள் எல்லாம் செய்து சேர்த்துப் பார்த்தால், ஒரு குட்டி ராட்சஸன் மாதிரி இருந்தது.

வேறு வழியே இல்லை. எப்படியும் ஒரு ஜீப் அல்லது லாரி இல்லாமல் எங்கும் எடுத்துப் போகமுடியாது. ஆனால், அதென்ன குடியரசு தின அணிவகுப்பு லாரி மாதிரி, ரைட் ராயலாகவா போகமுடியும்? வேறென்ன செய்யலாம்?

எல்லாப் புறங்களும் மூடிய ஒரு நல்ல, நீளமான, பெரிய வேன் தான் சரி என்று தீர்மானித்தார்கள்.

ஆனால், ஒரு வேனை விலைக்கு வாங்கும் உத்தேசமெல்லாம், அப்போது ரம்ஸி யூசுஃப்புக்கு இல்லை. என்னதான் அல் காயிதா பின்னணியில் இருந்தாலும், அவனளவில் தன்னை ஒரு சுய வேலைவாய்ப்புத் தீவிரவாதியாகத்தான் அவன் கருதிக்கொண்டிருந்தான். ஆக, ஏழைக்கேற்ற எள்ளுருண்டையாக வாடகைக்கு ஒரு வேனை எடுக்கலாம் என்று தீர்மானித்தான்.

காமெடி அங்கேதான் ஆரம்பித்தது.

வேன் வாடகைக்கு எடுக்கிற பொறுப்பை, முகம்மது சலாமி என்கிற தன் நண்பன் ஒருவனிடம் அளித்திருந்தான் ரம்ஸி யூசுஃப். தான் வாடகைக்கு எடுக்கப்போகிற வேன் என்ன ஆகப்போகிறது, அதன் விளைவு என்னவாக இருக்கலாம் என்பதையெல்லாம், மிக நன்றாக அறிந்தவன் தான் அவன். ஆகவே, தன்னிடம் அளிக்கப்பட்ட பொறுப்பை அதிகபட்சக் கலை நேர்த்தியுடன் செய்து முடிக்க முடிவு செய்து, ஒரு காரியம் செய்தான்.

குண்டு வைப்பதற்காகத் தேர்ந்தெடுத்த தினத்துக்குச் (பிப்ரவரி 26, 1993) சரியாக இரண்டு நாள் முன்னதாக, ஒரு வாடகை கார் நிறுவனத்துக்குப் போய் தகுந்த வேன் ஒன்றைப் பார்த்து, கொஞ்சம் அட்வான்ஸும் கொடுத்து, ஓட்டிக்கொண்டு வந்துவிட்டான். வேனை அனைவரும் பார்த்தார்கள். அனைவருக்கும் திருப்தி. சமர்த்தாக ஆளுக்கு ஒரு பக்கம் கைகொடுத்துத் தூக்கி, அன்றிரவே குண்டை அந்த வேனில் ஏற்றியும் விட்டார்கள்.

இன்னும் நாற்பத்தெட்டு மணிநேரத்தைக் கடத்தியாக வேண்டுமே? வேனை பத்திரமாக ஓரிடத்தில் நிறுத்தி, மேலே ஒரு தாற்காலிக ஷெட் கட்டி, காவலுக்கும் ஆள் போட்டுவிட்டார்கள்.

அத்தோடு விட்டானா முகம்மது சலாமி என்றால், அதுதான் இல்லை!

மறுநாள் காலையே கர்மசிரத்தையாக, அந்த வாடகை கார் நிறுவனத்துக்கு போன் செய்து, தான் வாடகைக்கு எடுத்த வேன் களவாடப்பட்டுவிட்டது என்று ஒரு புகார் செய்தான்.

அதனால் என்ன, இழுத்து வைத்து நாலு சாத்து சாத்தியிருக்க வேண்டியதுதானே என்று தோன்றுமானால், கொஞ்சம் பொறுங்கள். அமெரிக்க சட்டதிட்டங்கள் அப்படி. பொதுமக்கள், குடிமக்கள், வந்தேறிகள், வந்து ஏறக் காத்துக்கொண்டிருப்பவர்கள் யாரும் எவ்விதமான மன உளைச்சலுக்கும் ஆளாகக் கூடாது என்று நினைத்து, ஏகப்பட்ட நுணுக்கமான விஷயங்களை யோசித்து யோசித்துச் சில கன்ஸ்யூமர் சட்டங்களை அமெரிக்கா வகுத்திருக்கிறது.

வாடகைக்கு என்று ஒருத்தன் ஒரு வேனை எடுக்கிறான். மனைவியுடனோ, மற்றவர்களுடனோ எங்கோ உல்லாசப் பயணம் போக முடிவு செய்து, வீட்டு வாசலில் வண்டியை நிறுத்தியிருப்பான். எவனோ களவாணிப்பயல் எடுத்துப் போய்விட்டான் என்றால் பாவம், அதற்கு அவன் என்ன செய்யமுடியும்? கண்டுபிடிக்க வேண்டியது காவல்துறையின் பொறுப்பு. வாடகை கார் நிறுவனம் இன்ஷ்யூர் செய்திருக்கிறதல்லவா? ஒருவேளை வண்டி கிடைக்காது போனால், இன்ஷ்யூரன்ஸ் நிறுவனம் ஒழுங்கு மரியாதையாகப் பணத்தைத் திருப்பிக் கொடுத்துவிடும். மரியாதைக்குரிய கஸ்டமரை இதன்பொருட்டு சிரமப்படுத்தக்கூடாது!

இதை நன்றாகப் புரிந்துகொண்டிருந்த முகம்மது சலாமி, வேன் தொலைந்துபோய்விட்டதாகப் புகார் செய்ததுடன், இன்னொரு காரியத்தையும் செய்தான். "உங்களிடம் வேனை வாடகைக்கு எடுத்து வந்தேனே தவிர, நான் அதை உபயோகப்படுத்தவே இல்லை. அதனால் நான் முன்பணமாகக் கொடுத்த நானூறு டாலரை நீங்கள் எனக்குத் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும்" என்று கேட்டான்.

கடை முதலாளி ஏதோ சொல்லிச் சமாளித்து, அப்போதைக்கு அந்த விவகாரத்துக்கு முற்றுப்புள்ளி வைத்தார். சலாமி சும்மா இருக்கவில்லை. அன்றைய தினமே மேலும் இரண்டு முறை அந்த முதலாளிக்குப் போன் செய்து, தான் கொடுத்த அட்வான்ஸைத் திரும்பக் கொடுக்கச் சொல்லி வற்புறுத்த ஆரம்பித்தான்.

இதெல்லாம் எதற்கு? வேன் தொலைந்துவிட்டதாக முதலாளியை முதலில் நம்பவைத்துவிட்டால், பின்னால் ஒரு வழக்கு, விசாரணை என்று வந்தாலும் தாம் சம்பந்தப்படாமல் தப்பித்துக்கொள்வதற்காக! செய்யும் தவறை நேர்த்தியாகச் செய்வதற்காக அவன் தேர்ந்தெடுத்த உத்திதான், கொடுத்த பணத்தைத் திரும்பக் கொடுக்கச் சொல்லி வற்புறுத்தியது.

இந்த விவகாரத்தை இப்போதைக்கு இங்கே நிறுத்திக்கொள்வோம். பின்னால் தொடர்ந்தால் போதும். அந்த நாளும் வந்தது. அது அமெரிக்கா நொந்த நாள். அன்றைக்குப் பிற்பகல் சரியாகப் பன்னிரண்டு மணிக்கு ரம்ஸி யூசுஃப் கோஷ்டி, அந்த வேனை ஓட்டிக்கொண்டு உலக வர்த்தக மையக் கட்டட வளாகத்துக்குப் போய்ச் சேர்ந்தார்கள். வெளியேயே சிலர் வண்டியிலிருந்து இறங்கிக்கொண்டார்கள். யூசுஃப் மட்டும் வாகனத்தை ஓட்டிக்கொண்டு, கார் பார்க்கிங் இடத்துக்குப் போனான். அத்தனாம்பெரிய மாடமாளிகையின் தரைத்தளத்துக்கும் கீழே, ஒரு தளம் கட்டி அங்கேதான் வண்டிகளை விட்டுக்கொண்டிருந்தார்கள்.

ஓட்டிச் சென்ற வேனை யூசுஃப் அங்கே நிறுத்திவிட்டு, குண்டு பரமாத்மா அப்துல் ரஹ்மான் யாசின் சொன்னபடி, வெளியே நீட்டிக்கொண்டிருந்த ஃப்யூஸை சிகரெட் லைட்டரால் பற்றவைத்தான். ஹாயாக இறங்கி வெளியேறி, நண்பர்களுக்கு வெற்றிச் சின்னம் காட்டி அழைத்துக்கொண்டு பஸ்ஸோ, டாக்சியோ பிடித்துக் கரைந்து காணாமல் போனான்.

சரியாகப் பன்னிரண்டு நிமிடங்களில் அந்தத் தீ, ஃப்யூசின் இருபதடி நீளத்தை எரித்துக் கடந்து, ரசாயனக் கேந்திரத்தைச் சென்று அடையும். அதே வினாடி குண்டு வெடிக்கும்!

சரியாக 12.17 மணிக்கு அது வெடித்தது.

தீப்பிழம்பும் கரும்புகையும் உடனடி இடிபாடுகளும் அசகாய சப்தமுமாக அந்தப் பிராந்தியத்தில் என்ன நடந்தது என்பதே அடுத்த சில வினாடிகள் வரை புரியாமல் இருக்க, வெடித்த குண்டினால் எழுந்த புகை, வர்த்தக மையக் கட்டடங்களின் 93-வது மாடி வரை சூழ்ந்து எழுந்து நின்றது! உடனடியாக மின்சார சப்ளை நாசமானது

மிகவும் சக்தி வாய்ந்த குண்டு. ஆனால், அதிர்ஷ்டவசமாக யூசுஃப் அதைச் சரியான இடத்தில் நிறுத்தத் தவறிவிட்டதால், அவன் எதிர்பார்த்த முழு இடிபாடு - முழுச்சேதம் என்பது தவிர்க்கப்பட்டது. ஆறு பேர் பலியானார்கள். சரியாக ஆயிரம் பேர் படுகாயமடைந்து ஆஸ்பத்திரிகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டார்கள்.

ஒட்டுமொத்த அமெரிக்காவின் கவனமும், அடுத்த சில மணிநேரங்கள் வர்த்தக மையக் கட்டடத்தைச் சுற்றியே இருக்க, ரம்ஸி யூசுஃப் தன் திட்டப்படி நண்பர்களிடம் சொல்லிக்கொண்டு, பல்வேறு அமெரிக்க நகரங்களைச் சுற்றி, ஒரு மாதிரி காவல் துறை குழப்பம் அடையும் விதத்தில், தனது பயணத்திட்டத்தை வகுத்துக்கொண்டு எங்கெங்கோ விமானம் ஏறி, எங்கெங்கோ இறங்கி, பல மணிநேரங்கள் கழித்து பாகிஸ்தானில் போய் இறங்கிவிட்டான்.

மறுபுறம், அமெரிக்க அதிபர் பில் க்ளிண்டன், அதிர்ச்சியில் சில மணிநேரங்கள் உறைந்தது போதும் என்று முடிவு செய்தவராக, அமெரிக்காவின் அத்தனை புலனாய்வு ஏஜென்சிகளும் ஒருங்கிணைந்து வேலை செய்து, இந்த விஷயத்தில் எத்தனை சீக்கிரம் முடியுமோ, அத்தனை சீக்கிரம் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய வேண்டும் என்று உத்தரவிட்டார்.

அதுதான். அங்கேதான் அமெரிக்கா தான் யாரென்று உலகுக்குக் காட்டியது. பொதுவாக அமெரிக்க உளவுத் துறைகளான சி.ஐ.ஏ.வுக்கும் எஃப்.பி.ஐ.க்குமே ஏழாம்பொருத்தம். சுலபத்தில் எந்த விஷயத்திலும் ஒத்துப்போகவே மாட்டார்கள். நீ பெரியவனா, நான் பெரியவனா என்பதில் எப்போதும் குடுமிப்பிடிச் சண்டை இருக்கும். இந்த இரு புலனாய்வு அமைப்புகளும் இப்படி என்றால், லோக்கல் போலீஸ் இன்னும் ஒரு படி மேலே. 'நீங்கள் இரண்டு பேருமே வெத்து, நாந்தான் பெரியவன்' என்று எப்போதும் சொல்லும் குணம் அதற்கு உண்டு. இதற்கெல்லாம் மேலே, தேசிய பாதுகாப்பு கவுன்சில் என்று ஓர் அமைப்பு உண்டு. கிட்டத்தட்ட சர்வாதிகாரி மாதிரி அது. எல்லாவற்றுக்கும் மேலே நீதித்துறை. அத்தனை பேரும் சரணடைந்தே ஆகவேண்டிய இடம்.

க்ளிண்டனின் உத்தரவு என்னவென்றால், சம்பந்தப்பட்ட இந்த வழக்கில், இன்னார் அன்னார் என்கிற பாகுபாடே இல்லாமல், அத்தனை பேரும் ஒருங்கிணைந்து வேலை செய்தாகவேண்டும். ஒரு எமர்ஜென்சி கால கட்டத்துச் செயல்பாடு போலப் புலனாய்வு இருக்க வேண்டும். உலகம் அதிர்ச்சியிலிருந்து மீள்வதற்குள்ளாக நாம் குற்றவாளிகளைக் கண்டுபிடித்துவிட வேண்டும்.

கண்டிப்பான உத்தரவு. மீறவே முடியாது. தவிரவும், புலனாய்வின் ஒவ்வொரு அங்குல முன்னேற்றமும் உடனுக்குடன் அதிபருக்குத் தெரிந்தாகவேண்டும் என்றொரு பின்குறிப்பும் இருந்தபடியால், அத்தனை ஏஜென்சிகளும் தங்கள் ஈகோவைத் தூக்கி கோட் ஸ்டாண்டில் மாட்டிவிட்டு, வரிந்துகட்டிக்கொண்டு களத்திலிறங்கின.

ஒருபுறம், சி.ஐ.ஏ. தன் சர்வதேசத் தொடர்புகளை முடுக்கிவிட்டு, தாக்குதலின் வேர்களைத் தேடத் தொடங்கியது. இன்னொருபுறம், எஃப்.பி.ஐ. அமைப்பின் நியூயார்க் பிரிவு அலுவலகம் உள்நாட்டில் புலனாய்வைத் துரித கதியில் மேற்கொண்டது. காவல்துறையோ, தேசத்தின் இண்டு இடுக்கைக்கூட விடாமல், ஒவ்வொரு இடத்திலும் சந்தேகப்படத்தக்க நபர்கள் யார் இருந்தாலும் அள்ளிக்கொண்டு வந்து பூஜை போடத் தொடங்கியது.

இப்படி தேசமே இணைந்து தேடிக்கொண்டிருக்கிற விஷயம் எது குறித்தும் கவலைப்படாமல், அண்ணன் முகம்மது சலாமி, குண்டு வெடிப்புக்கு மறுநாளும் அந்த வாடகை வேன் கம்பெனி முதலாளிக்கு போன் செய்து, 'என் நானூறு டாலர் என்ன ஆச்சு?' என்று கேட்டான்.

வெறுத்துப்போன முதலாளி, 'யோவ், என் வேனே போச்சு. உன் நானூறு டாலரா பெரிசு?' என்று கொஞ்சம் கோபமாகப் பேச, சலாமி விடாமல், 'அதெல்லாம் முடியாது. மரியாதையா என் பணத்த எண்ணி வெக்கலன்னா நடக்கறதே வேற' என்று உதார் விடத் தொடங்கினான்.

அதே சமயத்தில், அங்கே குண்டு வெடித்த இடத்தில் ஆராய்ச்சி மேற்கொண்ட தடயவியல் மற்றும் காவல் துறை அதிகாரிகள், வெடித்த வேனின் பகுதிகளை எடுத்து நோண்டிப் பார்க்க, எகிறி எங்கோ விழுந்துகிடந்த நம்பர் ப்ளேட்டை ஒருவழியாகப் பிடித்தார்கள். அதைக் குளிப்பாட்டி, சாம்பிராணி, பவுடர் எல்லாம் போட்டுப் பார்த்ததில் வேனின் நம்பர் தெரிந்தது.

இது போதாது? விசாரித்தபோது சம்பந்தப்பட்ட வாடகை கார் முதலாளி புலம்ப ஆரம்பித்தார்.

"அட ஆமா சார். எவனோ ஒரு கேப்மாரி வாடகைக்கு எடுத்துட்டுப் போயி, தாரவாத்துட்டான். சொம்மா பணத்த குடு, பணத்த குடுன்னு தொந்தரவு பண்ணிக்கிட்டிருக்கான். அவன் மட்டும் என் கையில கிடைச்சா கைமா போட்டுருவேன்" என்று ஒப்பாரி வைக்க, காவல் அதிகாரிகள் விழித்துக்கொண்டார்கள்.

"அப்படியா? அவனை வரச்சொல்லுங்களேன்? அவன் பணத்தைக் கொடுத்தால் போகிறது!"

முதலாளி புரியாமல் விழிக்க, காவல் அதிகாரி விளக்கிச் சொன்னார். அடுத்தமுறை பணம் கேட்டு சலாமி போன் செய்தபோது, 'சரி, வந்து தொலை. தருகிறேன்' என்றார் அந்த முதலாளி.

சலாமி மீன், வலையை நோக்கி வரத்தொடங்கியது.



முகம்மது சலாமி, அமெரிக்க உளவுத்துறை ஆசாமிகளிடம் மாட்டிக்கொண்ட கட்டம் மிகவும் காமெடியானது.

ஒரு தற்காப்புக்காக அவ்வப்போது போன் செய்து, அந்த வாடகை கார் முதலாளியிடம், 'என் காசைத் திருப்பிக்கொடு, திருப்பிக்கொடு' என்று கேட்டுக்கொண்டிருந்தானே தவிர, உண்மையில் அந்த நானூறு டாலரை வைத்துக்கொண்டுதான் அவன் பிழைக்க வேண்டும் என்பதில்லை. ஆனால், அதுவே தனக்கு வினையாகிவிடும் என்று அவன் நிச்சயம் எதிர்பார்க்கவில்லை.

வாடகை கார் முதலாளி, 'சரி வந்து வாங்கிக்கொண்டு போ' என்று சொன்னதும், சலாமிக்கு

முதலில் நம்பவே முடியவில்லை. 'என்னடா இது அதிர்ஷ்டதேவதை இப்படிக்கூட கூப்பிட்டுக் காசு கொடுக்குமா' என்றுதான் நினைத்தான். 'சரி, வந்தால் டீ செலவுக்கு ஆச்சு' என்று நினைத்துத்தான், அந்த வாடகை கார் கம்பெனிக்குத் திரும்பவும் போனான்.

அவன் போன நேரத்தில், முதலாளி யாரோ ஒரு கனவானுடன் பேசிக்கொண்டிருந்தார்.

"ஹலோ, என்னை எதற்கு வரச் சொன்னீர்கள்? எங்கே என் நானூறு டாலர்?" என்று கித்தாப்பாகக் கேட்டான் சலாமி.

"நானூறு டாலர்தானே? இதோ, ஒரு நிமிடம்" என்று சொல்லிவிட்டு முதலாளி எஸ்கேப் ஆகிவிட, அவருக்கு எதிரே உட்கார்ந்திருந்த எஃப்.பி.ஐ. அதிகாரி, கோழி அமுக்குவது போல அவனை அமுக்கி, இழுத்துக்கொண்டு போய் ஜீப்பில் ஏற்றினார்.

ஜீப் புறப்பட்ட கணத்திலேயே மண்டகப்படி ஆரம்பமாகிவிட்டது. ஒரு நாலைந்து ரவுண்டு, பேசக்கூட விடாமல் போட்டுச் சாத்திய பிறகு, கொஞ்சம் மூச்சுவிட அவகாசம் கொடுத்து ஒரு வாய் தண்ணீர் கொடுத்தார்கள். 'சரி, பேசு' என்று நெற்றிப்பொட்டில் துப்பாக்கி வைத்தார்கள்.

சலாமி பேச ஆரம்பித்தான்.

அவன் ஒரு பாலஸ்தீனியன். மேற்குக் கரைப் (West Bank) பகுதியில் உள்ள நப்லஸ் என்கிற ஊரைச் சேர்ந்தவன். மிகுந்த மதப்பற்று மிக்க குடும்பத்திலிருந்து வந்தவன். ஓரளவு ஒரு டிகிரி வரை படித்தவனும்கூட. கண்டிப்பாக ரம்ஸி யூசுஃப்பைப் போலவோ, ஏனைய அல் காயிதா ஆசாமிகளைப் போலவோ தீவிர அடிப்படைவாதி அல்ல. மதப்பிரசங்கங்கள் செய்வதில்தான் அவனுக்கு ஆர்வம். "வேண்டுமானால் நான் படித்த ஜோர்டன் பல்கலைக் கழகத்தில், என்னைப் பற்றி விசாரித்துப் பாருங்கள்" என்று அழமாட்டாத குறையாகச் சொன்னான் சலாமி.

அவன் பேசி முடிப்பதற்குள் எஃப்.பி.ஐ. அதிகாரிகள், விஷயத்தை சி.ஐ.ஏ.விடம் சொல்லி, 'அந்தப் பக்கம் கொஞ்சம் கவனி' என்று கேட்டுக்கொள்ள, ஒரு மணி நேரத்துக்குள்ளாக மேற்குக் கரைப் பகுதிக்கு சி.ஐ.ஏ., உளவாளிகள் போய்ச் சேர்ந்து தோண்டித் துருவ ஆரம்பித்துவிட்டார்கள்.

சலாமி சொன்னதெல்லாம் சரிதான். ஆனால், அவன் சொல்லாமல் விடுத்த விஷயம் ஒன்று உண்டு. அவனது அம்மா வழியில் தாத்தா, தாத்தாவுக்கு அப்பா, அப்பா தாத்தாவுக்குத் தாத்தா, தாத்தாத்தாத்தாத்தாக்கள் என்று ஒரு பெரிய பரம்பரையே, கெரில்லாப் போராளிகளாக இருந்தவர்கள்தான் என்கிற விவரம் தெரியவரவே, சலாமியின் வாக்குமூலத்துக்கு ஒரு சலாம் வைத்து, அவனைக் கொண்டுபோய் உள்ளே தள்ளி, மேலும் தீவிரமாக விசாரிக்க ஆரம்பித்தார்கள். தீவிர விசாரணை என்பதன் இன்னொரு பெயர் அடி பின்னி எடுப்பது.

சரி, இனிமேல் தாங்கமுடியாது என்றொரு நிலை வந்தபோது, அவன் வாயைத் திறந்து சில பெயர்களைச் சொன்னான். நிதால் ஹயாத்,. மம்மூத் அபூஹாலிமா, முஹமது அஜாஸ்.

கவனிக்கவும். ரம்ஸி யூசுஃபின் பெயரை அவன் சொல்லவில்லை. மேற்படி நபர்கள் அத்தனை பேரும், 1993 குண்டு வெடிப்புச் சதியுடன் ஏதோ ஒரு வகையில் தொடர்பு கொண்டவர்கள்தான். ஆனாலும் சதித் தலைவனைக் காட்டிக்கொடுத்துவிடக் கூடாது என்பது மேலிடத்து உத்தரவு. மேலிடம் என்பது அவனுக்குத் தெரிந்த அளவில் குருட்டு ஷேக்.

ஆனால், அமெரிக்கப் புலனாய்வு அதிகாரிகளுக்கு இவர்களையெல்லாம் மோப்பம் பிடிக்கும்போதே சின்ன மீன்கள்தான் என்பது தெரிந்துவிட்டது. ஏதோ ஒரு வாளை மீனோ, விலாங்குமீனோ தப்பித்திருக்கிறது என்பதும் புரிந்துவிட்டது. ஆகவே, சலாமியை மேலும் தீவிரமாக விசாரித்தார்கள். விளைவாக, நியூ ஜெர்சி நகரில் ஒரு அபார்ட்மெண்டின் முகவரி

அவர்களுக்குக் கிடைத்தது.

போய், கதவை உடைத்துச் சுற்றி வளைத்தபோது அகப்பட்டவன், அந்த வெடிகுண்டு நிபுணன் அப்துல் ரகுமான் யாசின். ஒரு சமர்த்துப் பையன்போல், அவன் அங்கே தன் தாயுடன் தங்கியிருந்தான். கைது செய்யப்போன அதிகாரிகளுக்கு 'இவன் இந்தச் சம்பவத்தில் சம்பந்தப்பட்டிருப்பானா' என்றே சந்தேகம் தோன்றுமளவுக்கு அவன் நல்ல பிள்ளை தோற்றம் கொண்டிருந்தான். தவிரவும் பக்திப் பெண்மானான அவனது தாய், வந்த ஆபீஸர்களை உட்காரவைத்து காபியோ சூப்போ வேறு கொடுத்து பணிவுடன் வணங்க, இந்தப் பூனை பால் குடிக்காதோ என்று நினைத்தார்கள். எதற்கும் இருக்கட்டும் என்றுதான் எஃப்.பி.ஐ.யின் நியூ ஜெர்சி நகர அலுவலகத்துக்கு அழைத்துப் போய் இரண்டொரு வார்த்தை பேசினார்கள்.

'குண்டு வெடிப்பா? அப்படின்னா? குண்டுன்னா எப்படி இருக்கும்? உருண்டையாவா? கோளமாவா? என்ன சைஸ் இருக்கும்? ஒரு கோலி குண்டு சைஸ்? இல்ல, ஒரு டூமா கோலி சைஸ்? அது சரி, சார்.. எப்படி இந்த குண்டுங்க வெடிக்குது? தூக்கி செவுத்துல அடிச்சா டமார்னு சப்தம் வருமா?'

இந்த ரேஞ்சுக்கு யாசின், விசாரணை அதிகாரிகளிடம் பேசிய பேச்சுகள், அப்படியே பதிவாகியிருக்கின்றன. நம்ப முடியாத அளவுக்கு நல்லவன் போலத் தெரிந்த யாசினை, அதிகாரிகள் அன்றைக்கு மாலையே வீட்டுக்கு அனுப்பிவிட்டார்கள்.

ஆனால், ஏதோ ஒரு சிறு பொறி தட்டி, மறுநாள் அவர்கள் அவனது அபார்ட்மெண்டுக்குப் போய்ப் பார்த்தபோதுதான், அந்தப் பூனை பாலல்ல; பீரே குடிக்கும் என்கிற உண்மை தெரிந்தது. ஒரே இரவுதான். பட்சி நேரே ஈராக்குக்குப் பறந்துவிட்டது! அந்தத் தாய்ப்பறவையும் உடன் போய்விட்டது. 'சே' என்று தலையில் அடித்துக் கொண்டார்கள் அதிகாரிகள். வெளியே தெரிந்தால் வேலை போய்விடுமோ என்கிற அச்சத்தில் கொஞ்சநாள் இந்த யாசின் விவகாரத்தையே மூடிவைத்துவிட்டார்கள்.

மறுபக்கம், புலனாய்வை இன்னும் துரிதப்படுத்தி, கைது செய்த ஆசாமிகளை மேலும் மேலும் துருவித்துருவி விசாரித்ததில், ஒருவழியாக அவர்களுக்கு ப்ரூக்ளின் ஃபாரூக் மசூதி குறித்த முதல் தகவல் கிடைத்தது!

ஷேக் உமர் அப்துர் ரெஹ்மான் என்கிற குருட்டு ஷேக். அவரா! அவரா! இருக்காது. இருக்கமுடியாது. இந்தப் பயல்கள் விளையாடுகிறார்கள் என்றுதான் முதலில் நினைத்தார்கள் எஃப்.பி.ஐ. அதிகாரிகள். இருப்பினும் அத்தனை பேரையும் சந்தேகப்படு என்கிற அடிப்படை விதியை மனத்தில் கொண்டு, ஃபாரூக் மசூதிக்குப் போய் குருட்டு ஷேக்குடன் உட்கார்ந்து பேசினார்கள்.

"ஐயா, இந்த மாதிரி உங்கள் மேல் சந்தேகப்படச் சொல்லி எங்களுக்கு உத்தரவு வந்திருக்கிறது. வர்த்தக மையக் கட்டட குண்டுவெடிப்புச் சம்பவம் குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?"

"ஆண்டவனே! எப்பேர்ப்பட்ட சதிச்செயல் அது! அதைச் செய்தவர்கள் ஒருபோதும் நன்றாக இருக்கமாட்டார்கள். அல்லா அவர்களுக்கு உரிய கூலியைக் கொடுப்பான்."

"அந்தச் சம்பவத்துடன் சம்பந்தப்பட்ட சிலருக்கு உங்களை அறிமுகம் இருக்கிறது போல் தெரிகிறது."

"அப்படியா? இருக்கலாம். இங்கே எத்தனையோ ஆயிரம் பேர் தொழுகைக்காக வருகிறார்கள். பலபேர் என்னிடம் சொந்தப் பிரச்னைகளையும் சொல்லித் தீர்வு கேட்கிறார்கள். என்னால் முடிந்த உதவிகளை நான் செய்கிறேன். ஆனால் தீர்வு தருவது அல்லா அல்லவா?"

"நீங்கள் தீவிரவாதிகளுக்கு அடைக்கலம் தருவதாக.."

"ஆண்டவனே.. நீங்கள் அப்படி நினைத்தால் அது சைத்தானின் சித்தம். ஆண்டவன் சித்தம் என்னவென்றால், நான் அமைதியை மட்டுமே பரப்பவேண்டும் என்பதுதான்."

"அப்படியென்றால் உங்களுக்கு ஒன்றும் தெரியாதா?"

"அனைத்தும் அறிந்தவன் அல்லா ஒருவன் தான் ஐயா. நானெல்லாம் சிறு துரும்பு. நீங்கள் விரைவில் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க நான் பிரார்த்தனை செய்வேன். நான் விசாரணைக்கு வரவேண்டும் என்று நினைப்பீர்களானாலும் வருகிறேன். என்னால் முடிந்த அத்தனை உதவிகளையும் உங்களுக்குச் செய்வேன். நானும் அமெரிக்க மண்ணில் வசிப்பவன்தான். இங்கே அரசு எனக்கு எந்தக் குறையும் வைக்காமல் நன்றாகப் பார்த்துக்கொள்கிறது. எனது மதப்பணிகளை ஒழுங்காகச் செய்யமுடிகிறது. எனவே, உங்களுக்கு உதவுவது என் கடமையாகிறது. சொல்லுங்கள், நான் என்ன செய்யவேண்டும்?"

இதற்குமேல் அதிகாரிகளால் ஒன்றும் பேசமுடியவில்லை. அவரை எஃப்.பி.ஐ. அலுவலகத்துக்கு மட்டும் அழைத்துப் போய் ஒரு ஸ்டேட்மெண்ட் எழுதி வாங்கிக்கொண்டு விட்டுவிட்டார்கள். ஷேக் சாஹேப் சௌக்கியமாக மீண்டும் அதே ஃபாரூக் மசூதிக்கு வந்து வேலையைப் பார்க்க ஆரம்பித்துவிட்டார். ஓடி ஒளிந்தால்தானே சந்தேகமெல்லாம்? அந்த வயதுக்கு அவரது மூளை இயங்கிய வேகத்தை விவரிக்கவே முடியாது. அப்படியொரு குயுக்தி பிடித்த ஆசாமி அவர்.

அது ஒருபுறமிருக்க, அதிகாரிகள் மேலும் மேலும் விசாரணை, புலனாய்வு என்று தோண்டித் துருவி அலைந்ததில் ஒருவழியாக ரம்ஸி யூசுஃபின் அபார்ட்மெண்டுக்குப் போய்ச் சேர்ந்தார்கள். இதற்கு உதவியதும் சலாமிதான். அவன் வாங்கிய அடிகள் அப்படிப்பட்டவை. தாக்குப் பிடிக்கவே முடியாத ஒரு சூழலில்தான், அவன் யூசுஃபின் முகவரியைக் கொடுத்தான்.

போய்ப் பார்த்த அதிகாரிகளுக்கு வியப்பும் அதிர்ச்சியும் தாளவில்லை. வெறும் வீடா அது! ஒரு தீவிரவாதச் சுரங்கமாக இருந்தது. ஒரு பக்கம் வரைபடங்கள், திட்டக் குறிப்புகள், ஏகப்பட்ட தொலைபேசி எண்கள் அடங்கிய காகிதங்கள். இன்னொரு பக்கம், குண்டு தயாரிப்புக்கான மூலப் பொருள்களின் மிச்சம், மாடல் குண்டு, ஃப்யூஸ் ஒயர்கள், ரிமோட் கண்ட்ரோல் கருவிகள், கைத்துப்பாக்கி ஒன்று, எல்லாவற்றுக்கும் மேலாக முஹம்மது ஜமால் காலிஃபா என்கிற பெரிய மனுஷன் ஒருத்தரது விசிட்டிங் கார்டு! உயிர்தப்பி பாகிஸ்தான் போனால்போதும் என்று பாய்ந்து ஓடியவன், இவற்றையெல்லாம் அப்படியே விட்டுவிட்டுப் போய்விட்டான்.

அனைத்தையும் அள்ளி எடுத்துக்கொண்டு ஆபீஸுக்குப் போனார்கள் அதிகாரிகள். உட்கார்ந்து நிதானமாக ஒவ்வொன்றாக அலசிவிட்டுக் கடைசியாக, அந்த விசிட்டிங் கார்டைப் பார்த்தார்கள். அந்தக் குறிப்பிட்ட நபர் யார் என்று தேடத் தொடங்கி, ஒருவழியாகக் கண்டுபிடித்தபோதுதான் அமெரிக்கப் புலனாய்வு அதிகாரிகளுக்குப் பூங்கதவு தாழ் திறந்தது.

அந்த விசிட்டிங் கார்டில் இருந்த போன் நம்பருக்கு முதலில் சும்மா ஒரு போன் போட்டார்கள். அது உண்மையான கார்டுதான் என்பதை ஊர்ஜிதப் படுத்திக் கொள்வதற்காக.

பிறகு, அந்த கார்டில் உள்ள நபர் யார், என்ன செய்கிறார் என்று விசாரித்தார்கள். சவூதி அரேபியாவைச் சேர்ந்த முஹம்மது ஜமால் காலிஃபா ஒரு பெரிய பிசினஸ்மேன் என்கிற விவரம் கிடைத்தது. என்ன பிசினஸ் என்று விசாரித்தபோது, ஏகப்பட்ட பிசினஸ்களில் அவர் சம்பந்தப்பட்டிருப்பது தெரிந்தது. குறிப்பாகக் கட்டுமான பிசினஸ். ஜெத்தா நகரில் தலைமை அலுவலகத்தை வைத்துக்கொண்டு, சவூதி முழுவதிலும் அவர் தம் கொடியைப் பறக்கவிட்டுக்கொண்டிருந்தார்.

தவிரவும், தொழில் நிமித்தம் அவர் அடிக்கடி ஆப்கனிஸ்தானுக்கும் சூடானுக்கும் போய் வருபவர் என்கிற விஷயத்தையும், சவூதி அரசு ஊழியர்கள் சிலர் உதவியுடன் சி.ஐ.ஏ தெரிந்துகொண்டது.

அடக் கடவுளே! ஆப்கனிஸ்தானில் என்ன தொழில் செய்யமுடியும், அபின் பயிரிடுவது தவிர? சூடான்? சூரிய மின்சாரம்தான் எடுக்கமுடியும். ஒன்றும் சரியாகப்படவில்லையே? சரி, பார்ட்டியின் குடும்பம் எப்படிப்பட்டது? பெற்றோர், மனைவி, மக்கள் யார்?

இப்படி விசாரணையைத் திருப்பியபோதுதான், அந்தத் தகவல் கிடைத்தது. மதிப்புக்குரிய முஹம்மது ஜமால் காலிஃபாவின் மனைவி, ஒசாமா பின்லேடனின் தங்கை.

முஹம்மது ஜமால் காலிஃபாவுக்கு இன்னொரு பெயரும் உண்டு. அபூ பாரா (Abu Barra).

அடங்கொக்கமக்கா என்று துள்ளி எழுந்தது எஃப்.பி.ஐ.!



முஹம்மது ஜமால் காலிஃபா என்கிற அபூ பாராவை, இன்னார் என்று எப்போது சி.ஐ.ஏ., அடையாளம் கண்டதோ, அந்தக் கணத்தில்தான் அமெரிக்காவின் முழுக் கவனமும் அல் காயிதாவின் மீது விழுந்தது. விஷயத்தை உடனே வெளியே சொல்லாமல் கொஞ்சம் மூடிவைத்து, மேற்படி பிரகஸ்பதியின் ஜாதகத்தைத் துப்புரவாக எடுத்துவைத்துக்கொண்டு ஆராய்ந்தார்கள். பிராந்தியத்தில் வள்ளல் என்றும் நிறைய பொதுக்காரியங்கள் செய்பவர் என்றும்கூட, அவர் பிரசித்தி பெற்றிருந்தார். வள்ளல்பெருமான் யாருக்கெல்லாம் உதவியிருக்கிறார் என்று ஒவ்வொரு பட்சியாகத் தேடிப்போனபோதுதான், அத்தனைபேரும் ஏதோ ஒரு வகையில் அல் காயிதாவுடன் சம்பந்தப்பட்டவர்கள் என்கிற உண்மை தெரியவந்தது.

பெரிய பிசினஸ்மேன். கௌரவமான விசிட்டிங் கார்டு. ஊரில் யாரைக் கேட்டாலும், சின்ன கவுண்டர் ரேஞ்சுக்குத்தான் துதிப்பாமாலைகள் வந்து விழும். ஆனால், இன்னொரு பக்கத்தில் இப்படி ஒரு ப்ரொஃபைல்!

அமெரிக்கா விழித்துக்கொண்டது. ஆபத்து அருகே கூட இல்லை; உள்ளேயே வந்துவிட்டது என்பது தெரிந்ததும், அமெரிக்க உளவு ஏஜென்சிகள் உட்காரும் இடத்தில் தீப்பிடித்துக்கொண்டது போல எழுந்து சுறுசுறுப்பாகிவிட்டன. உடனடியாக தேசம் முழுவதும் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டன. அபூ பாராவுடன் தொடர்புள்ள அமெரிக்க முஸ்லிம்கள் யார் யார் இருக்கக் கூடும் என்று, ஏரியாவாரியாக சர்வே எடுக்க ஆரம்பித்தார்கள். அந்தக் குண்டுவெடிப்புச்

சம்பவத்தில் பங்குபெற்ற ஆசாமிகள் யார் யார், எத்தனை பேர் அமெரிக்காவிலேயே இருக்கிறார்கள், எத்தனை பேர் எங்கெங்கே பறந்திருப்பார்கள் என்று கணக்குப்போட்டுத் தேடத் தொடங்கினார்கள்.

முன்னதாக, அதுவரை கைதாகியிருந்த முஹம்மது சலாமி, நிதால் ஹயாத், மம்மூத் அபூஹாலிமா, முகமது அஜாஸ் ஆகிய நான்குபேரையும் சட்டுப்புட்டென்று எஃப்.ஐ.ஆர் போட்டு நீதி மன்றத்தில் நிறுத்தி, கையோடு ஆயுள் தண்டனை வாங்கிக்கொடுத்து உள்ளே கொண்டு தள்ளிவிட்டார்கள். ஈராக்குக்குத் தப்பிப்போன அப்துல் ரெஹ்மான் யாசினைப் பிடிக்கவும் ஆள் அனுப்பிவிட்டு, 'மூத்த தலை'யான ரம்ஸி யூசூஃபைத் தேட ஆரம்பித்தார்கள்.

சவூதி அரேபியா, குவைத், பாகிஸ்தான் உள்ளிட்ட பல்வேறு தேசங்களில், அப்போது பணியில் இருந்த சி.ஐ.ஏ. ஏஜெண்டுகளுக்கு ராத்திரி, பகல் என்று எதுவும் கிடையாது. வேறு உத்தியோகம் மண்ணாங்கட்டியும் கிடையாது. எவனோ ஒருத்தன், அமெரிக்காவில் அக்கிரமம் பண்ணிவிட்டுத் தப்பி வந்திருக்கிறான். எங்கு வந்திருக்கிறான், அவன் கறுப்பா, சிவப்பா என்று கூடச் சரியாகத் தெரியாது. சந்தேக கேஸ் எது கண்ணில் பட்டாலும் கோழியை அமுக்கிவிடு. இதுதான் உத்தரவு.

இது உண்மை. அமெரிக்காவுக்கு அந்த ஃப்ளாட்டுக்குப் போய்த் தேடிப்பார்க்கிற வரையில், அப்படி ஓர் ஆசாமி அமெரிக்காவுக்குள் இருந்திருக்கிறான் என்பதே தெரியாது. அதே மாதிரிதான் அபூ பாரா குறித்தும் அதற்குமுன் தெரியாமலேயே இருந்திருக்கிறார்கள். உளவுத்துறையில் அப்படி என்னதான் செய்துகொண்டிருக்கிறார்கள்?

என்றால், அல் காயிதா அதுவரை அமெரிக்கா பொருட்படுத்தத் தகுந்த ஓர் இயக்கமாக இல்லை என்பதுதான் உண்மை.

ஆனால், மேற்படி சம்பவத்துக்குப் பிறகு, சிலிர்த்துக்கொண்டு எழுந்த அமெரிக்க உளவுத்துறை, 'பிசினஸ்மேன்' முஹம்மது ஜமால் காலிஃபா, தொழில்நிமித்தம் அமெரிக்காவுக்கு வந்த சமயம் (டிசம்பர் 14, 1994), லபக்கென்று அமுக்கிப் பிடித்தார்கள். பிடித்தார்களே தவிர, நேரடித் தொடர்பு சாட்சியங்கள் ஏதுமில்லாத காரணத்தால், அவர்களால் சிறையில் அடைக்க முடியவில்லை. குடியேற்றத் துறையின் மூலம் அவரை ஜோர்டனுக்கு நாடு கடத்தத்தான் முடிந்தது.

இந்தமாதிரி ஒரு கிரிமினல், அமெரிக்காவிலிருந்து நாடுகடத்தப்படுகிறார் என்பது தெரிந்தால், ஜோர்டன் அரசு மாலை போட்டா வரவேற்கும்? இறங்கிய இடத்திலேயே கைது செய்து அழைத்துப் போய்விட்டார்கள்.

அப்புறம் என்ன நடந்தது, யார் என்ன செய்தார்கள்/ கொடுத்தார்கள் / பேசினார்கள் என்பதெல்லாம் யாருக்கும் தெரியாது. ஜோர்டன் நீதிமன்றம் அவரை ஒன்றுமறியாத பாப்பா என்று சொல்லி விடுதலை செய்துவிட்டது. அவரும் சமர்த்தாக சவூதி அரேபியாவுக்குப் போய் பாதுகாப்பாகிவிட்டார்.

இதெல்லாம் நடந்த காலகட்டத்தில்தான், நமது ப்ரூக்ளின் தாத்தா ஷேக் உமர் அப்துர் ரெஹ்மான் எஃப்.பி.ஐயிடம் சிக்கினார். உண்மையில், 1993 குண்டுவெடிப்புச் சம்பவத்தில் ரம்ஸி யூசூஃபுக்கு இருந்த அதே அளவு பங்கு, அவருக்கும் உண்டு. அவர் போய் குண்டுக்குத் திரி கிள்ளிப் பற்றவைக்கவில்லையே தவிர, பின்னணியில் இருந்து கதை, திரைக்கதை, வசனம் எழுதி இயக்கிய நபர் அவர். அதுவும், அல் காயிதா தலைமையின் நேரடி உத்தரவின்படி.

ஆனால், அவரை விசாரணைக்கு என்று அழைத்துப் போனபிறகும், எந்த வகையிலும் சம்பவத்துடன் தொடர்பு படுத்தமுடியாமல் வீட்டுக்கு அனுப்பிவிட்ட அமெரிக்க உளவுத்துறையும், காவல் துறையும் இந்த முறை மிக அற்பமான ஒரு விஷயத்தில் அவரை வளைத்துப் பிடித்துவிட்டது.

ஒரு வரைபடம் ஒன்றைக் கண்டுபிடித்தார்கள். அமெரிக்காவின் மிக முக்கியமான பல இடங்களில் குண்டுவைக்கலாம் என்று மார்க் பண்ணி எடுத்துவைத்த வரைபடம். கண்டெடுக்கப்பட்ட இடம் ப்ரூக்ளின் ஃபாரூக் மசூதி என்பதால், ஷேக் சாஹேப் மாட்டிக்கொண்டார்.

ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகம் இயங்கும் கட்டடம். இதனை ஒரு தற்கொலைப் படைப் போராளி, வண்டி ஓட்டிக்கொண்டு போய் குண்டுவெடித்துத் தகர்க்கவேண்டியது. அடுத்தபடியாக, லிங்கன் மற்றும் ஹாலண்ட் சுரங்கப்பாதைகள். அமெரிக்காவின் மிகவும் பிசியான தரையடிப் போக்குவரத்துச் சாலைகள் இவை. ஒன்றுக்கு மேற்பட்ட கார் குண்டுகளின் மூலம் இந்தச் சுரங்கங்களை உடைத்துத் தூளாக்கவேண்டியது. அதற்குப் பிறகு, ஜார்ஜ் வாஷிங்டன் பாலம். மேலும் எஃப்.பி.ஐயின் நியூயார்க் தலைமையகம். இதையெல்லாம் செய்தபிறகு, அல் டி' அமாட்டோ (Al D'amato) என்கிற அமெரிக்க செனட்டர் ஒருத்தரையும், விரைவில் அமெரிக்காவுக்கு வருகை தரவிருந்த எகிப்து அதிபர் ஹோஸினி முபாரக்கையும் கொல்வது.

இப்படிப் படம் வரைந்து பாகம் குறிக்கப்பட்டு, மேற்சொன்ன இரண்டு பின்னிணைப்புப் படுகொலை குறித்தும் விவரிக்கப்பட்டிருந்த அந்த ப்ளூ ப்ரிண்டைப் பார்த்தபோது, உண்மையில் அமெரிக்கப் புலனாய்வு அதிகாரிகள் வெலவெலத்துப் போய்விட்டார்கள். இந்தக் கிழம் பார்ப்பதற்கு இத்தனை சாதுவாக இருக்கிறது, ஆனால், செய்கிற காரியம் எல்லாம் பயங்கரமாக இருக்கிறதே என்று வியந்தபடிதான் அவரைக் கைது செய்தார்கள்.

ஒன்றுகூட நிறைவேறாத மேற்படி சதித்திட்டங்கள் அத்தனையும் அல் காயிதாவினுடையது. ஷேக் சாஹேபைக் கொண்டு, அமெரிக்காவில் இவை அனைத்தையும் ஓராண்டு இடைவெளியில் செய்துமுடிக்கத் திட்டமிட்டிருந்தார்கள். அப்போதுதான் அவர் மாட்டிக்கொண்டார்.

விஷயம் கேள்விப்பட்ட ஹோஸினி முபாரக், கடும் கோபமுடன் அமெரிக்காவைத் தாக்கி ஒரு அறிக்கை விட்டார். "நீங்கள்தானே அவருக்கு அடைக்கலம் கொடுத்தீர்கள். ஆப்கன் யுத்த சமயத்தில், சோவியத்துக்கு எதிரான உங்கள் செயல்களுக்கு அவரும் அவரைப் போன்றவர்களும் உதவினார்கள் என்பதற்காகத்தானே அமெரிக்காவுக்குக் கூப்பிட்டு வைத்துக்கொண்டு கொஞ்சிக் குலாவினீர்கள்? அதற்குரிய பரிசைத்தான், தர நினைத்திருக்கிறார்கள்" என்பது போன்ற அவருடைய பேச்சு, அமெரிக்காவுக்கு மிகவும் தலைகுனிவாகவும் தர்மசங்கடமாகவும் ஆகிவிட்டது.

ஒசாமா பின்லேடனுக்குக் கூட, முதலில் அமெரிக்க ஆதரவு இருந்ததுதான். ஒசாமா என்ன? ஆப்கன் யுத்த சமயத்தில், டீ சப்ளை செய்யும் பையன்களாக இருந்தவர்கள்கூட, ஓர் அமெரிக்கச் சட்டையாவது வைத்திருப்பார்கள். அந்தளவுக்கு சோவியத்தை அவமானப்படுத்தும் வெறி அமெரிக்காவுக்கு இருந்தபடியால், யாருக்கு என்ன செய்கிறோம் என்றே யோசிக்காமல், ஏகப்பட்ட உதவிகள் செய்தார்கள். ஹோஸினி முபாரக் சொன்னது மாதிரி, அது அறுவடை நேரம்!

ஆகவே இன்னும் தீவிரம், மேலும் உக்கிரம் என்று தங்கள் தேடுதல் வேட்டையைத் துரிதப்படுத்தினார்கள். மறுபுறம், பாகிஸ்தானுக்குத் தப்பித்துப் போன ரம்ஸி யூசுஃப் என்ன ஆனான் என்று பார்க்க வேண்டாமா? அது இதெல்லாவற்றைவிட ரொம்ப முக்கியமான விஷயம் ஆயிற்றே.

எப்பேர்ப்பட்ட சதித்திட்டம்! நினைத்த அளவுக்கு வெற்றி பெறவில்லை என்றாலும், அவனும் அல் காயிதாவும் எதிர்பார்த்த அதிர்ச்சி அலை, அமெரிக்காவில் எழுந்தது மறுக்கமுடியாத உண்மை.

அப்படி ஒரு காரியத்தை முடித்த கையோடு கொஞ்சநாள் தலைமறைவாக, ஒதுங்கியிருக்க மாட்டானோ ஒருத்தன்? ம்ஹூம். சிபா ஏ சஹாபா (Sipah e sahaba) என்கிற ஒரு பாகிஸ்தான்

தீவிரவாத இயக்கத்தின் வேண்டுகோளின்படி (கவனிக்கவும். இந்தத் தீவிரவாத இயக்கம், பாகிஸ்தானில் பிறந்து வளர்ந்ததுதான். ஆனால், இது காஷ்மீர் பிரச்னையில் இதுவரை தலையிட்டிருப்பதற்கான ஆதாரம் ஏதுமில்லை. பாகிஸ்தானிலேயே ஷியா முஸ்லிம்களுக்கெதிரான வன்முறையை அரங்கேற்றுவதுதான் இதன் பிரதான திருப்பணி.), அப்போதைய பாகிஸ்தான் பிரதமர் பேனசிர் புட்டோவைக் கொல்வதற்கான பணிகளில் மும்முரமாகிவிட்டான்.

இந்த விஷயம் கேள்விப்பட்டபோதே, அல் காயிதா தலைமை கவலைப்பட்டது. மாட்டிக்கொண்டுவிடுவான் என்று உறுதியாக அவர்கள் நினைத்தார்கள். ஏனென்றால், ரம்ஸி யூசுஃப் நேரடி அல் காயிதா உறுப்பினர் இல்லை. அந்த ஒரு காரியத்தை அல் காயிதாவுக்காகச் செய்து கொடுத்தான். அதேமாதிரி, இப்போது இன்னொரு காரியம். இன்னொரு இயக்கத்துக்காக! அவனைப் பொறுத்தவரை எதையாவது, யாரையாவது அழித்துக்கொண்டே இருக்கவேண்டும். யார் அசைன்மெண்ட் கொடுத்தாலும் ஓகே.

ஆனால், அல் காயிதாவின் கவலை வேறு. ஏதோ ஒரு காரணத்துக்காக, வேறு ஏதோ ஓரிடத்தில் இந்தமாதிரி ஓர் ஆசாமி கைது செய்யப்படுவானேயானால், உடனடியாக அமெரிக்கா அவனைத் தன் நாட்டுக்கு அனுப்பச் சொல்லிக் கேட்கும். பொதுவாக, அமெரிக்கா கேட்டு யாரும் மாட்டேன் என்று சொல்லமாட்டார்கள். அங்கே போனால், அவசியம் 1993 குண்டுவெடிப்பு பற்றிச் சொற்பொழிவாற்றாமல் இருக்கமுடியாது. ஏற்கெனவே, குருட்டு ஷேக் வரைக்கும் அகப்பட்டுக்கொண்டிருக்கும் நிலையில், சிக்கல் பெரிதாகுமே தவிர, இன்னொன்றை எதிர்பார்க்க முடியாது.

ஆகவே, எப்பாடு பட்டாவது ரம்ஸி யூசுஃபை இந்த பேனசிர் கொலைத் திட்டத்திலிருந்து கழற்றிவிடமுடியுமா? என்று பார்க்க ஆரம்பித்தார்கள். ஆனால், அதற்குள் விஷயம் கைமீறிவிட்டது.


அப்துல் ஹக்கீம் முராத் என்கிற இன்னொரு சக தீவிரனுடன் ரம்ஸி யூசுஃப், பேனசிரை அவரது வீட்டு வாசலிலேயே டைம் பாம் வெடித்துத் தீர்த்துக்கட்டப் போய், குண்டையும் வைத்துவிட்டு ஒதுங்கி நின்று கவனிக்க ஆரம்பித்தபோது, போலீஸாரால் சந்தேகத்தின்பேரில் சுற்றிவளைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டனர். யூசுஃபுக்கு இரண்டு வழிகள்தாம் இருந்தன. ஒன்று, வைத்த குண்டை எடுத்துக்கொண்டு ஓடிவிடுவது. அல்லது எடுக்காமல் ஓடிவிடுவது.

இந்த இரண்டு முடிவுகளில் எது ஒன்றையும் செய்யாமல், வைத்த குண்டைச் செயலிழக்கச் செய்துவிட்டு ஓடிவிடலாம் என்று அவன் ஏன் நினைத்தான் என்று தெரியவில்லை.

அவசரமாக அதற்கான ஒரு முயற்சியை அவன் மேற்கொண்டபோது, பதற்றத்தில் கை பிசகி குண்டு வெடித்துவிட்டது. தப்பித்தது யார் செய்த புண்ணியமோ. பலத்த காயத்துடன், அந்தக் களேபர சூழலைப் பயன்படுத்திக்கொண்டு எப்படியோ தப்பித்து ஓடிவிட்டான்.

பட்ட காயம் ஆறுகிற வரைதான் பொறுத்திருந்திருப்பான் போலிருக்கிறது. உடனே புறப்பட்டுவிட்டான். இந்த முறை அவனது இலக்கு, பாங்காக். அங்குள்ள இஸ்ரேல் தூதரகத்தை காலி பண்ணிவிட்டு வேறு ஒரு முக்கியமான, அதிபயங்கரமான காரியத்தைச் செய்து சரித்திரத்தில் எப்படியும் இடம் பிடித்துவிடலாம் என்று முடிவு செய்துகொண்டு பாங்காக்குக்கு விமானம் ஏறினான்.

அல் காயிதா மீண்டும் கவலைப்பட ஆரம்பித்தது



அமெரிக்காவில் உலக வர்த்தக மையம் தகர்ப்புத் திட்டம். அங்கிருந்து தப்பித்து பாகிஸ்தான் வந்து இறங்கி, ஒரு டீ சாப்பிடும் நேரத்துக்குள் பேனசிர் புட்டோவைப் போட்டுத் தள்ளமுடியுமா என்று முயற்சி. வைத்த குண்டுக்கு இசகுபிசகாகத் தானே அகப்பட்டு குற்றுயிரும் கொலை உயிருமாகத் தப்பித்து, கொஞ்சம் சுகமானதும் பாங்காக்குக்குப் போய் சாகசம் செய்ய மேலும் ஒரு முயற்சி.

ரம்ஸி யூசுஃப் என்கிற தனித் தீவிரவாதி எப்பேர்ப்பட்டவன் என்பதை, அவனது வாழ்வின் இந்த ஒரு பாகம் மட்டுமே விளக்கிவிடக் கூடும். அவனது திருப்பணிகளைப் பார்த்து எப்படி அல் காயிதா கவலைப்பட்டதோ, அதே மாதிரி அவனது மாமாவான சீனியர் தீவிரர் காலீத் ஷேக் முகம்மதுவும் ரொம்பக் கவலைப்பட்டார். வாலிப வயசு. துறுதுறுப்பாக என்னென்னவோ பண்ணுகிறான். எங்காவது சிக்கி, பொசுக்கென்று போய்விடக் கூடாதே என்கிற கவலையில், யூசுஃப் பாங்காக் புறப்படவிருந்த தினத்துக்கு முன் தினம் மாலை, அவனுக்கு ஒரு போன் செய்தார்.

'சாகசக்கார மருமகனே, நான் சௌக்கியம். நீ சௌக்கியமா? அடுத்த திட்டத்துக்குத் தனியே போகாதே, மாமன் நான் இருக்கிறேன், நான் உன் கூட வருகிறேன். ஒரு நாள் பொறுத்திரு' என்று சொல்லிவிட்டு, அதுவரை சமர்த்துப் பிள்ளை போல், பார்த்துக்கொண்டிருந்த குவைத் மின்சார வாரியப் பொறியாளர் உத்தியோகத்துக்கு ஒரு லாங் லீவு போட்டுவிட்டு விமானத்தைப் பிடித்து கராச்சிக்குப் போய் இறங்கிவிட்டார்.

யூசுஃப் அவரிடம் தன் திட்டத்தைச் சொன்னான். கிழக்காசிய நாடுகளில் பல பெரும்பாலும் அமெரிக்க அடிவருடிகளாக இருக்கின்றன. அமெரிக்காவில் நேரடிச் செயல்களில் இறங்குவது எத்தனை அவசியமோ, அதேமாதிரி இந்தத் தேசங்களுக்கும் கொஞ்சம் அதிர்ச்சி வைத்தியம் தருவது அவசியம். முதல்கட்டமாக தாய்லாந்தின் தலைநகர் பாங்காக்கில் உள்ள இஸ்ரேலிய தூதரகத்தில் ஒரு கொழுக்கட்டை வைக்க உத்தேசம் என்று தெரிவித்தான். அமெரிக்க உலக வர்த்தக மையக் கட்டடத்தில் வைத்த அதே கொழுக்கட்டை.

'சரி, போகலாம் வா' என்று காலீத் ஷேக் முகம்மதுவும் அவனுடன் புறப்பட்டார். இருவரும் ஒருமுறை பாங்காக் போய் வெள்ளோட்டம் பார்த்துவிட்டுத் திரும்பினார்கள். மறுமுறை யூசுஃப், தன் மாமாவை பாகிஸ்தானிலேயே விட்டுவிட்டு வேறு ஒரு தீவிர பிரகஸ்பதியுடன் போனான். அமெரிக்காவில் தயாரிக்கப்பட்டது போன்ற அதே வெடிகுண்டு. சிலிண்டரில் அடைத்து, வண்டியில் எடுத்துச் சென்று வைத்துப் பற்றவைத்துவிட்டுப் பன்னிரண்டு நிமிடங்களுக்குள் திரும்பிவிடவேண்டிய திட்டம்.

இம்முறை அவன் அழைத்துச் சென்ற நபரின் பெயர் இஷ்டாக் பார்க்கர். (Istaique Parker).

இவன் ஒரு தென்னாப்பிரிக்க முஸ்லிம். பிழைப்புத் தேடி பாகிஸ்தானுக்கு வந்து செட்டில் ஆனவன். ரம்ஸி யூசுஃப் ஒரு பிழைப்புத் தருவதாகச் சொன்னபோது, உடனே சம்மதித்து, உதவி செய்யப் புறப்பட்டான்.

ஆனால், பாங்காக் இஸ்ரேலிய தூதரகத்துக்கு அதிர்ஷ்டவசமாகவும், யூசுஃபுக்கு துரதிருஷ்டவசமாகவும் மேற்படி குண்டை வைத்த சில வினாடிகளிலேயே அவர்கள் காவல் துறையினரிடம் அகப்பட்டுக்கொண்டார்கள்.

அது ஒன்றும் பேனசிர் வீட்டு வாசலில் வைத்தது போன்ற வெங்காய வெடி அல்ல. திரும்பப் போய்ச் செயலிழக்கச் செய்வதெல்லாம் உடம்புக்கு நல்லதுமல்ல. ஆகவே, சடாரென்று தாவித் திமிறி, தப்பித்துப் பாய்ந்து ஓடிக் காணாமல் போவதொன்றே வழி.

அப்படியே செய்தார்கள். நல்ல வேளையாக குண்டு வெடிப்பதற்கு முன்னதாகச் செயலிழக்கச் செய்யப்பட்டுவிட்டது என்பது ஒருபுறமிருக்க, கொஞ்ச நாளைக்கு பாங்காக்கில் இருப்பது கஷ்டம் என்று முடிவு செய்து, ரம்ஸியும் அவன் நண்பனும் உடனடியாக பாகிஸ்தானுக்குத் திரும்பிவிட்டார்கள்.

என்னடா இது சோதனை, எதை ஆரம்பித்தாலும் அரைகுறையாகப் போய்விடுகிறதே என்கிற கவலை ஒரு பக்கம் யூசுஃபை வாட்டிக்கொண்டிருக்க, அப்போதுதான் காலீத் ஷேக் முகம்மது அவனுக்கு ஓர் இயக்கத்தின் பின்னணி பலம் இத்தகைய நாச காரியங்களுக்கு எத்தனை அவசியம் என்று தீதோபதேசம் செய்தார். ரம்ஸி யூசுஃபும் கிட்டத்தட்ட அந்த முடிவுக்குத்தான் அப்போது வந்திருந்தான். ஆகவே, அதிகத் தாமதமின்றித் தன் மாமா மூலமே அல் காயிதா தலைமைக்குத் தான் கட்டுப்பட விரும்புவதைத் தெரிவித்தான்.

சும்மா சொன்னால் போதுமா? புதிதாக இன்னொரு ப்ராஜக்ட் ரிப்போர்ட்டையும் எழுதி அனுப்பினான். (நமக்கு) உலகின் கிழக்குக் கோடியான பிலிப்பைன்ஸிலிருந்து மேற்கு எல்லையான அமெரிக்காவுக்கு, நம்முடைய முதுகுப் பக்கமாகச் சுற்றிக்கொண்டு போகும் ஒரு விமான ரூட்டைப் பிடித்தான். பசிபிக் பெருங்கடல், தெற்கு சீனக் கடல் வழிக்கு மேலே பறக்கும் அமெரிக்கன் ஏர்லைன்ஸ் விமானங்கள் ஒன்றல்ல, இரண்டல்ல - குறைந்தபட்சம் ஐந்து விமானங்களைக் குறிவைத்துத் தகர்ப்பதுதான் திட்டத்தின் முதல் கட்டம்.

இரண்டாவது கட்டமாக, ஒட்டுமொத்த கிழக்காசிய நாடுகளிலும் ஒரே சமயத்தில் திடீரென்று கெரில்லா போலக் களமிறங்கி, பல்லாயிரக்கணக்கான பொதுமக்களைக் கொன்று போடுவது. யார், எதற்காகத் தாக்குகிறார்கள் என்றே தெரியாத நிலையில், தாக்குதலை முடித்துவிட்டுப் போய்விடுவது. இதற்குப் பல நூற்றுக்கணக்கான போராளிகள் வேண்டியிருக்கும். அது ஒரு பிரச்னையில்லை; பல்வேறு இயக்கங்களிலிருந்து பொறுக்கியெடுத்துக்கொள்ளலாம் என்பது அவனது திட்டம்.

மூன்றாவது கட்டமாக, 1995-ம் ஆண்டு சர்வதேச இளைஞர் தினத்தை முன்னிட்டு பிலிப்பைன்ஸுக்கு வருகை தருவதாக இருந்த (மறைந்த) போப் ஜான்பால் - 2 ஐ, மணிலாவில் வைத்துக் கொல்வது.

தன்னுடைய இந்த மூன்று கட்டத் திட்டத்துக்கு 'ஆபரேஷன் போஜிங்கா' (Operation Bojinka) என்று பெயர் வைத்தான் யூசுஃப். இதை நேரடியாகத் தமிழாக்கினால், பி அண்ட் சி சென்டர் தியேட்டர்களில் திரையிடப்படும் தமிழாக்க ஆங்கிலப் பட டைட்டில் போலிருக்கும். மிரட்டல் அதிரடி அல்லது உலகை உலுக்கும் ஊழிச் சத்தம் என்று ஏதாவது சொல்லலாம்.

திட்டமும் யூசுஃபின் விருப்பமும் ஒசாமா பின்லேடனிடம் போய்ச் சேர்ந்தது. உடனடியாகப் பொருளாதார வல்லுநர்கள் வரவழைக்கப்பட்டார்கள். மொத்த திட்டத்துக்குமாகச் சேர்த்து என்ன

செலவாகும் என்று கணக்கிடப்பட்டது. எத்தனை ஆள் பலம் வேண்டியிருக்கும் என்று யோசித்தார்கள். ரிஸ்க் சதவிகிதம் கணக்கிடப்பட்டு, திட்டத்தின் ஒரு பகுதி முதலீட்டாளராக ஜமா இஸ்லாமியா அமைப்பின் தலைவர் ஹம்பாலி இதில் இணைத்துக்கொள்ளப்பட்டார். தவிரவும், கிழக்காசிய நாடுகளில் இப்படியொரு காரியம் செய்ய உத்தேசித்துவிட்டு, ஜமா இஸ்லாமியாவின் துணை இல்லாமல் அதைச் செய்யவும் முடியாது.

இந்தத் திட்டத்தின் கடைசி நேர முதலீட்டாளராக, நாம் முன்னர் பார்த்த ஒசாமா பின்லேடனின் மாப்பிள்ளை (சகோதரியின் கணவர்) முஹம்மது ஜமால் காலிஃபா என்கிற அபூ பாராவும் இணைந்துகொண்டதாகச் சில தகவல்கள் தெரிவிக்கின்றன. இது உறுதியான தகவல் என்று சொல்லமுடியாது.(போதிய ஆதாரமில்லை.)

ஆக, திட்டம் தயார். நிதி தயார். (மூன்று திட்டங்களுக்குமாகச் சேர்த்து அறுபத்தைந்து லட்சம் டாலர் செலவிட முடிவு செய்ததாகத் தெரிகிறது.) முன்னின்று நடத்திக்கொடுக்க ரம்ஸி யூசுஃப் தயார். மாண்புமிகு மாமா காலித் ஷேக் முகம்மது மிகவும் தயார். இதற்கு மேல் என்ன வேண்டும்?

ரம்ஸி யூசுஃப் தனக்கு நம்பகமான சில நண்பர்களை அழைத்துக்கொண்டு பிலிப்பைன்ஸுக்குப் போய்ச் சேர்ந்தான். அழைத்துச் சென்றவர்களில் இஷ்டாக் பார்க்கரைத் தவிர்த்து, மற்ற அனைவரையும் அங்கேயே விட்டுவிட்டு, அவர்கள் இருவர் மட்டும் மீண்டும் பாங்காக்குக்கு வந்தார்கள். முன்னதாக இத்திட்டத்துக்காக அல் காயிதா அனுப்பியிருந்த ஆள்களும் பிலிப்பைன்ஸ் போய்ச் சேர்ந்து, ஜமா இஸ்லாமியா தோழர்களுடன் ஐக்கியமாகியிருந்தார்கள்.

பாங்காக்குக்குப் போன ரம்ஸி யூசுஃப், அங்கே ஒரு ஹோட்டலில் அறையெடுத்துத் தங்கி, திட்டத்துக்குத் தேவையான வெடிகுண்டுகளைத் தயாரிக்கும் பணியில் பார்க்கருடன் சேர்ந்து ஈடுபட்டான். ஒரு மாதிரி முதல் குண்டு தயாரானது. ஆனால், ஒழுங்காக வெடிக்குமா? கலவை சரியாக இருக்குமா? எங்காவது சொதப்பித் தொலைத்தால் என்னாவது?

ஆகவே, செய்த குண்டை ஒரு மாதிரி குண்டு போலக் கருதி எடுத்துக்கொண்டு அங்கிருந்து மணிலாவுக்குப் போனான். அங்குள்ள கிரீன்பெல்ட் (Greenbelt) என்கிற சினிமா தியேட்டரில் ஏதோ ஒரு பாடாவதி படத்துக்கு டிக்கெட் வாங்கிக்கொண்டு உள்ளே போய் நாற்காலிக்கு அடியில் குண்டை வைத்தான். சரியாக வெடிக்க நேரம் செட் பண்ணிவிட்டு சமர்த்தாக எழுந்து வெளியே வந்துவிட்டான்.

அந்த குண்டு வெடித்தது. பலபேர் இறந்தும் போனார்கள். ஆனால், ஒரு விமானத்தைத் தகர்ப்பதற்கான வல்லமை அதற்கு இருக்குமா? என்று அவனுக்குச் சந்தேகம் வந்தது. ஆகவே, மீண்டும் பாங்காக் வந்து இன்னொரு குண்டைத் தயாரித்தான். அதுவும் அவனுக்கு அத்தனை திருப்தியளிக்கவில்லை. அவன் தயாரிக்க நினைத்த சக்தி மிக்க குண்டின் பத்தில் ஒரு பங்கு சக்தியே அதற்கு இருக்கும் என்று நினைத்தான்.

ஆகவே, மூன்றாவதாகவும் ஒரு குண்டைத் தயாரித்தான். அது கொஞ்சம் திருப்தியாக இருந்திருக்கும் போலிருக்கிறது. அதே காம்பினேஷன் கலவையில் மேலும் இரண்டு குண்டுகளைச் செய்து எடுத்துக்கொண்டு மணிலாவுக்குப் போகலாம் என்று பார்க்கருடன் புறப்பட்டான்.

அந்த ஆப்பிரிக்க பார்க்கருக்கு, அப்போது திடீரென்று உடம்புக்குச் சுகமில்லாமல் ஆகிவிட்டது. ஃப்ளூ மாதிரி ஏதோ ஒரு ஜுரம். தவிரவும் திட்டத்தின் பிரமாண்டமும் அவனுக்கு மிகுந்த அச்சமூட்டிக்கொண்டிருந்தது. தான் மாட்டிக்கொண்டுவிடுவோம் அல்லது மண்டையைப் போட்டுவிடுவோம் என்று நிச்சயமாக நம்பினான். ஆகவே, ரம்ஸி யூசுஃபிடம் தன்னால் வரமுடியாது, பயமாக இருக்கிறது என்று சொல்லிவிட்டான்.

உடம்பு சரியில்லாதவனைச் சரிபண்ணிவிட முடியும். பயந்து நடுங்கும் கோழையை என்ன செய்வது?

ஆகவே, ரம்ஸி யூசூஃப் அவனை பாகிஸ்தானுக்குப் பத்திரமாக விமானம் ஏற்றி அனுப்பிவிட்டுத் தான் மட்டும் மணிலாவுக்குப் புறப்பட்டான்.

அவன் மணிலா போய்ச் சேர்ந்ததற்கு நான்கு மணிநேரம் கழித்து பார்க்கர் பாகிஸ்தானில் கராச்சி விமான நிலையத்துக்கு வந்து இறங்கினான். இறங்கிய கணத்தில் அவனுக்கு மிகுந்த நிம்மதியாக இருந்தது. அப்பாடா, தப்பித்தோம்!

ஒரு ஓட்டலுக்குப் போய் ரூம் எடுத்துத் தங்கினான். நன்கு குளித்துவிட்டு டிபன் சாப்பிட்டான். டிரெஸ் பண்ணிக்கொண்டு ஹோட்டல் அறையைப் பூட்டிக்கொண்டு வெளியே வந்தான். பக்கத்தில் உள்ள ஒரு நண்பனைப் போய்ப் பார்த்துவிட்டு, அன்று மாலையே இஸ்லாமாபாத்துக்குப் போவதுதான் அவன் திட்டம்.

சாலையில் இறங்கியவன் கண்களில் அந்த போஸ்டர் பட்டது. ரம்ஸி யூசூஃபின் புகைப்படத்துடன் அவன் தலைக்கு இரண்டு மில்லியன் டாலர் விலையும் வைத்து, அமெரிக்க அரசு பாகிஸ்தான் காவல்துறை மூலம் ஒட்டியிருந்த போஸ்டர்.

பார்க்கருக்குத் தூக்கிவாரிப் போட்டுவிட்டது. நேற்று வரை அவன் கூடவே இருந்த ஒருவன். ஒரே அறையில் தங்கி, ஒன்றாக வேலை செய்து, ஒன்றாகச் சாப்பிட்டு, தூங்கி, சிரித்துப் பேசி...

அவன் தலைக்கு இரண்டு மில்லியன் டாலர்!

பிழைக்க வழியற்று ஆப்பிரிக்காவிலிருந்து பாகிஸ்தானுக்கு ஓடிவந்த பார்க்கர், அப்போது திருவிளையாடல் தருமி நிலையில் இருந்தான். சொக்கா, இரண்டு மில்லியன்! குற்றம் குறை தன் பக்கத்திலும் இருக்கிறது. அதற்கேற்பக் கொஞ்சம் குறைத்துக்கொண்டாவது தொகையைக் கொடுத்துவிடுவார்களேயானால், ஊருக்குப் போய் பிள்ளைகுட்டிகளுடன் நிம்மதியாக வாழலாமே? என்னத்துக்கு இந்தத் தீவிரவாதமும் மண்ணாங்கட்டியும்?

பார்க்கர் அந்தக் கணமே தன் நண்பனைக் கைகழுவ முடிவு செய்தான். கராச்சி நண்பனைப் பார்க்கும் திட்டத்தையும் கேன்சல் பண்ணிவிட்டு, நேரே ஐ.எஸ்.ஐ அலுவலகத்தைத் தேடிப் போனான்.

"என் பெயர் இஷ்டாக் பார்க்கர். எனக்கு ரம்ஸி யூசூஃபைத் தெரியும். காட்டிக்கொடுத்தால் அந்த இரண்டு மில்லியன் டாலரை எனக்குத் தருவீர்களா?" என்று கேட்டான்.

பார்க்கருக்கு இரண்டு மில்லியன் டாலர் கிடைத்ததா என்று தெரியவில்லை. ஆனால், ரம்ஸி யூசூஃப் மாட்டிக்கொண்டான்.



பார்க்கர் பாகிஸ்தானுக்கு வந்துவிட்டான். அங்கே கிழக்காசியக் கதாநாயகனாக முயற்சி செய்துகொண்டிருந்த ரம்ஸி யூசுஃப் என்ன ஆனான்? எப்படி மாட்டிக்கொண்டான்? அவன் போன வழியிலேயே பின்னால் போய்ப் பார்த்தாலொழிய இது புரியாது.

ஒரு விஷயம் நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும். ரம்ஸி யூசுஃப், தாய்லாந்துக்குப் புறப்படுகிறவரை தனிநபர் தீவிரவாதி. ஒரே ஒரு மாமா சப்போர்ட் மட்டும்தான் அவனுக்கு இருந்தது. ஆனால், அவனது அடுத்த திட்டங்களுக்கு எப்போது அல் காயிதா நிதியும் ஆதரவும் அளிக்க முன்வந்ததோ, அந்தக் கணமே அவன் ஓர் இயக்கத்தின் கண்ணி ஆகிவிட்டான். அல் காயிதாவின் வழக்கப்படி, அவன் போகுமிடமெல்லாம் காற்றில் கரைந்து நின்று அல் காயிதா ஆட்கள் அவனைக் கண்காணித்தபடியே வந்தார்கள். கண்காணிப்பு என்பதற்கு, இந்த இடத்தில் பாதுகாப்பு என்று அர்த்தம். சந்தேகத்துக்கு இடமாக யாராவது உளவாளிகளோ, காவல் துறை அதிகாரிகளோ அவனைப் பின் தொடர்வதாகத் தெரிந்தால், உடனே எங்கிருந்தோ அவன் காதுகளுக்கு சங்கேத எச்சரிக்கை வந்து விழுந்துவிடும். தப்பித்துவிடுவான்.

பாங்காக்கில் ஒரு சமயம் இப்படித்தான் ஆனது. தனது சொந்தத் தயாரிப்பான முதல் குண்டை அங்கேயே ஒரு ஷாப்பிங் காம்ப்ளக்ஸில் வெடிக்கவைத்துப் பரிசோதிக்கலாம் என்று நினைத்து, இடம் பார்க்க அலைந்துகொண்டிருந்தான் ரம்ஸி யூசுஃப். அப்போது ஒரு தாய்லாந்து உளவாளி தன் குடும்பத்துடன் ஒரு ஓட்டலுக்குச் சாப்பிட வந்திருந்தார். உளவாளிக்கு உண்மையில் ரம்ஸி யூசுஃபைத் தெரியாது. அவரது திட்டம், மனைவி மக்களுடன் மசால் தோசை சாப்பிடுவதோ, பாம்பு சூப் சாப்பிடுவதாகவோதான் இருந்திருக்க வேண்டும்.

ஆனால், ரம்ஸி யூசுஃபைப் பின் தொடர்ந்த அல் காயிதா உளவாளிகள், அவன் குறிப்பிட்ட இடத்தை அடைவதற்கு முன்னமேயே அங்கே போய் மோப்பம் பிடித்துவிட்டு, மேதகு தாய்லாந்து உளவுத்துறைக்காரர் அங்கே வந்திருப்பதைப் பார்த்துவிட்டார்கள்.

உடனே சுதாரித்துக்கொண்டு, ரம்ஸி யூசுஃபை நோக்கி விரைந்தது அல் காயிதா பட்சி. கவனிக்கவும். ரம்ஸி யூசுஃபுக்குத் தன்னை அல் காயிதா பின் தொடர்வது தெரியாது. ஏதாவது அபாயம் இருந்தால் எங்கிருந்தாவது எச்சரிக்கை வரும் என்று மட்டும் கேள்விப்பட்டிருந்தான். அத்துடன் சரி. அதுவரை அவனுக்கு அத்தகைய அபாயம் ஏதும் வந்திராததால், அந்தத் தகவல் எப்படி வரும் என்பது தெரியாது.

இந்தக் குறிப்பிட்ட சம்பவத்தின்போது, மேற்படி தாய்லாந்து உளவாளி டிபன் சாப்பிட்டுக்கொண்டிருந்த ஷாப்பிங் காம்ப்ளக்ஸ் கண்ணாடி ரெஸ்டாரண்டிலிருந்து சரியாக ஐம்பதடி நெருக்கத்திலேயே யூசுஃப் வந்துகொண்டிருந்தபடியால், ஓடிப்போய், 'வராதே போ' என்று

சொல்லவோ, பிடித்துத் தள்ளிக்கொண்டு போய்விடவோ அவகாசமில்லை. ஒரு சிறு பரபரப்பு ஏற்பட்டால்கூட, சம்பந்தப்பட்ட உளவாளி திரும்பிப் பார்க்கக் கூடும். கண்ணாடிச் சுவர்தான் குறுக்கே இருக்கிறது. பளிச்சென்று எல்லாம் தெரியும். ஆகவே, அந்த அல் காயிதா பட்சி ஓர் உபாயம் செய்தது.

அந்த ஷாப்பிங் காம்ப்ளக்ஸில் வரிசையாக அணிவகுத்த கடைகளைப் பரபரவென்று நோட்டம் விட்டது. பதப்படுத்தப்பட்ட மீன்கள் விற்கப்படும் ஒரு பணக்காரக் கடை கண்ணில் பட்டது. உடனே அங்கே ஓடிப்போய் ஒரு பாக்கெட் கருவாடு வாங்கி சடாரென்று பிரித்து, கையை உள்ளேவிட்டு நொளப்பியது. போதும். யதேஷ்டம்.

வேகமாக ரம்ஸி யூசூஃப் அருகே வந்த அந்த மனிதன், தெரியாமல் மோதுவது போல அவன் மூக்கருகே தன் கருவாட்டுக் கையை வைத்துத் தேய்த்தான். அப்படியே அவன் பாக்கெட்டில் இரண்டு கருவாடுகளையும் போட்டான்.

ரம்ஸி யூசூஃப் அருவருப்படைய, 'சாரி, சாரி, ரொம்ப சாரி. ஒரு அசம்பாவிதம்.. நான் ஓடிக்கொண்டிருக்கிறேன்' என்று சொல்லிவிட்டுப் பாய்ந்தோடிவிட்டான்.

வினாடி நேரம்தான். அதற்குள் இது நடந்துவிட்டது. ரம்ஸி யூசூஃப், அந்த ஷாப்பிங் மாலில் 'ரெஸ்ட் ரூம் எங்கே?' என்று கேட்டு விசாரித்துக்கொண்டு உள்ளே போய் சட்டை, வாய், மூக்கு எல்லாவற்றையும் கழுவிச் சுத்தம் செய்து முடித்தபோது, மோதியவன் பேசிய ஒரு வரி நினைவுக்கு வந்தது. 'சாரி, சாரி, ரொம்ப சாரி. ஒரு அசம்பாவிதம்.. நான் ஓடிக்கொண்டிருக்கிறேன்.'

சடாரென்று அவன் மண்டையில் ஒரு பொறி தட்டியது. 'நான் ஓடிக்கொண்டிருக்கிறேன்' என்பது, அல் காயிதாவின் சங்கேத வார்த்தைகளுள் ஒன்று. அதற்கு 'நீ ஓடு' என்று அர்த்தம். அதற்குமேல் அவன் ஒரு வினாடி கூடத் தாமதிக்கவில்லை. வெளியே பாய்ந்து, சாலையைத் தாண்டி, ஒரு டாக்ஸி பிடித்துப் போக்குவரத்தில் கரைந்துவிட்டான்.

பாங்காக்கில் ரம்ஸி யூசூஃப் தங்கியிருந்த தினங்களில், இம்மாதிரி மூன்று அல்லது நான்கு சம்பவங்கள் நடந்திருப்பதாகத் தெரிகிறது. ஒவ்வொருமுறையும் அவன் உளவாளிகளின் கண்ணில் படாமல் அல் காயிதாதான் காப்பாற்றியிருக்கிறது.

எப்படியும் தன் பாதுகாப்புக்குப் பிரச்னை வராது என்பது உறுதியாகத் தெரிந்தபிறகுதான், ரம்ஸி யூசூஃப் தன் பரிசோதனைகளை ஆரம்பித்தான். முதல் பரிசோதனை பிலிப்பைன்ஸில்.

பிலிப்பைன்ஸின் தலைநகரம் மணிலாவாக இருந்தாலும், மணிலாவைக் காட்டிலும் அங்கே புகழ்பெற்ற நகரம் ஒன்று உண்டு. அதற்கு செபூ என்று பெயர் (Cebu City). மிகப்பழைமையான நகரம். பிலிப்பைன்ஸின் அதி முக்கியமான துறைமுக நகரமும் கூட. பிலிப்பைன்ஸின் மொத்த கடல் வாணிபத்தில் எண்பது சதவிகிதம் இந்த செபூ துறைமுகத்தின் வாயிலாகத்தான் நடக்கிறது.

தனது பரிசோதனைக்கு இந்த நகரத்தை ரம்ஸி யூசூஃப் தேர்ந்தெடுக்கக் காரணம், பாதுகாப்புதான். துறைமுக நகரம் என்பதால் ஏகப்பட்ட வெளிநாட்டுக்காரர்கள் வந்துபோய்க்கொண்டே இருப்பார்கள். சும்மா முகத்தைப் பார்த்துச் சந்தேகப்பட்டெல்லாம் நிறுத்தி விசாரிக்க மாட்டார்கள். யாரோ வெளிநாட்டு வர்த்தகர் என்று நினைத்துக்கொண்டுவிடுவார்கள் என்பது அவன் கணக்கு.

ஆகவே, தனது சொந்தத் தயாரிப்பான வெடிகுண்டை எடுத்து இடுப்பில் முடிந்துகொண்டு செபூவுக்கு வந்து சேர்ந்தான். முன்பே பார்த்தபடி, அவன் தன் குண்டைப் பரீட்சை செய்து பார்க்கத் தேர்ந்தெடுத்திருந்த இடம் ஒரு ஷாப்பிங் மால். எந்த ஊராக இருந்தாலும் சரி. பெரிய ஷாப்பிங் மாலில் குண்டு வைத்துப் பார்த்தால், அதன் சக்தி என்ன, சாவு எண்ணிக்கை என்ன

என்பது துல்லியமாகத் தெரிந்துவிடும்.

இந்த உத்தேசத்துடன் செபூ நகரத்தில், ஒரு பெரிய ஷாப்பிங் சென்டரைத் தேர்ந்தெடுத்து, அதன் ஜெனரேட் டர் ரூமைத் தேடிக்கொண்டு போய், வாட்ச்மேன் இல்லாத நேரமாகப் பார்த்து ஜெனரேட்டருக்கு அடியில் தன் குண்டை வைத்து, நேரம் செட் பண்ணிவிட்டு மேலே ஒரு கோணியைப் போட்டு மூடிவிட்டு எழுந்து வந்துவிட்டான்.

எத்தனை நேரத்தில் குண்டு வெடிக்க வேண்டும் என்று அவன் நிர்ணயித்திருந்தான் என்று தெரியவில்லை. ஆனால், அவன் அந்த ஷாப்பிங் மாலுக்கு வந்து சென்ற பிறகு, ஒரு மணி நேரம் கழித்துத்தான் அந்த குண்டு வெடித்தது. (பின்னால் ரம்ஸி யூசுஃப் மாட்டிக்கொண்ட பிறகு, விசாரணையின்போது உலகெங்கும் ஆதாரம் திரட்டியதில், அந்த ஷாப்பிங் சென்டரின் ரகசிய கேமராவில் அவன் வருகை தந்து சென்றது நேரத்துடன் பதிவாகியிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.)

நல்லவேளையாகப் பெரிய பாதிப்புகள் ஏதும் ஏற்படாமல் மிகக் கொஞ்சம் இடிபாடுகளுடன் அந்த காம்ப்ளக்ஸ் தப்பித்தது என்பது ஒருபுறமிருக்க, ரம்ஸி யூசுஃபுக்குத் தன் குண்டுக் கலவை விகிதம் வேலை செய்கிறது என்பது, இந்தச் சம்பவத்தின் மூலம் உறுதியாகிவிட்டது. போதாது? உடனே செபூவிலிருந்து புறப்பட்டு மெட்ரோ மணிலாவுக்குப் போய், அந்தப் பிராந்தியத்தின் ஒன்பது கோடியே தொண்ணூற்று மூன்று லட்சத்து இரண்டாயிரத்து ஐநூற்று அறுபது பேர்களுள் ஒருவனாகக் கரைந்து காணாமல் போய்விட்டான். (இந்த மக்கள்தொகை 2000-ம் ஆண்டுக் கணக்கெடுப்பின் அடிப்படையில்.)

மெட்ரோ மணிலாவில் ரம்ஸி யூசுஃபுக்குச் சில இஸ்லாமிய அடிப்படைவாதிகளின் தொடர்பு ஏற்பட்டிருந்தது. அவர்களில் சிலர் ஜமா இஸ்லாமியா ஆதரவாளர்களாகவும், இன்னும் சிலர் பாலஸ்தீன் விடுதலை இயக்கங்களைச் சேர்ந்தவர்களுடன் தொடர்பு கொண்டவர்களாகவும் இருந்தார்கள். ஆகவே, அவனது பாதுகாப்புக்கு அங்கே எந்தப் பிரச்னையும் இருக்கவில்லை. தனது குண்டு பரிசோதனை வெற்றிகரமாக முடிந்ததில் அவனுக்கு மிகுந்த சந்தோஷம். கைவசம் ஒரு தொழில் இருக்கிறது! குண்டு வைக்க முடியாத அளவுக்கு ஏதாவது பலத்த அடிபட்டால்கூட, உட்கார்ந்த வாக்கில் தயாரித்துப் பிழைப்பை ஓட்டிவிடலாம்.

இப்படித் தமாஷாக நண்பர்களுடன் பேசிக்கொண்டிருந்தபோதுதான், அவனது மெட்ரோ மணிலா நண்பர்கள் ஒரு யோசனையை முன்வைத்தார்கள். அப்போது அமெரிக்க அதிபராக இருந்த பில் க்ளிண்டன், ஆசிய நாடுகளில் கொஞ்சம் நல்லுறவு வளர்த்துவிட்டுப் போகும் உத்தேசத்துடன் நிறைய இடங்களுக்கு வந்து போய்க்கொண்டிருந்தார். (நம்மூருக்குக் கூட வந்து ஜீன்ஸ் பேண்ட் போட்டுக்கொண்டு தாஜ்மகால் முன்பு மனைவியுடன் நின்று போட்டோ எடுத்துக்கொண்டாரே!) அவரது சுற்றுப்பயணத் திட்டத்தில் பிலிப்பைன்ஸும் இருந்தது.

தனது ஐந்து நாள் ஆசியப் பயணத்தின் ஒரு பகுதியாக, 'நவம்பர் 12, 1994 அன்று மணிலாவுக்கு வருவதாக இருந்த க்ளிண்டனைப் போட்டுத்தள்ள முடியுமா?' என்று ரம்ஸி யூசுஃபைக் கேட்டார்கள், நண்பர்கள். கொல்லப் பிறந்த கொடுங்கோலனான யூசுஃப், உடனே உற்சாகமாகிவிட்டான். தனது போப் படுகொலைத் திட்டத்தைக் கொஞ்சம் தள்ளிவைத்துவிட்டு, க்ளிண்டனை ஒரு கை பார்க்கலாம் என்று தீர்மானித்தான். பரபரவென்று கொலை நோட்ஸ் எழுத ஆரம்பித்தான்.

முதல் வழி, க்ளிண்டன் விமான நிலையத்துக்கு வந்து இறங்கி, காரில் சாலை வழியே வரும்போது ஏதாவது ஓரிடத்தில் சக்திமிக்க குண்டை வைத்து வெடிக்கச் செய்வது. இந்தத் திட்டத்தைக் குறித்து சிந்திக்கும்போதே நண்பர்கள் தடுத்துவிட்டார்கள். குண்டு வெடிக்காமல் படுத்தினால், முயற்சி வீண்.

இரண்டாவது வழி, ராணுவ விமானத் தளத்தில் க்ளிண்டனின் விமானம் வந்து இறங்கும்போதே

ஸ்டிங்கர் மூலம் (Stinger Missile தரையிலிருந்து விமானத்தை நோக்கிச் சுடும் இயந்திரத் துப்பாக்கி. அமெரிக்கக் கண்டுபிடிப்பு. ஒரு துப்பாக்கியின் விலை 26,000 அமெரிக்க டாலர்கள்.) சுட்டு வீழ்த்துவது. இது ஓகே என்றாலும் குறி பிசகினால் ஆபத்து என்று இதையும் நிராகரித்துவிட்டார்கள்.

மூன்றாவது வழியாக ரம்ஸி யூசுஃப் சொன்னது, போஸ்ஜீன் (Phosgene) என்கிற ரசாயன ஆயுதத்தைப் பயன்படுத்துவது. கார்பானிக் ஆசிட் டை க்ளோரைட் என்கிற வேதிப்பெயர் கொண்ட இந்த ரசாயன வாயுவுக்கு, (திரவ நிலையிலும் பயன்படுத்தலாம்.) நிறமோ மணமோ கிடையாது. ஒரு கைத்துப்பாக்கி சைஸ் இஞ்செக்‌ஷன் சிரிஞ்சில் அடைத்துக் குறிபார்த்துச் செலுத்தினால் சத்தமின்றி, ரத்தமின்றி போய் இலக்கைத் தாக்கிவிடும். உடனடி அபாயமும் இல்லை. ரத்தம் சொட்டச் சொட்ட க்ளிண்டன் கீழே விழப்போவதில்லை. தாக்கப்பட்டதே தெரியாமல் மக்கள் கூட்டத்துக்கு டாட்டா காட்டிக்கொண்டிருப்பார். எப்படியும் உயிர்போக இருபத்து நாலு மணிநேரம் ஆகும். அதற்குள் தப்பித்து உலகையே ஒரு வலம் வந்துவிடலாம்.

ஒரு ஆட்டம் ஆடிப்பார்த்துவிடுவது என்று ரம்ஸி யூசுஃப் முடிவு செய்த நேரத்தில், அவனுக்கு அவனது மாமா மூலம் அல் காயிதா மேலிடத்திலிருந்து ஒரு குறிப்பு வந்தது.

“இந்தத் திட்டத்தை மூட்டை கட்டு. க்ளிண்டனை உன்னால் கொல்லமுடியாது. பாதுகாப்பு ஏற்பாடுகள் நீ நினைப்பதுபோல அத்தனை சொத்தையாக இல்லை. நமது பழைய திட்டத்தின்படி போப் ஜான்பாலை முதலில் கவனி. ஆபரேஷன் போஜிங்காதான் உன்னுடைய இப்போதைய ஒரே கவனமாக இருக்க வேண்டும்.”

தன்னுடைய திட்டம், அதுவும் தனது பிரத்தியேக நண்பர்களிடம் மட்டுமே இதுவரை பேசியிருந்த திட்டம், எப்படி சூடானில் இருக்கும் அல் காயிதா மேலிடத்துக்குப் போய்ச் சேர்ந்தது?

அவனுக்குப் புரியவில்லை. நண்பர்கள் தாங்கள் யாரிடமும் இது குறித்தெல்லாம் பேசவே இல்லை என்று சூடம் அணைத்துச் சத்தியம் செய்தார்கள். எனில் எப்படி விஷயம் போயிருக்கும்?

புரியவில்லை என்பதனால் பயந்துவிட்டான். எப்படிப்பட்ட அமைப்பு தனக்குப் பின்னால் இருக்கிறது என்பது முதல்முறையாக அவனுக்குப் புரிந்த தருணம் அது.

உடனடியாக க்ளிண்டனைக் கொல்லும் திட்டத்தை நிறுத்திவிட்டு, போப்பாண்டவர் வருகைக்காகக் காத்திருக்க ஆரம்பித்தான்.



போப்பாண்டவரை எப்படிக் கொல்லலாம்? ரம்ஸி யூசூஃப் யோசித்தான். ஒரு மனித வெடிகுண்டால் மட்டுமே அது சாத்தியம் என்று அவனுக்குத் தோன்றியது. ஒரு தற்கொலைப் படைப் போராளியைத் தேர்ந்தெடுப்பது. அவனுக்கு ஒரு வாரம், பத்து நாள் ஒழுங்காக பைபிள் க்ளாஸ் எடுப்பது. தாடியை நீக்கிவிட்டு, பாதிரியார்கள் அணியும் அங்கி ஒன்றை மாட்டிவிடுவது. சாந்த முகத்துடன் கையில் ஒரு பைபிளை எடுத்துக்கொண்டு, ஜபமாலை உருட்டியபடி போனால், போப் கலந்துகொள்ளும் கூட்டத்தில் அவனும் பங்குபெறத் தடையேதும் இருக்கப்போவதில்லை. (ஆசிய நாடுகளைச் சேர்ந்த பிஷப்கள் பங்குபெறும் மாநாடு ஒன்று, அப்போது பிலிப்பைன்ஸில் உள்ள மக்காதி நகரில் நடைபெறவிருந்தது.) எப்படியும் நூற்றுக்கணக்கான பாதிரியார்கள் அங்கே இருப்பார்கள். அவர்களுள் ஒருவனாகக் கலந்து காணாமல் போய்விடுவதிலும் பிரச்னை இருக்காது.

என்ன பிரச்னை என்றால், எப்படியாவது அந்தக் கூட்டத்தில் நகர்ந்து முன்னேறி, போப்பின் அருகே போய்விடவேண்டும். அவரது பாதம் பணிந்து வணங்குகிற பாவனையில், இடுப்பில் ஒளித்து எடுத்துச் சென்றிருக்கும் குண்டை வெடிக்கச் செய்துவிட வேண்டும்.

ராஜிவ் காந்தி படுகொலைக்குக் கையாளப்பட்ட அதே உத்திதான். குறி பிசகாத அந்தத் தாக்குதல் உத்திதான், போப்பைக் கொல்லவும் பயன்படும் என்று ரம்ஸி யூசூஃப் நினைத்தான்.

போப்பாண்டவர் படுகொலைத் திட்டம் என்பது யூசூஃப் செய்ய உத்தேசித்திருந்த அடுத்த பெரிய காரியத்துக்கு மிக மிக அத்தியாவசியமானது. போப் படுகொலைத் திட்டத்தை ஒரு திசைதிருப்பும் நடவடிக்கையாகப் பயன்படுத்துவது. காவல் துறையும் ஈரேழு பதினாலு உலகமும் அது குறித்தே யோசித்துக்கொண்டும் கவலைப்பட்டுக்கொண்டும் இருக்கும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, குறிப்பிட்ட சில அமெரிக்கன் ஏர்லைன்ஸ் விமானங்களைத் தகர்த்துவிடுவது.

ரொம்ப நாள் இடைவெளியெல்லாம் இல்லை. வெறும் ஆறே நாட்கள். போப் வரப்போவது ஜனவரி 15, 1995. அமெரிக்க விமானங்களைத் தகர்க்கத் தீர்மானித்திருந்த தினம் ஜனவரி 21.

இது விஷயத்தில், காலித் ஷேக் முகம்மது மூலம் அல் காயிதா மேலிடத்திலிருந்து மிகத் தெளிவான உத்தரவுகள் அவனுக்கு வந்திருந்தன. போப் கொலைத் திட்டம் ஒன்றைத்தான், ரம்ஸி யூசூஃப் தன் இஷ்டத்துக்குத் திட்டமிடலாம். விமானத் தகர்ப்பு ப்ராஜக்டுக்கான கட்டளைகளும் ஆட்களும் அல் காயிதாவிடமிருந்தே வரும். தேதி உள்பட அல் காயிதா நிர்ணயித்ததுதான். அதற்கு வசதியாகத்தான் போப் படுகொலைத் திட்டத்துக்கு ஜனவரி 15-ம் தேதியை யூசூஃப் தேர்ந்தெடுத்திருந்தான்.

விமானத் தகர்ப்புத் திட்டம் ரொம்பப் பெரிய காரியம். ஒரே நாளில் ஒன்றுக்கு மேற்பட்ட அமெரிக்கப் பயணியர் விமானங்களைக் குண்டுவைத்துத் தகர்ப்பது. எப்படிச் செய்யலாம்?

திட்டத்தைப் பாருங்கள். அல் காயிதா தேர்ந்தெடுத்துத் தந்திருந்தவை மொத்தம் பதினொரு விமானங்கள். அத்தனையும் அமெரிக்கன் ஏர்லைன்ஸுக்குச் சொந்தமானவை. ஆனால், பிலிப்பைன்ஸிலிருந்து நேரே அமெரிக்காவுக்குப் போகாமல் பல்வேறு கிழக்காசிய நாடுகளில் இறங்கிச் செல்பவை. கிட்டத்தட்ட டவுன் பஸ் சர்வீஸ் மாதிரி.

நேராக அமெரிக்கா போகும் விமானங்கள் என்றால், குண்டு வைக்கப் போகிறவர்களுக்கு அமெரிக்க விசா இருந்தாக வேண்டும். இல்லாவிட்டால் படியேற விடமாட்டார்கள். ஆனால், பிலிப்பைன்ஸிலிருந்து தாய்லாந்து வழியாகவோ, மலேசியா வழியாகவோ, சிங்கப்பூர் வழியாகவோ போகிற விமானங்கள் தானே? அந்த ஊருக்கு டிக்கெட் வாங்குவதில் ஒரு பிரச்னையும் இல்லையே?

ஆக, பதினொரு விமானங்கள். பதினொரு தீவிரவாதிகள். எதற்கும் இருக்கட்டும் என்று பேக்-அப்புக்கு இன்னும் ஒன்பது பேர். இவர்களுள் ஐந்து பேர் அல் காயிதாக்காரர்கள். சூடானிலிருந்து ஒசாமா பின்லேடனால் நேரடியாக அனுப்பப்பட்டவர்கள். மீதி ஆசாமிகள் அத்தனை பேரும் ரம்ஸி யூசுஃபால் தேர்ந்தெடுக்கப்பட்ட கொஞ்சம் பாகிஸ்தான், கொஞ்சம் ஆப்கனிஸ்தான், கொஞ்சம் பிலிப்பைன்ஸ்காரர்கள்.

இவர்கள் அத்தனை பேருக்கும் ரம்ஸி யூசுஃப், மணிலாவுக்கு வெளியே ஒரு காட்டுப்பகுதியில் வைத்துப் பயிற்சியளித்தான். ஆளுக்கு ஒரு விமானத்தில் ஏறவேண்டியது. பயணிகளின் அவசரகால பாதுகாப்புக்காக சீட்டுகளுக்கு அடியில் வைக்கப்பட்டிருக்கும் லைஃப் ஜாக்கெட்டுகளுக்குள் (Life jackets) குண்டை ஒளித்துவைத்துவிட்டு இறங்கிவிட வேண்டியது. அத்தனை பேரும் இறங்கிய சூட்டில், ஏற்கெனவே தயாராக வாங்கிவைத்திருக்கும் பாகிஸ்தான் விமான டிக்கெட் துணையுடன் கராச்சிக்கோ, இஸ்லாமாபாத்துக்கோ போய்விட வேண்டியது.

மிகக் கவனமாக பாகிஸ்தான் போகிற விமானங்கள் புறப்படும் நேரத்தைக் கணக்கிட்டு, அதற்குச் சற்று முன்னதாகப் புறப்படும் அமெரிக்கன் ஏர்லைன்ஸ் விமானங்களையே குண்டு வைக்கத் தேர்ந்தெடுத்திருந்தார்கள். 21-ம் தேதி காலை ஒன்பது மணியிலிருந்து மறுநாள் அதிகாலை நான்கு மணிவரை வெவ்வேறு நேரங்களில் புறப்படவிருந்த வெவ்வேறு விமானங்கள்.

பஸ்ஸில் ஏறி இறங்குவது மாதிரியெல்லாம் ஒரு விமானத்துக்குள் ஏறி இறங்கமுடியுமா, என்றால் முடியும். அததற்கு உரிய நபர்களைத் தகுந்தபடி கவனித்துக்கொண்டால், சாத்தியம்தான் என்று ரம்ஸி யூசுஃப் நினைத்தான். இந்தத் திட்டம் மட்டும் வெற்றிகரமாக நடந்துவிடுமானால், ஒரே நாளில் பசிபிக் பெருங்கடலில் பதினொரு அமெரிக்க விமானங்கள் வெடித்து விழும். குறைந்தது ஐயாயிரம் பேராவது இறப்பார்கள். உலகின் எந்த மூலையிலும் அடுத்த சில மாதங்களுக்கு யாரும் விமானம் ஏறவே யோசிப்பார்கள்.

இப்படியெல்லாம் யோசித்துத் திட்டமிட்டு, ஒவ்வொரு அடியாக எடுத்து வைத்தான் ரம்ஸி யூசுஃப்.

மைக்ரோபாம் என்று அழைக்கப்படும் வஸ்து அது. சின்ன சைஸ் டென்னிஸ் பால் அளவுக்குத்தான் இருக்கும். அதனுடன் ஒரு சிறிய கேஸியோ கடிகாரம் இணைக்கப்பட்டது. நேரத்தை நிர்ணயித்து பொத்தானை அழுத்திவைத்துவிட்டால், சமர்த்தாகச் சப்தமில்லாமல் அது பாட்டுக்குக் கிடக்கும். சினிமா குண்டுகள் மாதிரி டிக் டிக் என்று சப்தம் போட்டுக் காட்டிக்கொடுக்காது. குண்டும் கூட பயங்கரமாகவெல்லாம் இருக்காது. மேல் பார்வைக்கு நிஜமாவே பந்துபோலத்தான் தெரியும். அதனுள்ளே நைட்ரோ க்ளிசிரின் என்கிற வேதிப்பொருள் ஒன்று, வெடிமருந்தாக இருக்கும். சட்னி, சாம்பார் மாதிரி கொஞ்சம் நைட்ரேட் மற்றும் சல்ஃபூரிக் ஆசிட் கலந்திருக்கும். கூடுதல் காத்திரத்துக்கு நைட்ரோபென்ஸைன், சில்வர் அஜைட் (இந்த அஜைட் என்றால் என்னவென்று ஏற்கெனவே பார்த்திருக்கிறோம். மறந்திருந்தால் பழைய இதழ்களைப் புரட்டவும்.) என்று இன்னும் இரண்டு வேதிப் பொருள்கள். இந்த குண்டை வெடிக்கச் செய்வதற்கு, சிறிய, ஒன்பது வோல்ட் பேட்டரிகள் இரண்டு.

மொத்தமாக எல்லாவற்றையும் ஒரு கோபால் பல்பொடி பாக்கெட்டுக்குள் திணித்துவிடமுடியும்.

ரம்ஸி யூசுஃப் தனிப்பட திட்டமிட்டிருந்தால், இம்மாதிரியான ஹைடெக் குண்டு குறித்தெல்லாம் அவன் கற்பனை கூடச் செய்திருக்கமுடியாது. அங்கேதான் அல் காயிதா வருகிறது. அமெரிக்கத் தயாரிப்பான அந்த குண்டுகளை, அமெரிக்கக் கப்பல் மூலமே பிலிப்பைன்ஸுக்குக் கொண்டுவரச் செய்து, அங்கே உத்தியோகம் பார்க்கும் உத்தமோத்தமர்களான ஆபீஸர்கள் மூலமே ரம்ஸி யூசுஃபிடம் பத்திரமாகக் கொண்டுவந்து சேர்த்துவிட்டார்கள்.

அதுமட்டுமல்லாமல், விமான விளையாட்டிலேயே இன்னொரு உச்சகட்டம் இருந்தால், நன்றாக இருக்கும் என்று நினைத்து, ரம்ஸி யூசூஃபே எதிர்பார்த்திருக்க முடியாத ஒரு புதிய திட்டத்தை இணைத்தார்கள்.

அந்தத் திட்டத்துக்குப் பெயர், சி.ஐ.ஏ.வுக்கு சம்மட்டியடி.

நன்றாக விமானம் ஓட்டத்தெரிந்த ஒரு நபரைத் தேர்ந்தெடுப்பது. அவன் ஒரு சிறு விமானத்தை (இந்த விமானத்துக்கு Cessna என்று பெயர். இரண்டு பேர் மட்டுமே பயணம் செய்யமுடியும். குண்டு போடுவதற்காகவே வடிவமைக்கப்பட்ட விமானம்.) வாடகைக்கு எடுப்பது. அல்லது விலைக்கு வாங்குவது. அல்லது கடத்தியே விடுவது.

அந்த விமானம் கொள்ளும் அளவுக்கு வெடிமருந்தை நிரப்பிக்கொண்டு நேரே அமெரிக்காவின் விர்ஜீனியா மாகாணத்தில் உள்ள சி.ஐ.ஏ.வின் தலைமையகத்தின் மீது போய் மோதி வெடித்துவிடுவது.

இந்தத் திட்டத்துக்கு அப்துல் ஹக்கீம் முராத் என்கிற போராளியை அல் காயிதா தேர்ந்தெடுத்தது. அகமது சயீத் என்கிற இன்னொரு பெயரும் இவனுக்கு உண்டு. குவைத்தில் ஒரு பெட்ரோலிய நிறுவனத்தில் க்ரேன் ஆபரேட்டராக உத்தியோகம் பார்த்துக்கொண்டிருந்த ஒரு சாது தகப்பனாருக்குப் பிறந்தவன் இவன். அடிப்படையில் பாகிஸ்தானி. தந்தையின் உத்தியோக நிமித்தம்தான் இவனது குடும்பம் குவைத்துக்குக் குடிபெயர்ந்தது.

முராத்துக்குச் சிறு வயதிலிருந்தே விமானம் ஓட்டுவதில் ஆசை. நாலைந்து விமானப் பயிற்சிப் பள்ளிகளில் படித்திருக்கிறான். 275 மணிநேரம் விமானம் ஓட்டி, ஒருமாதிரி நல்ல பைலட் என்று பெயர் வாங்கியபிறகு, அவனுக்கு கமர்ஷியல் பைலட் லைசென்ஸ் கிடைத்தது. சமர்த்தாக விமானம் ஓட்டிக்கொண்டிருந்திருக்கலாம். எப்படியோ ரம்ஸி யூசூஃபின் நட்பு கிடைத்து, முராத்தும் ஒரு தீவிரவாதி ஆகிப்போனான். அவனை ரம்ஸி யூசூஃப் பாகிஸ்தானுக்கு அழைத்துப் போய் லாகூரில் ஒரு ஹோட்டல் அறையில் தங்கவைத்து, எப்படி வெடிகுண்டு தயாரிப்பது என்றெல்லாம் கற்றுக்கொடுத்திருக்கிறான். (பின்னால் முராத் மாட்டிக்கொண்டபிறகு, விசாரணையில் தெரியவந்த தகவல்கள் இவை.)

தனது ஆள்பலம் குறித்து ரம்ஸி யூசூஃப் அல் காயிதா மேலிடத்துக்கு அனுப்பிய தகவல்களின் அடிப்படையில், முராத் தான் தற்கொலைப் போராளியாக சி.ஐ.ஏ. கட்டடத்தைத் தகர்ப்பதற்குச் சரியான ஆள் என்று அல் காயிதா தேர்ந்தெடுத்தது. முன்னதாக, யூசூஃபின் விமானத் தகர்ப்புத் திட்டத்தில்தான் முராத்தின் பெயர் இருந்தது. ஒன்றல்ல, இரண்டு விமானங்களில் ஏறி குண்டு வைத்துவிட்டு இறங்க இருந்தவன் அவன். திட்டத்தை மாற்றி, அவனுக்கு இன்னும் சில சிறப்புப் பயிற்சிகள் அளித்து, விர்ஜீனியாவுக்கு அனுப்பிவிட அல் காயிதா உத்தேசித்திருந்தது.

அத்தனை திட்டங்களும் தயார். ஆட்கள் தயார். ஆயுதங்கள் தயார். பயிற்சி அளிக்கப்பட்டுவிட்டது. இனி என்ன? களமிறங்கவேண்டியதுதான் பாக்கி என்கிற சூழ்நிலையில்தான், ரம்ஸி யூசூஃபின் இம்மாபெரும் திட்டங்கள் தவிடுபொடியாயின. அதுவும் வேறு யாராலோ அல்ல. அவனாலேயே. அல்லது அவர்களாலேயே.

ஒரு த்ரில்லர் திரைப்படத்தைக் காட்டிலும் விறுவிறுப்பான சம்பவங்களைக் கொண்ட அந்த தினம், ஜனவரி 6, 1995.

மணிலா நகரில் உள்ள ஓர் அடுக்குமாடிக் குடியிருப்பு அது. பெயர் டோனா ஜோஸஃபா (Dona Josefa). ஓரளவு வசதியானவர்கள் வாழும் பகுதியில் உள்ள கட்டடம் என்பதால், பாதுகாப்புப் பிரச்னையெல்லாம் அங்கே கிடையாது. ஆனால், அந்தக் குறிப்பிட்ட தினத்தன்று ராத்திரி சரியாகப்

பதினொரு மணிக்கு, அந்தக் கட்டடத்தின் ஆறாவது தளத்தில் உள்ள 603 கதவிலக்கம் கொண்ட அபார்ட்மெண்டுக்குள்ளிருந்து ஒருமாதிரி லேசாகப் புகை வர ஆரம்பித்தது.

ராத்திரி வேளை என்பதால், முதலில் யாரும் கவனிக்கவில்லை. நேரம் ஆக ஆக, அந்தப் புகை எழுப்பிய வாசனை சகிக்கமுடியாமலிருந்தது. எதைக் கொளுத்தினால் அப்படியொரு துர்நாற்றம் வரும் என்றே யாருக்கும் தெரியவில்லை. ஆனால், அங்கே என்னமோ அசம்பாவிதம் என்பது மட்டும் புரிந்தது. உரக்கக் கூப்பிட்டுப் பார்த்தார்கள். மேலே போய்க் கதவைத் தட்ட பயம். ஆகவே, தீயணைப்புத் துறைக்குத் தகவல் தெரிவித்துவிட்டு, எதற்கும் இருக்கட்டும் என்று போலீஸுக்கும் சொல்லியனுப்பினார்கள்.

தீயணைப்பு வீரர்கள் வந்தார்கள். போலீஸும் வந்தது.

எடித் குரேரா (Edith Guerrera) என்கிற அந்தக் கட்டடத்தின் சொந்தக்காரர், கண்ணீரும் கம்பலையுமாக ஓடோடிச் சென்று, "என்னவென்று தெரியவில்லை, ஏதாவது செய்து என் கட்டடத்தைக் காப்பாற்றுங்கள்" என்று கேட்டுக்கொண்டார்.

"உள்ளே யார் குடியிருக்கிறார்கள்?"

"கொஞ்சகாலமாகத்தான்.. யாரோ வெளிநாட்டுக்காரர்கள்."

"வெளிநாடென்றால்?"

"அது தெரியவில்லை. பாகிஸ்தானோ, ஆப்கனிஸ்தானோ.. ஆனால், ஒழுங்காக அட்வான்ஸ், வாடகை கொடுத்திருக்கிறார்கள்."

போலீஸ்காரர்கள் யோசித்தார்கள். சரி, மேலே போய்ப் பார்த்துவிடலாம் என்று முடிவு செய்து, தீயணைப்பு க்ரேன் மூலமாகவே அந்தக் குறிப்பிட்ட தளத்தை அடைய முடிவு செய்து, அதற்கான ஆயத்தத்தை மேற்கொண்டார்கள்.

அப்போதுதான் அந்த வீட்டின் ஜன்னல் திறந்து ஒரு தலை எட்டிப் பார்த்தது.



ரம்ஸி யூசூஃப். அவன்தான் எட்டிப்பார்த்தது. ஜன்னலைத் திறப்பதற்கு முன்னமே அவனுக்கு விபரீதம் தெரிந்துவிட்டது.

தலையில் அடித்துக்கொண்டு தன் சகாவைப் பார்த்தான். ஏதோ ஒரு ரசாயன திரவம் அடங்கிய பாட்டிலை, சும்மா ஊறுகாய் பாட்டிலைத் திறந்து முகர்ந்து பார்ப்பதுபோல அவன் பார்த்ததில் ஆரம்பித்தது வினை.

கப்பென்று மூக்கு வழியே போய் தொண்டை, அடி வயிறுவரை காரமும் நெடியும் தாக்கியதில் அப்துல் ஹக்கீம் முராத் கொஞ்சம் நிலைகுலைந்து போய்விட்டான். கையில் இருந்த பாட்டில் நழுவிக் கீழே விழ, அது உடைந்து, வேதிப்பொருள் தன் வேலையைக் காட்ட ஆரம்பித்துவிட்டது. தீதான்; வேறென்ன?

தீயை அணைக்க அந்தக் கணம் அவனுக்குத் தண்ணீர் தான் ஒரே உபாயமாகத் தோன்றியது. படித்தவன் தான்; வெடிகுண்டு தயாரிக்கப் பயன்படும் ரசாயனங்கள் எத்தகையவை, தண்ணீருக்கும் அவற்றுக்கும் எப்பேர்ப்பட்ட பங்காளி உறவு என்பதெல்லாம் நன்கு தெரிந்தவன் தான். ஆனாலும் அவனது எமோஷனல் இண்டலிஜென்ஸ் அந்தக் கணத்தில் வேலை செய்யாமல் மக்கர் செய்துவிட்டபடியால், தண்ணீரை ஊற்றித் தீயை அணைக்க முயன்றான்.

அதுவும் எப்படி? சிங்க்கைத் திறந்து, குழாயிலிருந்து வரும் நீரை விரலால் பாதி அடைத்து, வேகமாகப் பீய்ச்சி அடித்தான். அவ்வளவுதான். தீ, ஜகஜ்ஜோதியாக அந்த ஃப்ளாட் முழுவதற்கும் பரவ ஆரம்பித்துவிட்டது. தலையில் அடித்துக்கொண்டு கோணி, சுருணை என்று கிடைத்ததையெல்லாம் போட்டுத் தீயை அணைக்கப் பார்த்திருக்கிறார்கள். அணைந்தும் அணையாத பாதித் தீ புகையாக மேலெழும்பி, சந்துபொந்துகளில் நுழைந்து வெளியே கசிந்துவிட்டது.

துர்நாற்றம். ஆபத்து. போலீஸ். மாட்டிக்கொண்டார்கள்.

சரி, இதற்குமேல் யோசிக்க ஒன்றுமில்லை என்று யூசுஃப் முடிவு செய்தான். ஜன்னலைத் திறந்து, யாரும் மேலே வர முயற்சி செய்யவேண்டாம் என்று எச்சரித்தான். உடனே ஜன்னலை மீண்டும் அடைத்துவிட்டு, அப்பார்ட்மெண்ட்டின் பின்புற ஜன்னலை மோதி உடைத்து பைப்பைப் பிடித்துக்கொண்டு சரசரவென்று இறங்கினான்.

அவனது பேய் வேகத்தையும், வெளியே போலீஸ் வந்துவிட்டதையும் மாறி மாறிப் பார்த்துக்கொண்டிருந்த முராத், தானும் தப்பிக்க வேண்டும் என்பதை ஒரே ஒரு கணம் மறந்துபோனான்.

காவல் துறையினருக்கு அந்த ஒரு வினாடி போதுமானதாக இருந்தது. அப்பார்ட்மெண்ட்டின் கதவை உடைத்துத் திறந்து, பாய்ந்து அவனை அமுக்கிவிட்டார்கள்.

"என்னை ஒன்றும் செய்யாதீர்கள். எனக்கு எதுவும் தெரியாது. நான் ஒரு பைலட். என் நண்பன் ஒருவனைத் தேடி வந்தேன். அட்ரஸ் மாறிவிட்டது. இங்கே இந்த தீவிபத்தில் சிக்கிக்கொண்டேன்" என்று அலறினான்.

"உன் பெயர் என்ன?" என்றனர் காவல் துறையினர்.

எந்த பாஸ்போர்ட்டிலும் இடம்பெறாத அகமது சயீத் என்கிற பெயரைச் சொன்னான். மேற்கொண்டு சில வினாடிகள் காவல் துறையினர் விசாரித்திருப்பார்கள். ஒரு சிறு அவகாசம் கிடைக்க, முராத் சடாரென்று பால்கனிக்கு வெளியே பாய்ந்து தப்பிக்க ஒரு முயற்சி செய்தான்.

முடியவில்லை. பிடித்துவிட்டார்கள். சரி, இவனை ஸ்டேஷனுக்கு எடுத்துப் போய் விசாரித்துக்கொள்ளலாம் என்று ஒரு வேனில் அடைத்து, காவலுக்கு இரண்டு ஆள் போட்டு முதலில் அனுப்பிவைத்தார்கள். பிறகு கொஞ்ச நேரம் போராடி, தீயை அணைத்துவிட்டு,

அறையில் என்னென்ன இருக்கிறது என்று ஆராய ஆரம்பித்தார்கள்.

மணிலாவின் வீதிகளை விளக்கும் ஒரு பெரிய வரைபடம். போப்பாண்டவர் வரும் சாலை வழியை அம்புக்குறியிட்டுக் காட்டும் இன்னொரு படம். ஒரு பைபிள் பிரதி. ஒரு பாதிரியார் அங்கி. இன்னொரு பக்கம் நிறைய ரசாயனக் குடுவைகள். ஒரு தோஷிபா லேப்டாப்.

இவை அனைத்தையும் ஒரு நேர்க்கோட்டில் வைத்து அவர்கள் யோசிக்கத் தொடங்கியபோது, அந்த அப்பார்ட்மெண்ட்டில் இருந்த தொலைபேசி ஒலித்தது. எடுத்தார்கள்.

"அலோவ், நீங்க ஆர்டர் குடுத்த அங்கிய தச்சிமுடிச்சாச்சிங்க. வந்தீங்கன்னா போட்டுப் பார்த்துடலாம். பொதுவா பாதிரிமாருங்க எங்களமாதிரி ரோட்டோர டைலருங்ககிட்டல்லாம் துணி தைக்கக் குடுக்கமாட்டாங்க. திருச்சபைலயே அதுக்கெல்லாம் ஆளுங்க இருப்பாங்க. உங்கள மாதிரி நாலஞ்சு பேர் இருந்தாத்தாங்க நம்ம பொழப்பும் ஓடும்!" என்று எதிர்முனை பேசியதும் காவல் அதிகாரிகளுக்கு விஷயம் புரிந்துவிட்டது.

பாதிரியார் அங்கி, போப்பாண்டவர் செல்லும் பாதையின் வரைபடம், மணிலா நகர மேப், தவிரவும் ரசாயனக் குடுவைகள்.

எப்பேர்ப்பட்ட படுகொலைத் திட்டம்! கூப்பிடு அந்த அகமது சயீதை என்று சுறுசுறுப்பானார்கள்.

மறுபுறம் இரண்டு காவல் அதிகாரிகளுடன் காவல் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்ட அகமது சயீது என்கிற முராத், வழியில் இன்னொரு முயற்சியாக அதிகாரிகளை வளைக்கப் பார்த்தான்.

"இதோ பாருங்கள். உங்களுக்கு ஒரு லட்சத்துப் பத்தாயிரம் பெசோக்கள் (கிட்டத்தட்ட இரண்டாயிரம் அமெரிக்க டாலர்கள்) தருகிறேன். இப்படியே என்னைத் தப்பிப்போக விட்டுவிடுங்கள்" என்று கேட்டுப்பார்த்தான்.

அவன் தப்பித்து ஓடமுடியாதபடி மர்ம உறுப்புக்குப் பக்கமாகப் பார்த்து, பலமாக நாலு சாத்து சாத்திப் படுக்கவைத்துவிட்டார்கள் அதிகாரிகள்.

அதன்பிறகு அவனிடம் விசாரணை ஆரம்பமானது. முதலில் சில நாட்கள் ஒரு வார்த்தை கூடப் பேசாமல் கழித்தான். போரடித்துப் போன அதிகாரிகள், வன்முறை பிரயோகித்தால் ஒழிய இவன் வாய் திறக்கமாட்டான் என்று முடிவு செய்து, அவனைத் தனியே ஓர் இருட்டு செல்லுக்குத் தள்ளிக்கொண்டு போய்த் தங்க வைத்தார்கள். 'அறுபத்து ஏழு நாள் நரகம்' என்று பிலிப்பைன்ஸ் காவல் அதிகாரிகளே பிறகு வருணித்த அந்தச் சித்திரவதைக் காண்டம் விவரிக்கவே முடியாதது.

ஒரு நாள் தவறாமல் முராத்தை உட்காரவைத்து, அவன் மூச்சுமுட்டும் அளவுக்கு வாய் வழியே தண்ணீரை உள்ளே செலுத்திக்கொண்டே இருந்தார்கள். வேறு உணவே கிடையாது. வெறும் தண்ணீர். அதுவும் பைப் வைத்துப் பீய்ச்சி அடித்துக்கொண்டே இருப்பார்கள். மூச்சுவிடக்கூட அவகாசம் தரப்படமாட்டாது.

இது முடிந்ததும் அவனது பிறப்பு உறுப்பில் சிகரெட்டை வைத்துப் புள்ளிக்கோலம் போட ஆரம்பிப்பார்கள். ஒரு நாளைக்கு முப்பது அலறல் என்பது கணக்கு. ஒரு கட்டத்தில் இனிமேல் அங்கே சுடுவதற்கே இடமில்லை என்னும் அளவுக்கு முற்றிலும் தீயினால் சுடப்பட்டுவிட்டது.

பிறகு புராதன தாக்குதல் முறை. உருட்டுக் கட்டையால் இடைவிடாமல் அடித்துக்கொண்டே இருப்பது. மேலே காயமே தெரியாது. ஆனால் உள்ளுக்குள் எலும்புகளெல்லாம் கழண்டுபோய்விடும். ரத்தம் கட்டிக்கொண்டு அங்குலம் கூட அசைக்கமுடியாது.

இந்த மூன்று விதமான சித்திரவதைகளை ஒரே சமயத்தில் அடுத்தடுத்துச் செய்வதை பிலிப்பைன்ஸ் காவல் துறையினர் "Tactical Interrogation" என்று சொல்வார்கள். இதற்கு மடங்காத குற்றவாளியே இருக்கமுடியாது என்பது அவர்களுடைய சித்தாந்தம்.

இரண்டு அல்லது மூன்று நாட்களுக்குள்ளாகவே குற்றவாளிகள் பேச ஆரம்பித்துவிடுவார்கள். ஆனால் முராத் மொத்தம் அறுபத்தேழு நாள் இந்தச் சித்திரவதைகளைச் சகித்துக்கொண்டிருந்திருக்கிறான்! 'அவன் இறந்துபோகாதது ஆச்சரியம்தான்' என்று பின்னால் விசாரணை அதிகாரிகளே சர்டிபிகேட் கொடுத்தார்கள் என்றால் பார்த்துக்கொள்ளுங்கள்.

ஒருவழியாக அறுபத்தெட்டாவது நாள் அவன் வாய் திறந்தான். "என் வாழ்வில் நான் செய்ய இருந்த தலைசிறந்த காரியம் இது. இது மட்டும் நடந்திருந்தால் ஒட்டுமொத்த அமெரிக்காவும் வெலவெலத்துப் போயிருக்கும். அந்த ரசாயனச் சனியன் மட்டும் கொட்டி, குட்டையைக் குழப்பாதிருந்திருந்தால் உங்களால் ஒருபோதும் ரம்ஸி யூசுஃபின் நவீன வெடிகுண்டைக் கண்டுபிடித்து அழித்திருக்கவே முடியாது. எக்ஸ்ரே கதிர்கள் கூட ஊடுருவிக் கண்டுபிடிக்க முடியாத கட்டுமானம் அது" என்றெல்லாம் தன் வாக்குமூலத்தில் முராத் பேசியிருக்கிறான்.

ஒரு பக்கம் முராத் இப்படித் திருவாய் மலர்ந்துகொண்டிருக்க, மறுபுறம் அப்பார்ட்மெண்ட்டில் கண்டு எடுக்கப்பட்ட ரம்ஸி யூசுஃபின் லேப்டாப் மற்றும் நாலைந்து ஃப்ளாப்பி டிஸ்குகளிலிருந்து காவல் அதிகாரிகள் ஏகப்பட்ட தங்கச் சுரங்கங்களைக் கண்டுபிடித்தார்கள்.

யூசுஃபுக்கு கம்ப்யூட்டர் பயன்பாட்டில் உள்ள பல நுணுக்கமான சூட்சுமங்கள் தெரிந்திருந்தன. அவன் சாதாரணமாக நோட்ஸ் எழுதி சேகரிக்கும் ஃபைல்களைக் கூட என்கிரிப்ட் செய்தே வைத்திருந்தான். வேர்ட் டாக்குமெண்டுகள், எக்ஸெல் ஃபைல்கள் எல்லாவற்றுக்கும் பாஸ்வேர்ட் பாதுகாப்பு அளித்திருந்தான். அந்த பாஸ்வேர்ட்களையெல்லாம் இன்னொரு ஃபைலில் எழுதி அதற்கொரு பாஸ்வேர்ட் கொடுத்து யாரும் திறக்கமுடியாமல் செய்திருந்தான்.

நிபுணர்கள் வந்து அத்தனை ஏழு கடல், ஏழு மலைகளையும் தாண்டி அவனது லேப்டாப்பைக் குடைந்து, கடைந்து எடுத்தபோது, வியப்பில் வாய்பிளந்து போனார்கள். மணிலாவிலிருந்து புறப்படும் விமானங்களின் நேர அட்டவணை, குண்டுகள் வெடிக்கும் நேரங்கள், எந்த விமானத்தில் யார் குண்டுவைக்கப் போகிறார்கள் என்கிற விவரம், திட்டத்தில் யார் யார் எந்தெந்த வகைகளில் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் போன்ற தகவல்கள், சில முக்கியமான நபர்களின் புகைப்படங்கள் (அதில் ஒன்று முகம்மது ஜமால் காலிஃபா என்கிற அபூ பாராவின் புகைப்படம். ஆனால் இன்றுவரை வெளியிடப்பட்டதில்லை.) செலவுக்கணக்குகள், யார் யாரிடம் இருந்து எத்தனை பணம் வந்திருக்கிறது என்கிற விவரங்கள் என்று ஃபைல்கள் நீண்டுகொண்டே போயின.

அமெரிக்க, இஸ்ரேல் மற்றும் பிலிப்பைன்ஸ் அரசுகளுக்கு எச்சரிக்கை விடுக்கும் சில அறிக்கைகளையும் அவன் எழுதி வைத்திருந்தான். காலீத் ஷேக் முகம்மது, முகம்மது அட்டா, அபூ பாரா என்கிற பெயர்கள் சர்வ சாதாரணமாகக் கையாளப்பட்டிருப்பதைக் கண்டு, காவல் அதிகாரிகள் வெலவெலத்துப் போனார்கள்.

எப்பேர்ப்பட்ட சதித்திட்டம்! எவ்வளவு பெரிய இயக்கம் சம்பந்தப்பட்டிருக்கிறது!

உடனடியாகச் சம்பந்தப்பட்ட அத்தனை பேரையும் பிடிக்கும் பணியில் மும்முரமானது பிலிப்பைன்ஸ் காவல் துறை. உளவுத்துறை அதிகாரிகள் தலைதெறிக்க ஓடினார்கள். இண்டர்போல் மூலம் சகல ஆசிய நாடுகளுக்கும் தகவல் அனுப்பப்பட்டது. சி.ஐ.ஏ., மொசாட் என்று அமெரிக்க, இஸ்ரேலிய உளவு அமைப்புகள் பிலிப்பைன்ஸ் காவல்துறைக்கு உதவ முன்வந்தன.

முராத் பிடிபட்டதை அடுத்து ஜனவரி 11-ம் தேதி சிங்கப்பூரில் பதுங்கியிருந்த வாலிகான் அமீன்

ஷா என்கிற தீவிரவாதி, சிங்கப்பூர் காவல் துறையினரால் கைதுசெய்யப்பட்டான். வேறு இரண்டு நபர்களை மலேசியாவிலும் பாங்காக்கிலும் வளைத்துப் பிடித்தார்கள். பிலிப்பைன்ஸிலிருந்து தப்பித்து சிங்கப்பூர் போன ரம்ஸி யூசூஃப், சில தினங்கள் அங்கே பதுங்கியிருந்தான். எப்படியும் முராத் உளறிவிடுவான் என்பது உறுதியானதும் அங்கிருந்து புறப்பட்டு மாற்றுப் பெயரில் பாகிஸ்தானுக்குப் பறந்துவிட்டான்.

கராச்சி. அவனுக்குப் பழக்கமான நகரம். இஸ்லாமாபாத்தும் பாதுகாப்பான இடம்தான். நண்பர்கள் இருக்கிறார்கள். உதவி செய்ய எத்தனையோ நல்ல உள்ளங்கள் இருக்கின்றன. எல்லாவற்றுக்கும் மேலாக முன்னதாகத் தப்பித்து வந்திருக்கும் மாண்புமிகு மாமா காலீத் ஷேக் முகம்மது இருக்கிறார். எப்படியும் தன் உயிருக்கு ஆபத்து இருக்காது என்று அவன் உறுதியாக நம்பித்தான் பாகிஸ்தானில் வந்து இறங்கினான்.

ஆனால் பாங்காக்கில், பாதி வழியில் பாதை பிரிந்த அந்த ஆப்பிரிக்க முஸ்லிம் நண்பன் பார்க்கர், அங்கே இரண்டு லட்சம் டாலருக்கு ஆசைப்பட்டுத் தன்னைக் காட்டிக்கொடுக்கத் தயாராகக் காத்திருப்பான் என்பது மட்டும் அவனுக்குத் தெரியாமல் போய்விட்டது.

பிப்ரவரி 7, 1995 அன்று ரம்ஸி யூசூஃப் இஸ்லாமாபாத்தில் உள்ள ஒரு ஹோட்டல் அறையில் வைத்துக் கைது செய்யப்பட்டான்.

ஆப்பரேஷன் போஜிங்காவுக்கு அத்துடன் மங்களம் பாடிவிட்டார்கள்.



துராபி, துராபி என்றொரு பிரகஸ்பதியைப் பற்றிச் சில வாரங்கள் முன்னால் பேசிக்கொண்டிருந்தோம், ஞாபகமிருக்கிறதா? ஒசாமாவின் சடையப்ப வள்ளலாக இருந்த சூடான் தேசத்து அதிபர். அவருக்கு ஏதோ ஒரு சங்கடம் உண்டாகியிருப்பதாகப் பார்த்தோம். என்னவென்பதை விளக்கப் புகுந்தபோதுதான் ரம்ஸி யூசூஃப் குறுக்கே வந்துவிட்டான். உலகம் சுற்றும் வாலிபன். அவன் பின்னால் பாகிஸ்தான், தாய்லாந்து, பிலிப்பைன்ஸ் என்று ரொம்பநாள் நாமும் ஜாலியாகச் சுற்றவேண்டியதாகிவிட்டது. ஆகவே, துராபியைக் கிட்டத்தட்ட மறந்தே போய்விட்டோம். அவரையே மறந்துவிட்ட பிறகு, அவருக்கு நேர்ந்த சங்கடமா நினைவிருக்கும்?

பாதகமில்லை. இப்போது நினைவுபடுத்திக்கொள்ளலாம்.

மேற்படி ரம்ஸி யூசூஃப் விவகாரம் ஒருமாதிரி முடிவுக்கு வந்த தருணத்தில், அமெரிக்காவுக்கும் அகில உலகத்துக்கும் ஒசாமா எங்கே இருக்கிறார், அவரது பக்கவாத்திய கோஷ்டிகள் யார் யார், என்னென்ன செய்கிறார்கள், எங்கெங்கே இருக்கிறார்கள் என்று துப்புரவாகத் தெரிந்துபோய்விட்டது.

இதெல்லாம் மூடிவைக்கக் கூடிய விஷயமா என்ன?

அப்போதுதான் அசன் அல் துராபி சிக்கிக் கொண்டார். அடக்கிழவா! சூடான் மக்கள் ஒருவேளை சோறாவது ஒழுங்காகச் சாப்பிடுவதற்கு எத்தனை உலக நாடுகள் உதவி செய்துகொண்டிருக்கின்றன! அமெரிக்கா அதுகாறும் போனால் போகிறதென்று போட்ட பிச்சைப்பணம் எத்தனை மில்லியன் டாலர்கள்! ஐ.நா.வின் உறுப்பு நாடுகளில் பலவும் சூடான் உள்ளிட்ட பல ஆப்பிரிக்க தேசங்களின் வறுமையைப் போக்குவதற்குத் தம்மாலான ஒத்தாசைகளைச் செய்துகொண்டுதான் இருந்தன.

எல்லாவற்றையும் விழுங்கி ஏப்பம் விட்டுவிட்டு ஒசாமா பின்லேடனுக்கா உதவி செய்கிறாய்? உன்னை ஒரு வழி பண்ணிவிட்டுத்தான் மறுவேலை என்று அமெரிக்கா வீர சபதம் போட்டது.

அமெரிக்காதான் சபதம் போடுகிறதென்றால், அதன் அடிப்பொடிகள் அத்தனைபேரும் சேர்ந்து வீரசபதம் செய்வதாகத்தான் அர்த்தம். அதன் விளைவுகள் எப்படி இருக்கும் என்பதை விளக்கவே வேண்டாம்.

இந்தச் சபதக் காண்டம் நடப்பதற்கு ரொம்ப நெருக்கமாக ஒரு சம்பவம் நடந்தது. கொஞ்சம் திகிலான சமாசாரம்தான். அந்த விவகாரம் வெளியே வந்தபோதுதான், சூடான் அதிபரை பெஞ்சு மேல் நிற்க வைத்துவிட்டார்கள்.

விவகாரம், ஒரு கடுதாசியில் ஆரம்பித்தது. சூடானின் முன்னாள் ராணுவ உயர் அதிகாரி ஒருவர், தன்னுடைய செகரட்டரி மூலம் ஒசாமா பின்லேடனுக்குக் கொடுத்தனுப்பிய கடுதாசி.

மதிப்புக்குரிய எமிர் அவர்களுக்கு,

இறைவனின் சாந்தியும் சமாதானமும் நிலவுவதாகுக. மிக முக்கியமான, ரகசியமான ஒரு விஷயம். ஆயுதப் பயன்பாட்டுக்குக்குத் தகுதியான தரத்தில் சிறிதளவு யுரேனியம் என்வசம் இருக்கிறது. எப்போதோ சூடான் அரசுக்காக வாங்கிய சரக்கில் மிச்சம். இது என்னிடம் இருக்கிற விஷயம், அரசுக்குத் தெரியாது. நீங்கள் விரும்பினால் இதனை உங்கள் இயக்கத்துக்கு விற்கத் தயாராக இருக்கிறேன். தேவையிருப்பின் தொடர்பு கொள்ளவும்.

இப்படிக்கு,

....

மிகவும் சுருக்கமான கடிதம். ஆனால், மிகவும் ஆச்சரியமான தகவலைக் கொண்டிருந்தது. என்னிடம் ஒரு மூட்டை நல்ல ஆந்திர குண்டு மிளகாய் இருக்கிறது என்பதுபோல, அந்த அதிகாரி சுலபமாகச் சொல்லிவிட்டாலும், தனி மனிதர்களிடம் இருக்கக்கூடிய பொருளல்ல அது. யுரேனியம், ப்ளூட்டானியம் போன்றவை அணு ஆயுதத் தயாரிப்புக்கான மூலப்பொருள்கள். அத்தனை சுலபத்தில் யாருக்கும் கிடைக்காது. இன்று வரையிலுமே கூட உலகில் பல நாடுகளிடம் உண்மையிலேயே அணு ஆயுதங்கள் கிடையாது. காரணம், இவையெல்லாம் கிடைப்பதில் இருக்கிற தட்டுப்பாடுதான். கிடைக்கிற கொஞ்சநஞ்ச சரக்கை வல்லரசுகளும், வல்லரசாகப்போகிற நல்லரசுகளும், இந்த ஸ்டேடஸ்ஸை அடைவதற்கு வெயிட்டிங் லிஸ்ட் மற்றும் ஆர்.ஏ.சி.யில் இருக்கிற பிற தேசங்களுமே பங்குபோட்டுக்கொண்டுவிடும்.

இந்த நிலைமையில் சற்றும் எதிர்பாராவிதமாக ஒரு முன்னாள் ராணுவ அதிகாரி யுரேனியம் வேண்டுமா? என்று அல் காயிதாவிடம் கேட்டால்,

பெரிய எழுத்து விக்கிரமாதித்தன் கதை மாதிரி தோன்றலாம். ஆனால் உண்மை. சூடானில்

சோறுதான் பிரச்னை. யுரேனியமெல்லாம் கிடைத்துவிடும். எதையாவது செய்து பணம் சம்பாதிப்பதுதான் அங்கே அதிபர் முதல் அவர் வீட்டு வாட்ச்மேன் வரைக்கும் அத்தனை பேருக்குமே உள்ள சவால். பரம தரித்திர தேசம் ஒன்றில் என்னென்னவெல்லாம் நடக்கும் என்பதை, சௌக்கியமாக மூன்றுவேளை சாப்பிட்டுக்கொண்டு, சாட்டிலைட் டி.வி.யில் டாப்டென் பார்த்துக்கொண்டிருக்கிற நம்மால் எல்லாம் அவ்வளவாகப் புரிந்துகொள்ள முடியாது.

உடனடியாக அல் காயிதாவின் ஆயுத வர்த்தக மேலதிகாரிகள், சம்பந்தப்பட்ட முன்னாள் ராணுவ அதிகாரியைச் சென்று சந்தித்தார்கள். ஏழு அல்லது எட்டு சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடந்திருப்பதாகத் தெரிகிறது. பேரம் பேசிப்பேசி இறுதியில் ஒன்றரை மில்லியன் அமெரிக்க டாலர் விலை நிர்ணயிக்கப்பட்டது.

வங்கி சம்பந்தமே கூடாது. மொத்தப் பணமும் நோட்டுகளாக நேரடியாகக் கொடுக்கப்படவேண்டும். தவணைகள் கூடாது. முழுப்பணத்தையும் மொத்தமாகக் கொடுத்துவிட்டு, சரக்கை எடுத்துக்கொள்ளலாம் என்று முடிவானது. ரசீது கிடையாது. வேறு எந்தவிதமான உத்தரவாதமும் கிடையாது. பெட்டிக்கடையில் வெற்றிலை வாங்குவது போலத்தான் வாங்கவேண்டும்.

அல் காயிதா சம்மதித்தது. பணம் கைமாறியது. அல் காயிதாவின் ஆயுத விஞ்ஞானிகள் குழு ஒன்றை, அந்த ராணுவ அதிகாரி, ஒரு ரகசிய இடத்துக்கு அழைத்துப் போனார். அங்கே மூன்று அடி நீளமும் ஒன்றே முக்கால் அடி விட்டமும் உள்ள ஒரு சிலிண்டர் இருந்தது. அதுதான். அதற்குள்ளாகத்தான் சரக்கு இருக்கிறது என்று சுட்டிக்காட்டினார்கள்.

பார்க்க வந்தவர்கள் வாயடைத்துப் போனார்கள். அவர்களுக்கு யுரேனியம் கிடைத்துவிட்டால் அதை வைத்து எப்படி ஆயுதம் செய்வதென்று தெரியும். ஆனால், அளிக்கப்படும் யுரேனியத்தின் தரத்தைப் பரிசோதிப்பது எப்படி என்று தெரியாது.

"நீங்கள் கவலைப்படாமல் எடுத்துப் போகலாம். நிச்சயம் இது உங்கள் நோக்கத்துக்கு உதவும். ஏனென்றால், அணு ஆயுதம் தயாரிக்கும் திட்டத்துடன்தான் சூடான் அரசே இதை வாங்கியது" என்றார் அந்த அதிகாரி.

சூடானுக்கு எதற்கு அணு ஆயுதம்? என்று அவர்களுக்குக் கேட்கத் தோன்றவில்லை. இப்போது மூலப்பொருளை அதிகாரி கறுப்பு மார்க்கெட்டில் விற்பது போல, ஆயுதமே தயாரித்து, அரசாங்கமே விற்கும்போல.

அந்த சிலிண்டர் மிகுந்த பாதுகாப்புடன் வண்டியில் ஏற்றப்பட்டது. பத்திரமாகக் கொண்டுபோகப்பட்டு, அல் காயிதாவின் ரகசிய இடம் ஒன்றில் பதுக்கப்பட்டது.

அல் காயிதா தனது சரித்திரத்தில் செய்த மாபெரும் மடத்தனமான காரியம் என்று இதனைச் சொல்லலாம்.

யுரேனியத்தில் ஏராளமான ரகங்கள் உண்டு. எல்லா யுரேனியத்திலும் ஆயுதம் செய்யமுடியாது. அணு ஆயுதம் செய்யப் பயன்படும் யுரேனியம் HEU என்று அழைக்கப்படும் Highly Enriched Uranium. இது சாதாரணமாக ஒன்றரை மில்லியன் டாலருக்கெல்லாம் கிடைக்காது. என்ன விலைக்குக் கிடைக்கும் என்பது அத்தகைய ஆயுதங்களை வைத்திருக்கும் அரசுகளுக்கு மட்டும்தான் தெரியும். யூகத்தில் கூட ஒரு தோராய விலை சொல்லிவிடமுடியாது.

சம்பந்தப்பட்ட ராணுவ அதிகாரியின் வசம் இருந்த யுரேனியம், ஒருவேளை செராமிக் கண்ணாடிகளுக்கு வண்ணம் பூசுவதற்குப் பயன்படும் சாது ரக யுரேனியமாக இருக்கவேண்டும். அவருக்கும் விவரம் தெரியவில்லை, வாங்கியவர்களுக்கும் பரிசோதித்து உண்மை அறியத்

தெரியவில்லை.

அந்த யுரேனியத்தைப் பயன்படுத்தி எப்படி ஆயுதம் செய்யலாம் என்று கடுமையாக யோசித்து, ப்ளூ ப்ரிண்ட்டெல்லாம் தயாரித்து, நீண்ட, விரிவான ஆய்வுகளெல்லாம் மேற்கொண்டு, பாதுகாப்பான இடத்தைத் தேர்ந்தெடுத்து ஆயுதச் சாலை நிறுவி, வேலையை ஆரம்பித்தபோதுதான் உண்மை தெரியவந்தது. அந்த யுரேனியத்தால் ஒரு வெங்காய வெடி எழுப்பும் சப்தத்தைக் கூட எழுப்ப முடியாது!

ஒன்றரை மில்லியன் டாலர்கள். வாங்கிய ராணுவ அதிகாரி ஆள் எங்கே போனார் என்றே தெரியவில்லை. அல் காயிதா விஞ்ஞானிகள் அவமானத்தில் குன்றிப்போய்விட்டார்கள். அத்தனை பெரிய செலவு செய்து ஓர் ஏமாற்றம். துக்கம் தாளாமல் எங்கே, யாரிடம் புலம்பினார்களோ தெரியவில்லை.

விஷயம் வெளியே வந்துவிட்டது. அல் காயிதாவுக்கு யுரேனியம் விற்ற அதிகாரியை அமெரிக்கா கண்டுகொள்ளவில்லை. ஆனால், சூடான் அரசு முன்னெப்போதோ யுரேனியம் வாங்க முயற்சி செய்திருக்கிறது என்கிற தகவலில் வெகுண்டு எழுந்தார்கள். உடனே ஐ.நா.விடம் புகார்ப்பட்டியல் அளிக்கப்பட்டது. தீவிரவாத இயக்கத்துக்கு ஆதரவளிக்கும் சூடான் அரசுக்குச் செய்துவரும் உதவிகளை உடனே நிறுத்தவேண்டும்.

அமெரிக்காவும் அதன் தோழமை தேசங்களும் மாற்றி மாற்றி மண்டையிடி கொடுத்ததில், ஐ.நா. தேர் கொஞ்சம் அசைய ஆரம்பித்தது. சூடானுக்கு ஐ.நா. பொதுச் செயலாளரிடமிருந்தும் பாதுகாப்பு கவுன்சிலில் இருந்தும் எச்சரிக்கை நோட்டீஸ்கள் அனுப்பப்பட்டன. அமெரிக்காவின் நட்பு நாடுகள் அனைத்தும் சூடானுடன் அனைத்துப் பொருளாதார உறவுகளையும் முறித்துக்கொள்ளத் தயாராகி, அறிவித்துவிட்டன.

சூடான் மட்டுமல்லாமல், எந்தெந்த நாடுகளில் அல் காயிதாவின் முகாம்கள் உள்ளனவோ, அந்த நாடுகளுக்கெல்லாமும் இந்த அச்சுறுத்தல் அனுப்பிவைக்கப்பட்டது.

நீங்கள் அல் காயிதாவுக்கு அடைக்கலம் தருகிறீர்களா? உங்களுக்கான உதவிகளை நாங்கள் உடனடியாக நிறுத்திவைக்கிறோம்.

1995-ம் ஆண்டு எகிப்து அதிபர் ஹோஸ்னி முபாரக், எத்தியோப்பியாவுக்கு அரசு முறை சுற்றுப்பயணமாகச் சென்றிருந்தார். அங்கே அவரைக் கொலை செய்ய ஒரு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அதனைச் செய்தது எகிப்தைச் சேர்ந்த ஒரு சிறிய போராளிக் குழுதான் என்றபோதும், விசாரணையில் அந்தக் குழுவில் இருந்த சிலர், சூடானில் ஒசாமா பின்லேடனிடம் பயிற்சி பெற்றவர்கள் என்று தெரிய வந்தது.

அதற்குமேல் சூடான் அரசை விட்டுவைக்க யாரும் தயாராக இல்லை. சூடான் மீது மிகப்பெரிய அளவில் தடைகள் விதிப்பதற்கு ஐ.நா.வின் பாதுகாப்பு கவுன்சில் நடவடிக்கை மேற்கொள்ளத் தொடங்கியது.

துராபி மாட்டிக்கொண்டார்.

அல் காயிதா சங்காத்தத்துக்கு அதோடு மங்களம் பாடும்படி அவரது அமைச்சரவை சகாக்களும் சூடானின் மிகப்பெரிய பண முதலைகளும் வர்த்தகர்களும் இன்னபிறரும் அவரைத் துளைக்க ஆரம்பித்தார்கள்.

இதுதான் சாக்கு என்று அதுநாள் வரை ஒசாமா பயத்தில் கொஞ்சம் அடங்கியிருந்த கிறிஸ்துவத் தீவிரவாத இயக்கங்களும் வீதிக்கு வந்து, துராபிக்கு எதிராகக் கோஷமிட ஆரம்பித்தன. இந்த

இயக்கங்களைக் கொம்புசீவி விடும் வேலையை அமெரிக்க உளவுத்துறை அன்றே தொடங்கிவிட்டது.

வலுவான ஆயுதப் பின்னணியுடன் ஓர் உள்நாட்டு யுத்தத்துக்கேகூட சூழ்நிலையை உருவாக்கிவிடலாம் என்பது சி.ஐ.ஏ.வின் எண்ணம்.

படாதபாடுபட்டு ஆட்சியைப் பிடித்திருந்தவர்கள், துராபி என்கிற தங்கள் மகத்தான தலைவரையே கூட இழக்கத் தயாராகிவிட்டார்கள் என்று துராபியின் அந்தரங்க உளவு அதிகாரிகள் மோப்பம் பிடித்து வந்து சொன்னார்கள்.

இழப்பது என்றால்? போட்டுத்தள்ளுவதுதான்; வேறென்ன? அப்படிச் செய்யும் பட்சத்தில், அமெரிக்காவின் கோபம் தணியும். ஆட்சிக்கு எந்தப் பிரச்னையும் வராது. பொருளாதார உதவிகளும் வழக்கம்போல் கிடைக்கும்.

இது எல்லாவற்றையும் துராபி தூக்கி நிறுத்தி அலசிப் பார்த்தார். எல்லாமே நெருக்கடிதான். எல்லாமே முக்கியம்தான். எதுவும் அலட்சியப்படுத்தக் கூடிய விஷயமல்ல.

ஆனால், ஒசாமா பின்லேடனும் அவருக்கு முக்கியம். அந்த நட்பு அப்படிப்பட்டது!

மிகுந்த (அ)தர்மசங்கடத்தில் சிக்கிக்கொண்டார் துராபி.



தர்மசங்கடம்தான். அதர்மத்துக்குத் துணைபோனதால் வந்த தர்மசங்கடம். துராபியால் ஒசாமாவை வெளியே போங்கள் என்று சொல்லமுடியாது.

அவராகப் புரிந்துகொண்டு வெளியேறினால்தான் உண்டு. சூடானில் ஒசாமா இருக்கும் ஒவ்வொரு நாளும், அந்நாட்டின் மீது அமெரிக்கா போடப்போகிற குண்டுகளின் எண்ணிக்கையை ஒவ்வொன்றாக ஏற்றிக்கொண்டே இருக்கும்.

யார் என்ன சொன்னால் என்ன, நீங்கள் இங்கேயே இருங்கள் என்றும் சொல்லமுடியாது. அடிமடியில் வேட்டு வைக்க, அந்தரங்க சிஷ்யர்களே தயாராகிக் கொண்டிருக்கிறார்கள். என்னதான் செய்யலாம்? தவித்து நின்றார் துராபி.

ஒசாமாவும் யோசித்தார். முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு அல் காயிதாவுக்கு அப்போது பொருளாதார நெருக்கடியும் இருந்தது. ஒன்றரை மில்லியன் டாலர்கள் என்ளானது மட்டும்

காரணமல்ல. சூடானில் ஒசாமா தொடங்கியிருந்த தொழிற்சாலைகள் பலவும் நஷ்டப்பட்டு மூடவேண்டிய நிலைமைக்குப் போனது அப்போது. சூடானின் நாணய மதிப்பே, வரலாறு காணாத வீழ்ச்சியடைந்து தேசம் தடுமாறிக்கொண்டிருந்த காலகட்டம் அது. அல் காயிதாவுக்கு அதுநாள்வரை அரசுத் தரப்பிலிருந்து வந்துகொண்டிருந்த அத்தனை உதவிகளும் அடியோடு நின்றுபோனது.

இரண்டு விஷயங்கள் செய்யலாம். செலவுகளைக் கணிசமாகக் குறைப்பது ஒன்று. சூடானை விட்டு வெளியேறிவிடுவது இன்னொன்று. இரண்டில் ஒன்று என்கிற பேச்சுக்கே இடமில்லை. இரண்டையும் செய்தாக வேண்டும்.

அதற்கு வாகான சூழல் ஒன்றும் இயல்பாகவே ஏற்பட்டது.

சூடானில் இருந்த லிபிய நாட்டைச் சேர்ந்த மூன்று தீவிரவாதிகளைத் தன்னிடம் திருப்பிக்கொடுக்கும்படி லிபியா கேட்டுக்கொண்டது. சூடானுக்கு அப்போது லிபியாவுடன் நல்லுறவு இருந்தது. ஒரு கஷ்டம் என்றால் என்னவென்று கேட்கக்கூடிய தோழமை தேசமாக லிபியா மட்டுமே அப்போது இருந்தது சூடானுக்கு.

ஆகவே, லிபியா கேட்டுக்கொண்ட மூன்று தீவிரவாதிகளைச் சிறைப்பிடித்து அனுப்பிவைக்க வேண்டும். வேறு வழியில்லை.

ஆனால், அந்தத் தீவிரவாதிகள் மூவரும் ஒசாமா பின்லேடனிடம் பயிற்சி பெற்றுக்கொண்டிருந்தார்கள். இது சூடான் அரசுக்குத் தெரியும். இப்போது லிபியாவுக்காக, அவர்களைக் கைது செய்தால் ஒசாமாவுடன் உறவை வலிந்து முறித்துக்கொள்வதாக ஆகிவிடும்.

துராபியைத் தவிர, சூடானில் எந்த அமைச்சருக்கும் அதிகாரிகளுக்கும் அதில் எந்தச் சங்கடமும் இல்லை. எப்படியாவது ஒசாமா ஒழிந்துவிட்டால், அமெரிக்க அச்சுறுத்தலில் இருந்து தப்பித்துவிடமுடியுமே என்கிற ஒரே எண்ணம்தான் அவர்களுக்கு.

ஒசாமாவுக்கும் வேறு வழி இருப்பதாகத் தெரியவில்லை. ஐந்தாண்டு உறவு. அதனால் என்ன? என்றைக்கு இருந்தாலும் இது நடக்கும் என்று தெரிந்துதானே சூடானில் காலெடுத்து வைத்தார்?

அந்த மூன்று லிபியத் தீவிரவாதிகளையும் சூடான் அரசு கைது செய்துகொள்ள விருப்பமில்லாமல் சம்மதித்து, ஒதுங்கி நின்று வேடிக்கை பார்த்தார். அன்றோடு கதை முடிந்தது.

மூட்டை முடிச்சுகள் கட்டப்பட்டன. அல் காயிதாவின் சூடான் கூடாரங்கள் காலி செய்யப்பட்டன.

மே மாதம் 16-ம் தேதி, 1996-ம் வருடம் அல் காயிதா மீண்டும் ஆப்கனுக்கு இடம் பெயர்ந்தது.

ஆப்கனிஸ்தான் ஒன்றும் அப்போது வந்தாரை வாழவைக்கும் புண்ணியக்ஷேத்திரமாக இல்லை. தேசத்தை ஒரு ரொட்டியாக உருவகப்படுத்திக் கொள்ள முடியுமானால், இரண்டு கோஷ்டிகள் அதை ஆளுக்கொரு பக்கமாகப் பிய்த்துத் தின்றுகொண்டிருந்தன.

ஒரு பக்கம், வடக்குக் கூட்டணிப் படையினர் என்கிற முன்னாள் முஜாஹெதின்கள் ஆண்டுகொண்டிருந்தார்கள். இன்னொரு பக்கம், தெற்கே சிலிர்த்தெழுந்த தாலிபன்கள்களின் கட்டுப்பாட்டில் பெரும்பான்மையான நிலப்பரப்பு வந்துவிட்டது. சந்தேகமில்லாமல் ஒரு முழுநீள உள்நாட்டுப் போரும் புரட்சியும் வரத்தான் போகிறது.

இதில் ஒசாமாவுக்கு என்ன தர்மசங்கடம் என்றால், வடக்குக் கூட்டணியைச் சேர்ந்த குல்புதீன் ஹெக்மதியார் ஒசாமாவின் நண்பர். தாலிபன் தலைவர் முகம்மது ஓமரும் நண்பர்தான்

(பின்னாளில் மாமனாரும் ஆனவர்!). இரண்டு பேருமே சோவியத் யுத்த காலத்திலிருந்து ஒசாமாவுக்குத் தெரிந்தவர்கள்.

ஆனால், அவர்கள் இருவரும் தான் இப்போது ஒருவரை ஒருவர் அடித்துக்கொண்டிருக்கிறார்கள். நீயா, நானா? இருவரில் ஒருவர்தான் இருக்கமுடியும்; இருவரில் ஒருவர்தான் ஆளமுடியும்.

அரசியல் ரீதியில் பார்த்தால், ஹெக்மதியாருக்கு அனுபவம் அதிகம். சோவியத் படையெடுப்பின்போது போர்க்களத்தில் மிகப்பெரிய சாதனைகள் நிகழ்த்தியவர். ஆப்கன் மக்களுக்கு அவர் மீது நல்ல அபிப்பிராயம் உண்டு. ஆட்சியும் சுமாராக இருக்கத்தான் செய்தது.

ஆனாலும் ஒரு மாற்றம் வேண்டி வந்திருக்கும் தாலிபன்கள், பாகிஸ்தானில் தயாராகி, கந்தஹாருக்கு வந்தவர்கள். ஐ.எஸ்.ஐ. தயாரிப்பு. தரமானவர்கள் என்ற அர்த்தத்தில் அல்ல. பாகிஸ்தானின் உளவுத்துறையான ஐ.எஸ்.ஐயினால் உருவாக்கப்பட்டவர்கள் என்கிற அர்த்தத்தில். பணமாக, ஆயுதங்களாக, போர்ப்பயிற்சிகளாக அவர்களுக்குப் பாகிஸ்தான் செய்யும் ஒத்தாசைகளுக்குக் கணக்கு வழக்கு இல்லை.

கோடிக்கணக்கில் செலவு செய்து ஆப்கன் இளைஞர்களைப் பாகிஸ்தானுக்கு வரவழைத்து, தாலிபன்களின் கூடாரத்தில் அடைக்கலமாக்கி, அவர்களை ஆயுதமேந்தச் செய்யும் பாகிஸ்தானின் நடவடிக்கை, அல் காயிதாவுக்கு முதலில் கொஞ்சம் புதிராகத்தான் இருந்தது. ஆப்கனிஸ்தானில் அரசியல் மாற்றம் கொண்டுவருவதன் மூலம், பாகிஸ்தான் சாதிக்க நினைப்பது என்ன என்று அத்தனை தெளிவாகப் புரியவில்லை.

காஷ்மீர் விஷயத்தில் பாகிஸ்தானின் அக்கறையைப் புரிந்துகொள்ள முடியும். ஆனால், ஆப்கனில் என்ன கிடைக்கும்? அரையணாவுக்குப் பிரயோஜனமில்லாத தேசம். யார் ஆண்டாலும் வறுமை. எவர் வந்தாலும் ஏழைமை.

கண்டிப்பாக இதில் அமெரிக்காவின் தலையீடு இருந்தே ஆகவேண்டும் என்று அல் காயிதா நினைத்தது. (பின்னால் இது உண்மை என்பதும் தெரிந்தது.)

எப்படியாவது ஆப்கனிஸ்தானில் ஒரு காலை ஊன்றிவிட அமெரிக்கா நினைத்த நேரம் அது. அதற்கு எத்தனையோ காரணங்கள்.

மத்தியக் கிழக்கு தேசங்களின் எண்ணெய் வளத்தை தெற்காசிய, கிழக்காசிய தேசங்களுக்குக் கொண்டு செல்ல ஒரு பைப்லைன் திட்டம் வைத்திருந்தது அமெரிக்கா. தலையைச் சுற்றி மூக்கைத் தொடாமல், ஆப்கன் வழியே நேரடியாக அரபிக்கடல் பாதையைப் பிடித்துவிடும் திட்டம். பாகிஸ்தான், இந்தியா, இலங்கை, இந்தோனேஷியா என்று அதன்பின் எங்கு வேண்டுமானாலும் எண்ணெய் பாயும்.

இது இல்லாவிட்டால், வடக்காகப் பாதை போட ரஷ்யாவிடம் தொங்கவேண்டியிருக்கும். அமெரிக்காவுக்கு அது பிடிக்கவில்லை. ஆகவே, ஆப்கனைக் குத்தகைக்கு எடுக்க விரும்பியது. கூப்பிட்ட குரலுக்கு வாலாட்டும் ஓர் ஆட்சி அங்கே அவர்களுக்குத் தேவைப்பட்டது. இதற்குப் பாகிஸ்தானின் உதவியை அமெரிக்கா கோர, அவர்கள் தாலிபன்களைத் தயார் செய்துவிட்டார்கள்!

ஆனால், இதில் அமெரிக்கா யோசிக்கத் தவறிய ஒரு விஷயம் உண்டு. முல்லா முஹம்மது ஓமர். ஒற்றைக் கண் சிவராசனுக்கு அண்ணனாகச் சில வருஷங்கள் முன் நம் மீடியாவில் கூட அவரது புகைப்படம் ஒன்று திரும்பத் திரும்ப வலம் வந்தது நினைவிருக்கிறதா?

தாலிபன்களின் தலைவர். மிகத் தீவிரமான அடிப்படைவாதி. மிக மிகத் தீவிரமான அமெரிக்க எதிர்ப்பாளர்.

முல்லா ஓமரின் அமெரிக்க எதிர்ப்பு விவகாரங்கள் எதுவும் அமெரிக்காவுக்குத் தெரியாது. யாரோ ஒரு கோயிந்தசாமியின் தலைமையில் ஐ.எஸ்.ஐ. ஒரு ஆப்கன் போராளிக் குழுவை உருவாக்கிக்கொண்டிருக்கிறது என்பது மட்டும்தான் தெரியும். அந்தக் குழுவை வைத்து ஆப்கனைப் பிடித்துவிட்டால், தன்னுடைய திட்டங்கள் அனைத்தும் பிறகு தடையின்றி நடக்கும் என்பது அமெரிக்காவின் கணக்கு.

ஆனால், ஆப்கனுக்கு ஒசாமா வந்து சேர்ந்த அன்றைய தினமே அவருக்கு விஷயம் விளங்கிவிட்டது. எப்படியும் தாலிபன்கள் ஆட்சியைப் பிடித்துவிடுவார்கள். முல்லா தான் சர்வாதிகாரியாக இருக்கப் போகிறவர். அவரது சுயரூபம் அமெரிக்காவுக்குத் தெரிந்தவுடனேயே ஆப்கனில் ஒரு யுத்தத் திருவிழா அவசியம் இருக்கும்!

ஆப்கனிஸ்தானின் தெற்குப் பகுதியிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக முன்னேறிக்கொண்டிருந்த தாலிபன்கள், செப்டெம்பர் 1996-ல் காபூலையும் ஜலாலாபாத்தையும் கைப்பற்றி, ஒட்டுமொத்த ஆப்கனிஸ்தானையும் கபளீகரம் செய்து, ஆட்சிக் கட்டிலில் உட்காரும் வரை ஒசாமா, தானும் தன் குழாமும் ஆப்கனுக்கு வந்துவிட்ட விஷயத்தை முல்லாவுக்குத் தெரியப்படுத்தவே இல்லை. போர் மும்முரத்தில் இருப்பவரைத் தொந்தரவு செய்ய வேண்டாம் என்கிற எண்ணம் காரணமாக இருக்கலாம்.

ஆனால், அல் காயிதா ஆப்கனுக்கு வந்த நாள் முதல், தாலிபன்கள் ஆட்சியைப் பிடித்த தினம் வரை, பல சந்தர்ப்பங்களில் வடக்குக் கூட்டணி ஆசாமிகள், ஒசாமா பின்லேடனைச் சந்தித்துக்கொண்டே இருந்தார்கள். ஹெக்மதியாரே ஒசாமாவை ஏழெட்டு முறை நேரில் வந்து பார்த்துவிட்டுப் போனார். (அல் காயிதா முகாம் மாற்றிக்கொண்டு ஆப்கன் வருவதற்கு வடக்குக் கூட்டணியினர்தான் உதவினார்கள் என்று ஒரு தகவல் உண்டு. ஊர்ஜிதப்படுத்தமுடியாத தகவல் அது.) ஆப்கன் யுத்தத்தில் அல் காயிதாவையும் பங்குபெறச் சொல்லி ஹெக்மதியார் ஒசாமாவிடம் கேட்டார்.

ஆனால், ஒசாமா மறுத்துவிட்டார். முன்பே பார்த்தபடி, இரண்டு தரப்பினருமே அவருக்கு நண்பர்கள். யாருக்கு உதவினாலும் அடுத்தவர் மனம் நோவதுதான் லாபமாக இருக்கும். தவிரவும் அல் காயிதா போராளிகள் அமெரிக்கா என்னும் முதலையை வீழ்த்துவதற்காகத் தயாராகிக்கொண்டிருந்தார்கள். ஆப்கன் என்கிற கொசுவின் உடம்புக்குள் இருக்கும் சிறு உபாதையை ஒழிக்கவெல்லாம் அவர்களை வீணாக்கமுடியாது என்று சொல்லிவிட்டார் ஒசாமா.

ஹெக்மதியாருக்கு நிலவரம் புரிந்ததால் மேற்கொண்டு வற்புறுத்தவில்லை. வடக்குக் கூட்டணியினர் போரில் வெற்றி பெற்றால் ஒசாமா, ஆப்கனில் நிரந்தரமாக நீடூழி வாழலாம் என்று மட்டும் சொல்லிவிட்டுப் போனார்.

ஆனால் நடந்தது வேறு. ஜெயித்தது அவர்களல்ல. தாலிபன்கள்தாம்.

காபூல் விழுந்தபோது, ஆப்கன் மக்கள் காரணம் புரியாமல் குதித்துக் கும்மாளமிட்டுக் கொண்டாடினார்கள். வண்ணப்பொடிகள் வானில் வீசப்பட்டன. தாலிபன்களைத் தோளில் வைத்துச் சுமந்துகொண்டு ஊர்வலம் போனார்கள். பட்டாசுகள் வெடித்தன. இனிப்புகள் பரிமாறப்பட்டன.

அப்பாவி மக்கள். ஒவ்வொரு ஆட்சிமாற்றத்தையும் இப்படித்தான் கொண்டாடிக்கொண்டிருக்கிறார்கள். யார் குத்தியாவது அரிசி வெந்தால் போதும் அவர்களுக்கு.. ஹெக்மதியார் என்ன செய்துவிட்டார்? இந்தத் தாலிபன்கள் ஒருவேளை ஏதாவது செய்யக்கூடும். இளைஞர்கள் அதிகம் இருக்கிறார்கள். வீரர்களாகவும் இருக்கிறார்கள். ஆப்கனில் ஒரு மறுமலர்ச்சியைக் கொண்டுவந்தே தீருவோம் என்கிற சூளுரையுடன் ஆட்சியைப் பிடித்திருக்கிறார்கள். செய்யாமலா போய்விடுவார்கள்?

ஆரவாரத்துடன்தான் வரவேற்றார்கள். ஆனால், ஆட்சிக்கு வந்த முதல் நாளே தாலிபன்கள் எப்படிப்பட்டவர்கள் என்பது அவர்களுக்குப் புரிந்துபோயிற்று. ஆப்கனிஸ்தானுக்கு அடிப்படைவாதம் புதிதல்ல என்றாலும், தாலிபன்களுடைய அடிப்படைவாதத்தின் வீரியம் மிக அதிகம். ஆப்கானியர்கள் அதற்குமுன் கண்டறியாதது. ஆப்கன் என்ன, உலகின் வேறெந்த தேசமும் நவீன யுகத்தில் அப்படியொரு கொத்தடிமை வாழ்க்கையை அனுபவித்திருக்க முடியாது. முக்காடு அணிவதிலிருந்து முகச்சவரம் செய்வதுவரை, தரைபார்த்து நடக்கவேண்டுமென்பதிலிருந்து தொலைக்காட்சிகளுக்கும் திரைப்படங்களுக்கும் தடை விதித்ததுவரை எல்லா விதங்களிலும் தாலிபன்களின் யதேச்சாதிகாரம் சகிக்கமுடியாததாக இருந்தது.

ஒசாமாவுக்கு இதிலெல்லாம் எந்தப் பிரச்னையும் இல்லை. குர்ஆன் சொல்லும் வாழ்க்கை முறை. ஷரியத் சட்டதிட்டங்கள். மேற்கத்திய கலாசாரம் காற்றில் கலந்து ஊடுருவிவிடாதபடிக்கு மேலான கவனம். இதற்குமேல் என்ன வேண்டும்?

1997-ம் ஆண்டு ஜனவரி இறுதி அல்லது பிப்ரவரி முதல் வாரத்தில், தாலிபன்களின் தலைவர் முல்லா முகம்மது ஓமர், ஒசாமா பின்லேடனை அவர் தங்கியிருந்த மலைப்பகுதிக்கே நேரில் வந்து சந்தித்தார். கந்தஹாருக்கு வந்து வசிக்கும்படி அதிகாரபூர்வமாக அழைப்பு விடுத்தார்.



ஆடத் தெரிந்தவர்களுக்குக் கூடம் எப்படி இருந்தாலும் பிரச்னையில்லை. அதுவும் ஆப்கனிஸ்தான் விஷயத்தில் ஒசாமாவுக்கு ஒரு சிறிய அசௌகரியம்கூட இல்லை என்றுதான் சொல்லவேண்டும். சூடானிலேயே வருஷக்கணக்கில் குப்பை கொட்டிய அமைப்புக்கு, ஆப்கன் ஒருவகையில் தேவலை என்று தோன்றியதில் வியப்பில்லை. அங்கே இருந்த உள்நாட்டுக் குளறுபடிகள், ஏழைமை, பத்திரமில்லாத அடிப்படைவாத ஆட்சி, சந்துக்குச் சந்து டீக்கடைகள் மாதிரி முளைக்கும் புரட்சிகர அமைப்புகள், அமெரிக்காவின், தாலிபன்கள் மீதான கோபம், அவர்கள் வடக்குக் கூட்டணிப் படையினரை வளைக்க மேற்கொண்டிருந்த முயற்சிகள் என்று எதுவுமே அல் காயிதாவுக்குப் பிரமாதமான விஷயங்களாக இல்லை.

வந்து உட்கார்ந்த சூட்டில் என்ன செய்யவேண்டும் என்று முடிவு செய்துகொண்டு, உடனே வேலையைத் தொடங்கிவிட்டார்கள். ஒண்ணுமில்லாத விஷயத்துக்கெல்லாம் எத்தனைபேர் வேலை மெனக்கெட்டு வக்கீல் நோட்டீஸ் அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள்? ஆனால், உண்மையிலேயே சீரியஸாக அமெரிக்காவுக்கு ஒரு நோட்டீஸ் அனுப்பிவிட்டுத்தான் அல் காயிதா வேலையை ஆரம்பித்தது.

அவர்கள் பாஷையில் அதற்கு ஃபத்வா என்று பெயர். எல்லோரும் நினைத்துக்கொண்டிருப்பதுபோல, ஃபத்வா என்றால், மரணதண்டனை என்று அர்த்தமல்ல. ஃபத்வா என்றால் தீர்ப்பு. அவ்வளவுதான். உனக்கு நான் இன்னது செய்ய உத்தேசித்திருக்கிறேன் என்கிற முன்னறிவிப்பு.

'இஸ்லாத்துக்கு எதிரானவர்களின் மீது போர் தொடுப்பது ஒவ்வொரு முஸ்லிமின் கடமை. வளைகுடா பகுதியிலிருந்து அமெரிக்க ராணுவத்தை முற்றிலுமாக விரட்டியடிப்பது அவசியம்.' - இதுதான் அல் காயிதா பிப்ரவரி 23, 1998 அன்று வெளியிட்ட அந்த ஃபத்வாவின் சாரம்.

பிப்ரவரியிலேயே வெளியிடப்பட்டதென்றாலும், இது பொதுமக்கள் பார்வைக்கு வருவதற்கு மே மாதம் ஆகிவிட்டது. மே மாதம் 7-ம் தேதி, அல் காயிதாவின் அப்போதைய தளபதியாக இருந்த முகம்மது அடஃப் (ஆப்கன் யுத்தத்தில் இவர் அமெரிக்கப் படையினரால் கொல்லப்பட்டுவிட்டார்.) லண்டனிலுள்ள அல் காயிதா அலுவலகத்துக்கு இதனை ஃபேக்ஸ் செய்தார். லண்டனிலிருந்து வெளியாகும் அரபு செய்தித்தாளான அல் கத்ஸ் அல் அரபி (Al quds al Arabi) அந்த ஃபத்வாவை அப்படியே பிரசுரித்தது.

மிகப்பெரிய கார்ப்பரேட்டுகள் ஒரு 'ப்ராடக்ட் லாஞ்ச்'சுக்குத் திட்டமிடுவதுபோல, முதலில் ஃபத்வா போய்ச் சேர, பின்னாலேயே ஏபிசி தொலைக்காட்சிக்கு ஒசாமா பின்லேடனின் பேச்சு அடங்கிய வீடியோ டேப் ஒன்று அனுப்பப்பட்டது. இந்த ஃபத்வா வரிகளை மீண்டும் அதில் உறுதிப்படுத்திவிட்டு, "ராணுவ வீரர்கள், சிவிலியன்கள் என்று நாங்கள் பார்க்கமாட்டோம். எதிரிகள் எதிரிகள்தான். அமெரிக்க அரசுக்கு வரி செலுத்தும் அத்தனை பேருமே எங்கள் இலக்குதான்" என்று அதில் அவர் சொல்லியிருந்தார்.

இத்தனை வெளிப்படையாக ஒரு தாக்குதல் திட்டத்தை ஊரைக்கூட்டி அறிவித்துவிட்டுச் செய்தும் முடிப்பதென்பது, அல் காயிதா தவிர வேறு யாராலும் நினைத்துப் பார்க்கக்கூட முடியாத விஷயம். அல் காயிதாவுக்கு நிகரான வலிமை படைத்த இயக்கம் என்று சொல்லப்படுகிற ஹிஸ்புல்லா கூட செய்து விட்டுத்தான் பேசுமே தவிர, இன்னது செய்யப்போகிறேன் என்று கூட்டம் கூட்டி மைக் வைத்து அறிவிக்காது.

அல் காயிதா உத்தேசித்திருந்த திட்டம் என்ன? சுலபம். கிழக்கு ஆப்பிரிக்காவில் இருக்கிற இரண்டு அமெரிக்கத் தூதரகங்களைத் தகர்ப்பது.

இரண்டு வேறு வேறு நாடுகள் (கென்யா, தான்சானியா). ஒரே நாள். ஒரே முகூர்த்தம். ஒரே விதமான தாக்குதல். இரண்டு இடங்களிலுமாகச் சேர்த்து சுமார் ஆயிரம் பேருக்குப் பரலோகப் பிராப்தி சித்திக்குமானால் போதும். அமெரிக்கா மீது தான் தொடங்கியிருக்கும் யுத்தத்துக்கு அது ஒரு சரியான டிரெய்லராக இருக்கும் என்று அல் காயிதா நினைத்தது.

அத்தனை மோசமில்லை என்று திருப்திப்பட்டுவிடமுடியுமா என்ன? 220 பேர் மரணம், சுமார் 4,500 பேர் படுகாயம் என்கிற அதிர்ச்சிகரமான க்ளைமேக்ஸுடன் ஒரு முடிவுக்கு வந்த இந்தத் திட்டத்துக்குப் பிறகுதான், அல் காயிதாவின் இருப்பையும் இயக்கத்தையும் அமெரிக்கா உள்பட அத்தனை தேசங்களுமே மிகுந்த அச்சத்துடன் கவனிக்க ஆரம்பித்தன. அமெரிக்க உளவுத்துறையான எஃப்.பி.ஐ. தன்னுடைய 'most wanted' பட்டியலில் ஒசாமா பின்லேடனின் பெயரைச் சேர்த்து, பலகோடிக்கணக்கில் பரிசுத்தொகை அறிவித்தது.

இதெல்லாம் பெரிய விஷயமே இல்லை. மேற்படி திட்டத்தை அல் காயிதா எப்படிச் சாதித்தது என்று பார்க்கவேண்டும். சுவாரசியமே அதில்தான் இருக்கிறது.

கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். அதே ஆப்பிரிக்காவில்தான் முந்தைய வருஷம் வரை இருந்தார்கள். தாக்குப் பிடிக்க முடியாமல்தான் சூடானை விட்டுக் கிளம்பி ஆப்கனிஸ்தானுக்கு வந்து சேர்ந்தார்கள். சூடானில் இருக்கும்போதே செயல்படுத்தியிருக்க முடியாதா?

இத்தனைக்கும் 1996-ம் ஆண்டே இந்தத் தூதரகத் தாக்குதல் திட்டம் வடிவமைக்கப்பட்டு, எப்படிச் செய்யவேண்டும், யார் யார் ஈடுபடவேண்டும், என்னென்ன பயிற்சிகள் அளிக்கப்பட வேண்டும்

என்றெல்லாம் முடிவு செய்துவிட்டார்கள்.

இன்னும் சொல்லப்போனால் இந்தத் தூதரகத் தாக்குதலை உத்தேசித்துத்தான் கென்யாவில் அல் காயிதாவின் கிளை ஒன்றையே திறந்தார்கள். வாதி எல் ஹேஜ் (Wadiel Hage) என்கிற லெபனானில் பிறந்து, குவைத்தில் வளர்ந்த போராளியை அந்தக் கிழக்காப்பிரிக்க செல்லுக்குத் தலைவனாக நியமித்தார்கள். (இதில் ஒரு விசித்திரம் என்னவென்றால், இந்த வாதி பிறப்பால் ஒரு கிறிஸ்துவன். குர்ஆனைப் படித்து, அதனால் கவரப்பட்டு முஸ்லிமானவன்.)

இத்தனை முன்னேற்பாடுகள் செய்தபோதும் ஆப்பிரிக்காவில் இருக்கும்போது ஏன் இந்தத் தாக்குதலை நிகழ்த்தவில்லை?

எந்த அமெரிக்காவினால் ஆப்பிரிக்காவை விட்டுக் கிளம்பவேண்டிவந்ததோ, அதே அமெரிக்காவை அதே ஆப்பிரிக்க மண்ணில் அலறச் செய்யவேண்டும் என்கிற வெறி, அப்போது எழுந்திருக்க சாத்தியமில்லை அல்லவா? அதுதான் விஷயம்.

அந்த வெறிதான், அத்தனை ஆயிரம் மைல்கள் தள்ளிவந்து உட்கார நேர்ந்தபோதும் விடாமல் ஆப்பிரிக்க இலக்கையே குறிவைக்கச் செய்தது.

இனி திட்டத்தை எப்படிச் செயல்படுத்தினார்கள் என்று பார்க்கலாம்.

முதலில் தனது ஆப்பிரிக்கக் கிளையில் இருக்கும் அத்தனை போராளிகளையும் ஏன் எதற்கு என்று காரணம் சொல்லாமல், ஆப்கனிஸ்தானுக்கு வரவழைத்துப் பயிற்சி அளிக்க ஆரம்பித்தார்கள். எப்போதும் இருக்கும் பயிற்சிதான் என்றாலும், தளபதி முகம்மது அடஃப்பின் நேரடி மேற்பார்வையின்கீழ் சுமார் மூன்றுமாத காலம் நடக்கிறது என்றால், அதில் கொஞ்சம் விசேஷம் சேர்ந்துவிடுகிறதல்லவா?

இன்னொரு பக்கம், காரை ஓட்டிச் சென்று இலக்குகளை மோதி அழிக்கப்போகிற இரண்டு தற்கொலைப் படை வீரர்களைத் தனியே பிரித்து (இவர்களது பெயர்கள் இன்றுவரை வெளியே வரவில்லை.), ஒசாமாவே நேரடியாகப் பயிற்சி அளித்தார். அடிப்படைத் தாக்குதல் பயிற்சிகளில் அவர்களைத் தேர்ச்சியடையச் செய்தபிறகு, 'மேல் படிப்புக்காக' லெபனானுக்கு அனுப்பிவைத்தார்.

லெபனான் என்றால் ஹிஸ்புல்லா. ஹிஸ்புல்லா என்றால் அதிபயங்கரம். தெரியுமில்லையா? கடந்த மாதம் முழுக்க மீடியாவை ஆக்கிரமித்திருந்த அமைப்பு.

ஏற்கெனவே சூடானில் இருந்தபோது, ஹிஸ்புல்லாவுடன் அல் காயிதா ஒரு பிசினஸ் ஒப்பந்தம் போட்டிருந்தது. அதன்படி, அல் காயிதாவின் இத்தகைய சிறப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுக்கு ஹிஸ்புல்லா பயிற்சியளிக்கும். பதிலுக்கு ஹிஸ்புல்லாவின் ஆயுதத் தேவைகளுக்கு அல் காயிதா பெருமளவு உதவும்.

தற்கொலைப் போராளிகளைத் தயார் செய்வதில், ஹிஸ்புல்லா, எண்பதுகளின் தொடக்கம் முதல் இன்றுவரை நம்பர் ஒன்னாக இருந்துவரும் ஓர் இயக்கம். அதன் ஜிஹாத் பிரிவின் தலைவரான இமத் ஃபயாஸ் மக்னியா, இந்த விஷயத்தில் ஒரு பி.எச்.டி. அளவுக்குத் தேர்ந்தவர். அல் காயிதா, ஹமாஸ் உள்பட எத்தனையோ பல இயக்கங்களின் தற்கொலைத் தாக்குதல்களின் வெற்றிக்குப் பின்னால், இவருடைய மூளைச் சலவை வகுப்புகள் பெரும்பங்காற்றியிருக்கின்றன. (இவரைப் பற்றிப் பின்னால் விரிவாகப் பார்க்கப் போகிறோம்.)

தூதரகத் தாக்குதலுக்காக, அல் காயிதா தேர்ந்தெடுத்த இரண்டு தற்கொலைப் படைப் போராளிகளுக்கும் சிறப்புப் பயிற்சி அளித்தவர் இந்த மக்னியாதான். மன முனைப்பு, உற்சாகம் இழக்காதிருத்தல், பயம் வராமல் இருப்பது, நடுக்கம் எட்டிப்பார்க்காமல் வேலையை முடிப்பது,

புத்தியில் அந்த ஒரு தாக்குதல் தவிர, வேறு எதுவுமே இல்லாதுபோதல், பதற்றம் என்பதே அடியோடு இல்லாமல் இருப்பது என்று, ஒவ்வொரு கட்டமாக இந்தப் பயிற்சிகள் இருக்கும். ஒரு மனிதனைக் கிட்டத்தட்ட ரோபாட் மாதிரி மாற்றுகிற விஷயம். குறிப்பாக, குடும்பம், எதிர்காலம் குறித்த சிந்தனையை எல்லாம் அடியோடு அழித்துவிடவேண்டியது முக்கியம்.

இதைப் பேசிப்பேசித்தான் செய்யமுடியும். என்ன பேசுகிறோம் என்பதைக் காட்டிலும் எப்படிப் பேசுகிறோம் என்பதில்தான் வெற்றி இருக்கிறது. ஓர் அணுகுண்டுத் தாக்குதலுக்குத் திட்டமிடுவதைக் காட்டிலும் ஒரு தற்கொலைப் போராளியைத் தயார் செய்வது மிகப்பெரிய காரியம்.

அப்படி முதலில் இரண்டு போராளிகளை லெபனானுக்கு அனுப்பி உருவாக்கிக்கொண்டது அல் காயிதா. பிறகு, முஹம்மது ஓதே (Mohammad Odeh) என்கிற வெடிகுண்டு நிபுணர் மூலம், தேவையான வெடி மருந்துகளைத் தயாரித்து, கென்யாவுக்கும் தான்சானியாவுக்கும் அனுப்பிவைத்தார்கள்.

தான்சானியாவின் தலைநகரான தர் எ சலேமில் கல்ஃபான் காமிஸ் முஹம்மது (Khalfan Khamis Mohammed) என்றொரு அடிப்படைவாத முஸ்லிமைப் பிடித்து, திட்டத்துக்கு உதவக்கூடிய உள்ளூர்க் கையாக ஏற்பாடு செய்துகொண்டார்கள். போராளிகள் தங்குவதற்கு, வெடிபொருள்களைப் பதுக்கிவைக்க, அவர்களுக்கு வாகன வசதிகள் செய்துதர பிராந்தியத்தில் ஓரளவு செல்வாக்குள்ள பெரிய மனுஷனின் ஒத்தாசை அவசியம் என்று நினைத்தார்கள்போலும்! மேற்படி காமிஸ் முகம்மது அந்தப் பணியை மனமுவந்து ஏற்றுக்கொண்டார். (இதேமாதிரி நைரோபியிலும் ஓர் உள்ளூர்க்காரத் தொடர்பு இருந்திருக்க வேண்டும். ஆனால், விவரம் இதுவரை தெரியவில்லை.)

இதெல்லாம் பிரமாதமில்லை. கென்யாவிலும் தான்சானியாவிலும் செயல்படுத்தப்படவிருந்த தாக்குதல் திட்டம் குறித்து, ஆப்கனிஸ்தானில் வசித்துக்கொண்டிருந்த ஒசாமா பின்லேடனுக்கு அவ்வப்போது அப்டேட் செய்யவேண்டுமே? அது முக்கியமல்லவா? ஒரு போன் செய்து, 'இந்தமாதிரி தலைவா.. குண்டு ரெடி, ஆள் ரெடி, நாளைக்கு காலைல மேட்டர முடிச்சிரலாமா?' என்றா கேட்கமுடியும்?

அல் காயிதாவின் தொலைபேசித் தொடர்புகள், இண்டர்நெட் தொடர்புகள் அனைத்தும் வழிமறிக்கப்பட்டுக்கொண்டிருந்த நேரம் அது. ஒசாமா அதுவரை உபயோகித்துக்கொண்டிருந்த சாட்டிலைட் போனைக்கூட, எடுத்துக் கோணிப்பையில் போட்டுக் கட்டி பரண்மேல் வைத்துவிட்டிருந்தார்.

தவிரவும், திட்டம் வெற்றியடையும் வரை, ஆப்பிரிக்காவிலிருந்து அவருக்கு எந்த ஒரு தொலைபேசி அழைப்பு, ஈமெயிலும் வரக்கூடாது என்று கண்டிப்பாக உத்தரவிடப்பட்டிருந்தது.

என்றால், எப்படித் தொடர்பு கொள்வது?

பரபரவென்று யோசித்தார்கள். உலகமெங்கும் இருக்கும் அல் காயிதாவுக்கு நெருக்கமான அத்தனை தீவிரவாத முஸ்லிம் இயக்கத் தலைவர்களுடனும் ரகசியமாக விஷயம் விவாதிக்கப்பட்டது.

யார் கொடுத்த ஐடியா என்று சரியாகத் தெரியவில்லை. இறுதியில், ஆப்பிரிக்கக் கண்டத்துக்கும் ஆசியக் கண்டத்துக்கும் நடுவே ஒரு முக்கோணம் போட்டுக் காரியத்தை முடிக்கலாம் என்று முடிவு செய்தார்கள்.

நம்பமுடியாத, மிகத் திறமையான ஏற்பாடு அது!



லெபனானில் நாலு வருஷத்துக்கு ஒருமுறை நாடாளுமன்றத்துக்குத் தேர்தல் நடக்கும். அதன் அடிப்படையில்தான் ஆட்சியாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். என்றாலும், லெபனானின் பிரதமராக வருபவர் ஒரு சன்னி முஸ்லிமாகத்தான் இருக்கவேண்டும் என்று அரசியல் அமைப்புச் சட்டம் சொல்கிறது. பிரதமர் சன்னி முஸ்லிம் என்றால், சபாநாயகர் கண்டிப்பாக ஷியா முஸ்லிமாகத்தான் இருக்கவேண்டும்.

ஆறு வருடங்களுக்கு ஒருமுறை அங்கே அதிபர் தேர்தல் நடக்கும். அதிபராகப்பட்டவர் கண்டிப்பாக ஒரு கிறிஸ்துவராகத்தான் இருக்கவேண்டும். இதுவும் அரசியல் சாசனச் சட்டம்தான்.

ஏகப்பட்ட இனக்குழுக்களையும் கிறிஸ்துவ, இஸ்லாமிய, ட்ரூஸ் பெரும்பான்மையினரையும் கொண்ட லெபனான், இந்த மத, இன மக்களுக்குச் சரியான அரசியல் பிரதிநிதித்துவம் வழங்கப்படவேண்டும் என்பதில் மிகுந்த கவனமாக இருக்கும் தேசம்.

ஆனால் கட்சி அரசியல் என்று வரும்போது, பல பணக்காரத் தனிமனிதர்கள்தான், தத்தம் இனக்குழுக்களைச் சார்ந்த கட்சிகளை உருவாக்கி வளர்ப்பதும் போஷிப்பதும் தேர்தலில் முன்னிறுத்துவதுமான காரியங்களைச் செய்கிறார்கள். இதனால் அரசாங்கம் ஒரு பக்கம் ஆள்வது போலவே, இந்தத் தனி மனிதர்களின் ராஜாங்கமும் அமோகமாக நடக்கும். இவர்களது தொகுதியில், இவர்களது கட்சியை மீறி, இன்னொரு கட்சி வெற்றி பெறவே முடியாது. ஆகவே, எந்த ஒரு அரசியல் கட்சியும் தேசம் முழுவதிலும் கொடி நாட்ட முடியாது.

நம் ஊரில் ஒரு தி.மு.க.வும் அ.தி.மு.க.வும் பெருவெற்றி பெற்று ஆட்சியமைப்பது மாதிரியெல்லாம் (இப்போது இங்கும் இதெல்லாம் சாத்தியமில்லாமல் போய்விட்டது!) அங்கே சாத்தியமே இல்லை. பிராந்திய இயக்கங்கள்தான் எப்போதும் அந்தந்தப் பிராந்தியங்களில் ஜெயிக்கும். அத்தனை இயக்கங்களுமே மதம் மற்றும் இனம் சார்ந்து தேர்ந்தெடுக்கப்படுபவை மட்டுமே.

உதாரணமாக, ஆதி மத்தியக் கிழக்கு கிறிஸ்துவர்கள் அதிகம் வாழும் பகுதி அல்லது தொகுதிகளில், எந்த ஒரு முஸ்லிம் கேண்டிடேட்டும் ஜெயிக்க முடியாது. கிழக்குப் பகுதிகளிலிருந்து வந்தேறிய ஆர்த்தடாக்ஸ் கிறிஸ்துவர்கள் அதிகம் வசிக்கும் பகுதிகளில், அந்தப் பிராந்தியத்தில் பிறந்து வளர்ந்த அரசியல் கட்சிகள் மட்டுமே தேர்தலில் ஜெயிக்கும். (எதிர்த்துக்கூட யாரும் நிற்கமாட்டார்கள்.)

இதுதவிர, கிரேக்க கத்தோலிக்கத் தொகுதிகள், ஆர்மீனியன் ஆர்த்தடாக்ஸ் கிறிஸ்துவத் தொகுதிகள், சன்னி முஸ்லிம் தொகுதிகள், ஷியா முஸ்லிம் தொகுதிகள், ட்ரூஸ் இனத் தொகுதிகள் என்று முழு தேசமுமே ரிசர்வ் தொகுதிகள்தாம்!

ஆகவே, கூட்டணிகளின் பலம் ஒன்றே ஆட்சியமைப்பவர்களைத் தீர்மானிக்கிறது. இந்தக் கூட்டணிகளையும் மேற்சொன்ன பணக்காரத் தனிநபர்களே பெரும்பாலும் தீர்மானிப்பார்கள்.

எழுபதுகளுக்கு முன்புவரை, லெபனானில் கிறிஸ்துவர்களின் எண்ணிக்கை அதிகம் இருந்தது. ஆனால் உள்நாட்டு யுத்தத்தை அடுத்த கணக்கெடுப்புகளின் பிறகு, கிறிஸ்துவர்களும் முஸ்லிம்களும் சரிசமமான எண்ணிக்கையில் அங்கே வசிப்பது உறுதி செய்யப்பட, இரண்டு மதங்களுமே லெபனானின் அரசியலைத் தீர்மானிக்கும் முக்கியச் சக்திகளாக ஆகிப்போயின.

1989_ம் ஆண்டு சவூதி அரேபியாவின் மத்தியஸ்தத்தின்பேரில் ஓர் ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது. (இதற்கு டாயிஃப் ஒப்பந்தம் என்று பெயர்.) இதன் பிறகுதான் பிராந்தியவாரி பிரதிநிதித்துவம் ஓர் ஒழுங்குக்கு வந்தது. லெபனானின் அத்தனை மூலைமுடுக்குகளைச் சேர்ந்தவர்களுக்கும் நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் அளிப்பது என்று முடிவு செய்தபிறகு, அந்தந்தப் பகுதிகளில் வசிக்கும் மதத்தவர்கள் தமக்கென அரசியல் கட்சிகளை உருவாக்கத் தொடங்கினார்கள்.

இதனால்தான் ஒரு முஸ்லிம் கட்சி கிறிஸ்துவப் பகுதியிலோ, கிறிஸ்துவக் கட்சி முஸ்லிம் பகுதியிலோ, பிற இனத்தைச் சேர்ந்த கட்சிகள் வேறு தொகுதிகளிலோ வெற்றி பெறுவது என்பது சாத்தியமில்லாமல் போனது.

இந்த ஏற்பாட்டின்படி, எக்காலத்திலும் லெபனானில் தனிப்பெரும் கட்சியாக, எந்த ஒரு இயக்கமும் தனித்து ஆட்சியமைப்பது என்பது முடியவே முடியாது. கூட்டணி ஆட்சிதான்... குஸ்தி, பஸ்தி தண்டால்தான்.

இந்த குஸ்தி, பஸ்தியெல்லாம் அதிகம் உபயோகப்படுத்தப்படுவது பொதுவாக, பாலஸ்தீன அகதிகள் விஷயத்தில் மட்டுமே. என்னதான் சொந்தச் சகோதரர்கள் துன்பத்தில் சாவது கண்டு சிந்தை இரங்கி மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடு என்றாலும், லெபனானில் வசிக்கும் முஸ்லிம் அல்லாத மக்களுக்கு இந்த அகதிகள் விஷயம் எப்போதும் அலர்ஜி.

லெபனானின் அமைதியைக் குலைக்கும் விஷயங்களில் இது தலையாயது என்கிற அவர்களது நம்பிக்கையை மாற்றிக்கொள்ளத் தயாராக இல்லை. பி.எல்.ஓ, லெபனானுக்கு வந்து தங்கியிராவிட்டால், ஏன் இஸ்ரேல் தங்களைத் தாக்கப்போகிறது என்பதே இவர்களுடைய கேள்வி.

ஆனால், இஸ்ரேல் தாக்குவதற்குக் காரணம் ஏதும் வேண்டாம் என்பதே மத்தியக் கிழக்கின் யதார்த்தம்.

2006_ம் வருஷத்து யுத்தத்துக்கான காரணம் என்னவென்று ஒரு கணம் யோசித்துப் பாருங்கள்! இஸ்ரேலிய ராணுவ வீரர்கள் இரண்டு பேரை ஹிஸ்புல்லா கடத்திவிட்டது என்பதுதான் காரணம். முன்னதாக லெபனானியர்கள் மூன்று பேரை இஸ்ரேல் சிறைப்பிடித்ததற்குப் பதிலாகத்தான் ஹிஸ்புல்லா இந்த நடவடிக்கையை மேற்கொண்டது என்பதையே சுலபமாக மறைத்துவிட்டார்கள்.

ஒரு மாத காலம் நீடித்த இந்த யுத்தம் தாற்காலிகமாகவாவது ஒரு முடிவுக்கு வர, ஐ.நா. மேற்கொண்ட முயற்சி என்று பிரமாதமாகச் சொல்ல ஒன்றுமில்லை. போரை நிறுத்துங்கள் என்று ஐ.நா. சொன்னதும், சரி என்று இஸ்ரேல் உடனே ஒப்புக்கொண்டதற்குத்தான் காரணம் என்ன?

எப்படி யுத்தம் தொடங்க ஒரு சரியான காரணம் இல்லையோ, அதே மாதிரிதான் யுத்தத்தை நிறுத்துவதற்கும் அவர்களுக்குக் காரணம் வேண்டாம்! தனது பலத்தை அடிக்கடி நிரூபித்துக் காட்டுவதற்கும், அண்டை நாடுகளின் எல்லைப்பகுதிகளில் எப்போதும் ஒரு பதற்றத்தை உருவாக்கி வைத்திருக்கவும், அதன் மூலம் இஸ்ரேல் மீதான மத்தியக் கிழக்கு தேசங்களின் அச்சத்தை உயிருடன் வைத்திருக்கவும்தான் இஸ்ரேல் யுத்தங்களைத் தொடங்கி, நடத்தி, நாசங்களை உருவாக்கி, பிறகு நிறுத்திக் கொள்கிறது.

இதில் ஆயிரக்கணக்கான உயிர்கள் பலியாவது குறித்து அவர்களுக்குக் கவலை கிடையாது. ஏராளமான நகரங்கள் நாசமாவது பற்றி அக்கறை கிடையாது. பொருளாதாரம் சீர்குலைவதைக் குறித்துக் கிஞ்சித்தும் அனுதாபம் கிடையாது.

யுத்தங்களைப் பொறுத்தவரை, இஸ்ரேலுக்குப் போரிடுவது ஒன்றுதான் நோக்கமே தவிர, காரணமோ, விளைவுகளோ அல்ல. இது, அமெரிக்காவிடமிருந்து அத்தேசம் பெற்ற சீதனம்.

இதனைத் தெளிவாக உணர்ந்த காரணத்தால்தான் ஹிஸ்புல்லாவின் ராணுவப் பிரிவு (அல்லது ஜிஹாத் பிரிவு) இஸ்ரேல் விஷயத்தில் சமரசத்துக்கு இடமில்லை என்று, இன்றுவரை எந்த ஒரு பேச்சுவார்த்தைக்கும் சம்மதிக்காமல் தொடர்ந்து மல்லுக்கட்டிக்கொண்டிருக்கிறது.

இதைப் புரிந்துகொண்டதனால்தான், தற்போதைய லெபனான் அரசாங்கத்தின் பிரதமர், ஃபாத் சினியோராவும் (Fouad Siniora) ஹிஸ்புல்லாவின் யுத்தத்துக்குத் தம் சம்மதத்தை மௌனமாக அளித்துக்கொண்டிருக்கிறார்.

இவை ஒருபுறமிருக்க, லெபனான் அரசியலில் ஹிஸ்புல்லாவின் சிவிலியன் பிரிவு ஈடுபடத் தொடங்கி, சாதித்த காரியங்களைக் கொஞ்சம் பார்க்கவேண்டும்.

ஹிஸ்புல்லா தொடங்கப்பட்டபோது அறிவிக்கப்பட்ட அதன் நோக்கம், இரண்டு உட்பிரிவுகளைக் கொண்டதாக இருந்தது. ‘‘தெற்கு லெபனானிலிருந்து இஸ்ரேலை விரட்டுவது, லெபனான் மக்களின் வாழ்வில் மகிழ்ச்சியையும் நிம்மதியையும் கொண்டுவருவது.’’

இஸ்ரேலை விரட்டும் காரியத்துக்கு ராணுவப் பிரிவு, மக்கள் பணிக்கு ஒரு சிவிலியன் பிரிவு என்று திட்டமிட்டுத்தான் ஆரம்பித்தார்கள்.

இந்த சிவிலியன் பிரிவின் செயல்பாடுகளைக் கீழ்க்கண்டவாறு பட்டியலிடலாம்:

ஏழை முஸ்லிம் மக்களுக்கு அடிப்படைக் கல்வி வழங்குதல்.

வசதியற்றவர்கள் அவஸ்தைப்படாமல் இருக்க, சாத்தியமுள்ள அத்தனை இடங்களிலும் இலவச மருத்துவமனைகள் நடத்துதல். பணக்காரப் பகுதிகளில் நல்ல நட்சத்திர அந்தஸ்துள்ள மருத்துவமனைகளை நடத்தி, அதில் வரும் பணத்தைக் கொண்டு இலவச மருத்துவமனைகளை நடத்துதல்.

எப்போதும் யுத்தங்கள் நடக்கும் தேசமென்பதால் செய்திகளை மக்களுக்கு உள்ளது உள்ளபடி கொண்டு சேர்க்க செய்தி நிறுவனங்கள் நடத்துதல்.

இயற்கை வளம் உள்ள லெபனானின் நீர் ஆதாரங்களைச் சரியாகப் பயன்படுத்தி நவீன வேளாண்மை உத்திகள் மூலம் விளைச்சலை அதிகப்படுத்துதல்.

ஏழை முஸ்லிம் பெண்கள் சுயமாகத் தொழில் செய்து வருவாய் ஈட்டுவதற்கு உதவியாக சிறுதொழில் வகுப்புகளை கிராமம் தோறும் நடத்துதல்.

போரினால் பாதிக்கப்படும் இடங்களை உடனுக்குடன் சீரமைத்துத் தருதல்.

இந்த ஆறு அம்ச செயல்திட்டத்துடன் ஹிஸ்புல்லாவின் சிவிலியன் பிரிவு களத்தில் இறங்கியது.

லெபனானின் தெற்கு மற்றும் வடக்குப் பகுதிகளில் பெருமளவில் வசிக்கும் ஷியா சமூகத்தினரிடையே, ஓரளவு கல்வியறிவு பெற்றவர்கள் அத்தனை பேரையும் அணுகி, அவரவர்

வசிக்கும் பகுதியில் வகுப்பெடுக்க முடியுமா என்று கேட்டு கேன்வாஸ் செய்ய ஆரம்பித்தார்கள்.

சம்மதிப்பவர்கள் வீட்டுத் திண்ணையேதான் பள்ளிக்கூடம். மாணவர்களுக்கான நோட்டுப்புத்தகங்கள் உள்ளிட்ட அத்தனை தேவைகளையும் ஹிஸ்புல்லா நிறைவேற்றும். ஆசிரியராகப் பணியாற்றுபவருக்கும் ஒரு குறிப்பிட்ட தொகை வழங்கப்படும்.

இந்த ஏற்பாடு தவிர, ஹிஸ்புல்லாவே லெபனானின் பல்வேறு மாவட்டங்களில் மொத்தமாகப் பன்னிரண்டு பெரிய பள்ளிக்கூடங்களை நடத்திக்கொண்டிருக்கிறது. எந்தப் பள்ளிக்கூடத்திலும் ஃபீஸ் என்கிற பெயரில் நயா பைசா வாங்குவதில்லை. படிப்பில் ஆர்வமுள்ள குழந்தைகள் யார் வேண்டுமானாலும் வந்து படிக்கலாம் (அஃப்கோர்ஸ், முஸ்லிம் குழந்தைகள்).

இந்த முறையான பள்ளிக்கூடங்கள் தவிர, மதக்கல்வி அளிக்கும் பள்ளிகளையும் ஹிஸ்புல்லா நடத்துகிறது. பாகிஸ்தான் போன்ற சில முஸ்லிம் தேசங்களில் மதரஸாக்கள் பெரும்பாலும், தீவிரவாதிகளின் கூடாரங்களாகச் செயல்படுவதோடு ஒப்பிட்டுப் பார்க்கையில், ஹிஸ்புல்லாவின் மதரஸாக்கள் இருக்கும் இடத்திலிருந்து நூறு மீட்டர் தொலைவுவரை ஆயுதம் ஏந்திய ஹிஸ்புல்லா போராளிகளே கூட வரக்கூடாது என்கிற உத்தரவு வினோதமாகத்தான் தெரியும்.

கல்விக்கு அடுத்தபடி ஹிஸ்புல்லா கவனம் செலுத்தும் அடுத்த துறை மருத்துவம். ‘ஜிஹாத் அல் பினா’ என்கிற ஹிஸ்புல்லாவின் புனரமைப்புத் திட்டத்தின் கீழ் நான்கு பெரிய மருத்துவமனைகளையும், பன்னிரண்டு க்ளினிக்குகளையும் நடத்திக்கொண்டிருக்கிறார்கள்.

இந்த மருத்துவமனைகளின் சார்பில் லெபனான் முழுவதும், ஆண்டுதோறும் ஒவ்வொரு இடமாக மருத்துவ முகாம்கள் நடத்தி, சுகாதார விழிப்புணர்வு, எயிட்ஸ் விழிப்புணர்வு போன்றவற்றைப் பரப்புகிறார்கள். அடிப்படை வசதிகள் கூட இல்லாத குக்கிராமங்கள்தான் ஹிஸ்புல்லாவின் முதல் இலக்கு. அந்தப் பகுதிகளுக்குப் போய் மருத்துவ முகாம்கள் நடத்தி, இலவச மருந்துகள், கண் சிகிச்சை, இருதய நோய் சிகிச்சைக்கான ஆலோசனைகள் என்று என்னென்ன தேவையோ, அவை அனைத்தையும் செய்வதுடன் மட்டுமல்லாமல் சுற்றுப்புறத்தைச் சுத்தமாக வைத்துக்கொள்வது குறித்து செய்முறை விளக்க நிகழ்ச்சிகளையும் ஹிஸ்புல்லா நடத்துகிறது. சுத்தமான கிராமங்களுக்கு ஆண்டுதோறும் பரிசு கூட வழங்குகிறார்கள்!

அடுத்தது, ஹிஸ்புல்லாவின் விவசாய மையங்கள். தெற்கு லெபனானில் ஒன்றும், வடக்கு லெபனானில் ஒன்றுமாக இரண்டு மையங்களை ஹிஸ்புல்லா நடத்துகிறது. இந்த விவசாய மையங்களின் நோக்கம், நவீன வேளாண் உத்திகளை மக்களிடையே சொல்லித்தருவது. தேவையான பயிற்சிகளை அளிப்பது.

இதற்காக, தேர்ந்த விவசாய வல்லுநர்களை மத்தியக் கிழக்கு முழுவதிலுமிருந்து ஹிஸ்புல்லா லெபனானுக்கு வரவழைக்கிறது. ஒரு விவசாயப் பல்கலைக்கழகத்தை உருவாக்க வேண்டும் என்று நஸ்ருல்லா கடந்த சில ஆண்டுகளாகவே பேசிவருகிறார். எப்படியும் விரைவில் அதுவும் சாத்தியமாகிவிடும் என்பதில் சந்தேகமில்லை.

ஹிஸ்புல்லாவின் இத்தகைய சமூகப் பணிகள், லெபனான் மக்களிடையே மிகப்பெரிய நம்பிக்கையைத் தோற்றுவித்திருக்கிறது. தங்களை அரசாங்கம் கைவிட்டாலும் ஹிஸ்புல்லா கைவிடாது என்கிற நம்பிக்கை. ஹிஸ்புல்லா எதைச் செய்தாலும் அது சரியாகத்தான் இருக்கும் என்கிற கண்மூடித்தனமான நம்பிக்கை அவர்களுக்கு உருவாகியிருப்பதற்கான காரணம், மேற்சொன்ன இந்தச் சமூகப் பணிகள்தான். இந்தச் சமூகப்பணிகள்தான் ஹிஸ்புல்லாவின் தீவிரவாத நடவடிக்கைகளைக்கூட நியாயப்படுத்தும் காரணிகளாகச் செயல்படுகின்றன.



சென்ற அத்தியாயத்தில் ஹிஸ்புல்லாவின் அரசியல் திருப்பணிகளைப் படித்துவிட்டு, அப்படியே கண்ணீர் மல்க ஒரு மாநகரப் பேருந்து பிடித்து லெபனானுக்குப் போய், அவர்களுக்கு ஒரு கள்ள ஓட்டாவது போட்டுவிட்டு வரலாம் என்று தோன்றியிருக்குமே?

ரொம்ப உணர்ச்சிவசப்படாமல், லெபனானின் அரசியல் சூழல் மற்றும் ஹிஸ்புல்லாவின் இயல்பு இரண்டையும் புரிந்துகொள்ள முடியுமானாலே போதும். ஒரு பக்கம் எத்தனை தீவிரமாக மக்கள் நலப்பணிகள், தேர்தல் ஜனநாயகம் என்று இயங்குகிறார்களோ, அதற்குச் சற்றும் சளைக்காத தீவிரமுடன் பயங்கரவாதச் செயல்களையும் ஹிஸ்புல்லா செய்வதை முன்னர் பார்த்தோம். இது எப்படிச் சாத்தியம் என்று இந்தியச் சூழலில் உட்கார்ந்துகொண்டு யோசிக்கமுடியாது என்பதையும் கவனித்தோம்.

இப்போது பார்க்க வேண்டிய சங்கதி, ஹிஸ்புல்லாவின் ஆயுத பலம் எப்படிப்பட்டது என்பது. அதைவிட முக்கியம், யார் யாரெல்லாம் அவர்களுக்கு உதவுகிறார்கள், எப்படியெல்லாம் அவர்களின் நெட் ஒர்க் பரவி வலுப்பட்டிருக்கிறது என்பது.

அல் காயிதா, ஹமாஸ் உள்ளிட்ட சகோதர தீ.வா. இயக்கங்களுடன் ஹிஸ்புல்லாவின் நெருக்கமும் தோழமையும் எப்படிப்பட்டது என்பதை விளக்காமலேயே புரிந்துகொள்ளமுடியும். ஆனால், இந்த இயக்கங்களுக்கு அதிகம் இல்லாத ஒரு பெரும் சௌகரியம் ஹிஸ்புல்லாவுக்கு இருக்கிறது. அதுதான், பல்வேறு முஸ்லிம் தேசங்களின் ரெகுலரான, நீடித்த நல்லாதரவு.

அல் காயிதாவுக்குக் கொஞ்சநாள் சூடானும் ஆப்கனிஸ்தானும் உதவி ஒத்தாசைகள் செய்தது தெரியுமல்லவா? ஆனால், கொஞ்சநாள்தான். அம்மாதிரி இல்லாமல், ஹிஸ்புல்லாவுக்கு அதன் தோற்றம் முதல் இன்றுவரை வலுவான நேசக்கரம் நீட்டும் தேசங்கள் மூன்று இருக்கின்றன.

லெபனான், சிரியா, ஈரான். உதவி என்றால் பண உதவி மட்டுமே அல்ல. உதாரணமாக, ஹிஸ்புல்லாவின் ஆன்மிகத் தளமாகவும், சித்தாந்த ரீதியில் எப்போதும் ஹிஸ்புல்லா போராளிகளை வலுவாக வைத்திருப்பதற்கும் ஈரான் செய்யும் உதவிகள், அது செய்யும் பண உதவிகளைக் காட்டிலும் பெரிது.

உலகின் மாபெரும் ஷியா தேசமான ஈரான், ஹிஸ்புல்லாவைத் தான் பெறாத பிள்ளை போலவே வளர்க்கிறது. ஈரானில் நடைபெறும் அனைத்து ஆன்மிக மாநாடுகளிலும் ஹிஸ்புல்லாவின் பிரதிநிதிகள் தவறாமல் கலந்துகொள்வார்கள். பயிற்சி பெற்ற ஹிஸ்புல்லா போராளிகளுக்கு, ஈரானில்தான் எப்போதும் 'உயர்கல்வி' வழங்கப்படும். ஒவ்வொரு ஹிஸ்புல்லா போராளியும் ஈரானில் உள்ள மதப்பெரியவர்களின் கைகளால், தங்கள் முதல் ஆயுதத்தைப் பெறுவதைத்தான் பெருமையாகக் கருதுகிறார்கள்.

அடுத்தது சிரியா. ஹிஸ்புல்லாவுக்கு இலக்குகளை நிர்ணயித்துத் தருவது சிரியா அரசாங்கம்தான். சிரியாவின் உளவுத்துறையில் இதற்கென்றே தனிப்பிரிவு உண்டு. இஸ்ரேலை மட்டுமே எப்போதும் குறிவைக்கும் ஹிஸ்புல்லா, எங்கெங்கிருந்து தனது தாக்குதலைத் தொடங்கலாம், எப்படி முன்னேறலாம், எங்கு என்ன தடைகள் இருக்கும், இஸ்ரேலியப் படையின் பலம், அவர்களது உத்தேச செயல்திட்டம் போன்றவற்றைக் கண்டறிந்து சொல்வது இவர்களது முக்கியப் பணி.

தேவைப்படும்போது, ஹிஸ்புல்லா போராளிகள் சிரியாவின் தெற்கு எல்லை வழியாக இஸ்ரேலுக்குள் நுழையவும் சிரியா அரசாங்கம் அனுமதி அளித்திருக்கிறது. அத்தகைய சமயங்களில், எல்லைப்புறங்களில் முகாம் அமைத்துத் தங்கவோ, பயிற்சி அளிக்கவோ எந்தத் தடையும் இருக்காது. மற்ற நேரங்களில் ஹிஸ்புல்லா சிரியாவுக்குள் அனுமதியின்றி நுழைவதே இல்லை. இது அவர்களுக்குள் எழுதப்படாத ஒப்பந்தம்.

இந்த ஒப்பந்தத்தை இன்றுவரை ஹிஸ்புல்லா கடைப்பிடித்து வருவதால்தான், சிரியா அவர்களுக்கு அளித்துவரும் ஆதரவும் ஆயுத உதவியும்கூடத் தடையின்றிக் கிடைத்து வருகிறது.

மூன்றாவதாக, ஹிஸ்புல்லாவின் தாயகமான லெபனான். இதைப் பற்றி விளக்கவே வேண்டாம் இல்லையா? தெற்கு லெபனானின் காவல் காக்கும் ஐயனார் என்கிற அந்தஸ்து, அங்கே ஹிஸ்புல்லாவுக்கு இருக்கிறது. தனது ஒவ்வொரு தாக்குதல் திட்டத்தையும் ஹிஸ்புல்லா தவறாமல் லெபனான் அரசிடம் நேரடியாகவோ, மறைமுகமாகவோ சொல்லாமல் இருப்பதில்லை. லெபனான் அரசால் பெரிய அளவில் சிரியாவைப் போலவோ, ஈரானைப் போலவோ அவர்களுக்கு உதவமுடியாது என்றாலும், உபத்திரவமின்றிச் செயல்பட ஒத்துழைப்பது ஒன்றே போதும் என்று முடிவு செய்துவிட்டது ஹிஸ்புல்லா.

ஆனால், அறிக்கை அளவில் லெபனான் அரசாங்கம், தான் ஹிஸ்புல்லாவை ஆதரிப்பதில்லை என்றே தொடர்ந்து சொல்லிவருகிறது. சமீபத்திய 2006 யுத்தத்தின் தொடக்கத்தின்போதும், 'ஹிஸ்புல்லாவின் இந்தத் திடீர் நடவடிக்கை எனக்குத் தெரியாது' என்றே சொன்னார்கள். இப்படிச் சொல்வதால் யாருக்கும் எந்த நஷ்டமும் இல்லை; யாரும் நம்பப்போவதும் இல்லை என்பதால், ஹிஸ்புல்லா தலைமையும் இதையெல்லாம் ஒரு பெரிய விஷயமாக எடுத்துக்கொள்வதில்லை.

ஒரு தீவிரவாத இயக்கமாகச் செயல்படுவதற்குப் பெரிய புறத்தேவைகள் ஏதுமில்லை. தொடர்ந்து பணம் வரவேண்டும். தொடர்ந்து ஆயுதங்கள் கிடைக்க வேண்டும். அவ்வளவுதான். இந்த இரண்டு விஷயங்களுக்குமே ஹிஸ்புல்லாவுக்கு ஈரான் மற்றும் சிரியாவிடமிருந்து போதிய உதவிகள் கிடைத்துவிடுவதால், லெபனான் அரசாங்கம் சும்மா வாயை மூடிக்கொண்டு இருந்தாலே போதும் என்பதுதான் ஹிஸ்புல்லாவின் நிலை.

ஹிஸ்புல்லாவின் ஆயுத பலம் தொடர்பாகக் கொஞ்சம் பேசவேண்டியிருக்கிறது. சில விமானக் கடத்தல் சம்பவங்களின்போதும், ஆள் கடத்தல் வைபவங்களின்போதும் ஹிஸ்புல்லா போராளிகள், பிணைக்கைதிகளுடன் போட்டோ எடுத்து மீடியாவுக்குக் கொடுப்பார்கள். அந்தப் புகைப்படங்களில், அவர்கள் தோளில் ஏந்தி நிற்கும் ஆயுதங்களைப் பார்த்து அமெரிக்கா, பிரிட்டன், இஸ்ரேல் போன்ற தேசங்கள் குலை நடுங்கும்.

காரணம், அவை எல்லாம் பெரும்பாலும் அந்தந்த நாடுகளின் தயாரிப்பு. பல சந்தர்ப்பங்களில் அமெரிக்கா புழக்கத்துக்கே விட்டிராத ஆயுதங்களெல்லாம் ஹிஸ்புல்லா போராளிகளின் கையில் இருக்கும். எப்படி இது சாத்தியம்?

ஆயுதக் கொள்ளை என்பது ஹிஸ்புல்லாவைப் பொறுத்தவரை ஒரு புனிதமான காரியம். எதற்காகக் கொள்ளை அடிக்கிறோம்? நச்சு சக்திகளை வீழ்த்துவதற்குத்தானே? தப்பே இல்லை என்று சொல்லிவிடுவார்கள். அல் காயிதாவில் இந்தக் கொள்ளை நடவடிக்கை கிடையாது. ஆனால், ஹிஸ்புல்லா ஆத்மசுத்தியுடன் அதை இன்றுவரை இடைவிடாமல் செய்துவருகிறது.

ஆனால், ஹிஸ்புல்லாவின் ஆயுத 'பலத்துக்கு' இது மட்டும் காரணமல்ல. ஆயுத மார்க்கெட்டைக் கூர்ந்து கவனிப்பதற்கும், பேரம் பேசி வாங்குவதற்கும் ஹிஸ்புல்லாவின் ஜிஹாத் குழுவிலேயே தனியொரு மார்க்கெட்டிங் பிரிவு உண்டு. உலகெங்கும் எங்கெங்கெல்லாம் கறுப்பு மார்க்கெட் இருக்கிறது, எந்த ஊர் சரக்கு நல்ல சரக்கு, எது சொதப்பல் சரக்கு என்பதெல்லாம் இவர்களுக்கு அத்துப்படி.

பொதுவாக ஆயுதங்களை, கத்திரிக்காய் வாங்குவது போல் வாங்கிவிட முடியாது. ஓரளவு ஆயுதப் பரிச்சயமும் தேர்ச்சியும் உள்ளவர்களே கூட, சமயத்தில் ஏமாந்துவிடும் அபாயம் உண்டு.

அல் காயிதா சூடானில் உட்கார்ந்துகொண்டு செயல்பட்டுக்கொண்டிருந்தபோது, ஒரு மூட்டை மல்லாக்கொட்டை வாங்குவதுபோல வேலைக்கு ஆகாத யுரேனியம் வாங்கி, கோடிக்கணக்கில் ஏமாந்த கதை ஒன்றை முன்னர் பார்த்திருக்கிறோம், நினைவிருக்கிறதா? ஹிஸ்புல்லா இம்மாதிரியான அசட்டு அதிரடி வேலைகளிலெல்லாம் ஒருபோதும் இறங்கியதே இல்லை. குறிப்பாக, அல் காயிதாவுக்கு நேர்ந்த கதியைக் கேள்விப்பட்ட கணத்திலிருந்து ஹிஸ்புல்லாவில் தனியொரு ஆயுத ஆராய்ச்சிப் பிரிவே உருவாக்கப்பட்டது.

இந்தப் பிரிவில் இருப்பவர்கள் போர் வீரர்கள் அல்லர். அவர்களுக்குத் துப்பாக்கியால் குறிபார்க்கத் தெரியாது. ஆனால், ஒரு துப்பாக்கியைக் கொடுத்தால் பார்ட் பார்ட்டாகக் கழற்றி, குடைந்து நோண்டி எடுத்துவிடுவார்கள். ஆயுதமாகப் பயன்படும் ரசாயனங்களின் தன்மை, வீரியம், கலவை விகிதம் போன்றவற்றைத் துல்லியமாக அறிந்தவர்கள். ஒரு குண்டைக் கையில் தூக்கிப் பார்த்த மாத்திரத்தில் தரத்தைச் சொல்லிவிடக் கூடிய விற்பன்னர்கள். அத்தனை பேரும் வேதியியல் மற்றும் இயந்திரவியல் மாஸ்டர்கள். பெரும்பாலும் ராணுவக் கல்லூரிகளில் படித்தவர்கள்.

பெய்ரூத்துக்கு வடக்கே சுமார் நூறு கிலோ மீட்டர் தொலைவில் அல் ஜுதைதா (Al judaydah) என்ற இடத்தில் இருக்கும் ஹிஸ்புல்லாவின் ஆயுதப் பரிசோதனை அலுவலகம், எந்த ஒரு சாஃப்ட்வேர் நிறுவன அலுவலகத்துக்கும் சளைத்ததல்ல. அங்கே வேலை பார்ப்பவர்கள், ஒரு தீவிரவாத இயக்கத்தின் ஊழியர்கள் என்று சொன்னால் யாருமே நம்பமாட்டார்கள். இன் செய்து, டை கட்டி, சாண்ட்விச் கடித்துக்கொண்டு, கால் மேல் கால் போட்டு நுனி நாக்கு ஆங்கிலத்தில் பேசும் ஆட்கள் அவர்கள். ஆனாலும் செய்கிற வேலை அப்படிப்பட்டது. யாருக்குச் செய்கிறோம் என்பதில் பெருமிதமடையும் நபர்கள்.

இன்றைய தேதியில் ஹிஸ்புல்லாவிடம் இருக்கும் ஆயுதங்களை ஆறு இனங்களாகப் பிரிக்கலாம்.

Mortars என்று சொல்லப்படும் இலேசு ரகத் துப்பாக்கிகள். இதைத் தோளில் வைத்தும் இயக்கலாம். ஒரு ஸ்டாண்ட் போட்டு நிறுத்தியும் பயன்படுத்தலாம். 82 எம்.எம்., 120 எம்.எம்., 160 எம்.எம் என்று மூன்று அளவுகளில் கிடைக்கும் இந்த ஆயுதம், ஹிஸ்புல்லாவிடம் மொத்தம் சுமார் நூறு இருக்கிறது என்று அமெரிக்கா ஒரு புள்ளிவிவரம் தருகிறது. ஆனால், இந்தத் துப்பாக்கிகளுக்கான குண்டுகள் பல்லாயிரக்கணக்கில் இருக்கின்றன.

ராக்கெட் லாஞ்சர்கள். 107 எம்.எம்., 122 எம்.எம் என்று இரு ரகங்களாகச் சுமார் ஐம்பது ராக்கெட் லாஞ்சர்கள். இந்த லாஞ்சர்களைப் பயன்படுத்தி ஹிஸ்புல்லா பல்வேறு விதமான ராக்கெட்டுகளை இஸ்ரேலிய இலக்குகளின் மீது செலுத்துகிறது. அந்த ராக்கெட்டுகளின் எண்ணிக்கை குறித்த கணக்கு வழக்கு ஏதுமில்லை. எப்படியும் ஒரு ஐம்பதாயிரம் ராக்கெட்டுகள் வைத்திருப்பார்கள் என்று குத்துமதிப்பாகச் சொல்கிறார்கள்.

Recoilless guns. என்றால், பீரங்கிகளைத் தாக்கி அழிக்கக்கூடிய லேசு ரக 'தோள்பீரங்கி' என்று சொல்லலாம். உள்ளே மேட்டரை அடைத்துச் செலுத்தினால், ஊரைச் சுற்றாமல் நேராகப்

போய் பீரங்கிகளைத் தாக்கி அழித்துவிடும். சுமார் 1300 மீட்டர் வரை சென்று தாக்கக்கூடிய இந்த ஆயுதம் சுமார் 25 ஹிஸ்புல்லாவிடம் இருக்கிறது.

பீரங்கிகள்: 122, 130, 155 எம்.எம். அளவுகளில் சுமார் ஐம்பது. இதற்கான வெடிபொருளுக்குக் கணக்கே கிடையாது. சுமார் பதினொன்றிலிருந்து இருபத்துநான்கு கிலோ மீட்டர் வரை துல்லியமாகப் பயணம் செய்து இலக்கைத் தாக்கக்கூடிய உயர் ரக பீரங்கிகள் இவை. லெபனானின் எல்லையிலிருந்து இஸ்ரேலிய கிராமங்களைக் குறிவைத்து, குடியிருப்புப் பகுதிகளின் மீது தாக்குதல் நடத்தும்போது மட்டும் ஹிஸ்புல்லா இந்த ரக பீரங்கிகளைப் பயன்படுத்துகிறது.

பீரங்கி எதிர்ப்பு ஏவுகணைகள் (Antitank Missiles). Sagger, Millan, Fagot, Tow என்று நான்கு வெவ்வேறு ரகத்தில் இத்தகைய ஏவுகணைகள் பல நூற்றுக்கணக்கில் ஹிஸ்புல்லாவிடம் இருக்கின்றன. இவை அனைத்துமே ஆயிரத்திலிருந்து மூவாயிரம் மீட்டர் தொலைவு சென்று தாக்கக் கூடியவை.

விமான எதிர்ப்பு ஏவுகணைகள். இது ஹிஸ்புல்லாவிடம் அதிகம் கிடையாது. SA7 என்கிற ஒரு சுமாரான ஏவுகணை மாடலில் நாலோ ஐந்தோ மட்டும் வைத்திருக்கிறார்கள். இவை சுமார் ஒன்றரை கிலோ மீட்டர் உயரத்தில் பறக்கும் விமானங்களை மட்டுமே அழிக்கும். இந்த ரக விமான எதிர்ப்பு ஏவுகணைகள், ஹிஸ்புல்லாவிடம் அதிகம் இல்லாத காரணத்தினால்தான், இஸ்ரேல் பெரும்பாலும் தனது விமானப்படையையே லெபனானுக்குள் அனுப்பி குண்டு போடுகிறது.

இவை தவிர, சாதாரணத் துப்பாக்கிகள் பல்லாயிரக் கணக்கிலும் கையெறி குண்டுகள் லட்சக்கணக்கிலும் கண்ணிவெடிகள் சில ஆயிரக்கணக்கிலும் ஹிஸ்புல்லாவிடம் உண்டு.

தனது ஆயுதங்களைப் பராமரிப்பதில் ஹிஸ்புல்லா மிகுந்த கவனமுடன் செயல்படுகிறது. ஏக்ர், ஹைஃபா, ஜெஃபாத், அஃபூலா, ஹதேரா ஆகிய இடங்களில் உள்ள ஹிஸ்புல்லாவின் ஆயுதக் கிடங்குகளைச் சுற்றிலும் சுமார் ஐந்து கிலோமீட்டர் தொலைவு வரை ஒரு ஈ, கொசு கூட நெருங்கமுடியாது. யாரும் உள்ளே வரத் தடை செய்யப்பட்ட இடம் என்று போர்டு போட்டே ஆயுதம் பாதுகாக்கும் அமைப்பு அது.